சிவமயம். E 853

திருச்சிற்றம்பலம்.

# அரிமழத்தலபுராணம்.

## மூலமும் குறிப்புரையும்

இவை

அரிமழம் மு. அ. செ. முத்தையச் செட்டியார்

அவர்கள் குமாரர்

**செல்லப்ப செட்டியாரவர்கள்**

விருப்பத்தின்படி

சேதுபதி ஸம்ஸ்தான வித்வானாய

ஸ்ரீமத் இராமசாமிக்கவிராயரவர்கள் குமாரரும்

மதுரை விவேகபாநுப் பத்திராதிபருமாகிய

**மு. ரா. கந்தசாமிக்கவிராயரால்**

இயற்றப்பெற்று

திருவாவடுதுறை யாதீன வித்துவான் ஸ்ரீமத்

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிடப்பெற்றது.

காப்பி ரைவிட்.

1907

இதன் விலை ரூபா. கவ.

MADRAS சென்னை-1

# சாற்றுக்கவிகள்.

இஃது
அரிமழம் ப்ருமஸ்ரீ
சிவாநந்த சுவாமிகளருளிச்செய்தது.

உந்தசா மிக்கவமு துண்டரவோர் சிவத்துறவே யுரைத்தான் மண்மேல்
வந்தசா மிக்கதிபன் வழிவந்தோர் வாழ்நலரி மழப்பு ராணஞ்
சந்தசா மிக்கவியென் றறிஞர்மகிழ் சிறந்திடச்சுந்தரனு ராடல்
கந்தசா மிக்கவிஞன் கலைமகட்கோர் குலமென்னக் கவின்மேலோனே.

---

இவை
அரிமழம் ப்ருமஸ்ரீ.சிவானந்தசுவாமி யவர்களின் மாணுக்கரும்
ஷையூர் ஸ்ரீமத் கா. ந. நரசிம்மசாஸ்திரியாரவர்கள் புத்திரருமாகிய
மகா-ா-ா-ஸ்ரீகாமாக்ஷி சாஸ்திரியாரவர்களியற்றியன.

சீர்வளரும் மறைபுகன்ற திருவாக்கா லிடப்பெற்ற சீர்த்திவாய்ந்த
பேர்வளரு மாணிக்க வாசகநம் பெருமானுர் பேசியாங்கு
நார்வளரும் தென்பாண்டி நாடுசிவ லோகமென்ன ஞாலமோரு
மேர்வளரு நன்னுட்டுக் கோட்டையதி லிலங்குசிவ புரமென்பாரால்.

சிவபிரான் றனக்கியைந்த திருப்பணியே செய்துவக்குந் திறத்தினுலுந்
தவமிகுத்த வவ்வர்தோழர் சந்ததியா மதனுலுஞ் சரிதத்தாலு
முவமையிலா வெண்ணீறு கண்மணியைந் தெழுத்தணியு முருவினுலு
மவமறுக்கச் சிவகணங்க ளவனியிடை வந்ததுமெய் யாண்டுளாரே ()

இத்தகைய சிவநேசர் குழூஉச்செறிந்த தன்மையினு லிப்பேரேற்கு
மெய்த்தவமா ரிந்நாட்டுக்கோட்டையெனுஞ்சிவபுரத்தில்விமலர்க்கான
வுத்தமமாம் வடகீழ்பாற் சுவேதநதி வளத்ததொரு நகருண்டோங்கு
மத்தர்திருத் தளியனைய தநனுமம் அரிமழமென் றறைவர் மேலோர்.

அப்புரிவாழ் செல்வர்கடம் மகவெல்லா மாதவன்றே ரணுகுவன்பார்
செப்புரிமை யோடவனைச்சிறுதேர்நண் குருட்டவாவென்னத்தேரோ
டப்புரிவு கண்டவனு முடனுடவதனுலே யப்பேரான் றேர் [பாற்றே.
மெய்பபுகழ்சே ரந்நகர்க்கு விருப்பினிட்டா ரெனினதன்சீர் விளம்பற்

கந்தரமார் களப்பெருமான் கைலையினு மிகவிரும்பிக் கவினாரங்ஙன்
சுந்தரனா மந்தரித்துக் கயற்கண்ணித் துணைவியுடன் றுலங்காநின்று
ணந்தரர்மன் றொழுதிறைஞ்ச வத்தலமான் மியம்புலவர்க்கமுதாயாத்தா
னந்தரமோ வவன்புலமை கந்தசா மிப்பெயர்கொண் ணாவலோனே.( )

---

இவை சோழவந்தான் வித்துவான் ஸ்ரீமத்

## அ. சண்முகம்பிள்ளை யவர்களியற்றியன:

---

பூமாதுந் தவமாதும் புகழ்மாதும் போர்மாதும்
நாமாது மிகச்சிறந்தே நாமாது மிந்நாட்டுக்
கோமாது கோல்கொளலா லெனத்தருக்கிக் குடிகொள்ளுந்
தேமாதுங் கப்பனசந் திகழ்பாண்டித் திருநாட்டில். (க)

அரிமழுமா னகரத்தா ரருள்கொண்ட லருள்கொண்ட
பரிமளமா னகரத்தார் பரிமழவாம் பன்முழவார்
விரிமளமார் முன்றிலினார் மேருவெனப் பொற்குப்பை
புரிவணிகர் பலருமுளம் பூரித்துக் களிபூட்ப. (உ)

அன்னாருண் மிகவொளிர்முத் தடைக்கப்ப னெனும்வள்ளன்
முன்னாட்செய் தவவலியின் முதிர்ச்சியினாற் கற்பகமே
யிந்நாளின் மக்களுரு வெடுத்தனைய கொடைத்தனையன்
செந்நாவார் செல்லப்பச் செம்மலிது செப்புகென. (ங)

முன்னாட்டு மரிமழத்தின் முறைநாட்டு முக்கணுடை
மின்னாட்டு சடிலமுடி விமலமுழு முதற்கரும்பின்
றன்னாட்டின் விளைசரிதத் தனியிரதந் தனைத்தமிழிற்
பொன்னாட்டிற் புலவர்களும் புகழ்ந்தேறப் புகன்றனனால். (ச)

மகவூரு மெறும்பினுக்கு மணிவாரி வழங்குவள
முகவூரிற் பரம்பரையா முதுபுலமை மதுவுண்டு
தகவூரும் பரம்பரைகோன் றாள்பணிந்து களியாடி
மிகவூரு மாண்பினராம் வேளாளர் வியன்குலத்தோன். (ரு)

குசைபெற்ற வலம்புரிநேர் வலம்புரியுங் குடிபெற்ற
விசைபெற்ற முத்தனையா னிராமசா மிக்கவிஞ

## சாற்றுக்கவிகள்.

னசைபெற்ற சுதருளுயர் நலம்பெற்ற நாவலோன்
தசைபெற்ற வுடலுயிர்போ லெல்லோநட்ட தன்மையான். (சு)

மேருகந்த மாதனமே மாதனமா மிளிருமையாள்
சீருகந்த மாதனக நேவியிறை சேவடியம்
போருகந்த மாதனமென் றகமலர்மேற் பூத்தகுணா
தாருகந்த சாமிபுகழ்த் தாருகந்த சாமியே. (எ)

நங்கந்த சாமிபுக ழெற்சரித மரிமழவூர்
தங்கந்த மாதியிலான் சந்நிதியி லரங்கேற்ற
வங்கந்த மாலைபுனைந் தன்பினொடு சிறப்பியற்றி
யிங்கந்த ணல்வணிக ரெல்லாரு முவந்தனரே. (அ)

---

இவை
முறையூர் ஸ்ரீமாந் பழ. சி. ஷண்முகஞ்செட்டியாரவர்கள்
சமுக வித்துவான் கொட்டாம்பட்டி மகா-ள-ள-ஸ்ரீ
**கருப்பையாப்பாவலரவர்களியற்றியன.**

---

பொன்னில மாத ராசை பொருந்தலி லருந்த வர்க்கே
யெங்நில மளிப்பே மென்ற விறையனார் தாமே யீண்டு
கன்னியை மணந்து செங்கோல் கைப்பிடித் தின்பநூலும்
பன்னிய தமிழ்ச்சீ ரோங்கிப் பளகறு பாண்டி நாட்டில். (க)

உத்தர திசையி னெல்லை யுதுவென விளக்க மான்கொள்
ளத்தர தருளாற் போந்திங் கருட்பெருந் துறையைச் சாரின்
பத்தர வளவெள் ளாற்றுப் பாங்கரி னுளதாற் றேவர்
நத்தர வயனூர் நாடு நகரரி மழவூ ரம்மா. (உ)

இந்நகர் முக்கட் செல்வர்க் கிடையறு வன்பு தாங்கி
மன்னகத் தூய்மை யாதி மருவிப்பல் லறமு ளாற்றிப்
பொன்னக மனைய செல்வம் புண்ணியம் வளர்ப்போ ரென்றும்
பன்னக வணியார் பூதி பரவுகண் மணியார் பண்பார். (ங)

நல்லசீர் நாட்டுக் கோட்டை நகரத்தா ரெனப்பேர் பெற்றுச்
சொல்லரும் புகழா லோங்கித் துலங்கிய வணிக மாக்க

ளெல்லையின் மகிமை வாய்ந்த வித்தலப் புராணஞ் சொல்ல
வல்லவர்த் தேடிப் பாடும் வகைசெய நினைத்து நிற்க. (௪)

அன்னதை யுணர்ந்தன் னூரி லன்புரு வாய கோமான்
பன்னருங் கலைகளாதி படித்தமுத் தடைக்கப் பேந்தரன்
றன்னருந் தவத்தில் வந்த தநயன்செல் லப்ப நாமக்
கன்னன்றன் னறிவா லாய்ந்து கருதிது முடிப்பத் தக்கோன். (௫)

இவனென மனத்து ளெண்ணி யினிதுசொற் றியற்ற வேண்டச்
சிவன்றிரு வருளே யென்று சிந்தித்துச் செய்யு டோறு
நவநவ வணிக டோன்ற நல்லகற் பனைகள் சான்ற
உவமையில் புராணமாக வுரைத்தன னவ்வையா ரென்னில். (௬)

நெல்லையங் கன்ன லென்ன நிகழ்த்திடு நெல்லை நாட்டுள்
ளெல்லையில் வளமார் சேறை யெனுஞ்சமத் தானக் கல்வி
வல்லுநர் முதன்மை வித்து வான்முக வூரில் வாழ்வான்
சொல்லரு மமுதச் செந்தேன் சுவையுறக் கவிசொல் நல்லோன். (௭)

கற்றவர்க் கன்பு காட்டுங் கருணைமா விராம சாமி
நற்றவப் புதல்வ ராக நவிலரு ளுச லப்பேர்
பெற்றபா வலவன் வேள்சுப் பிரமணி யச்சீர்ப் பேரை
யுற்றவற் கிளையான் பாவி லொருவர்க்கு மிளையா வோங்கல் (௮)

கேட்டவர் செவிக்கின் பெய்தக் கிளத்துநாற் கவியில் வல்லோன்
கோட்டணி முகத்தன் செவ்வேள் கோகன கம்போற் பாதத்
தோட்டலர் மதுவையுண்டு சொலற்கருங் களிகொண் டுள்ளம்
வேட்டது பெறுமென் னன்பு மிகுகந்த சாமி வேளே. (௯)

தனைநச்சி னோர்க்கினிய ரடியார்க்கு நல்லார் சம்புபரி மேலழகர் சதுமறைநக் கீரர், புலவரர்பே ராசிரியர் கன்னிநாட்ட ரிபோன் முழங்குசேனைவரய ராசஞ்சண்முகனார், வனைபுகழ்ச்சுந் தரலிங்க விறையனார் திருமுன் வணிகர்குழா மிருந்திந்நூன் மகிழ்வுகொடுவி னவி, யனைவருமோர்ந் ததிசயித்து வேண்டுவன வளித்தே யரங்கே ற்று வித்தனராலவருழிவாழி. (௧௦)

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

## இந்நூலியற்றுவித்தோர் மாண்பு கூறல்.

திருப்பாண்டி நாட்டின்வளஞ் செழித்தவரி மழநகரில்
விருப்பாண்டி னமுதெவரு மிசையவினி திடுமனத்தார்
மருப்பாண்டி கமழ்ந்தளவ மலர்வணிகர் பலரவருட்
டருப்பாண்டிற் பதியருளாற் றரணிபுற்ற தெனத்தக்கான். (க)

ஆர்ந்தவளக் கோயிலூ ராதீனக் குருமணியாய்ச்
சார்ந்தமுத்து ராமலிங்க சாமிகண்மா ணவர்பலரு
ளோர்ந்துணரு நூல்வலியா லொழுக்கத்தா லுண்மைநிலை
தேர்ந்துகொளு ஞானத்தாற் சிறந்தவொரு மாணவகன். (உ)

மகரவரி யினிலேந்து மாண்புபெறு முதலுயிருஞ்
சகரவரி தனிலேழுந் தன்பெயர்க்கு முன்படைத் தான்
பகரவரி தாம்புகழான் பாவலர்க்கோர் தாயனையான்
தகரவரி மலர்க்குழலார் தமதுமயற் பிணிதவிர்த்தான். (ங)

முத்தமிசை வனசமுகன் முத்தடைக்கப் பேந்திரன்றன்
சித்தமிசை மறவாது செயுந்தவத்தால் வருசெல்வ
னித்தமிசை யொடுநால்வர் நிகழ்த்துதமிழ்ச் சுருதிவரை
யுத்தமிசை யோகனுள முவப்பெய்தத் துதித்திடுவோன். (ச)

நல்லப்ப னெனவுலகர் நாடுவோ னங்குலத்தோர்
புல்லப்பன் னலம்பலகாற் புரிந்துவக்கு முழுவலன்பன்
செல்லப்ப மாமகிபன் சிவபிரா னரிமழச்சீர்
சொல்லப்பன் னினனெம்பாற் றுன்னியபே ரன்பானே. (ரு)

திருவருளோ வவனன்பின் றிறந்தானோ நமதுதவப்
பெருவலியோ விப்பணியாம் பெறப்புரிந்த தெனவிருத்தத்
தொருவகையாற் புராணமென வுரைத்ததறிந் தரிமழத்துப்
பொருவகல்சீர் வணிகரெலாம் பொங்குமன மகிழ்வெய்தி. (சா)

சுந்தரனூர் திருக்கோயிற் றூயமணி மண்டபத்தில்
வந்தரனூர் கதைகேட்க வகுத்தவிதிப் படிபுரிந்தே
யந்தரநா டதிசயிப்ப வரங்கிருந்து சிறப்பித்தார்
தந்தரநா மெடுத்துரைக்குந் தன்மையதோ சாற்றரிதே. (எ)

முற்றிற்று.

உ

# படல விளக்கம்.



| வரிசை லக்கம். | படலப் பெயர். | பக்க லக்கம். | பாடற் றொகை. |
|---|---|---|---|
| க | காப்பு | க | க |
| உ | பாயிரம் | உ | ௩உ |
| ௩ | நாட்டுப்படலம் | க0 | க0உ |
| ச | திருநகரப்படலம் | உஅ | அச |
| ரு | நைமிசாரணியப்படலம் | சஉ | உரு |
| சா | தலவிசேடப்படலம் | சஅ | கரு |
| எ | தீர்த்தவிசேடப்படலம் | ரு0 | கசா |
| அ | மூர்த்திவிசேடப்படலம் | ரு௩ | க௯ |
| ௯ | இந்திரன் பூஜித்தபடலம் | ருசா | சஉ |
| க0 | சந்திரன் பூஜித்தபடலம் | சாஉ | எ௯ |
| கக | சூரியன் பூஜித்தபடலம் | எ௩ | ௩ச |
| கஉ | வெள்ளாற்றுப்படலம் | எஅ | உச |
| க௩ | சுவேதகேது பூஜித்தபடலம் | அக | கக |
| கச | தடாதகைப்பிராட்டியார்தவம்புரிபடலம் | அ௩ | சக |
| கரு | சுந்தரேசப்படலம் | ௯0 | உசா |
| கசா | திருப்பணிப்படலம் | ௯ச | ௩உ |
| கஎ | செல்லப்பனூர்திருவிளையாட்டுப்படலம் | ௯௯ | எஎ |
| கஅ | திருவிழாப்படலம் | ககக | ருசா |
| க௯ | விளங்கியம்மன் விளங்கியபடலம் | கஉ0 | ௩க |
| உ0 | திரிபதார்த்த சிந்தனைபபடலம் | கஉச | ருசா |


ஆகப்படலம். க௯-க்கு. செய்யுள். ௲ா.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.



# அரிமழத்தலபுராணம்.

## பாயிரம்

### காப்பு

பொன்பரவு வெண்கயிலைப் பொருப்பரசு நிம்பமலர்
பொருத்த நொம்மை
யின்பமுற மணந்துகலந் தீன்றெடுப்ப வளர்ந்துதனை
யிறைஞ்சிப் போற்று
மன்பருளந் தொறும்பூத்துக் காயாது கனியுமத்தி
யடியி னீழன்
முன்பரவிப் புகுந்தவரே வெம்பிறவி யிகந்துலை
முழுகு வாரே.

## பரமசிவன்.

பலதி றத்தமா நதிகளுந் தன்வசப் படுத்திக்
குலவு வாரிபோற் பலதிறச் சமயமுங் குறுகி
நிலவு றப்புரி சைவநா யகனெனு நிமல
னிலகு மெய்ப்பதத் துணையலாற் றுணைபிறி திலையே.(க)

## உமையம்மை.

பங்கயமுங் குவளையமு மாம்பலுஞ்செங் காந்தளுமாம
பலபூப் பூத்துக்
கொங்குலவு தளவரும்புங் கோங்கரும்பு மருமபிவரக்
கொண்டு மேலாத
தங்கவரை யிடைப்பிறந்து வெள்ளிவரை யிருக்குமுக்கட்
டருவின் மீது
துங்கமுறப் படர்ந்துமணந் திருக்குமொரு பூங்கொடியைத்
தொழுது வாழ்வாம். (உ)

## சபாநாயகர்.

வண்டாட விரியிதழி மலராட வயங்குமதித்
துண்டாட நதியாடத் துன்னியநம மன்னைவிழி
கண்டாட வடியரின்பக கடலாட விருமுனிவர்
கொண்டாடக் கூத்தாடுங் குஞ்சிதபா தம்போற்றி. (ங)

## சிவகாமியம்மை.

உயிர்த்தொகை மலப்பிணி யொழிப்ப மாநட
மயிற்பொலி விழிக்கொளீஇ யமப வைத்துவாழ்
குயிற்பெடை மரகதக் கொழுந்து பைஞ்சுக
மயிற்பிடி யனையதாய் வணக்கஞ் செய்குவாம். (ச)

## சுந்தரேசர்.

பவளமார் புரிசடையும் பொன்னிதழி மலர்த்தாரும் பணிநி லாவுந்
தவளநீற் றொளிநுதலுங் கருணைபொழி விழிமலருஞ் சங்கக் காதுங்
கவளமத கயவுரியு மபயவர தாம்புயச்செங் கரமு முந்நூ
றுவளவிளங் கியமார்புஞ் சொக்கேச ரடிமலருந் தொழுது வாழ்வாம்.

## பாயிரம்.

### மீனாக்ஷியம்மை.

கருணைவழிந் தொழுகுமிரு விழிமலரும் பொன்னமர்செங்
கமலம் போலுந்
திருமுகமு நிலவுமிழுங் குறுநகையும் பவளமெனத்
திகழ்செவ் வாயு
மருமலியுஞ் செங்காந்தண் மலர்க்கரமுஞ் சீறடியும்
வயங்கக் காட்டித்
தெருண்மருவ வெமையாளு மங்கயற்கண் ணுமையாளைச்
சிந்தை சேர்ப்பாம். (௬)

### தக்ஷிணாமூர்த்தி.

ஆலமரத் தடிமேவி வாக்கிறந்த பூரணமென்
பதனை மோனக்
கோலமுறீஇத் தெரித்தருளிச் சுட்டுவதற் கெட்டாத
குறிப்பைச் செங்கை
மேலமைசின் முத்திரையால் விளக்கினால் வரையாண்ட
விமலன் கஞ்ச
போலமரும் பதமலரை யகத்திருத்தி வினையனைத்தும்
போக்கி யுய்வாம். (௭)

### முன்னாண்டவிநாயகர்.

மின்னாண்ட சடைமுடியு மறுகாதி நறுமலரும்
வெண்ணி லாவும்
பொன்னாண்ட திருவுருவு மங்குசபா சக்கரமும்
பொருவெண் கோடு
மென்னாண்ட கருணையுங்கொண் டரிமழுத்தி லன்பர்குழா
மெய்தி வாழ்த்து
முன்னாண்ட விநாயகனைப் பன்னாளுந் தொழுவரின்ப
முழுகு வாரே. (௮)

### பரிபாலவிநாய்கர்.

வரிபாடு நறுங்கடுக்கை மலரானை யடியருள வாவி தோறும்
விரிவாக மலர்வானைக் குறுமுனிவன் கமண்டலநீர் விபுலை மேவப்
புரிவானை யரிமழுமா புரிவானை வெலுஞ்சிறப்புப் பொருந்த னைக்கிப்
பரிவாக வெழுந்தருளும் பரிபால விநாயகனைப் பராவி நிற்பாம். (௯)

## குமரக்கடவுள்.

திகந்தவரை வாணியனென் றறிந்துமறை யவனென்னச்
செப்பி வந்து
புகுந்தவனைச் சிறைப்படுத்தி வடுகனுக்குத் துணையாகப்
புடவி போற்ற
மிகுந்தவிடை யனுக்குரிய விழிவலைச்சி புத்திரனு
மேவி யன்பாற்
றகுந்தயா பாரிகளோ டிணங்கியுறை செட்டிபதந்
தலைமேற் கொள்வாம். (ய)

## பாலதண்டாயுதபாணி.

ஞாலமுண்டாஞ் செல்வமுண்டா நன்மக்கட் பேறுமணக்
கோலமுண்டாங் குணமுண்டாங் குறைவிலா வாயுவுண்டாஞ்
சீலமுண்டாஞ் சிறப்புண்டாந் திருவளரு மரிமழத்துப்
பாலதண்டா யுதபாணி பாதபங்கே ருகந்தொழவே. (கக)

## செல்லத்தையனார்.

மறங்காட்டுஞ் சமர்க்களத்து மாற்றலரோ டெதிர்த்தவர்க்குத்
திறங்காட்டிச் செண்டுகொண்டு செருச்செய்து திகைத்தன்னார்
புறங்காட்ட வயமேவிப் பூரணைபுட் கலைபதியா
யறங்காப்போ னுஞ்செல்லத் தையனா ரடிபோற்றி. (கஉ)

## முத்தையனார்.

செய்யவளைத் தன்மனையாச் சேர்ந்தநெடு மாலான
தையலிடத் தையனரு டாவருமாண் டலைத்துவசக்
கையனைரைக் கரியுகைக்குங் கடல்வண்ண னறங்காக்குந்
துய்யவன்முத் தையனடித் துணையென்றுந் துணையாமே. (கங)

## வயிரவர்.

மூவிலை வேலவன் முத்தன் மைந்துபூாய்த்
தேவனெய்த் தோர்பெறு தீர்த்தன் ஞாளியூர்
காவலன் றிகம்பரன் கபாலி காசிதன்
சேவடி மலர்களைச் சிந்தை சேர்த்துவாம். (கச)

## விளங்கியம்மன்.

களங்கரிய பராகங் கலந்தபரை யமிசமாய்த்
துளங்கலிலா தரியுகைத்துச் சூலமெடுத் தொசுரியனைக்
குளங்கவின வலகையெனுங் கொடிபிடித்தெண் டோள்படைத்து
விளங்கியம்ம னெனுநாமம் விளங்கியம்மை பதம்பணிவாம். (கரு)

## சரசுவதி.

பூமகளை மலர்மகளைப் போலாது தன்கருணைத்
தேமுதவி யறநெறியிற் செலஞானச் சுடர்காட்டிக்
காமுறமா ருயிர்க்கின்பக் கதியளிக்குங் கலைமகளா
நாமகளை யஞ்சலிப்பா நமதுவினை யுஞ்சலிப்பாம். (கசு)

## திருநந்திதேவர்.

சாத்தி ரப்பொரு ளார்தனி
வேத்தி ரத்தவன் மெய்க்குரு
கோத்தி ரத்தலை வன்பதந்
தோத்தி ரிப்பது நந்தொழில். (கஎ)

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

அங்கமறை யருள்புரியுஞ் சங்கரனார் பலியேற்க
வணியக் கொள்ளு
மங்கமிரண் டையுநீங்கப் புரிவான்கொ லெனத்தம்மு
னடையுந் தோறு
மங்கதிகஞ் சங்கையுறத் திருமயிலை வணிகர்சுதை
யங்கந் தன்னை
யங்கனையாம் படிபாடும் பிரமபுரப் பெம்மான்பொன்
னடிகள் போற்றி. (கஅ)

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

சூழ்ந்ததமிழ்ப் பிரமபுரப் பிள்ளையார் சிவிகையைத்தாஞ்
சுமந்து பின்னர்
வீழ்ந்தடியி லவர்வணங்கித் தழீஇக்கொள்ள வொருங்கேகி
வியன்ஞா லத்துத்

தாழ்ந்தவரே யுயர்வரெனும் பழமொழியை விளக்கியிட்ட
தாலத் தேவை
யாழ்ந்தமனத் தொடுநினைந்து துதிபுகன்று வணங்கியவ
ரருள்பெற் றுய்வாம். (கக)

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

சங்கிலியாற் றொடக்குண்டு பரவையிடைக் களித்தாடித்
தமிழா மூன்று
துங்கமத மழைபொழிந்து வினைத்தருவை யெறிந்துசத்தி
துலங்கு பாகன்
கொங்குவளம் பெறக்கொடுக்கு முணவுண்ட சுந்தரனுங்
குஞ்ச ரத்தின்
செங்கமலத் திருவடியெஞ் சிந்தையெனுந் தடத்தலரச்
செய்து வாழ்வாம். (உ0)

## மாணிக்கவாசக சுவாமிகள்.

எந்நூற்கு மெய்பொருட்கு மிறைவன்மலர்த் திருக்கரந்தொட்
டெழுதச் செய்த
வந்நூற்குக் கவிநாதன் கோனிதியைச் சம்புவுக்கே
யாக்கும் பண்பான்
முன்னூக்கு பரியுமதை யுகைப்போனுஞ் சம்புவென
மொய்ம்பிற் கொண்டு
பன்னூற்கு நலங்கொடுக்கும் வாதவூர் வள்ளலடி
பரவி வாழ்வாம். (உக)

## தண்டியடிகள், மற்றைநாயன்மார்.

தருமநெறிச் சிவபூசைக் கூறுசெயுந் தந்தைபதந்
தடிந்து பூவின்
மருவுசிவ பணிக்கூறு புரிபவரைத் தண்டிக்கும்
வலியா ரென்னப்
பொருளமையும் படிதண்டி யடிகளாம் பெரியரடிப்
போதை மற்றைத்
தெருண்மருவு சிந்தையடி யவர்குழுவை யெந்நாளுஞ்
சிந்தை சேர்ப்பாம். (உஉ)

## பாயிரம்.

### குலகுருவணக்கம்.

நிலமிசையின் பத்திவலை கொண்டடைவா ருளங்களிப்ப
நேர்மை யாகி
யிலகியசின் முத்திரைக்கை காட்டலுடன் பூதிமணி
யிணைந்து காவி
நிலவுடைய தாக்கொண்டு மீதுறைசை வலம்பெறவே
நெடிது வாழ்ந்து
நலகருணைத் தடமாமம் பலவாண குருமணியை
நயந்து வாழ்வாம். (உங)

### வாழ்த்து.

எத்தலத்து மிகச்சிறந்த வரிமழத்தி லெழுந்தருளி
யிருக்கும் வேத
வித்தகன்சீர்க் கதைபாடி வித்தவர்சொன் னோர்கேட்டோர்
வியன்ஞா லத்திற்
புத்திரருஞ் செல்வமுந்தீர்க் காயுவும்பல் வகைச்சிறப்பும்
பொருந்தி வாழ்வர்
நித்தியமாங் கதிபெறுவர் வான்பொழியும் வளம்பல்கு
நிலத்து மன்னோ. (உச)

---

## புராணவரலாறு.

அல்லாருங் குழலுமையா ளிடப்பாலு மழுமானு
மகற்றிக் கன்னல்
வில்லாளி யுடல்பொடித்துத் தன்னையுணர் மெய்யடியார்
வினைவிட் டோடக்
கல்லாலி னெழுந்தருளுங் கடவுணந்திக் கருளவவன்
கற்ற கேள்வி
வல்லானுஞ் சனற்குமரற் கோதவவன் வியாதனுக்கு
மரபிற் சொற்றான். (உரு)

நாவாயிற் றேன்றுமவ னுவாயாற் சூதனுக்கு
நவில்பு ராணக்
காவாகு மூவாறி னுயர்ந்திலங்கும் பிரமாண்டக்
கற்ப கத்திற்
றூவாத வருண்மணமு மன்புமது வும்பொருந்துஞ்
சைவப் போது
மீவாழும் படிவிரிந்த பலகிளைக ளுளவவற்றின்
மிளிரு மொன்றில். (உ௬)

பத்திரச நனிபொழுகப் பழுத்தசெழுங் கனிபோலும்
பணியா ரங்கொள்
பித்தனென வந்தருளுஞ் சுந்தரே சன்பெருமைப்
பெருக்க மிகுத
வுத்தமமாங் கனிரசத்தை யுண்டுபவப் பிணிமுழுது
மொழித்த மேலோ
ரெத்தனைய ருரைப்பரிதா லரிமழத்தி லிருப்பவரி
லென்று நல்லோர். (உ௭)

சிவநேயப் பெருஞ்செல்வர் பூதிசா தனவகையிற்
சிறந்தார் முன்னைத்
தவமேவி நிதியாதி தழைத்தோங்குந் தனவணிகர்
சைவ மோங்க
நவமான திருப்பணிகண் முதற்பலவும் விருப்பணியெந்
நாளுஞ் செய்வோ
ருவமானஞ் சொலற்கரியா ரிரப்பவர்க்குக் குறிப்பையறிந்
துதவு நீரார். (உ௮)

இந்நகரிற் பலகுலத்தா ரிருந்தாலு நகரத்தா
ரிவரோ டென்ன
மன்னுலகி லெல்லவருஞ் சொல்லவரும் புகழாளர்
வாய்மை மாறார்
முன்னுரைசெய் சுந்தரநா தன்பெருமை யியற்பாவான்
மொழிவித் தேத்த
நன்னருளங் கருதியுற்று ரன்னவருள் ளன்பாலே
நம்பா லெய்தி. (உ௯)

மூத்தலத்துஞ் சிறப்புடைத்தாய் முத்தலத்து வழித்திவள்செய்
மூதூ ரான
வித்தலத்துப் புராணமதைப் புத்தமிழ்தத் தமிழ்க்கவியா
லிசைத்துப் போந்தா
லெத்தலத்து மிசைபரப்பு மெங்குலத்தார் சிறப்புதவி
யேற்பா ரீது
கைத்தலத்தா மலகமென்று ரெங்ஙனம்பா டுதுமென்னக்
கலக்கங் கொண்டேம். (௩௦)

ஆனாலுஞ் சுந்தரனா ரருளெதுவு முற்றுவிப்ப
தாகு மென்றுந்
தேனாலுஞ் சீரகத்தார் புனைவணிகர் தமதுண்மைச்
சிந்தை யாதிற்
போனாலு மதுமுடியு மென்றுமன மொன்றுதலும்
புகன்றேந் தேவர்
கோனாலுஞ் செயற்கரிதைச் சிறுதுரும்பு மிறையருளாற்
கூட்டு மன்றே. (௩௧)

## அவையடக்கம்.

திருந்தாத மொழிச்சிறுவர் சிறுவீட்டின் மணற்சோறு
செய்து வைத்தே
விருந்தாக வச்சோறு மட்கறியும் படைத்துண்ண
விளம்பி னாலும்
வருந்தாமன் மகிழ்ந்துதந்தை தாயர்நன்றென் றுவப்பெய்தும்
வழக்காற் கல்வி
பொருந்தாதேன் புகலுமிந்தப் புன்மொழியு நன்மொழியாம்
புலமை யோர்க்கே. (௩௨)

## பாயிரமுற்றிற்று.

ஆகச் செய்யுள் ௩௩.

# நாட்டுப்படலம்.

உலகெலாம் போற்றும் வெண்ணிலா மரபி னோங்குமன்
　　னவர்புரி தவத்தாற்
றிலகவா ணுதலெம் பிராட்டியும் பிரானுந் தேவர்சே
　　னாபதி யாகி
நலமுறப் புரிந்த குமரனுஞ் செங்கோ னடாத்திய
　　மாண்பினா லேனைத்
தலமுறு பற்பன் னாட்டினுஞ் சிறந்து தழைப்பது
　　பாண்டிநன் னாடு. (க)

பருப்பதங் கான மருதமம் புராசி பயிறரு வளனெலா மொருங்கே
யிருப்பது கும்ப சம்பவ னாதி யெண்ணிலா முனிவர ருளத்து
விருப்பது தமிழுந் தென்றலும் விரவி வீசுபு விளங்குதென் பொதியப்
பொருப்பது நாலெண் வகையற மியாண்டும் பொலிவது பூழிய னாடு.

விண்ணவர் நாட்டிற் சிறந்ததென் பதனை விளக்குபு
　　பத்துநூ றான
கண்ணவன் மகட்குங் கருணையங் கடலாங் கடம்பணி
　　தடம்புய வேட்கும்
பண்ணவர் குழுமித் திருமணம் புரிந்த பரங்கிரி
　　முதற்றலம் பலவு
நண்ணிய பெரும்பே றுடையது நீதி நடையது
　　பாண்டிநன் னாடு. (௨)

பங்கயா சனனுஞ் சங்கபா ணியுமேற் பறந்துகீழ்ப்
　　பாய்ந்துகா ணொண்ணாக்
கங்கையார் வேணிக் கருணையங் கடலாங் கண்ணுதன்
　　மான்மழுப் பிடித்த
செங்கையா ரெண்ணெண் டிருவிளை யாடல் செய்தநா
　　டுயர்ந்ததென் பதற்குச்
சங்கையார் கொள்வா ரொப்புயர் வின்றித் தழைப்பது
　　கௌரிய னாடு. (௩)

வில்லவ னாடு நேரிய னாடும் வியன்றமிழ்
நாடென வொருங்கே
சொல்லவந் திடினு முழுமுதற் கடவுள் சொற்றமிழ்ப்
புலவரோ டினிது
புல்லிமுற் சங்கத் திருந்தமி ழாய்ந்த பொற்பினை
நினைந்துநாண் பொருந்த
மல்லலங் கல்வி செல்வமெய் யறிவு வளர்வது
தென்னவ னாடு. (௫)

## மழை.

பெருந்தாலத் தோன்கையையே விளக்குகையான் முசலிநிறம்
பெற்ற வானந்
திருந்துவன மாலெனும்பேர் சேர்தலினாற் சிந்துவிடைச்
செறிவுற் றங்கண்
பொருந்துபெரும் புவனத்தைக் கைக்கொண்டு மேன்மைமிகப்
பூண்டு மீண்டு
விரிந்ததலை நாகமிசைத் தாய்ப்புரவுக் குரியதென
விளங்கிற் றன்றே. (௬)

இலங்கியவித் தகைமையுறு கருங்கொண்டன் மிகமுழக்க
மெய்தித் தென்றல்
விலங்கலிடைப் பலவம்புத் தாரைகளைச் சொரிந்துறுதல்
விண்ணோர் வேந்தன்
பலம்பெறுதன் பழம்பகையாம் பருப்பதத்தைப் பொருதுவரும்
படிவிற் கொண்டு
துலங்கியிரும் பலவம்புத் தாரைவிடும் பான்மையெனத்
தோற்று மாலோ. (௭)

தாணுவெனும் பெயருறலாற் சங்கரனென் றகங்கருதுஞ்
சங்க பாணி
மாணுறுமஞ் சனமாட்டி மலர்தூவிச் சுடர்காட்டி
வழுத்தன் மானுஞ்
சேணிருந்து வரைமருவி நீர்பொழிந்து மணிசிதறித்
திகழ மின்னிக்
காணுமொலி தரக்குமுறல் காத்தலையிப் புவிக்கியுற்றுங்
கரிய கொண்டல். (௮)

கனிவுடனென் மகண்மணந்த கந்தனுக்குத் தம்மகளைக்
களிப்பாத் தந்தே
யினியவென்புத் திரிவாழ்விற் பாதிகொண்டு மருகனையங்
கிருத்தும் வெய்ய
வனிவலிமைக் குறவர்வரை தனைப்பொருக வெனப்போகி
நவில மிக்க
தனிதமொடு முற்றுகையிட் டதுபோலும் வரைமேவித்
தழங்கு மேகம். (௯)

## குறிஞ்சி.

பூதி மேனியு மாநந்த வெள்ளமும் பொருந்தி
யோது வேணியுந் தண்டமுந் தோலுமே வுற்றே
யாதி நாயக னடிநினைத் துறுமருந் தவர்போன்
மீது லாவும்வேள் காவலின் விளங்குமவ் வெற்பு. (௧௦)

குறவர் தஞ்சிறார் வரைமிசை யேறியே குலவு
நறவெ டுத்தவண் கும்பத்தில் விடுத்தனர் நகைத்துப்
பிறக தைப்பிழி மெழுகெலா மவ்விடைப் பிறங்கு
நிறைதெ ரிப்பவர் போற்றுலாத் திடைவைத்து நிற்பார் (௧௧)

தரக்கி னக்குழா மிடபத்திற் சிற்சில சாடிப்
பொருக்கெ னப்புகப் பயத்துட னம்புலி போகும்
வெருக்கொ ளப்பெரு வீறிட்டு மேவுகை விலங்கந்
கிருக்கும் வாளரி நோக்கலுங் கீழ்விரைந் தெய்தும். (௧௨)

வன்னி யாதலி னம்மர மேடமேன் மருவுங்
கன்னி காரமுற் றிடமிசைப் போங்கன்னி காரந்
துன்னு பத்திரந் தனுசுமே லியைபொடு தோயு
மின்னு நற்சுனைப் பாணியிற் கடகமு மிளிரும். (௧௩)

வேறு.

விண்டொடச் செலுஞ்சிறை மேவப் பெற்றநீ
மண்டொடக் கீழ்ச்செல்வாய் மாய்தி யென்றல்போ
லெண்டிசை யிலுமுறு மீயற் புற்றெலாங்
கண்டுறிந் தினதெறுங் காடி யீட்டமே. (௧௪)

கொம்பெனிற் கிளையிலாக் கொம்புங் கொம்புகொ
லெம்பெருங் கொம்புகட் கிணையுங் கொம்புகள்
பம்புமெவ் விலங்கினும் பார்க்கொ ணாவெனக்
கும்பொடு களிப்பன குலவு மானினம். (௧௫)

வழுத்துமிவ் வரையிடை வாழும் வல்லிய
மழுத்துறு பசிக்கும்புல் லருந்து றாமையால்
விழுத்தகு வறுமையான் மெலிந்துந் தீதுறு
வொழுக்கமுறற் றுயர்ந்தவர்க் குவமை சால்வது. (௧௬)

## வேறு.

அடுப்பவரை மலர்முகத்தோ டங்கைவிரித் தழைத்துவந்து
மடுத்தபல சுவையமுதம் வழங்கலுறு மாண்பினர்போ
லடுத்தமலர் முகங்காட்டி யினியதளிர்க் கரம்விரித்துத்
தொடுத்தபல சுவைக்கனியுஞ் சொரியுமுயர் சோலையெலாம். (௧௭)

பெரும்பொருளுஞ் செல்வாக்கும் பெற்றாலுங் கொடியவர்பால்
விருந்தினர்கள் செல்லாமே விலகியகல் பான்மையெனத்
தருஞ்சிறந்த மணமலர்கொள் சம்பகமும் வேங்கைகளும்
பொருந்துவெம்மை யுறுதலினாற் புகுதாபல் வண்டினமே. (௧௮)

கதம்பமிறைப் பதுவென்ன மகரந்தங் களைவீசு
மிதந்தருபன் னீரென்ன வினியபனித் துளிசிதறும்
விதங்கொளிலை கனிமலர்கண் மிக்கதொனி யோடுதரு
கிதம்பெரிது மணப்பந்தர் நிலைகாட்டுஞ் செழுஞ்சோலை. (௧௯)

இரவிநடுப் பகலினிலும் வெம்மையொளி யின்மையினாற்
பரவிவரு கடுங்கதிராம் பகைவனுக்குப் பயந்தொதுங்கி
விரவிமனக் கலப்பெய்தி மிளிர்பனியு மிகுகுளிரு
மிருளுமடுத் தொளித்திருக்கு மிடம்போலு மிச்சோலை. (௨௦)

## வேறு

நீதியிறை யாற்கொடுமை மறைந்துகொடுங் கோலொழிந்து
நிலத்தோ ருள்ள

மீதுபெரு மகிழ்ச்சிநிறைந் துறுவதுபோன் மிருமழையான் விலங்கும் புள்ளு
மோதியொடு குடம்பையிடை யொளிப்பவெம்மை சிறிதுமிலா தொழியத் தென்னன்
பூதரமெல் லாங்குளிரும் வெள்ளமுமே யிடங்கடோறும் பொலிந்த மாதோ. (உக)

வேறு.

விண்ணிடை யிருந்து வீழ்தரு புனலை விருக்கங்க டளிர்க்கையாற் கவர்ந்து
நண்ணிய தறிந்து காலலைத் தடுத்தோர் நளிர்பெறச் சிதறுமித் தோற்றம்
புண்ணிய ரொருவர்க் கீதரு பொருளைப் புகுந்திடைக் கரந்தவர் தம்மைத்
திண்ணிய ரொருவன் புடைத்தடுத் தவர்க்குச் சேர்த்திட லாமெனத் திகழும். (உஉ)

வேறு.

குங்கு மத்தொடு மாலைசெஞ் சந்தனங் கொண்டு
பொங்கு வாசமும் பற்பல பணிகளும் பொருந்தி
வங்க வாரிசெல் பொருநையந் தண்ணதி மகிழ்தாய்
தங்கு மில்லம்விட் டன்பனிற் சேர்பவட் டகையும். (உ௩)

நிரைகொள் பல்வகைப் பொருட்செருக் குடையவர் நிலத்தின்
மருவு தம்மவர் தமையுந்துன் புறுத்துதன் மான
வரையி னின்றெழு தாமிர பர்ணிதான் மன்னுங்
கரையு டன்றருக் களையலைக் கரங்கொடு கடுக்கும். (உ௪)

விலகு பன்மர வளைகிளைக் கனிபல வீழ்த
விலகு மெம்மினத் தெதிரியோ வெனச்சின மெய்திப்
பலதி ரண்டகல் வீசலும் பயங்கொடு பணிவாய்
நிலவு கப்பமிட் டிறைஞ்சுதலும் போன்மென நிகழும். (உ௫)

வேறு.

ஒளிர்தரவோ ரிடம்படினு முடலனைத்து மயிர்பொடிப்பக்
குளிர்வதனு லாலமென்றுங் கொண்டவர்க்குச் சுவைகொடுத்

விளிதலுறுச் சித்தமகிழ் மிகவுதவுந் தன்மையினாற்
றெளிதருநல் லமுதமென்றுஞ் செப்புவது தேற்றாகதி. (௨௫)

அடுத்தவுட னளிர்மிகையா லாகமெலாம் விதிர்ப்பியற்றித்
தொடுத்தவிசை யாலொலியா லெவர்மனமுந் துணுக்குறுத்தி
யெடுத்துரைக்கப் பலவிதமா மின்பமேன் மேல்வளர்க்கு
மிடித்துரைத்து நலஞ்செய்யு மினியவர்தம் மியல்பென்ன. (௨௬)

ஊணுரிய பலபொருளு முண்டாக்கிக் கொடுத்தெவருங்
காணும்வகை தானுமுண வாயிருந்து களிப்பித்து
நீணிலத்து வாழ்பவரை நிச்சலுமோர் தாய்போலப்
பேணுவதா லிணையில்லாப் பெட்பினதிப் பேராறே. (௨௭)

கந்தனிரு கழல்பரவிக் கைகுவித்துக் கானவர்கள்
சந்தநறுந் தருக்குலத்தைத் தறித்தொதுக்கித் தழலூட்டிச்
செந்தினையு மலைநெல்லுஞ் செழிப்பவிதைத் தனரம்மா
வந்திலுறு வேட்கைவினைக் காகரமே யாமன்றே. (௨௮)

வேறு.

குளிர்பொறுக்க மாட்டாமற் குவட்டரசு கொண்டமயிர்க்
கூச்ச லென்ன
நளிர்தழைத்த முளைமுளைத்துப் புனமனைத்தும்
பருவமுற்றி நண்ணு மெல்லைத்
தளிரகற்றி மரமொடித்துப் படகமிட்டு
மிசையிருந்து தட்டை தாங்கி
யொளிர்மணிக்கற் களைநிரப்பி யுங்கிருந்தார் கொங்கிருந்தா
ருடைய மாதர். (௩௦)

நெடிய நல்லுண வேட்டுறும் பறவைக ணிற்குங்
கொடியர் கற்களால் வருந்தியே மீள்வன குறைநீர்ப்
படியிற் பாவல ருலுத்தர்பாற் பொருள்பெறப் பாடிக்
கொடியர் சொற்களால் வருந்திமீள் வதுநிகர் குறிக்கும். (௩௧)

கொடிக்கு நேரிடைச் சியர்தம துரைநலங் கொள்வா
னடுத்த கிள்ளையும் பூவையு மிரிந்திட வடிப்பார்
படிக்க வந்தவர் தமக்குத்தாம் படித்தமை பகரா
மடக்கொ டுஞ்செயற் கற்றறி பேதையர் மான. (௩௨)

தந்த தாமெனுஞ் சிற்றிடைப் பணைமுலைத் தளவத்
தந்த மாதரார் வீசிய தனிமணி யினங்க
டந்த வேலியின் புறத்திடைத் தயங்கலத் தந்தந்
தந்த மாமணி யாமெனச் சாற்றலாந் தகைத்தே. (௩௩)

இரும்பு தோற்றிடு மெய்யின ரிருண்மரு ணிறத்தர்
திரும்பு கோளில ரமரிடைக் கானவர் திரள்கள்
கரும்பு தோற்றிடு மொழியினர் கமலத்தின் மருவுஞ்
சுரும்பு தோற்றிடு விழியினர் தோகையர் பலரும். (௩௪)

வேறு.

மான்முதலா யினபடுப்ப வலைவிரிப்பர் சிலவேட
ரேனமுத லியவரவில் லெடுத்துறுவர் சிலவேடர்
தேனினிய கனியெடுத்துத் திரிபவர்சிற் சிலவேடர்
கானமருங் கிழங்கெடுத்துக் களிப்பவர்சிற் சிலவேடர். (௩௫)

உருவாலே யரக்கரெனற் கொருகுறைவக் கிரதந்த
மருவாமை யெப்பொழுது மலையார்கள் விலங்குகளோ
டொருவாத நட்பினர்போ லொருங்குறைவா ரிரும்பனையார்
தெருவாசல் வீடெனுஞ்சொற் செப்பறியாத் தலவாசர். (௩௬)

இந்திரனன் பாற்றருமோர் பூங்கொம்பை யடைந்தகுக
னினையவேடர்
தந்தவொரு மலர்கொம்பைத் தானுறுமுன் னொருகொம்பைத்
தாங்கித் தன்முன்
வந்தவன்மற் றொருகொம்பை மருவிவரப் புரிந்துபின்றான்
மணந்து வாழுங்
கந்தவரை வளன்முழுதுங் கழறுவரார் துர்க்கைநிலங்
கருதிச் சொல்வாம். (௩௭)

பாலை.

பொருப்பனைய நெடுந்தடத்தோட் காளையர்க்குந்
தளவநகைப் பூவைமார்க்கும்
விருப்பமிக மிகப்பெருகு மன்புநீர் தனைக்கடக்க
விடுவ தல்லாற்
பருப்பதமா நதிவாரி விண்ணதிமே லினுந்தன்மேற்
பட்ட ஞான்றே

யுருப்பமுறத் தருப்பைநுனித் துளித்தனைபு மிலதாக்கி
யுலவும் பாலை. (௩அ)

தேங்கமழ வீங்குகுராப் பாவைபீன் றதைமுருங்கை
தெரிந்து தன்மேற்
றூங்கியவெள் ளணிமலராற் சாற்றுதலு மடுத்தறிந்து
தழையாபுக் கொண்ட
கோங்குபெரும் பொன்சொரியும் பாலைநிலத் தன்மையெம்மாற்
கூறற் பாற்றோ
பாங்குபெறு மாதவனூர் முல்லைநிலப் பாடிவளம்
பாடிச் செல்வாம். (௩கூ)

## முல்லை நிலம்.

அணிபெறு கடலையெள் ளங்க முற்றதான்
மணிபெறு கம்பினங் கதிர்வ ளர்ச்சியாற்
றிணிபெறு துவரையுஞ் சேர்ந்த மாண்பினாற்
பணிபெறு மாலொருங்கும் பரந்த கானகம். (௪௰)

பரும்பசுங் காய்வெடி பன்னாற் செஞ்செடி
யிரும்புவி யவர்தனக் கின்ன லாற்றினு
மொருங்கவர்க் கணிபுரி யுபகாரி யால்வரும்
பெரும்புகழ் தருமமிய பெற்றித் தொங்குமால். (௪௧)

மீந்திநி பெரும்பொருண் மேவு காலைபிற்
றூந்தலை வணங்கிடாத் தகவி றன்மைசேர்
மாந்தாபோற் கம்பின மணித்தி ரட்கதிர்
போந்துழி நிமிர்தலை பொருந்து மெங்கணும். (௪௨)

பண்டுமா லாயர்தம் பதியி லியாவருங்
கண்டிடா வேலையிற் கரந்து வெண்ணெயை
யுண்டபின் வேண்டுமென் றொளித்து வைத்தபல்
லுண்டையே யாமென வொளிரு மாம்பிகள். (௪௩)

சொலத்தகு பூவையின் பூவின் சூழலி
னலத்தரு மாம்பிக ணண்ணல் கண்ணனீ
விலக்குதி கரத்தலை வெண்ணெய் கொள்கென
நிலத்திருந் தருவது நிகரு மேவால். (௪௪)

ஆடக மெனும்பெய ரடுக்கு மென்னவே
நாடக மெங்கணு நவிலப் பொன்னிற
நீடிய துவரைக ணெடிது பல்குவ
மாடமுங் கடலையு மான மல்குவ. (சரு)

வாடிவந் தவர்க்குத்தாம் வறுமை யெய்தினும்
பாடுபட் டுழுதிடும் பண்பு ளாரென
வாடவர் கோடையி னுழ்ந்த கூவனீர்
மாடுகொண் டிறைத்தவண் வளர்ப்பர் பல்பயிர். (சசா)

வேறு

விண்டாலும் விரைமுளைக்கு மிக்கமணந் தரும்விளைந்து
கொண்டாலு மிடையிலிலை கொண்டாலு முணவாகு
முண்டாமிப் பலகுணத்தா லுளமகிழ்ந்து கிளர்ந்தனபோற்
றிண்டார ணிபிற்பலபாற் செறியுமல்லி கசெடியினமே. (சஎ)

வேறு.

வாதமுத லியமிகுதல் குறைதலுறு திருப்பினல மருவி வாழும்
பூதவுடம் பினைப்புரையக் கான்மாரி வெயிற்குறைவு பொருந்தி டாமன்
மேதகவு றுமலுறி னத்தனையும் பொன்னுக விளைந்து மேவுஞ்
சீதமலி சீரகமிந் நாட்டவர்சீ ரகம்போலச் செழிக்கு மெங்கும். (சஅ)

வேறு

தனது நேயர்க்கு மாணவர் தமக்குமுத் தமநூ
லினையெ டுத்துரைப் பவரவர் நல்வழி யெய்த
வெனது பேர்சொலி நல்வழிப் படுத்துவ ரென்று
மனமு வந்தன முயலினம் பலபல வாழும. (சகூ)

உரிய வென்பெயர் பெறுகரி யிசையினு லுருவாற்
பெரிய வேனுமென் குமரவேள் கரமுறப் பெறுமோ
விரவி யின்புட னெய்திடக் கூவுமோ வென்று
கருவ முற்றிய கானவா ரணம்பல கஞூலும். (ருo)

தம்மு யற்சியால் வருபொருண் மகிழ்வர்சற் றேனு
மம்மு றைப்பட மாதரார் வளர்த்திட வணியா
விம்மு னைபந்தள வரும்புடன் மேவிய வேலை
யிம்மெ னப்பெரு விழாச்செய்து மகிழ்வர்மெல் லியரால். (ருக)

சொன்ன லங்கொடு துய்த்தலா லண்டர்பேர் சொலலான்
மன்னிநாடொறும் பாடியி னலமுறு மாண்பாற்
றுன்னு கோக்களைச் சூழ்தலான் மேவிய தொறுவர்
பனனு நூல்பல கற்றவர் தாமெனும் பண்பார். (ருஉ)

வேறு

ஒருகடலை யுண்டபெருந் தமிழ்த்தலைமைக் குறுமுனிவ
னுள்ளம் வெள்கப்
பெருகுபல கடலையுண்பா ரெட்டுவரை யையுந்தின்னப்
பெறுவா ரன்றி
மருவுபல மாடங்கள் வயிற்றிடையே கொண்டிடுவார்
வாழு மாண்பாற்
பொருவிறுறு வியர்தவத்துப் புதல்வருக் கியாவர்நிகர்
பொருந்து நீரார். (ருங)

கற்றைநிதம் வளர்க்கின்றேறங் கற்பின்முன்னே மாகநினைக்
கற்பிற் கென்றும
பொற்பமர்காட் டாப்புகலப் பொருந்தினைநீ கடைபடுமா
புரிவோ மென்ன
வற்பினியற் றுவர்போலோர் தவிசினுறீஇ யருந்ததிகீழ்
வைத்து மந்தா
லற்பவிடைச் சியரென்னும் பெரிபவிடைச் சியர்கடையு
மமலை யெங்கும். (ருச)

வேறு.

காயா வுடனே செழிப்பாகக் கவின்சேர் முல்லைச் செழுமலரும்
பாயா துதையா தழுதுதவு பசுவின் குழுவும் வாசமுற
மாயா தவர்வாழ் முல்லையினு வலாரி காவல் பெற்றுலகத்
தாயா மருத நிலத்தியல்புஞ் சாற்றப் புகுவாந் தெரிந்தளவே. (ருரு)

மருதம்.

கோடை யானிறை வற்றுறு கால்களுங் குளமு
மூடு மள்ளர்நீர் நிறைத்திடப் பொலிதரு மொழுக்கங்
கோடு கோலவ ரடியுறு குடியெலாங் குணத்தா
னீடு கோலவர் முடியுறச் சிறந்தென நிவந்த. (ருசா)

நூல்ப டிப்பவர் மறப்பெனும் பகையினை நூறிக்
கோல புபடுந் தொழுககுநற் குரவர்தங் குணம்போற்
கானு டைப்புறு காலேயிற் களமர்கள் கைவைக்
கோல டிப்படுத தொழுககுவர் நிரைநிரை குறுகி. (ருஎ)

அலவ னும்பெயர் பெறுமதி யிருநிரை யல்லா
னிலமெ லாநினைத் திடநதிசை தொறும்வர நேரான்
குலவு கட்டளை கொண்டிடான் றனநுடல் குறைவா
னிலகு முனைமைப் போலெனு ஞண்டுக ளிலங்கும். (ருஅ)

புரமெ ரித்திடு புங்கவ னணியெனப பொலிவேம்
பெரிது மெம்முருக் கொண்டுமா லுறத்தகு பெரியே
மரிய வைந்தையு மடக்கலின் முனிவரை யனேயேந்
தரமெ மக்கிலே யெனும்பல கூர்மமுந் தயங்கும். (ருகூ)

எவ்வு றுப்பினு நயனமே சிறந்ததென் றிரைப்பா
ரவ்வு றுப்பினு லின்புற லெமக்குரித தததனுற்
செவ்வி மங்கையர் கண்களுக் குவமையாத் திகழ்வே
மொவ்வு மெபபொரு ளெமைபபிற வென்னுமீனுகளும். (சுo)

உலம்ப டைத்ததோண் மள்ளர்விண் முகில்பெயு மொழுக்காற்
புலம்ப டைத்துள பக்குவ மறிதலும் பொன்னேர்
நலம்ப டைத்திடப் பூட்டிய பகட்டின நடாத்தி
வலம்ப டைத்தவே ளாண்மையாந் தொழிலினை வகித்தார். (சுக)

சகமெ லாம்புகழ் வினைஞர்கள் பற்பலர் சார்ந்தே
யிகமெ லாந்தழைத் தியலுறச் சொல்வள மீபுந
தகுதி வேண்டினர் புலவர்கோன் றன்றுதி சாற்றித்
தொகுதி கென்முளை விதைத்தனர் வயறொறுந் துறுமி. (சுஉ)

திங்க டங்கிய செஞ்சடைச் சங்கர னடியிற்
றங்கு மன்பின ரியாவரு நலமுறு தகைபோ
லங்கு றங்கொடு மலிதலின் விதைவிதை யனைத்து
மங்கு றங்கொடு மலிந்தன பொலிந்தன வம்பா. (சுந)

### வேறு.

நாற்றினுறு வளர்ச்சிகண்டு நங்கைமார் பறித்தெடுத்துப்
போற்றரசர் முடிவிளங்கப் புனைந்தபல முடியிடுவார்
வேற்றுவயற் கொடுபோவார் மேவியநீர் வடிப்பித்தார்
சேற்றினது வளங்கண்டு சிந்தைமிக மகிழ்ந்திடுவார். (௬௪)

அள்ளலிடைக் கால்புதைய வலிருமிருட் குழல்சரியத்
தெள்ளியநன் னுதெறடுத்து செவ்வாயாற் குரவையிட்டுப்
பள்ளமுற வலக்கரத்தாற் பதித்துமுழு வதுநடுவார்
மள்ளமடவார்தொழில்போன் மற்றுமொரு தொழிலுளதோ.

பன்னுபசி வருத்தாமற் பாலகர்க்குப் பால்கொடுத்து
முன்னிருந்து வளர்க்குமிரு முதுகுரவர் தமைப்போலத்
துன்னிவரு செழும்பயிர்கட் டுவளாமனீர்யாத்து
மன்னியனு தினங்காத்து வளர்த்தார்கண் மள்ளர்களே. (௬௫)

தம்புதல்வ ரொடுகொடியார் சார்ந்துவரிற் சகியாமல்
வன்பினொடு துரத்திவிடும் வழக்கமென்னப் பயிர்நடுவிற்
பம்பிவரு களைகளைத்தாம் பார்த்துமனஞ் சகியாமே
வெம்பிமுழு வதுங்களையும் வினைக்குமடவார்புகுந்தார். (௬௭)

### வேறு.

தனத்தினேரென வரும்பியுங் கரத்தொடு தகைவ
தனத்தினேரென விரிந்துமெம் போலொரு தைய
றனைச்சு மந்தும்வேள் பாணமாய்ப் பங்கயந் தழைத்த
றனைப்பொ றேமென வெகுண்டெனக் களைந்தனர் சார்ந்தே

கஞ்ச மாமல ரதனினுங் கொடியையையங் கணையாய்த்
துஞ்ச வேசெய்வா யெமதுமைக் கண்ணெனத் தோற்றிச்
செஞ்ச வாழ்தியோ நினைவிடே மென்பர்போற் றேகின்
விஞ்சு மாதரார் குவலயங் கொய்தனர் மீள்வார். (௬௯)

அல்லி தாமரை குவளைபா லணுகுறு மமைய
மெல்லி யார்கரம் பதங்களின் வீழ்சிறைவிரிமா
வல்லி யீரெம திருக்கைகாப் பீரென வழுத்தி
மெல்ல வேகரத் தொடுபதம் பிடித்தென விளங்கும். (௭௦)

### வேறு.

குருமுறையிற் படித்தறியா ரிறுமாப்புக் குணம்போல
மருவுபயி ரினங்கடலை வளையாமல் வளர்வெய்திக்
குருமுறையிற் கல்விமிகக் கொண்டவர்தாழ் குணமபோலக்
கருமுதிர்ந்து கதிர்பொருந்தக் கவிழ்ந்தனசெஞ் சாலியெலாம்.

கட்டழகு பெறுஞ்சிறுவர் கல்வியறி வொழுக்கத்தாற்
சிட்டரெனத் தெரிந்தவுடன் சிந்தைமகிழ் தந்தையர்போ
லிட்டபயிர்க் கதிர்மணிபோன் றிலங்குதலு மடுத்தறிந்து
நட்டுவந்த காலைபினு நன்குவந்தார் கம்பளர்கள். (எ௨)

### வேறு.

கருவுற நிமிர்ந்த பைங்கூழ்க் கற்றைக ளனகன் கைவிற்
பொருவவே வளர்ந்து விண்ணிற் போயுறுந் தோற்றந் தன்னை
யருமையி னீன்ற வன்னை யாகிய மருதத் தேவன்
றிருவடி வணங்கச் செல்லுஞ் செவ்விய வயல்க ளெல்லாம். ()

தாங்கெடச் செயினுந் தம்மைச் சார்ந்தவர் வாழ வேண்டு
மோங்குநற் குணத்தார் போல வுழவர்க ளறுத்து வீழ்த்தப்
பாங்குறை சாலி யன்னார் பாதமேல் வீழுந் தோற்ற
மீங்கெம தினத்தைக் காப்பீ ரெனப்பதம் பிடித்தல் போலாம்.

### வேறு.

தமக்குயிர்போம் படிவரினும் பிறர்க்குதவா மனவுலுத்தர்
தம்மை வேற்றோர்
சமக்களத்திற் கொண்டுபெரும் போர்புரிந்து வென்றுமுற்றுஞ்
சார்வ தேபோ
லமைக்குமணிச் சாலிவிடா வரியனைத்துங் கட்டியெடுத்
தடைந்த மள்ளர்
சமக்களத்திற் போர்புரிந்தா ரினிப்பலனை யடைவரிது
தகைமை யன்றே. (எரு)

வாயுநிதி வரைப்பொருது குவடுகளைப் பிச்செடுத்து
வானோர் வேந்த

னேயுமொரு துணைவனென வெண்ணியவ னிலத்தவற்றை
யிருப்பித்தாங்கு
வாயுவிசை கொடுகளமர் பலர்குழுமிப் பொன்னரியாய்
வயங்குஞ் சாலி
யாயவெலா மங்கிலதகிற் போர்புரிந்தார் சீர்புரிந்தா
ரவரே யன்றே. (எகூ)

வேறு.

பணைத்தபெரும் போர்பிரித்துப பாரிடைவீ ழச்செறித்
துணைத்தமருப் பெழுமேகத் தொகுதியெனத் தும்புகளாற்
பிணைத்தபகட் டினப்போக்கிப் பின்போய்வைக் கோலுடனே
யணைத்தமணி நெலுமவெவ்வே றகத்திபுளங் களித்தனரால். (எஎ)

குலம்பொலியக் குடிபொலியக் குணமபொலியக் கோவேந்தர்
வலம்பொலிய மகமபொலிய வளமபொலிய மணம்பொலியப்
புலம்பொலியப் பொன்பொலியப பொருள்பொலியப் புகழ்பொலிய
நிலம்பொலிய நலம்பொலிய நெற்பொலியிட் டார்களமர். (எஅ)

வேறு.

மெய்யொடு சேர்ந்த பொய்யை வியன்மதி வலியாற் றாக்கி
யையமின் மெய்யைக் கொண்டே யாணைசெய் யிறைவன் போலச்
துய்யநெல் லினத்தி னோடு சூழ்பத ரினத்தை மள்ளர்
செய்யகாற் றிடையே தூற்றிச செய்தனர் செந்நெற் குன்றம். (எகூ)

வேறு.

ஓங்கு திண்ணிதாம் பற்பல நென்மணி யோங்க
றாங்கு பூமிமான் வரையினு மிகக்கனத் தனவாய்
வீங்கி னாலும்பல் லுயிர்களைப் புரத்தலான் மிகவும்
பாங்கு லாஞ்சுமை யெனவினம பாரப்பேர் பகர்வார். (அ0)

கண்ட விப்பல னடைதரத் தொழில்செயுங் காரா
மண்டு மாபெரு வயிற்றையுந் தாஞ்சிறு வயிறுங்
கொண்ட பான்மையா னீண்டவைக் கோலவை கொள்ள
வண்டு நெற்கடாங் கொண்டனர் மள்ளரா மறிவார். (அக)

நகரத் தேவர்க்கு மரசர்க்கும் வினைஞர்க்கு நாடிப்
பகுமு றைப்படி யளித்தபி னெஞ்சிய பண்டித்
தொகையி லேற்றியிற் சொரிந்தன ரூர்த்தடத் தாநீர்
வகையின் மேவிய புண்ணியச் செல்வரா மாண்பார். (அஉ)

இனிமை யாருமெம் மாதரார் கண்டமோ டிரண்டு
தனமெ னப்பெரும் பாளையாய்க் கனியதாய்ச் சாரு
நினைவி டேமுனக் கினிப்பிலை யென்பர்போ னெருங்கி
யனைய மள்ளர்கள் கமுகினற் பலங்கொடு மகல்வார். (அ௩)

வேறு.

தமதுமட வாரிசைக்கு நிகர்குயிலைத் துரத்துவர்போற்
சார்ந்து மாவி
னமையுமொரு சினையைவளைத் ததன்பலத்தை யவர்கதுப்பொப்
பாகு மென்றே
யெமதுபுல வோர்சொலன்மெய் யேகொலெனச் சுவைத்துநிக
ரினமை யாலே
சுமையிலராய் வீசியெறிந் திடுவார்கள் பலமள்ளர்
களிபபுற் றங்கண். (அச)

வேறு.

கண்ணுக் கினிய ராய்த்தோன்றிக கருத்துக்
கின்னு ராயிருத்தல்
மண்ணிற் கொடுமை கொடுமையது மாறி
யுறலே மாண்பதுபோ
லுண்ணச் சுவைசா றேஞ்சுளைக ளுள்ளும்
புறத்து முள்ளுமுறும்
வண்ணப் பலவின் கனிகளொடு வாழைக்
கனியுங் கொடுபோவார். (அரு)

அநங்கன் கரத்துத் தனுவெறிந்திங் கடுத்துப்
புதிது கரங்கொள்ள
மனங்கொண் டுடையும் படிகமுகா வளர்ந்து
திரண்டு பசுந்தோகை

யினங்கொண் டசைந்து மணிவீசி யிறும்பூ
தெய்த வளம்படைத்துக்
கனங்கொண் டங்கங் கிடங்கடொறுங் கன்னற்
காடு கழிசிறக்கும். (அசு)

வேறு.

முந்தைநாட் டமையுழவர் கரமடுத்து வருத்துபகை
முன்னிக் கன்ன
லிந்தநா ளியந்திரத்தா னசுக்குண்ணப் பகட்டினங்க
ளிழுத்துச் செல்லுஞ்
சிந்தைநா ணுறத்தம்மை வருத்தினரைத் தாம்வருத்துஞ்
செவ்வி யோர்கால்
வந்ததேன் மெய்யுணர்ந்தா ரல்லாதார் விடாரென்ன
வயங்கு மோர்பால். (அஎ)

சக்கையுடன் மருவுதலா லெமதுமட வாரினிமை
சாரு மாற்ற
மொக்கமுழு துஞ்சுவையா யுற்றிலேகோ தொழித்தேனு
மொப்பா கென்று
விக்கணைத்து மியந்திரத்தி னிடைப்படுத்தி யாட்டியக்கோ
தெறிந்து போக்கி
மிக்கதனிச் சாறெடுத்துக் குடிப்பார்கண் மருதநில
மேவு மாக்கள். (அஅ)

வடித்தெடுத்த சாறுமினை மருவாமை யாலதனை
மண்டு தீயி
லெடுத்துவைத்துக் காச்சினர்நே ரின்மையினுற் குழியிலிட்டா
ரிவ்வா றின்னற்
படுத்துதலால் வெதும்பிவெல்ல மெனப்பகரப் பின்னரகம்
பரிவு கூர்ந்து
மடுத்ததம திருக்கையிடைக் கொண்டுவைத்துச் சிறைபுரிந்தார்
மருத மாக்கள். (அகூ)

## நெய்தல்.

இனையன பலவளா னெய்தி மேதகு
தனைநிகர் பணைநலன் சாற்ற லாவதே
கனைகுரற் சலபதிக் கடவு ளாட்சிசெய்
நனைமலர்க் கழிநில நவிலு வாமரோ. (கூ0)

சங்கினத் தருகுமுட் டாழை வீபுறல்
பங்கயற் றிரங்கியான் பகர்ந்த பொய்ப்பிழை
சங்கரன் பொறுக்குமா சாற்று நீயெனு
வங்கெடுத் துரைப்பதற் கடுததன் மானுமே. (கூக)

அளவர்தம் மடவிய ரம்ப கப்பகை
கொளவளர் மீனினங் குழைக டற்புகுங்
களவறிந் தெடுத்தகன் கரைக்கு வித்தன
ருளமகிழ்ந் தளத்திய ருணக்கி விற்பரால். (கூஉ)

### வேறு.

தனிமு தற்சிவங் கடுத்திடுங் கடற்றட மான்மா
வனைய தாமதி னிறைபுன லாணவ மாக
நினைவு றுத்திடு முப்புமுப் பொருணிலை யியல்பை
வனைவ தற்கிட னுயது நெய்தலின் மாண்பே. (கூங)

உலக வாழ்வெனுங் கடற்புகுந் தலமரு முயிர்க
ளிலகு நற்கதிக் கிறையரு ளாற்புக லேய்ப்பச்
சலதி மேவுநா வாய்கண்மீ காமனுற் றறைக்க
ணுலவு பஃறுறை தொறுமடைந் துறுவன வூங்கே. (கூச)

## திணைமயக்கம்.

அவனி யின்புடைத் தனித்தனி யறுசுவைப் பொருள்கள்
சிவணி யின்புறத் திடுமவை சிறப்புறுஞ் சேர்ப்பி
னிவண மைந்திணைக் கருவுரி மயங்கலு மியல்பா
னவந யந்தழை யத்திணை மயக்கமு நவில்வாம். (கூரு)

முடிவில் வேள்வியிற் புகைமுகில் போலெழ முல்லைக்
கொடியு றுங்கிளைக் காஞ்சியின் மயிற்குலங் குழுமிக்
கடிந டஞ்செயக் கண்டுபொன் வெள்ளிமீன் கணியும்
படிவில் புன்னையும் பெய்வன பார்ப்பன பானல். (சுரு)

மருத மாநிழற் றாங்குறு புலிக்குல மருள
வெருது ரப்புவ பூவைசூழ் செறுவினி லெழுந்தாங்
கொருகை மாவொலி யிடியென நினைந்தரா வுருத்த
குரும ணிக்குல மின்னெனக் கூம்பும்வாய் குயில்கள். (சுஎ)

போதி மேலுறு கிள்ளையின் பாட்டொடு பொருநதச்
சாதி தாமரை யாதியிற் சார்தரு சரகங்
கோதில் யாழ்நரம புளரவேற் குகன்பரிச் குலங்க
டதின் மாநடஞ் செய்வவொத் தார்ப்பன திரைநீர். (சுஅ)

குருந்த மேவிய கறிக்கொடிக் காயினைக் கூராவி
னிருந்த மந்தியின் றெரிப்பறப் பாய்வன விளநீ
ரருந்த முன்புறு தெங்கின்மே லதலனில்வந் தமரும்
பருந்த கன்றுபைங் கிள்ளைவாழ் மருதுறும் பறந்து. (சுகூ)

உணங்கன் மீனமுத் துப்புடன் கொடுத்துடன் பெறுவார்
பணங்கொண் மாமணி நானம்வேட் டத்திடைப் படுவூன்
குணங்கொள் வேழமுஞ் சாலியும் பெற்றுடன் கொடுப்பார்
மணங்கொள் சந்தமுந் தந்தமுஞ் சந்தத மறவர். (எ)

உறங்கு மியானையின் கோடுபட் டோடுமான் வீழ
நிறங்கி ளர்ந்தெழு மணியிருள் கெடுத்தொளி நிறைப்ப
மறங்கி ளர்ந்தகே சரிபுலி பாயுமுன் மருளக்
கறங்கு தெண்டிரை மீன்பல கண்மிசைக் கதுவும். (எக)

இனைய பாண்டிநாட் டெழில்வள மெம்மனா வினதேச
வனைய யார்வலா ரத்திரு நாடெனு மங்கை
புனையு மங்கலம் போன்றொளி ரரிமழ புரியை
நினைவி னுட்கொடு புகலுது முள்ளவா நோர்ந்தே. (எஉ)

நாட்டுப்படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் எ௩டு.

# திருநகரப்படலம்.

நிலச்சி றப்பையு நிறைபுனற் சிறப்பையு நெடியோர்
புலச்சி றப்பையும் பொருள்வகைச் சிறப்பையும் புனிதக்
குலச்சி றப்பையுங் கோமுறைச் சிறப்பையுங் குறையா
நலச்சி றப்பையும் படைத்ததா லரிமழ நகரம். (க)

பூம டுத்தது புகழணி தொடுத்தது பூங்காத்
தேமு டுத்தது செல்வமுங் கல்வியுந் திறனுந்
தாம டுத்தது சழக்கெலாம் விடுத்தது தமிழா
னுமெ டுத்தெடுத் துரைப்பதா லரிமழ நகரம். (உ)

கண்ணு தற்பிரா னங்கயற் கண்ணியைங் கரத்தோன்
விண்ண வர்க்கிறை சிறைவிடுத் தருள்குகன் வேயாற்
பண்ணி சைக்குழ லாற்பசுப் புரந்தகோ பால
னண்ணு தற்கிட னானதா லரிமழ நகரம். (ங)

வேறு.

பூவினான் முகத்தோன் முன்னம் பொன்னகர் தனையோர் தட்டு
மேவுசீ ரிதையோர் தட்டும் விளங்கவைத் துயர்த்த காலை
காவலோர் புகழிவ் வூர்தா நகரமென் றிருக்க வப்பே
ரோவறக் கொண்ட தேனை யூர்பெயர் போன்ற தன்றே. (ச)

பொருளமை சாம கீத புராரியை யெண்ணார் நெஞ்சி
னிருள்படப் பொதுளி யன்னா ரிறுமாப்பு நிகர்ப்ப வோங்கித்
தெருளுறு மன்பர் மாட்டுச் சிவபிரா னினிது செய்யு
மருளெனக் கனிந்து சூழு மளப்பிலா ராம மல்கும். (ரு)

## புடைநகர்

வேழ மேகொனீ யெனப்பல கன்னலை மெல்லுந்
தாழ நாகத்தை முட்டியே பொடிபடச் சாடுஞ்
சூழ மத்தியை யொடித்திடுந் தமதுருத் தோன்று
நீழ லைக்கொடும் பார்வையி னடுங்கரி நிரைகள். (சு)

எட்டு மாதிரத் தையும்வென் றுநிலவுறு வெம்மைக்
கட்டு மோர்தறி நீகொலா மெனவதைக் கனன்று
கிட்டு மன்னதா ளானமென் றுரைத்தலிற் கிளர்ந்து
முட்டு வெஞ்சின மொழிந்துறு மவண்பல முனிகள். (௭)

மருத்தை நீயொரு கால்விசை யுளாயெமை மானப்
பொருத்த மாமுழு வேகமுற் றிலையெனப் புகல்வான்
பெருத்த வீரிரு கால்களும் விசையொடு பிறங்க
வருத்த முற்றில வருவன பற்பல வாசி. (௮)

கிள்ளை கொக்குமா சேவலென் றுரைபெயர் கெழுமித்
தெள்ளு நாவல ருரைத்தலா லவர்மொழி தேற்றங்
கொள்ள வுன்னியே பறப்பன வெனவிசை குலவுந்
துள்ளி விண்மிசைப் போதரும் பற்பல துரகம். (௯)

எமது ருக்கொள விருக்குமான் மனைவிமெ யின்ன
லமைய யாமிதி யேமென நினைவுகொண் டாங்குத்
தமைநி கர்த்தபல் வாம்பரி புவியிற்கா றட்டா
திமைய டிக்குமுன் வருவபல் யோசனை யெல்லை. (௰)

ஏற்ற மாந்தவு ரிதகமுன் புலிதமீ ருகத்
தோற்று மைங்கதிப் பரிகட்குக் கலினங்க டுறுத்தல்
சாற்று மேழ்பரி களைப்பொரு தாவகை தணித்தற்
காற்று மோர்தடை யல்லது வேறிலை யம்மா. (௰௧)

கடக ரிக்குலம் பொழிதரு கருமத சலமும்
படப டத்தெழு வாம்பரி விலாழியும் பரவித்
தடம ணித்தெரு வழுக்கெடுத் திடப்புரிந் தனவே
லடைய வவ்விரு மாக்களின் வளமெவ ரறைவார். (௰௨)

செய்ய மாவலி பாலிரந் தவனுயிர் செகுத்தோ
னெய்யெ னுமுன முண்டுமிழ்ந் தெச்சில்செ யுன்னை
வைய மென்றெமைப் போற்சொல வையமென் றெதிர்த்தே
யைய வாழியிற் றகர்ப்பன பலரத மங்கண். (௰௩)

கூறு மிக்குயர்ந் தோரொரு வரைவென் றாற் கூவின்
வேறி யாரையும் வென்றன மெனவுள மேவி
யாறு சூடினோ னிரதமெய் கிழிபட வாழி
வீறு கொண்டுருள் பற்பல கூவிரம் விளங்கும். (௧௪)

எற்ற வந்தவர் கிழத்திய ரழுமொலி யெழுப்பத்
துற்ற தங்கர விற்சிறு நாணொலி தொகுப்பார்
முற்று போரையே பேரணி யெனக்கொளு மொய்ம்பார்
மற்று மேவணி கலையணு வாயினு மதியார். (௰௫)

கார்வ யங்கிய முழக்கென விண்ணவர் கலிப்பாற்
போர்வ யங்குறு நாளெலா நம்பெரும் பொருப்பி
னேர்வ யங்குதோள் வலிமரு வலரிலா நீராற்
சீர்வ யங்கில தேயெனக் கவன்றிடுஞ் செயலார். (௰௬)

வேறு.

எங்கும்பொய் யெனுமு டம்பை யெவருமெய் யென விசைத்தன்
மங்கல வழக்கா மென்று மனததிடை நினைத்து வாழுந்
துங்கமார் வயவர் தன்மை சொல்லுதற் கெளிதோ மேன்மை
பொங்கிடை நகரின் பண்பும் புகலுதுஞ் சிறிது மன்னோ. (௰௭)

## இடைநகர்.

வேறு.

நீணி திப்பெருஞ் செல்வமு மியாக்கையு நிலைமை
பூணு ரூதுபோம் வருமிது போலெனப் புலத்திற்
காணு மாறுபல் கன்னிய ரூசலிற் கவினுஞ்
சேணு லாமலர்ப் பொதும்பர்கள் வயின்வயிற் றிகழும். (௰௮)

கையின் மேவுபொற் பந்தையம் பந்தயங் கழறித்
தொய்யின்மாமுலைக் கிணையெனக் கவிஞர்கள் சொலுஞ்சொ
லையமேவுவிண்ணிடையிருந் தாற்சரி யாமென்
றெய்யெ னக்கக னத்திடை யுந்தின ருவப்பார். (௰௯)

நந்து நந்துநற் களத்தியர் நகிலநேர் நவில
வந்த தாமென வடிப்பர்கண் மீளவு மருவப்
பந்து வந்திடிற் புரத்தறம் மியற்கையாம் பண்பாற்
பந்து வந்தவென் றுளங்களித் தேற்பர்பா வையரே. (௨0)

வேறு.

எந்தே கம்போன் றுடலெனும்பே ரேய்ந்தா யெனினு மாலையிட்டு
வந்தார் கமலக் கரமன்றி மருவா வெமது தனப்பேரை
யந்தோ புனைந்தாய் பலர்கரமு மடுபபாய் சீசீ யெனக்கனன்று
நொந்தா ரிடித்தா லெனக்கனக நொறுங்க விடிப்பார் பலமாதர். (௨௧)

இருமை யுடற்கோ ராவியுள தென்னே புதுமை யெனமனத்தா
லொருமை யுடைய வாடவரு முழையன் னுரு முலவியுறுங்
கருமை படியும் பூங்காவுங் கமலத் தடமுஞ் செழித்தோங்கும்
பெருமை யிண்டமா நகரிதுவாம் பேசப் புகுவா முண்ணகரே. (௨௨)

## உண்ணகர்.

வேறு.

வரைவிலான் சிவலிங்க வடிவாகி யரிமழத்தில்
வாழல் காணாத்
திரைசெய்நீர்த் திரிபதகை யந்நகர்சூழ் கிடந்துசெவி
சேரா நண்பற்
குறைசெய்வா மிதனையென நாகருல குறுவதுபோ
லொலியா லோங்குங்
கரைசெயாக் கடலனைய கிடங்கு நிலை யெவராலுங்
காணொண் ணாதால். (௨௩)

எமதுகுலத் தொன்றனுயி ரிறுத்தமா லவனுருவ
மெடுத்த மீனங்
கமடமனைத் தொடுங்கும்வகை கடுகடுப்பேம் வலனுயிற்
காக்க வென்னுங்
தமதுபகைக் கரியினத்தைச் சாடுமிய மனுக்குமச்சந்
தனையு றுத்து
மமையும்வலி மிகப்படைத்த விடங்கரினங் கிடங்கரினங்
களவின்ற னன்றே. (௨௪)

பொன்னிதழித் தொடைப்பெருமான் றனைவிடுத்து வீற்றிருக்கும்
புனிதத் தான
மென்னவிர சிதப்பொருப்பு மெய்திவளோங் தினிதிருப்ப
தேய்க்கும் வானந்
துன்னுமெழு வாம்புரவி நடைதட்ப விண்ணளவுந்
தோய்ந்தி யாரும்
பன்னரிய வலிபடைத்துப் பலபொறிசேர் நொச்சியெழில்
பகரற் பாற்றே. (உரு)

## கணிகையர்வீதி.

தரைமிசைப் பாதந் தீண்டின்விண் ணாவரித்
தையலர் வாய்தலிற் கொணர்ந்தே
யுரியபொற் புவிப்பொன் னனைத்துமீ குவரென்
றுன்னிய நான்மறைக் கிழவன்
பெரியவா னவர்காற் றரைமிசைத் தோயாப்
பெற்றிசெய் தானென்பர் பெரிய
ரரகர வினைய கணிகையர் செவ்வி
யளவறிந் தியாவரே யறைவார். (உசு)

பரத்தைய ரென்னும் பரமனு ரொருகாற் பண்புளோர்க்
களிப்பரோர் சுவர்க்க
மரத்தைநோ் விழியிப் பரத்தையர் தம்பா லடுப்பவர்
பண்பிலா ரெனினுங்
கரத்திடைக் கொள்ள நிச்சலு முள்ளங் களித்திரு
சுவர்க்கமீந் திடுவார்
வரத்தினு லுயர்ந்தோ ரிருவரி லெவரோ வழுத்துவீ
ரறிவினல் வல்லீர், (உஎ)

வள்ளுவர் பொருளி லாருக்கிவ் வுலக
மருவிய சுகமிலை யென்னத்
தெள்ளி நன்குரைத்தா ரச்சுக மிதெனச்
செப்பிலா ரறிந்தனம் வறிய
ரள்ளுதற் கமைந்த பேரெழி லுடையா
ராயினும் விடுத்துப் பொன்னளிப்போ
ரெள்ளுபல் லிழிஞ ரேனுமுற் றிடுவா
ரிக்கணி கையர்சுக மொன்றே. (உஅ)

### வேறு.

துன்று மாநிதி யோர்வந்து நிதிதந்து தோயு
மன்று மேவெறுக் கையைத்தம தகங்கொள்வா ரவர்பொன்
குன்று காலையு மகத்திடை வெறுக்கையே கொள்வா
ரென்று மொன்றுபோ லிருப்பவ ரிவரலா லெவரே. (௨௯)

### கடைவீதி.

தரைப்பொருளும் வரைப்பொருளுஞ் சலதியிடைப் படுபொருளு
நிரைப்படவைத் தெல்லவரு நினைத்தவகை பெறத்துறுமிக்
குரைப்பகலாக் கடலாடைக் குவலயமான் பண்டாரம்
வரைப்பிலவெவ் வேறிருக்கும் வகைகாட்டு நியமமெலாம். (௩௰)

மருக்காலு மலர்பகரு மடவாரை யடுத்தணங்கே
யரக்காம்ப லிதழ்க்கோவை யாரவிலை யுரையென்ன
வுரைப்பாரைப் பணச்செருக்கா லுரைத்தியோ வெனச்சினவத்
திருப்பாவா யுனக்குளதஃ தெனக்கிலெனச் செப்புவனால். (௩௧)

அருமைநவ மணியினமு மளப்பிலா நிதித்திரளுந்
தருமநெறி யாலீட்டித் தகப்பெருகு மிந்நகர
மொருமணியு மிருநிதியு முறுமமர ரூரதனைப்
பெரிதுநகை செய்தென்னப் பிறங்குமணி வடநாளும். (௩௨)

பரவைகடைந் துடல்கரிந்து படாதபல பாடுற்றுத்
திருநெடுமால் பொன்னாடை சேர்ந்துபே றுறலென்னே
பெருமையதின் மிகச்சிறந்த பேராடை வேட்பவர்க்குத்
தருவதெதிர் நோக்கியுறு தன்மையதிவ் வாவணமே. (௩௩)

### சூத்திரர் வீதி.

விளங்கியபல் வகைப்பொருளும் வேண்டியடைந் தவரெவரு
முளங்களிப்பப் பெற்றிடுவா னுற்றவா வணம்புகன்றும்
வளங்கெழுபன் னிலநலனும் வளர்வித்து மனநிலைபிற்
றுளங்கலிலாச் சூத்திரர்தந் தொன்மைநலஞ் சொல்கிற்பாம் (௩௪)

முன்னருறு மூவகையோர் மொழிந்தபணி விடைபுரிந்து
மன்னுபல தொழிலாற்றி மருதநில வளம்பெருக்கிக்
கன்னல்கமு கரம்பையிலாங் கலிவளர்த்துக் கலிதவிர்த்துத்
துன்னியகட் புரிமைகொடு துலங்கிநிறை குவரெங்கும். (௩௫)

நூலாய்ந்து பாவாக்கி நண்ணியபல் கலையியற்றி
மேலான புலவரென விளங்குகா ருகவினைஞர்
பாலாதி தருந்தெய்வப் பசுப்புரப்பார் பணிசமைப்பார்
தோலாரு முழவதிர்ப்பார் தொழில்வகையெம் மளவிற்றே. (௩௬)

எந்நாளுந் தொழில்புரிவா ரிசைக்குயிலு வம்பயில்வார்
கொன்னுரும் புயவலியார் குலவுமன நலமுடையார்
பின்னுன குலத்துதித்தார் பிறங்குதெரு வளம்புகன்றுந்
துன்னுரில் லாவசியர் தொன்மறுகி னணிபகர்வாம். (௩௭)

## வைசியர் வீதி.

ஒருவணிய னிடமுரைத்த வொருமொழியை மனத்துன்னி
யிருபதின்ன டைம்பதின்ம ரின்னுயிர்நீத் தறங்காத்த
பெருமையவே ளாண்குடியிற் பிறப்புடையார் வாசகத்தி
னொருமையுடை யாரெனயா முரைப்பதுமோர் புகழாமே. (௩௮)

வாசவனு தியவானோர் வாசகநம் பாமாறன்
றேசுமலி யிவர்குலத்தோர் செப்புமொழி நமபினனே
யீசனடிக் கன்புநிறை யிவர்குலமோ தேவர்களோ
பேசுமிடத் தினிதுயர்வு பெற்றவர்கள் பெருமதியீர். (௩௯)

கொடையினுற் கார்காத்த குலப்பண்புங் குளிர்ந்துநல
மிடையறு வாசகத்தா லினியகங்கை குலப்பண்பு
நடையினு னூலறிவு நாடோறும் வெளியிடுவார்
விடையினூர் பதந்துயிலும் வேலையிலு மறவாதார். (௪௰)

விடையாள ரன்பர்பணி விடையாளர் விருந்தருத்தச்
சடையார்க ளகம்புறமா சடையார்க டனிச்செல்வ
முடையார்கள் பொன்னிழைசே ருடையார்க ளுயர்கதவ
மடையார்க ளடையார்க ளடையார்க ளாதலினால். (௪௧)

மறைபுகலு மகமாதி வகுத்ததொழி லெவற்றுள்ளு
நிறைபுகழுற் றொப்பிகந்த நீர்த்துழவஃ தியற்றுவரே
தறையிடைவாழ் வுடையரெனச் சாற்றினர்செந் நாப்போதார்
குறைபயிலா விவர்வாழ்வு கொடுப்பர்புவி யோரெவர்க்கும். (௪௨)

மன்னவர்க்குத் தூதேகல் வயமுறவெஞ் சமராற்ற
னன்னிலைமை யமைச்சுரிமை நண்ணன்மகட் கொடையளித்தன்
மின்னியவே ளாண்மைசெயல் விருந்தருந்தி மிகையருந்த
லென்னுமிவை முதற்பலசீ ரெய்திவளர் மேன்மையினர். (௪௩)

எல்லவரு மெய்ப்பொருளு மெவர்க்குமெடுத் தெடுத்துதவி
வல்லகணக் கினிலிம்மி வரையும்வழு வாராகிக்
கல்லுமுரு கிடப்பேசிக் கடலுலகை வசப்படுத்திப்
புல்லுதலால் வசியரெனப் புகல்பவரே வைசியரென்போர். (௪௪)

தரைமிசையும் வரைமிசையும் புணைமிசையுஞ் சார்ந்துபல
பொருணிறைத்த பேழையெலாம் பொன்னிறைத்துப் புகழ்நிறைத்து
மருவுமிவர் பெருவாழ்வின் வளமனைத்துந் தெரிந்தன்றோ
திரைகடலோ டியுநிதியந் தேடுகவென் றூர்முதியோர். (௪௫)

பூவுலகத் தெவர்தனத்தாற் பொலிந்தவரா யினுமவர்பான்
மேவுதன மெலாந்தம்பான் மேவுபெருந் தவமுடையா
ராவதிது வறிந்தன்றோ வன்னவர்க்குப் பொருந்தமுறத்
தாவில்பெரி யோருரைத்தார் தனவைசிய ரெனுநாமம். (௪௬)

தனத்தான்மட் டுஞ்சிறந்த தன்மையரோ தருமநெறி
மனத்தாலுஞ் சிறப்புடையார் மல்குமுயர் குடிவாழ்க்கை
யினத்தாலுஞ் சிறப்புடையா ரிடங்கொடா றுமடைகின்ற
கனத்தாலுஞ் சிறப்புடையார் கருத்தாலுஞ் சிறப்புடையார். (௪௭)

எத்தனைதண் ணீர்ப்பந்த ரெத்தனையோ பசுமடங்க
ளெத்தனைகல் விச்சாலை யெத்தனையோ சத்திரங்க
ளெத்தனையோ வாவிதரு வெத்தனையோ விவர்தரும
மெத்தனையோ வத்தனையு மித்தனையென் றெவர் புகல்வார். (௪௮)

மட்டிலா வூதியநா டொறும்வளர வளமலியும்
பட்டினங்க டொறுஞ்சென்று பழகுமிவர் சீராய்ந்தே
செட்டியெனுந் திருநாமஞ் சேர்ந்தனனெங் குகப்பெருமா
னிட்டமிகு மிவர்மகிமை யெம்மளவிற் றுங்கொல்லோ. (௪௯)

## அரசர் வீதி.

வேற்றரசர் நிதிவேண்டி வெகுண்டுபொரச் செல்லாராய்
மாற்றலர்தஞ் சமர்வலியை மாற்றியவர் புறங்கண்டு
நாற்றிசையும் வயவிளக்க நன்கமைத்துக் குடிகண்மனந்
தோற்றுபய விருணீக்கித் தூயபுக ழொளிபூண்பார். (௫௦)

ஆறிலொரு கடன்பெறுத லன்றியொரு கடனின்றி
வீறுமுயர் நிதிமலையின் மேலாக வறமென்னக்
கூறுபயிர் நனிவளர்த்துக் குற்றமெனுங் களைகளைந்து
தேறுமன்பு நீர்யாத்துச் சிவனருளாம் பலனுறுவார். (௫௧)

பேரரிபோன் மிடலுடையார் பிறங்குநடு நிலையுரியார்
சேருடையை விட்டவன்கை சிவணியநட் பிலககணத்தா
ராரும்வயப் படைமுதலா மாறங்க நனிபொருந்திச்
சீரணியுங் காவலவர் செழுநிலத்தோர்க் காவலவர். (௫௨)

### வேறு.

அறம்பொரு ளின்ப நிலையற மறமா
மறுவகை யியலினு மணுவுந்
திறம்பல ராறு தானையுஞ் சிறப்பச்
செறிந்தன ரோதலே யாதி
யுறுந்தொழி லாறு முடையர்நன் னடைய
ரொருகண மேனுந்தம் முள்ள
மறம்பயி லாது வாழ்பவ ரைந்து
வகைக்குழுச் சுற்றமு மலிந்தார். (௫௩)

தங்நிலத் துறைவார்க் கைவகைப் பயமுந்
தடுத்தன ரொதுக்கியெப் பொழுது
மின்னலுற் றவருக் கெளியரா யிடுக்க
ணியற்றினோ ரொருமக னேனும்

மன்னவற் கோறற் கஞ்சிலார் செவியே
யக்கமா வறிந்ததை நன்கு
பின்னுறத் தெளிந்து நீதியாற் களிக்கும்
பெற்றிய ரரசுசெய் பெரியர். (ருச)

## அந்தணர் வீதி.

ஒருகுலமு மிருபிறப்பு முததொழிலு நான்மறையு
மோரை வேளவி
புரிவதுவு மறுதொழிலு மொழுகடலு மெண்மலையும்
பொருந்து மொன்பான்
மருவியகோள் களுநிலைபின் மாறிலுமா றுப்பண்பும்
வளாசம பதநும்
பெருகவரு பன்னொருமுக கோடியரிற் சிறந்துறுவர்
பெருமுக நாலோர். (ருரு)

### வேறு.

அறுவ கைத்தொழி லிடத்துள பெருவிருப் படைர்
மறுவில் பூசனை யதிதிகள் பூசனை மகஞ்செய்
துறுவ தாமவி யுண்டலிப் பெற்றிசா லுரவோ
ரிறுவ தில்லெனு மிருதியை விளக்கிடு மியலோர். (ருசு)

தீர்தத மூழ்குதல் சந்தியா வந்தனஞ் செபித்தல்
சீர்த்த வோமமதே வார்ச்சனை விருந்துபோற் றிடுத
லார்த்த வைஸ்வதே வந்தினந் தொறு முறையாற்றிக்
கூர்த்த சிந்தையோ டிலங்குவர் பார்ப்பனக் குலத்தோர். (ருஎ)

பிராமந் தெய்வமா மிருவகைக் கன்ம மும் பெரிது
விராவுங் கொள்கையர் மெய்யலாற் பொய்சொலா விரதர்
பராவு மன்பினர் முப்புரி நூலினர் பண்பாற்
றராத லந்தொழுந் தகையினர் வேதவித் தகரே. (ருஅ)

எம்பி ரான்றன துடைமையெப் பொருளுமென் றெண்ணிப்
பம்பு மெவ்வுயிர் மாட்டுநற் பேரருள் பரப்பித்
தும்பி சூழ்தரு முண்டகத் தொடையலுஞ் சூடிக்
கும்பு கொண்டுவாழ் குவர்பலர் முதன்மையாங் குலத்தோர். (ருகூ)

## பிரமசாரிய நிலை.

ஒருகு லத்தினி லிருபிறப் புறும்ப நயன
மருவு கன்மமுற் றவர்மறை யோதுவான் மாண்பு
பெருகு முஞ்சிநாண் கரியமான் றோற்கலை பெறுதோ
ளுரிய பன்னலி னுமப வீதமுற் றொளிர் வார். (௬0)

கூவி ளத்தினு முருக்கினுந் தண்டுகைக் கொள்வோர்
மேவு காலையி லிரவியை வணங்கியே விருப்ப
மோவு றாதுநற் சமித்தெடுத் தியற்றுவ ரோமந்
தூவு பிக்ஷை கொண் டுண்பவ ரகம்புறந் தூயோர். (௬௧)

தேசி கற்பணிந் திருவெனக் குணத்தொடு தீசி
யாசை பார்த்திருந் தியம்பென வினிமையி னறைந்து
காசில் பன்மறை களும்பொரு ளுளங்கொளக் கற்பார் (௬௨)
வாச மாலைசந் தணிகலர் வன்னியா மாண்பார.

### வேறு.

புலருமு னெழுந்து நித்திய கருமம்
புகல்விதி முறைப்படி புரிந்து
பலகலை யாய்ந்து பரனைவந் தித்துப்
பரிவின ருடனமு தருந்தி
நிலவுல கினுக்குத் தெய்வத மாகி
நின்றுமா மறைக்கொரு வித்தாய்
மலரவன் முகத்துற் பவித்தவர் மகிமை
வழுத்திட யாவரே வல்லார். (௬௩)

## ஆதிசைவர்.

மூந்த வேயெழு நான்கெனுஞ் சுருதிகண் முதன்மை
வந்த சீரெழு நான்கெனு மாகம வகைகள்
சிந்தை கொண்டவர் புராணமீ ரொன்பதுந் தேர்ந்தோ
ரெந்தை யாரடி மலரலாற் கைதொழா வியல்பார். (௬௪)

பூதி யீந்திடு முரிமையர் மனுக்களிற் புரையில்
லாது மேதகு மைந்தெழுத் தன்பருக் கருளுங்
கோதி லாதசற் குருத்துவ விலக்கணங் கொண்டோ
ராதி சைவராம் பெயரின ரருளுரு வமைந்தோர். (௬௫)

ஞானக் கண்ணினுக் கல்லதை வெளிப்படா நம்பன்
றூனக் கண்ணிய புயத்தொடு கருணையாற் சகல
ரூனக் கண்ணினுங் கண்டுய வெளிப்பட லொப்பா
ரீனக் கண்ணுறு ரிவர்சிவத் துவிசரென் றிசைப்பார். (௬௬)

வேறு.

ஆதிமறை மனுவோதி யாகமத்தின் படிகடுக்கை யணிவார் பூசை
நீதிபெற நித்தியநை மித்தியகா மியங்களினொ டினிதாற்றி
யோதுசிவ னடியார்க ளுடனருந்தன் மகிழ்ந்துறைத லுரிமையாக்கித்
தீதில்பல கலையாய்ந்து பொழுதுகழித் தகங்களிப்பர் சிவநூற் செல்வர்

## கற்புடைமகளிர்.

நாயகற்கு முன்னெழுத லாதிபின்ன ருறங்கல்கடை
நண்ணு முந்நான்
கேயவகைக் குணங்களுறீஇ யீசனெனக் கணவனையே
யெண்ணிப் போற்றிப்
பாயபணிக் கஞ்சாம லருந்ததியே பல்வேறு
படிவங் கொண்டு
தூயவரி மழத்தடைந்தா லெனநிறைவர் கற்புடைய
தோகை மார்கள். (௬௮)

## நூல்பயில்வோர்.

சிந்தையெனும் புலத்தினிடைத் திகழறிவு விதைவிதைத்துச்
சுந்தரநூ லாய்தலெனுந் தோயமிட்டு மறதியென
வந்தகளை யறக்களைந்து மகிழ்ச்சியெனும் பயிர்வளர்த்துச்
சந்ததமும் புகழ்ப்பலனைச் சாருவர்மா ணவர்பலரும். (௬௯)

## பலவகை அறச்சாலைகள்.

மூவி ரண்டு சமய முறைநெறி
மேவு நற்றவ மேலவ ரின்புறக்
கூவி யுண்டியுங் கூறையு மீந்திடுந்
தாவில் சாலை தலைத்தலை தங்குவ. (௭௦)

அகில நாயக னன்றருள் செய்தலிற்
றகவு றாஉமறை சாற்றும் விதிப்படி
மகிமை வேதியர் மாமுனி வோருடன்
மகமி யற்றிடுஞ் சாலையெம் மாட்டுமே. (எக)

சரியை யாதியோர் நான்கிற் றனித்தனி
யுரிய நால்வகை யுற்ற வொழுக்கினர்
பரவு நன்மை பயபப மகிழ்ச்சியின்
விரவு சாலைகண் மேவுவ வெங்கணும். (எஉ)

திலக வாணுதற் றெய்வமின் னொருட
னலனு கர்ந்து நயத்தலின் மேமபடக்
குலவு மின்பங் கொடுக்குஞ் செழுந்தமிழ்ப்
புலவர் சங்கம் பொருநதுமெங் கெங்குமே. (எங)

புனலெ டுத்துவிண் போய்மின்னி நீர்பெயுங்
கனமு ழக்கமெக் காலும ருதநிற்
றினமு நான்மறைச் செல்வ ரிருநதுசெய்
கனமு ழக்கமெக் காலும ருதமே. (எச)

ஈச னருளத் தின்ப முறப்புரி
பூசை யாதி புகலும் விதியெலாம்
பேசு மாகமம் பெட்பொடு கற்பவர்
மூசு சாலைகண் மொய்த்து முழங்குவ. (எரு)

## திருக்கோயில்.

பாண்டியநா டெனுந்தேவி திருமுகமே நிகராகப்
பயிலுஞ் செல்வ
மீண்டியறம் வளர்வதனுக் கிடமாகு மரிமழுவூ
ரிதனை மண்ணிப்
பூண்டிலகு செழுநதிலக மெனலாகு முள்ளன்பு
பொருந்தி நின்று
வேண்டியவர் வேண்டியவை பெறவருளுஞ் சிவபெருமான்
மேவுங் கோயில். (எசா)

வேறு.

விண்ணவர்க ளாடோறு மேவிநதிச் சடையுடைய
பண்ணவனைத் தொழவரற்குப் பண்ணியசோ பானங்க
ணண்ணியநல் வழிபோலு நாதர்திருத் தளிமுன்பு
கண்ணகன்ற கோபுரத்தின் காட்சிமிகு மாட்சியதே. (௭௭)

தீட்டரிதா கியவேதஞ் செப்பொலியு மணமிருந்த
தோட்டலர்பற் பலவடியார் தொடுத்தறுதவ மனுவோதிச்
சூட்டொலியு மூவர்முனஞ் சொன்னவருட் டமிழ்வேதப்
பாட்டொலியு மோரேழு பாரவையொலி யையுமடைக்கும். ()

பொதுவகை.

மாற்றலர்த முளங்கலங்க வயபபடைத்தூ ரியங்கறங்கு
மேற்பவருட் குதுகுலிப்ப வீணைமுழ வங்கலிக்கு
நாற்றிசையா னையுநதிகைப்ப நன்மகபபே றுறவதுவை
சாற்றுமுழ வொலியேழு சலதியொலி யினுமபெரிதாம். (௭௯)

வில்வலியிற் பேடியென விளம்பிடுவா பார்த்தனையு
மல்வினையிற் காண்மகனை வழுத்தவர்கா ன் மகனென்னக்
கல்வியிறைற் சேடனைதகங் காலின்கீழ் வாழவைபபார்
பல்வகையா னுஞ்சிறந்த பண்பினரா டவரெவரும். (௮௦)

வெற்பினிற் செயுமுலேபார் மிளிர்மதியாற் செயுமுகத்தார்
பொற்பினற் றிருமகளு மலர்மகளாப் போதவுளார்
கற்பினு லருந்ததியுங் ககனமீச செலவிடுபயா
ரற்பினு லங்கனையா ரங்கனையா ரெவரம்மா. (௮௧)

என்வரையுங் கருணைசெயு மீசனை பெழுநதருளுந்
தன்மையகத் திடைக்கொண்டு தானுமபல் லுருவாகி
வின்மலேவந துறைவதுபோல் விளங்குவன விளங்குமொளிப
பொன்மலியு மணிமாடம் புலனெருங்கண் டதிசயிப்ப. (௮௨)

அம்மாட மேடைமிசை யரிவையர்செய் நடவியலேச்
செம்மானை நிகரும்விழித் தெய்வமின்னார் கண்டொளித்துக்
கைம்மாண்பும் பதமாண்புங் கற்பதற்குத் துணைசெய்யு
நம்மாலிங் குரைப்பரிதா நாட்டுகொடிப படவரிசை. (௮௩)

இன்னவகை பன்னலமு மென்றுநிறை யரிமழமா
நன்னகரின் வளமிந்த நானிலமெ லாநதெரியு
மன்னதுதா னென்னுரையி லடங்குமோ மாமுனிவர்
மன்னியுறை நைமிசமாம் வனத்தியல்பு தனைப்புகல்வாம். (அச)

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆகசசெய்யுள் உகக.

---

# நைமிசாரணியப்படலம்.

பொன்னந் தாமரைப் பூவிலோன் முனிவரர் பொருட்டு
முன்னந் தானொரு குசையுரு ளுய்த்திட முடிகி
மன்னந் தாவள மல்குறக காட்டிய வனமே
யன்னந் தாவிய கங்கைசார் நைமிச மாமால். (க)

பெருமை மிக்கவான் பிறங்கிய தேவரும பிறரு
மருமை மிக்கசிர் முனிவரர் மகத்தவி யாதி
யொருமை யுற்றுவந துணதகினந தோறுநன் குதவுங்
கருமை பெற்றனைந தருநகள்சூழ் நைமிசக் கானம். (உ)

மோக நீபபது மும்மலஞ் சிப்பது முனிவர்
யோகங் காப்பது நிறைந்த மெய்ஞ் ஞானத்தி னொடுநற்
போகஞ் சேர்ப்பது புண்ணியந தருவது புலராச
சோகந் தீர்ப்பது நைமிச வனமெனுஞ் சூழல. (ங)

ஈத்து வத்தலில் வான்றரு வைந்தையு மெடுத்துப்
பாத்தி றத்தினர் சிறநதவாப் பகருவர் பரிநதம்
மாத்த லத்தினர்க் கவைகெடா வவியினை வழங்குங்
காத்தி ரததினே மெனபபொலி நைமிசக கானம். (ச)

கரங்கள் கூபபிநின் றெவ்வகை விரும்பினுங் கருத்துள்
ளிரங்கி யீகலா தொறுபபவர்க கீகுந ரியல் போற்
கரங்கள் கூப்புநர்க் கீகலா தொறுபபவர் களுக்கே
யிரங்கிப் பல்கனி யீயுமுள் ளிலந்தைக ளிலங்கும். (ரு)

அரம்பை யோடுறு மவரையு மவியுண வழைக்குந்
தரம்பொ ரப்பல தருமிலைக் கரமசைத் தவிரும்
புரம்பொ டித்தவன் பொருநரி புலியடிப் பைங்கா
யரம்பை பற்பல வவனுயர்ந் தழகுசெய் தமரும். (சா)

மாயன் மைந்தனுக் கொருமனை மலரென மருவி
நேய மாதவ நிலைபிறழ் தரச்செய நினைத்த
தாய பாதக மகற்றுமின் னெனமுனி வரர்பாற்
றாய தாங்கனி கொடுத்தடுத் திருப்பபல் சூதம். (எ)

இன்ன மூதவர்க் கெமெம்பர் முனிவர னெய்தி
முன்ன வன்கதைக் கனிரச மீந்திடு முறையாற்
றன்ன மின்மிகு தபசிகூட் டமபெறத் தழைத்துத்
துன்னு தேங்கனி யுகுத்துமென் றடுத்தபல் சூதம். (அ)

நிலையி னுற்றலா லொருவர்செய் நன்றியை நினையாப்
புலையி னோர்க்கறி வுறுத்துதல் போன்மெனப் புனலை
யுலவில் வேர்வழி யுணமுன முதவிய துன்னித
தலையி னுற்றருந் தாழைகள் பலவவண் டழைக்கும். (கூ)

கம்பு தூக்கிய கரத்தனு முரியசங் கரனும்
பம்பி நின்றெனப் பூவையுங் கொன்றையும் படிந்து
கொம்பு பூத்தலர்ந் தளிகள்வீழ்ந் துணமதுக் கொட்டி
யம்புவிக் கெலா மளவிலா மணமுற வாக்கும். (ம)

வேறு.

எங்கணி லொன்றை யெழிற்கரத் தெடுத்த விறைவனை
யனையரா யிலங்குந்
துங்கமா முனிவர் குழாம்பல வசிக்குஞ் சூழலா
யிருந்தலா னமையுந்
தங்கவோர் காலந் தாங்குவ ரென்னத் தருக்கொடு
குதிகுதித் தோடிப்
பொங்குபே ருவகை யொடுதிரிந் தாங்குப் பொலிவன*
வளவிலா மான்கள். (மக)

### வேறு.

எத்தனையோ தருக்களிவ ணிருந்திடினு மவற்றின்பே
ரினைக்கொள் ளாமற்
பத்திரத்தை மலரையணி பரமசிவ னதிவிருப்பப்
பட்டன் றேமெவம்
முத்தமப்பே ரினைக்கொண்டா னென்றுவகை யுடன்கனிவா
யும்பர் நாட்டில்
வைத்ததரு வைபுமிகழ வளர்ந்தாங்கு வளர்சம்பு
மரங்கண் மல்கும். (௰௨)

இந்தவளம் பலபடைத்துத் தேவருக்கு முனிவருக்கு
மெவர்க்கு மின்பந்
தந்துவளர்ந் துயர்நைமி சாரணியத் திலங்கியமா
தவசி ரேட்டர்
சந்ததமுங் குழுமியிருந் தைந்தடக்கித் தவம்புரிந்து
தகவா யோகு
வந்துசிவ ஞானமுற்று மகம்பலசெய் தளவிலருள்
வாரி யாழ்ந்தார். (௰௩)

ஒருகணமும் பரஞ்சோதி யுருநிலையை மறவாம
லுளத்து நோக்கி
வருகணத்தர் கனவிலுநல் வழியல்லா வழிசெல்லா
மனத்தர் கல்லு
முருகமொழி யின்சொல்லும் பேரன்பு மெய்யுணர்வு
முடையா ரின்பம்
பெருகமறை யாகமமும் பிறங்குபுரா ணாதிகளும்
பெரிதுந் தேர்வார். (௰௪)

### வேறு.

காசிபன் வியாசன் வியாக்கிர பாதன் கவுதமன்
மார்க்கண்டன் பரத்து
வாசன்வான் மீகன் சுகன்கலைக் கோட்டு மாமுனி
பதஞ்சலி வசிட்டன்

மாசிலத் திரியாங் கிரசன் சனற்கு மாரனு
ரதன் றுருவாசன்
பேசுசீ ருரோம னகத்தியன் சனகன் பிருகிர
ணியமுனி பினாகி. (௰௫)

ததிபுலத் தியனே ரண்டமா முனிவன் சமதங்கி
சத்தகூன் முனிவன்
விதிநிகர் பதுமன் சௌனக னாதி மேதகு
முனிவரர் வேதத்
துதிமுறை தவறா தொழுபெரு வேள்வி யுஞற்றியாங்
குவகையோ டுறநா
ணதிமதி பொதியு முடியுடைப் பெருமா னட்டிய
லருட்கட னறவ. (௰௬)

செவிவழி யுணுமா சிந்தைபுள் விருப்பஞ் செறிந்தவ
ராகியம் தார்பாற்
புவிமிசைப் பெறுமு மௌனநினை பொழுது புரிசடைப்
பொருவிலோன் பொருவ
வவணருட் சூதமுனிவரன் வரலு மவாவொடு
மெதிர்புகுந் தழைத்துத்
தவிசின்மீ திருத்தி நான்முறை போற்றித்
தாழ்ந்துநின் றறைகுவர் மாதோ. (௰௭)

சிவகதை நிறைந்த தெய்வதக் கடலே திகழ்பதி
னெண்புரா ணமுமோர்ந்
தவனியி லெமக்கின் னருளினு லுரைக்கு மற்புதக்
கற்பக மனையாய்
நவமுற வின்று பரசிவ சரித நறவைவேட்
டிருந்தன நலமா
முவங்கமீக் கொள்ளத் திருவருட் பெருக்க
முய்ந்ததா லுனையிவ ணுறவே. (௰௮)

வேறு.

பாரினுள்ள சிவதலங்கள் பலவவற்றுட்
சிறப்புடைத்தாய்ப் பலனை நெஞ்சத்

தோரிலுடன் றருமூர்த்தி யுறுநிலையாய்த் தீர்த்த முபா
வுளதாய் மேலாஞ்
சீரிலுயர் சிவதலமான் மியமொன்று கருணைகொடு
செப்பல் வேண்டு
நாரினிறை மனத்தவனே நற்றவனே கற்றவனே
நலஞ்செய் வானே. (யக)

எனச்சவுந காதியர்க ளிசைத்திடலுஞ் சிவனருளை
யெண்ணி யேததி
மனத்தின்மிக மகிழ்வெய்தி மாறாத பேரன்பு
வளர நோக்கி
யனத்தனரி யறிவரிய வரன்சரிதப் பெருங்கடலை
யளவிட் டியாரே
கனத்தபுவிக் கண்ணுணர்த்தங் கலைமதியார் முனிவர்காள்
கருதிக் கேண்மின். (உய)

வேறு.

சிவகதை கேளாச் செவிமரப் பாவைச் செவியன்றிச்
செவியுள தன்று
சிவகதை யுரைப்பார்க் குதவிலார் செல்வஞ் செல்வமென்
றுரைத்திடு தெய்வச்
சிவகதை படியார் கலையறி வாய்ந்து செப்பிடிற்
கலையறி வாஞ் சீர்ச்
சிவகதை நூலைப் பூசியா ரெடுத்த சென்மமுஞ்
சென்மமன் றறிவீர். (உக)

சிவகதை யன்பாச் செவிவழிக் கேட்டோர் செல்வமுற்
றளவிலாண் டிருந்து
சிவபத மடையுஞ் செவிவழி யறிவர் தேவரா
தியர்துதித் திடுஞ்சீர்ச்
சிவகதை படிப்பார் படிப்பவர்க் குதவி செய்தவர்
பூசைசெய் திடுவோர்
சிவபர ஞானை நமன்கதை காணுத் திருவரு
ளுடைய ராய்த் திகழ்வார். (உஉ)

வேறு.

சிவகதையே சரியைமுதற் சிவஞானம் வரைதெரிக்குஞ்
செல்வப் போதஞ்
சிவகதையே நாற்பதத்திற் செல்லுநெறி முறைகாட்டுந்
தீப மேலாஞ்
சிவகதையே நினைத்தவெலாஞ் சித்திக்க வருள்புரியுந்
தேவ தாரு
சிவகதையே யிகபரந்தந் தளவில்சுகத் திருத்திவைக்குந்
தெய்வ மாகும். (௨௩)

வேறு.

ஆதலி னீவி ரதனையே கேட்கு மாசையுற்
றமர்ந்தனி ராற்ற
மாதவ மியாதோ வறிகில னிமய மாதவன்
றிருவருள் வழியாற்
பூதலத் திலங்குந் தலமுதன் மூன்றும் புனிதமேம்
பாடுறப் பொருந்திக
காதலுற் றடுத்தார் கருதிய வெலாமக் கணத்தருள்
புரிவதாய்க் கஞலும். (௨௪)

அத்தல மமர்ந்த நாடெது நகர்ப்பே ரியாதவ ணெழுந்தருண்
மூர்த்திக்
குத்தம பூசை யுஞற்றினர் பேறெ னுவமையில் தீர்த்தத்திற்
குலகு
வைத்தபே றெதுவம் மகிமையென் னென்னில்
வழுத்துது முனிவிர்கா ணீவிர்
சித்தமன் புற்றுக் கேண்மினென் றெடுத்துச் செப்புவன்
சூதமா முனியே. (௨௫)

நைமிசாரணியப்படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௨௪௪.

# தலவிசேடப்படலம்.

மதியறு கரவுகங்கை மதலைகொள் சடிலவள்ள
றுதிபொதி பதத்திலன்பு சூழ்ந்தமர் மனத்து நல்லோர்
விதிமுறை வணங்கிப் பேறு மேவிய மேன்மை சான்ற
பதிகளி லுயர்ந்த தூய பதியொன்று பகர்து மாலோ. (க)

சிவபிரா னுமையா ளோடு சிறந்தமர் தலங்க ளெல்லா
நவமிகு மேற்ற மாக நவிலுவ துண்மை யேயாம்
பவமகற் றிடுவா னந்தப் பரமனு மனையுஞ் சேயு
மூவமையி லரசாய்ச் செங்கோ லோச்சிய தலமொன் றுண்டால். ()

வேறு

அப்பதி வடபா லரிமழப் பதியொன் றவனி யிலிணை யிலா தமரு
மெப்படி யென்னி லரிமழ வாகி யிறைஞ்சிட வங்க ரிறையே
யொப்பறு கயற்கண் ணுமையொடு தோன்றி யுயர்வர மருடலமான
விப்பதி மகிமை யெடுத்துரைத் திடுத லெளிதன்று சேடற்கு மின்னும்

கமலையிற் பிறக்கக் காசியி லிறக்கக் கனகவம்
பலமதைக் காண
வமலனே சோதி யாகிய வரையா மருணையை
நினைத்திட வவர்கு
மூமலமு மகன்ற முத்தியுண் டென்பர் முடிவிலா
வரிமழுங் கேட்கில்
விமலமா மதனைத் தருமெனி லெவரும் விழைதலப்
புகழ்சொலற் பாற்றே. (ச)

இத்தலத் திருந்தா றறம்பல புரிந்தா ரிறைபத
மலர்மிசை யன்பு
வைத்த சிந் தையினை மருவடி யார்க்கு வணக்க முற்
றவர்பணி வகிப்பா
ருத்தம மிகுந்த சிவபுரா ணங்க ளோதுவார்க்
குதவுநல் லுளத்தோர்
முத்தரா குவரென் றெடுத்தெடுத் துரைப்பார் முனிவர
ரையமொன் றிலையால். (ரு)

மற்றொரு தலத்திற் பல்யுக மிருந்து வழுத்தருந் தவமெலாம் புரிந்து, பெற்றிடு பலனை யித்தலத் தொருநாட் பிறங்கிடிற் பெறுவது மெய்யே, குற்றமிக் கோங்கு கொலைகள வாதி கொடுந்தொழில் புரிந்தீக் கொடிய, குற்றபா வமுமிவ் குறுவரே னீங்கி யுயர்பதத் தமர்வரா குவரே. (௬)

வேறு.

சரியை யுற்றவர் சாற்றதைத் தாண்டிய
கிரியை பெற்றவர் கேடில்யோ கத்தினர்
பெரிய ஞானத்தர் பேறு பொருந்தல
மரிம முப்பதி யாமெனப் பானாறவர். (௭)

கலைகள் கற்றுணர் சவிணமறை யோகினர்
றலைவின் மந்திர மோர்ந்துபுன் ஞனுமோர்
நிலையி லுற்று நிரம்ப பயனமுற்று
மலைவி லாமல ரிப்ப கரிமறும். (௮)

வன்ன மானகரம் வைத்த பரன்ற
ஞனனி யித்தலக் கோரிறின முயற்றிடி
லென்ன நிமை யிபறறிம ராபிறு
மன்ன பாவ மிருன பணிபமே. (௯)

மனறு நூறு மகமபுரிந் தாரகனறிய
பொன்னனி ருடு புரப்பகற செயநிடா
துன்னி யித்தலத் தோரறஞ் செய்கவர்க்
கன்ன தான மடைத்த லெளிதரோ. (௰)

கந்த மூலங் கனிசரு காதியுண
டைந்து வெங்கன லுய்ப மைமர்ந்து செய
ந்ந்து மாதவ நலகுமப நவிலைப
யிந்த மாதல மெணணினாக பிபுமே. (௰௧)

வேறு.

எத்தலத்து மகலாத விரும்பவமும் பெரும்பிணியு
மித்தலத்தைக் கண்டவுடன் விரிந்தோடு மிதுகிசுரா
முத்தலத்து மொருதலமு மொழியவிலை முனணினர்க்குக்
கைத்தலத்தா மலகமெனக் கண்கண்ட காட்சியதே. (௰௨)

7

திருமாலும் பிரமாவுந் தேவர்களு முனிவரரும்
பெருமாலுற் றடிபணியப் பெறும்பதியாம் பசுபதிதா
டருமாலுற் றுயர்பதியாத் தழைத்தவரி மழஞ்சார்ந்தார்
கருமாலுற் றெழுபிறவிக் கடற்கரையாங் கதியடைவார். (௰௩)

வேறு.

செல்வம் வேண்டினுஞ் சிந்தையுண் மகிழ்ச்சியைச் செறிக்குங்
கல்வி வேண்டினுங் கான்முளை வேண்டினுங் கதியின்
மல்க வேண்டினும் வேண்டிய வகையெலாம் வழங்கும்
பல்க வேண்டுவார் பரவிய வரிமழப் பதியே. (௰௪)

வேறு.

இத்தகைய தலமகிமை யெனும்பெரிய சாகரத்திற்
சித்த மொரு வழிபடிந்து சிறிதுதுளி யளவெடுத்துப்
பத்தர் குழா மகிழ்வுபெறும் படியுரைத்தா மினித்தீர்த்தம்
வைத்த மகி மையிற் றெரிந்த வரையெடுத்து வழுத்துவாம்.

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௨௱௬௯.

# தீர்த்தவிசேடப்படலம்.

பதிகளிற் சிறந்த வரிமழத் தருகு பரவிய தீர்த்தமொன் றுளதா, னதிகளி லுயர்ந்த சுவேதமா நதியா நவிலுவ ரதற்குறு நாமந், துதியொடு பார்த்தோர் படிநதவ ரந்நீர்த் துளியெடுத் துண்டவர் துகளின், மதியுற வேண்டு வனவெலா மகிழ்வாய் மருவிப்பின் சுவர்க்கத்து வாழ்வார். (க)

வேறு.

கங்கைகா விரிவாணி காளிந்தி சிந்துகயை கன்னி சேது, துங்கபத்ரை சரயுநதித் துறைபொருநை வையையெனச் சொல்ல வாய்ந்த, பங்கமில்பன் னதிகளினும் பரவையினு மதிகநலம் பரவும் வெள்ளைச்,

சங்கமணி கருவுயிர்த்துத் தவழ்திரைவெள் ளாற்றுயர்தீர்த் தந்தான்
மாதோ. (உ)

எத்தீர்த்தத் தினும்படிந்து மேகாத வெவ்வினைக்கு மிறுதி காட்டு
மத்தீர்த்த மெதுவென்ன வாராயி லரிமழத்தை யடுத்துக் கீழ்பான்
முத்தீர்த்துப் பொன்றிரட்டி முருகுவிரி மலர்பலவு மொய்ப்ப மேவின்
பத்தீர்த்தந் தவளநதிப் பாற்றீர்த்த மன்றியுண்டோ பாரின் மீதே. ()

வெள்ளாற்றுத் தீர்த்தமிசை விரும்பிவிதி முறைபடிவான் வே
ண்டி யாரும், கொள்ளாற்றுப் படுத்திவைப்பா குலவுபதஞ் சிவபத
மே கூறவ் வாற்றி, லெள்ளாற்றித் தருபபணஞ்செய் தினியபிதிர்க்
கடன்கழிப்பா ரெவரு மேலாங், கள்ளாற்றுக் கடுக்கையணி கண்ணு
தலான் றிருவடியைக் கலப்பர் மாதோ. (ச)

வேறு.

பரிமகங்கோடிபண்ணினுங்கிடையாப்பலனையும்விரும்புவவெவையு
மரிமழநகர்வாழருட்கடலாயவண்ணலாரடிமலரகத்தில்
விரிதரவிருத்தியொருதரமேனும்விரும்பிவெள்ளாற்றுநீர்மேவி
யுரிமையிற்படிந்துதிப்பவரடைவருண்மையீதெண்மையினுறுமே.

வேறு.

நவமான வரிமழமா நகர்வயிற்பஃ றீர்த்தத்து
முவமான மிலதாக வுளதுவெள்ளாற் றுயர்தீர்த்தம்
பவமான பிறப்பிறப்பிற் படிந்துன்பந் தீர்த்தமினிச்
சிவமான திருவடைவ மெனச்செபபச் செய்திடுமால். (சு)

ஆண்டாதி யீரயன மவிர்திங்கண் முதற் றோற்ற
மாண்டார்கொண் மதிகலையின் மாண்டமர்நாண் மருவியநாள்
வேண்டாரும் விரும்புவள வெள்ளாற்று வனம்படியி
லீண்டாரு மெய்தரிய விறைவனடி யெய்துவரால். (எ)

வளம்பொருந்து மரிமழத்துண் மதிபொருந்தத் துதிபொருந்தக்
களம்பொருந்தக் கறைமழுமான் கரம்பொருந்த வெண்ணீறு
குளம்பொருந்த வளரிறைவன் குணம்பொருந்து தவளநதி
யுளம்பொருந்தப் படிந்தவரே யுளபவத்தல் விடிந்தவரே. (அ)

பொருந்தீர்த்தம் பவமரிக்கும் புகழ்த்தீர்த்தம் புண்ணியங்க
டருந்தீர்த்தம் பாண்டியனுற் றழைதீர்த்தங் கரையடர்ந்து
வருந்தீர்த்த மரிமழத்தா னெருந்தீர்த்த னுளமகிழும்
பெருந்தீர்த்தந் தவளநதி பெருகியருள் பெறுந்தீர்த்தம். (௯)

பன்னரிய தவளநதிப் பாலாடி யரிமழத்துண்
மன்னியமுக் கட்சுடரை மனத்தினிரு ளறவிருத்தித்
துன்னியவெண் காப்பணிந்து சொற்றிடுமைந் தெழுத்தெண்ணி
யுன்னியவர் பணிவிடைசெ ருறப்புரிவார் பிறப்புரிவார். (௰)

அந்தவள நதிப்பாங்க ரழகியசோ பானமதைச்
சந்தவள முறப்புரிந்து சத்திரநந் தனஞ்சமைத்தார்
பந்தவள வெனுந்தனத்துப் பரையருளும் பரனருளு
நந்தவளர் கயிலாய நற்பதமும் பெறுவாரால். (௰௧)

மருவுபுகழ் வெள்ளாற்று மாதீர்த்தம் படிந்தவர்க்குத்
திருவளருங் கல்விவருஞ் செய்யமகப் பேறுமுண்டா
மொருவகிலாப் பிறவிவினை யொழியுமினு மரிமழத்துப்
பொருவிலரன் றிருவருளும் பொருந்துமிகு புகழாமால். (௰௨)

வேறு.

காசிநீர் படிந்து கயைதனிற் பிண்டங் களிப்பினிட் டரும்பிதிர்க் கடனை, மாசிலா தியற்று மனத்தரு மிந்த வளநதிப் பாங்கரின் முன்னம், பேசியாங் களிகளிற் பெற்றிடும் பேற்றைப் பெரும்புவி யிடத்தெவ ரளவிட், டாசிலா துரைப்பா ரந்நதி மகிமை யண்டருஞ் சொலற்கரி தாமேல். (௰௩)

இந்நதித் தீர்த்தத் தினிற்படிந் திடுவா னெண்ணியோ ரடியெடுத்தேனு, முன்னர்வைத் தவர்க்கு முத்தியுண் டென்னின் மூழ்கினோர் பெறும்பயன் முறையா, வின்னதென் றுரைப்ப தெங்ஙன மியாவு மெழின்மிகு மரிமழத் திறைவன், பொன்னடிப் புகழாற் பொருந்துமென் றறிமின் புவனஞ்சூழ் புவனத்தி னிடத்தே. (௰௪)

வேறு.

இப்புவியிற் பிறந்தவரி லெவருமரி மழநகர்வா
ழப்புமுடிப் பரமனடிக் காட்படுவா னெண்ணிலவ

ரொப்பிகந்த தவளநதி யுவந்தாடிற் போதுமெனச்
செப்புவரே லதன்பெருமை செப்பரிது செப்பரிதே. (௰௫)

பார்த்தவர்க்குப் பலனளிக்கும் பாற்றவள நன்னதியின்
றீர்த்தவளஞ் சிறிதுரைத்தாந் தேவர்முனி வரர்துதிக்குஞ்
சீர்த்திமிகு மரிமழத்துட் டிருத்தளிகொண் டெழுந்தமுக்கண்
மூர்த்திதிரு மகிமையினுஞ் சிறிதுமொழி குவமுறையே. (௰௬)

## தீர்த்தவிசேடப்படலம் முற்றிற்று.

ஆகசசெய்யுள் ௨௱௭௫.

# மூர்த்திவிசேடப்படலம்.

உலக மெங்கு முயிர்க டொறுநிறைந்
திலகு சோதி யிறைவ னெழுந்தரு
ளலகின் மாதல மாயிரத் தெட்டெனக்
குலவு மாயினுங் கூறு மவற்றுளே. (௧)

அதிக மேன்மை யறையப் பெறுகின்ற
மதுரை காஞ்சி வளநக ராதிய
பதிக டோறும் பரவிலிங் கங்களிற்
றுதியின் மிக்கது சுந்தர லிங்கமே. (௨)

இன்ன மூர்த்தி யெழுந்த வரிமழ
நன்ன கர்சசெல்வ நாஞ்சொலற் பாலதோ
வன்ன மூரு மயன்முதற் றேவரு
முன்னி யுன்னி யுரைபபவொல் லாரெனில். (௩)

வேறு.

இத்தகைய தலத்திருந்த விறைவனருட் குறியையன்பாச்
சித்தமிசை நினைத்துவந்து தெரிசித்துத் திருவருள்செ
யுத்தமமும் பேரழகு முறநோக்கி யுலகமுற்றும்
வைத்தவொரு திருநாமம் வழங்குவர்சுந் தரனென்றே. (௪)

சுந்தரப்பேர் தரித்தபரஞ் சோதியுரு வாதிதனைக்
கந்தரத்தே கறுத்திருந்த கடவுண்மா மணிவிளக்கை
யந்தரத்தோர்க் கறிவரிய வற்புதனைப் பொற்பதனை
யெந்தரத்தா லுணர்ந்துபுக ழெடுத்தியம்ப லெளிதாமோ. (ரு)

சேணமருஞ் செழும்பொழில்சூ ழரிமழத்துச் சிவபரனைக்
காணவரு மொருவிருப்பங் கருத்திலெழுந் திடினுமவர்
மாணமரும் பெரும்புகழு மதிநலமுங் கொண்டுகவி
வாணர்புகழ் திருக்கயிலை மலையமரும் வாழ்வினரே. (௬)

பல்லாண்டு பலதலத்தும் பரவவரு பலமுழுதுஞ்
சொல்லாண்ட பொருள்கடந்த சுந்தரனார் திருமுன்ன
ரெல்லாண்ட வொருவிளக்கிட் டேத்தினர் பெறுவரெனி
லல்லாண்ட களப்பெருமா னருண்மகிமை யாரளப்பார். (எ)

சுந்தரற்கு மிடப்பாகத் தோகைகயல் விழியுமைக்கு
மைந்தருக்கு மகிழ்வுகொடு வளர்பூசை புரிந்தவர்க்குப்
பந்தவினைப் பயமுமெம பயமுமிலை கயிலைமலை
சந்ததமுஞ் சிந்தைமகிழ் தழைப்பவள ரிடமாமே. (அ)

வேறு.

சுத்தபர தத்துவமாய்த் துரியமுடி வாயெவர்க்குஞ் சொல்லற் கொண்ணு, வித்தகமா யத்துவித விளக்கொளியா யானந்த விளைவாய்ச் சிவன, முத்தரக முளரிமிசை முதிர்ந்தொழுகு மருண்மதுவாய் முதலா மூல, வத்தனுமா மப்பரனே யரிமழத்துட் சுந்தரனு வமர்ந்தா னம்மா. (௯)

வேறு.

பாரின் மாசு படப்பிறந்து பரம னடியார் பதமறந்து
காரி னிலகு குழன்மானார் கலவி விழைந்தார் கன்மமும்பல்
சீரின் மருவு மரிமழம்வாழ் தேவ தேவற் கமைந்தவொரு
பேரின் மகிமை யானிங்கிப் பிறவாப் பேறு பெறுவாரே. (௰)

எங்கு நிறைந்த வருளுருவத் தின்பே ரழகெல் லாந்திரண்டு, பொங்குங் கருணைச் சுந்தரப்பேர் பொருந்தி யெழுந்த பொருவில்

லோன், றங்கு மெழில்கொள் ளரிமழத்தைச் சார்ந்தன் னானைத் தரி
சித் தோர்க், கங்கு வலையத் தெமனாலு மடிக்கும் பகையு மிலையம்மா.

வெள்ளா னேறு சுந்தரனார் விமல வுருவந் தரிசித்தற்
குள்ளாற் றளியிற் புகுந்திடுதற் கொண்ணாக் குலத்த ராயினுநன்
கள்ளார் மலர்தூய்க் கோபுரமேற் கலசங் கண்டு தொழுவாரே
லெள்ளா தவராய் வெள்ளிமலை யேறப் பெறுவ ரியல்பானே. (௰௨)

வேறு.

நன்னிதி நிறைந்த வரிமழ நகர்வாழ் நாயகன் சுந்தர மூர்த்தி
சன்னிதி முன்னர் நறும்புனங் கயிட்டுத் தைலத்தா லாநெய்யாற் றங்கும்
பன்னிலைத் தீப மேற்றினோர் சுவர்க்க பதியெனப் பூமிசை வாழ்வு
மன்னிநின் றீற்றின் மாலயற் கரிய வான்பத மருவுவர் மாதோ. (௰௩)

வேறு.

ஐந்தமிர்தாற் பலபலச்சா றுதியா லானைந்தா லபிடே கஞ்செய்
திந்தணியும் பரன்சுந்த ரேசனருட் டிருவுருவி லிலங்க நல்ல
கந்தமலர்த் தொடைசாத்திக் கைதொழுவார் பதவிநலங் கழறற்காமோ
வந்தநிலை சிவனறிவ னரியயனு மண்டர்களு மறியா ரன்றே. (௰௪)

காலையிற் பகலின் மாலைக் காலையி னடியா மத்தின்
மாலையை யிலங்கச் சூட்டி மாலைவைத் தரனை மூர்த்தி
பாலையங் கயற்கட் டேவி பதந்தரி சித்தோ ரின்ப
வேலையிற் படிவர்பூமன் வேலையுண் மேவா ரன்றே. (௰௫)

சுந்தர மூர்த்திக் கன்பு துளும்பநின் றருச்சிப் பான்சீர்
வந்தநால் வகையாம் போது வளர்தரு வளமிக் கோங்கு
நந்தன மியற்றி னோர்க ளும்புகழ் தரத்தி னாரோ
விந்திர னெனவெப் போது மிருந்தர சியற்று வாரால். (௰௬)

வேறு.

திருவளரு மரிமழத்துச் செல்வனார் திருக்கோயிற்
பெருகுதிருப் பணிபுரிவோர் பெறும்பேறு வைகுந்த
மருவியதா மரைக்கண்ணன் மலரயற்குங் கிடைப்பரிதென்
றொருவனுரைப் பதுவியப்போ வுயர்மறைக ளுரைக்குங்கால். (௰௭)

துன்னுமெழி லரிமழத்துச் சுந்தரே சனுக்கென்று
மன்னநிவே தனமாதிக் காவேண்டும் பொருளளித்தோர்
பன்னுவிழாப் பலபுரிந்தோர் பத்திசெய்தோ ரெத்திசையு
முன்னுபுக ழோங்கவெள்ளி யோங்கலிடை யோங்குவரால். (௰௮)

தலந்தீர்த்த மூர்த்திமுறை சாற்றிநம் வானுலகி
லிலங்கியவச் சிரப்படைகொ ளிந்திரனைப் பிடித்தபழிச்
சலந்தீர்த்த கதையினையுஞ் சாற்றுவா மென்றெடுத்துப்
புலந்தீர்க்குந் தவத்தருக்குப் புகலுமுயர் புகழ்சூதன். (௰௯)

மூர்த்திவிசேடப்படலம் முற்றிற்று
ஆகசெய்யுள் கூ௯.

# இந்திரன் பூசித்த படலம்.

தவமென்னும் புணையேறிச் சாந்தமெனுந் துடுப்பியக்கிப்
பவமென்னு மெழுதிரைமேற் படர்புணரிக் கரையண்மிச்
சிவமன்னு முறுக்குறைவாற் றிகழ்பெரியீர் கேண்மினென
நவமன்னு மகிழ்வினொடு நவிலுவான் சூதமுனி. (௧)

அந்தரவா னவரவையி னரம்பையுருப் பசிமுதலாஞ்
சுந்தரமின் னார்குழுமித் தோகையென நடஞ்செய்யக்
கந்தரவா கனன்படைத்த கண்கவொலாங் களிப்பெய்த
மந்தரமாம் புயம்விம்ம வதிந்தனனங் கவ்வேலை. (௨)

எருக்கணியுஞ் சடைப்பெருமா னெனும்பிருகற் பதிபோந்தா
னுருக்கமுற மலர்முகத்தோ டோடிவரா னுவந்துறையு
மிருக்கையெழான் வருகெனவு மிசைத்திடான் கரங்குவியான்
றருக்குடையா னெனவிருந்தான் றருக்குடையா னிவனன்றே. (௩)

சாத்திரமே தவமேது தவமேதென் றொருகாலை
நாத்திகனா லோதியதை நன்குபயின் றொழுகுமுறை
காத்தலையா னுயிர்க்குக் காட்டுவா னெனவிருப்ப
மூத்தவதி வினன்வெகுளி முளைப்பவகன் றெளித்தனனால். (௪)

ஆரியனு ருளம்புழுங்கி யகன்றொளிப்ப வதுபொழுது
சீரியலும பொன்னாடு செவ்விகுன்றத் ததியாவும்
வேரியெழு கற்பகத்தார் விண்ணவர்கோ னறிந்தயர்ந்தான்
காரிநிகர் விழிமடவார் காமமெவர் கடப்பவரே. (ரு)

தாயிழந்த மகவினிலை தானடைந்து மறையவன்பாற்
போயிரந்து பொன்னிழந்தேன் புரியும்வகை புகல்கென்ன
வாயிரங்கண் ணவனவனை யருளுருமறு பெருங்காறு
நீயிரங்கா வகையொன்று நிகழ்த்துகேன் செய்தியென. (சா)

பொன்னவனைப் பெறுந்தனையும் பொருதுவட்டா கருதுசுதன்
சொன்னவனைத் துளகலையுந் துகளறுநன் குணர்தருவ
னின்னவனைத் திரிசிரனென் றெள்ளாமே குரவரிய
வன்னவனைப் போற்கருதி யமர்கென்றா னந்தணனே. (எ)

வேதியன்சொற் படிகொண்ட விண்ணவர்கோ னடிகேளோர்
மேதமியற் றிடுகென்ன விளம்புதலும விபுதருக்குப
போதநலம் புரிவதுபோற் புகன்றுளந்துத் தம்மவர்கே
யாதலுறப் புரிதுவந்தா னஃதறிந்தா னமரர்பதி. (அ)

மகவினைவஞ் சகமாக வகுத்தவன்முச சிரங்களும்வின்
புகவினைய வயிரத்தாற் பொருதழித்தான் றுவட்டாதன்
மகவினையின் னணங்கொன்ற வகையினாற் பிரமகத்தி
மிகவினைய பழியைமண்ணீர் மெல்லியலார்க் கேற்றுதலும். (கூ)

ஒருதுயரு மிலனாகி யோங்கினான் வலாரியது
கருதுதுவட் டாமனமுங் கனன்றுபகங் கடிதாற்றி
விருதுபெற வதிற்றோனும் விருத்திரனை விளித்தரியைப்
பொருதுதொலைத் திடுகென்றான் புரந்தரன்போர் புரிந்திளைத்தான்.

என்புரிவா மெனக்கலங்கி யேகியயற் கியம்புதலு
மன்புரியா னவற்கொடுசென் றச்சுதனுக் குதுமொழிந்தா
றன்புரியர்ன் குலிசமிகத் தொன்மையதா தலினதற்கு
வன்புரியா னுயிர்கவரும் வலியிலையா முன்னொருநாள். (யக)

கடல்கடையும் பொழுதசுரர் கற்பகநாட் டவர்மிகுந்த
படையுடனெய் தினரதனைப் பார்த்திருவர் வயப்படைக

ளடையவுந்த தீசிபிட மமைப்பித்தாந் தவவலிமை
யுடையவவன் விழுங்குதலா முதுகந்தண் டொன்றியதால். (௱௨)

அம்முனிபாற் சென்றிரப்பி னன்பினுட னருள்புரிவான்
றெம்முனைசாய்த் திடுங்குலிசத் திண்படையாக் கொடுபொருதால்
விம்முவிருத் திரனுயிர் வீட்டலா மெனப்புகல
விம்மெனு முன் றதீசியிடத் தெய்தினன் மகபதியே. (௱௩)

குறையிரப்பக் குறிப்பறிந்து கொடுத்துவக்குந் ததீசியுயிர்ப்
பொறைவிடுத்தா னென்பெடுத்துப் புதுவயிரப் படையாக்கி
யறைகழற்கால் விருத்திரனை யடுப்பவன்கடற்புக்கு
மறைபடலுங் குறுமுனிபால் வழுத்தினனா கண்டலனே. (௱௪)

கடலையுழுந் தளவாக்கிக் கையிலெடுத் துட்கொண்டான்
குடமுனிவன் மேவுபுரு கூதனொளிக் குலிசத்தால்
விடமனையா னுயிர்கொள்ள வியன்பிரம சாயைதொடர்ந்
தடரமன மிகமெலிந்தா னம்புயநா லிடைப்புக்கான். (௱௫)

இருப்பநகு டனும்பணியா யேகினன் சுரர்பணிவா
யுரைப்பநற்கோ டடத்தருகே யுற்றழைப்ப விந்திரன்போந்
தருட்கடலே பொறுத்திபழி யகற்றுதியென் றடிபணிந்தான்
மருட்செயுமிக் கொடியபழி மாற்றுதற்குப் புவிநண்ணி. (௱௬)

ஈசனுறு தலங்களடைந் திறைஞ்சினா லவனருளான்
மாசிகந்த மணிபோல வந்தகொடும் பழிநீங்கித்
தேசினிலங் குவையென்னத் தேசிகன்கூ றலுமவனோ
டாசெழுந்து காசிமுத லாயதலம் பலபோற்றி. (௱௭)

சோணாடு தனையண்ணிச் சூழ்தலம்பற் பலபரவி
வேணாடு மயிற்சாயன் மேனகையே முதலான
பாணாடு மொழிமடவார் பண்ணவர்கற் பகமிருக்குஞ்
சேணாடு தானெனச்சொல் செழியர்திரு நாடுகண்டான். (௱௮)

வளவனுக்கும் பஞ்சவற்கு மருவுரிமை மகிதலத்தி
னளவுதெரித் திடுமாறே யமைந்தொழுகும் வெள்ளாற்றிற்
றளவமுதற் பன்மலருந் ததைந்துபகீ ரதிநாணக்
கொளவருதண் புனலெய்திக் குடைந்தாடிக் குதுகுலித்தான். (௱௯)

புனல்குடைந்து பூழியர்க்குப் பொருந்துகரை யேறினான்
கனவினிலும் வருத்துதுயர்க் கடற்குமொரு கரைகண்டா
னினைவினொடு குரவனுக்கிந் நிகழ்ச்சிசொல வறிவனிவண்
முனைவனருண் மூர்த்திதல முதலவுறல் வேண்டுமென. (உ௰)

இந்திரனு மன்புகரை யிகந்தோட வெழுந்தோடிச்
சந்தவனம் பணைமருதத் தடஞ்சுனையெல் லாந்துருவி
நந்தவனச் சூழலுற் றநவிலிலிங்கத் திடலடைந்து
முந்துவினைப் பயனாக முளைத்தபிரான் முன்னுற்றான். (உக)

தாய்தந்தை யில்லாமே தனித்தவருட் பிழம்புருவை
யாய்தந்து விழிமாலை யகங்குழையத் தரிசிக்க
நோய்தந்த பழிவிலக நேகினான் விடவரவின்
வாய்தந்த பெருமதிபோல வயங்கினான் மருத்துவனே. (உஉ)

தேசிகனும் வானவருஞ் சிவலிங்கத் திருவுருவை
யாசகலத் தரிசித்தா ரவ்வயினே விண்வேந்தன்
மாசிகந்த மணியான வகையறிந்து வாழ்த்தெடுத்தார்
வாசவனும் பூசனைசெய் வதுகருதி யமைந்தனனே. (உங)

வேறு.

புலவர்தந் நாடு செல்வம் பொலிதரப் பொலிவு மேவி
யிலகுசந் தான மாதி யிசைத்தகற் பகமீ ருகப்
பலர்புகழ் தருக்க ளைந்தும் பரிவுட னெய்தித் தெய்வ
மலரொடு தேனு மீந்து வளத்தொடு மல்கிச் சூழ. (உச)

வேனெடுங் கரத்தோ னின்ப மேவத்தன் சுதையை யீந்த
கோனவன் றேட நீங்கிக் குலவுவ தறிந்த லோடும்
வானமர் வாழ்க்கை யண்மி வளர்புக ழுடைய காம
தேனுவந் தமுது நேயந் திகழ்தர வளிப்ப நிற்ப. (உரு)

செங்கனல் விழியுங் கையுஞ் சேர்பவற் காட்டு நன்னீர்
திங்களு மரவுஞ் சூடுஞ் செஞ்சடா மகுட மேவ
லிங்குநாம் பெற்றே மென்ன வெழுமனக் கிளர்ச்சி யெய்திக்
கங்கையா மங்கை வந்து களிப்புறக் கொடுத்து நண்ண. (உசா)

துணிபடா மதிபு மன்னுற் சூழ்ந்தபன் னுரு மொன்று
மணிகொள்சக் கரத்தே ரானு மங்கியம் பகவன் றானுந்
தணிவிலர் கடுகிப் போந்து தக்கபல் வேறு கோடி
மணிவிளக் கெடுத்தா லென்ன வயங்கொளி படைத்துத் துன்ன. ()

பூவுல கனைத்தும் வாழப் புரிந்துதென் பொதிய நின்று
தாவிவெப் பொழித்தெந் நாளுஞ் சலிப்புறு வாயு தேவ
னாவிநா யகன்கை பற்றி யணிகெழு புதிய மன்றன்
மேவிய மாது போல மெல்லென விசிறி வீச. (உஅ)

மன்னிய செவிக்கா லோடி மனபுலம் பெருக்கி யின்பப்
புன்னனி வளர்த்து மேலாம் புகழ்ப்பல னெய்து மாறு
துன்னியா ரமபிற் செய்ய சுதியினைக் கூட்டி வேட்டுக்
கின்னர ராதி யோர்கள் கிளரிசை பாடிக் கூட. (உகூ)

அருந்தவர் மனம்வி டாத வாரணத் தொகுதி யாவும்
பொருந்துமந் திரங்க ளியாவும் புணர்ந்ததம துருவத் தோடு
திருந்துகற் பகத்தை நீத்துத் தேங்கமழ் வில்வச் சூழ
லிருந்தவ னுள்ளத் தெண்ணு மிச்சையை யெதிர்பார்த் தெய்த. ()

அன்னபா னாதி நீக்கி யரியகாய் கனியுண் பாருந்
துன்னிய காலுண் பாருந் துய்த்திட லொன்றில் லாரு
மின்னவா றகன்பல் லூழி யெல்லைகண் டிறும்பூ தெய்து
முன்னைநற் றவமுற் றோங்கு முனிவரர் பலரு மொய்ப்ப. (௩௧)

விரிதரு வில்வ மேவு விடையவ னெழிலை முற்றும்
பரிவுட னோக்கி யின்பம் பருகிட நம்மை யாளுங்
கரியவன் விழிகள் போலக் கதுவிலே மினிமே லெண்ணிப்
புரிவதென் னென்று வானோர் போற்றினர் பொலிந்து பொற்ப. ()

நீணிலாக் காலுங் கற்றை நிலாவமு தொழுகிற் றென்னக்
காணுறு பூதிச் சோதி கவின்பெறக் கடுக்கை பூண்டு
சேணுலாங் கயிலைக் குன்றிற் சிறந்ததாம் வில்வ மேவுந்
தாணுவுக் கபிடே காதி சாற்றிய விதியாற் செய்து. (௩௩)

அத்தனை யணிந்து நோக்கி யாரெழின் முழுதுங் காணா
வெத்தனை விழிபெற் றானு மெய்துமே யென்பா னுற்ற

வித்தனை விழியுங் காணாற் கெய்திலே னென்று வெண்ணிச்
சித்தநைந் துருகி வீழ்ந்து திருமுனந் துதிப்பா னானன். (கூச)

வேறு.

பிஞ்சுமதி முடிதரித்த பிஞ்ஞகா பெருங்கருணைப் பெருக்கே யாரு, மஞ்சவரு கடல்விடத்தை யடக்கியதாற் களங்கறுத்த வரசே யாவுந், தஞ்சமெனப் புகும்பதனே தற்பரனே யற்புதனே தவத்தின் வாழ்வே, கொஞ்சுகிளி மொழியுமையாள் மணவாளாவென்னை யுமாட் கொண்ட தேவே. (கூரு)

வேதமுடி விளம்பரியான் விளம்பரியா னெனவதற்கு மேலா ஞான, போதவடி வாநீயே மண்ணுதி யெண்வடிவாய் பொருந்தல் போல, மேதகுமெய்ஞ் ஞானியர்க்கே வெளிப்படுமுன் னருள்வடிவம் விழல னான, பாதகவல வினையேற்கும் பாலித்தாய் நின்கருணைப் பான்மை யென்னே. (கூசு)

கருவிழுந்த முனிவரையுங் காமவலை யிடைப்படுத்துங் கண்ணினாற், குருவிழந்து மதிபிழந்து நிதிபிழந்து கோலிழந்து குலவு மைந்து, தருவிழந்து பதியிழந்து துதிபிழந்து சசியிழந்து தளர்ந்து நொந்து, மருவிழந்த மலரானே னென்னையுமாட் கொண்டதென்னே வரத தேவே. (கூஎ)

முடித்திருந்த குழன்மடவார் முயக்கமெனு மதுக்கடலின்மூழ்கி மூழ்கிக், குடித்திருந்த வெறியேனை குணப்படுத்தி நின்னருளிற் கூட்டு மாறு, பிடித்திருந்த பிரமசா யையைபக்காணே னினைக்காணப் பெற்றேன் முன்னர், துடித்திருந்த வேழைநெஞ்சஞ் சுகத்திருந்த நிலையெடுத்துச் சொல்லற் பாற்றே. (கூஅ)

விருத்திரனைக் கொன்றபழி விலக்கியெனை யடிமைகொண்ட விமல வாழ்வே, கருத்திலுனை யிருத்திமலர் திருத்தியமு தருத்தியிரு கரமுஞ் சென்னி, பொருத்தியடி பணிவதினும பொன்னுடு மயிராணி புணர்ப்புமானுந், தருத்திருவும் பெரிதாமோ பெறற்கரிய பேறுபெற்ற தமிய னேற்கே. (கூகூ)

என்னவிழிப் புனலோட நாத்தழும்பத் தோத்திரித்தா னேனை வானோர், துன்னியார கரமசி வயமகா தேவவெனத் துதித்து நின்

றூர், பொன்னவனு மெம்பெருமான் பொன்னடியைப் பரவியுடல்
புளகம் பூத்தான், மன்னியசெஞ் சடைப்பெருமான் றிருவருளா
லாகாய வாணி கூறும் (௪௰)

இன்றரிநின் றுதிமுழு துஞ் செவிமேற்றுக் களித்தனநீ யெவ்வந்
தீர்வா, யென்றுவள ரரிமழதலை நற்றவத்தா லுற்றனைவெண் ணதி
நீராடி, யொன்றுமனத் துடனன்பிற் பூசித்தாய் பவமனைத்து மொ
ழித்தாய் கூடல், சென்றுநமைத் தொழுதருட் சேர்தியென்ற திரு
வாக்குச் செவிபுக் கன்றே. (௪௧)

திருவாக்குச் செவிமடுத்தா னவசமுற்ற னிங்கமனஞ் செல்லான்
கொன்றை, மருவாக்கும் புரிசடையா ரணையென வஞ்சிவிடை வா
ங்கிப் பொன்னைக், குருவாக்கும் படுகோமா னமரருட னெழுந்து
தமிழ்க் கூட லாதி, கருவாக்கும் வினைதவிர்க்குந் தலம்போற்றி விட்
புகுந்து களித்துற் றனே. (௪௨)

இந்திரன் பூசித்த படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௩௩௬.

# சந்திரன் பூசித்தபடலம்.

வேற்கோடும் விழிமடவார் நடங்கண்டு மருண்டபழிவிலக்கி யாண்டு
நாற்கோடு பெறுகரியை நடத்துபவற் கருளியவாநவின்றுங் கல்வி
நூற்கோடு மெனவடுத்து நூலிடையாட் கொளும்பழியை நூறு மாறு
மேற்கோடும் படியிரவின் விளங்குமதி வழுத்துகதை விளம்புவாமால்.

வேறு.

நந்தகோ பனுக்கு நந்தன னாக நண்ணியன்னவனுடன் பிறந்து, வந்த
பூங் கோதை ராதையா மாதை மருவியன் னவட்கு மயக்க, முந்தவி
ளிராதா கிருட்டின னென்ன மொழியினுங் கலந்துறு முகுந்தன்,
சிந்தையம் புயத்தி லுதித்தவன் மேலைத் தேவரிற் சிறந்தசந் திரனே.

அன்றியு மதிதி திதிதரு புதல்வ ரானவ ரியாவரு மொருங்கே, துன்றின ரமுது வேட்டன ராகித் தூயமந் தரத்தறி நாட்டிக், கன்றுத லின்றித் திருப்பயோ ததியைக் கடைந்தநாள்வானவர் களிப்ப, வொன்றிய வாவி யுடன்வரு மெண்மெண யுண்டையே போன்மென வுதித்தோன். (௩)

வானமா மடந்தை புயத்தணி தரள மாலேபி ஞப்பண்வீற் றிருக்கு, மேன்மைசா லொருவச் சிரமணி போல விண்மிசைப் பொலிதரு சுவேத, மீனெலாஞ் சூலவ விருட்குவை துமித்து வெள்ளொளி யெங்கணும் விளக்கித், தானவ் ஞகி யரசுசெய் திருப்பான் றண்மைசா லொண்மதிப் புலவன். (௪)

கூறுபா டமைந்த பயோததி யன்னை குழவியா யீன்றெடுத் தந்நாள், வேறுபா டமையாக் காட்சியின் றகவால் வியந்துநோக் குற்றுழி யினைய, வீறுபா டகன்ற வடிவினுற் றிட்டி மேவுமென் றனியுலகினர்கண், ணோறுபா டகற்றற் கியற்றியாங் கெழிலா யெய்திய முழு)ற்கறை யிறைவன். (௫)

தக்கனூர் மகத்தி லெய்திய சாபந் தவிர்ப்பதற் கெம்பிரான் சரணம், புக்கவன் முடிமேற் புகுந்தமர் வாழ்க்கைப் புண்ணிய னப்பரன் விழியா, நக்கவ னுலகில் வாழ்சரா சரங்க ளளிருறப் பொழிகரனுளுந், தொக்கதன் கலையை மித்திரற் கீந்து துலங்குவோன் வெண்ணிலாத் தூயோன். (௬)

வேறு.

எண்ணிருநற் கலேமருவி வரவரமேற் போகியுல கேற்க வேபாத், தண்ணமுதம் பொழிந்துவரு மார்கலியி னீங்கியிசைந் தவளந் தாங்கிப், பண்ணகல்விப் பிரசங்கப் பரிவுகொடென் ஞளுமின்பம் பயக்கும் பண்பான், மண்ணுலகின் மதிப்புலவன் மதிப்புலவன் மதிப்புலவ வாழ்வன் மன்னே. (௭)

வேறு.

இந்தவிழாக் கதிர்வானத் திமையவர்க்குக் குலகுருவா
மந்தணனை யடுத்திறைஞ்சி யருங்கலேபற் பலதெளிந்து
சிந்தைகளித் தூறுநாளிற் றிகழுமற்றோர் முழுமதியம்
வந்ததுகண் டயர்ந்தாசான் மனைவிமுக மெனத்தெரிந்தான். (௮)

தானாகுந் திருமுகந்தா டனுவாகும் புருவத்தாள்
மானாக மிருவிழியாண் மங்கையாம் பருவத்தா
டேனாக மின்மொழியா டெள்ளமுதா முருவத்தாள்
வானாகுஞ் சிற்றிடையாண் மதர்ப்பாகுங் கருவத்தாள். (௯)

முத்தேறு நறுந்தவள முறுவலாண் மொய்ந்தமலர்க்
கொத்தேறுஞ் சுரிகுழலாள் கோபாலன் கரவனச
நத்தேறுங் கண்டத்தா ணற்றவத்தோர்க் குங்காமப்
பித்தேறும் படிபுரியும் பெண்கள்சிகா மணியானாள். (௰)

கலைமகளு மிவட்கண்டு கலைமகளே யாவள்சுதை
யலைமகளு மிவளழகா லலைமகளே யாகுவளம்
மலைமகளுங் கண்டுமன மலைமகளே யாவளெனி
னிலைமகளிர் கூட்டத்தி லிவட்கிணையா வியம்புதற்கே. (௰௧)

அரம்பையுருப் பசிமுதலா மரிவையரைச் செய்துசெய்து
கரம்பழகித் தேர்ச்சியுற்றுக் காமரிலக் கணநூலின்
வரம்பறிந்த மலரவனு மாதவனும் வானவரும்
பரம்பரனு முளமயங்கும் படிபடைத்த பாவையிவள். (௰௨)

திருந்தாரை முடித்தபிரான் சேவடியை யகத்திடைவைத்
திருந்தாரை மேல்வீட்டி லெய்துவிக்க வணித்தாக
வருந்தாரை யெனுந்தவத்தின் மன்னியமா னினங்களைக்க
வருந்தாரை வலைவீசி வருந்தாரை மற்றவள்பேர். (௰௩)

இன்னவளும் விதுவெய்து மெழினோக்கிக் காமவெரி
துன்னவயர்ந் தருகுற்று டோகையிதழ்க் குமுதமுஞ்சற்
றன்னவன்முன் மலர்வெய்த வனங்கனுமவ் விடைப்போந்து
கன்னல்வளைத் தளிபூட்டிக் கந்தமலர் கடிதுய்த்தான். (௰௪)

குருமனைதா னெனுநினைப்புங் கொள்ளாமே மதியிழந்த
மருமருவு பூங்கோதை மதியையடைந் தழகுடையா
யருள்புரிவா யெனிலுனக்கே யாளவேன் றவிக்கின்றே
னுருவிலியார் செயுந்துயர மொழித்தென்னைப் புரந்திடுவாய். (௰௫)

தாரையெனும் பெயர்படைத்த தையலா னுளங்கருதிப்
பாரெவரு முனைத்தாரா பதியென்னப் பகர்கின்று

ரோகிணியை நம்பிருவே மூழ்கூட்டக் கிடைத்தனவா
மாருநமைக் குறைகூறு ரங்கசனிற் சிறப்புடையாய். (௰௬)

எனப்பன்னி நெருங்கலுமி ராக்கதிரோ னடுநடுங்கி
யெனப்பன்னின் கொழுநனவற் கின்பமுறு மனைவாழ்க்கை
வனப்பன்னி யாயலையோ மனமயங்க லறமன்றுன்
வனப்பன்னி கருங்குழலாய் வன்னியினுங் கொடிதாமே. (௰௭)

வில்லுருவ நுதற்குவளை விழிபடைத்த வகலிகையா
மெல்லுருவ மடவரல்வேள் விடுகணையா னிலைதவறித்
தொல்லுருவ மறிவிழந்து துயருழந்து தொன்மரக்கீழ்க்
கல்லுருவ மானதுநீ காணாயோ கனங்குழையாய். (௰௮)

பிறமாதர் நலங்கொள்வார் பேதையரிற் பேதையரே
யறமாயுங் குரவன்மனை யன்னையினுஞ் சிறந்தனையான்
மறமாயா துணைச்சேர மனங்கொள்ளே னெனமறுத்தான்
றிறமாறு தருங்கலைகள் செறிந்தமதிப் புங்கவனே. (௰௯)

எண்ணியவ னிசைத்தமொழி யேற்றமட வரல்புழுங்கி
மண்ணியலு மடவார்க்கே வகுத்ததுகற் பிலக்கணநூல்
புண்ணியத்தால் வானுலகம் பொருந்திவளர் பூங்கொடியார்
கண்ணியநா யகரின்பங் கலந்திருத்த லறங்கண்டாய். (௨௰)

தேவர்குலத் திடைவந்து செழித்தநலங் கொள்ளாமற்
பூவுலகத் தவர்முறையைப் புகல்வதுநூல் வழக்காமோ
வாவன்மிக வலிந்துவரு மரிவையரை வெறுத்தல்பெரும்
பாவமெனக் கற்றிலையோ பண்ணவருக் கமுதளிப்போய். (௨௧)

கின்னுமத் தொன்றுபெற்ற நேரிழைவ லாரிமனை
பன்னாளும் பலபேரின் பம்பருகிப் புகழ்படைத்தா
ளன்னவளைக் குறைபுகன்று ராருளரிங் கிரர்க்கேனுஞ்
சொன்னாரைக் காட்டுதியோ சுகத்தைவெறுப் பவரெவரே.

எனப்புகலு மின்மொழியா ளிளநகையா லெத்தேவர்
மனத்தினையுங் கவரும்விழி வலைபின்னற் சுரிகுழலா
லனத்தினேர் குறுநடையா லாடையால் வடிவழகாற்
கனத்ததன மகுடத்தாற் களங்கனுளங் கலங்கின்றாள். (௨௩)

ஆறனு மதிதேறி யங்கனையா யந்தரத்துத்
தேறனு மமுதாலுஞ் செயுமொழியா ரறமுரைத்தாய்
நீறாலுங் கற்றனையா னிகழ்த்துவதென் னெனதாவி
போறலுங் குருமனையைப் புல்கலே னெனப்புகன்றான். (௨௪)

மதியாள னெனநின்னை மணவாள னாக்கொண்டேன்
விதியாவு மறிந்தவன்போல் வெறுத்தமொழி பகர்கின்றா
யதியாது வரிந்துவரு மாயிழையார் சுகவேட்கை
யுதியாத மனமுடையா ரொருவரிலே யுனையல்லால். (௨௫)

ஒருவருக்குத் துன்பமுமற் றொருவருக்கின் பமுந்தந்து
பொருபடைகொண் டுருவமுற்றார் புகல்கடவு ளெனறகுமோ
மருவெவர்க்கு மின்பளித்து மலர்கணைகொண் டெவரகத்து
மருவமுற்றுப் பொலிபவனே யருட்டேவென் றறியாயோ.

சித்தசனே கடவுளெனச் சிந்தைவைத்து மலரணையின்
முத்தநகை மடவாரை முயங்குநலங் கிடைக்குமெனி
லத்தனையே யனுபவியா தறமென்று மறமென்றுங்
கத்துபவ ராண்டன்மை கதுவாத பேடிகளே. (௨௭)

ஆடவரும் பெண்ணுருவ மவாக்கொள்ளும் வடிவழகுங்
கூடுமிள மையுஞ்சிறப்புங் கொண்டிருந்து மவையெல்லாந்
தோடலர்பூங் குழலாரைத் தோய்ந்துநலங் கொள்ளாமற்
காடதனிற் கமரிடைப்பால் கவிழ்ப்பதுபோற் றொலைப்பாயோ.

சித்தசனார் கவிகையெனச் சிறந்தமையா லின்பநிலைத்
தத்துவனீ யெனநினைத்தேன் சலதியிடைப் பன்னெடுநாள்
வைத்தகருங் கற்போன்றாய் மற்றதுதா னெனும்பணிந்த
மத்தன்முடிச் சிறுவயசின் வாழ்ந்தபிறைப் பயன்போலும்.

கீர்த்திமிகு மூர்வசியாங் கிளிமொழியாள் வலியவெய்தி
யீர்த்திடலு மறநெறியை யிசைத்துமறுத் துரைப்பவவள்
வேர்த்துமனம் புழுங்கிநனி வெய்துயிர்த்துச் சாபமிடப்
பார்த்தனொரு நாட்பட்ட பாடுமுழு தறியாயோ. (௩0)

மெய்வந்த பேரழகா விளம்புவன்கே ணங்காம
தெய்வந்த னாணையெனைத தெள்ளமுத கரத்தாலே

தைவந்து முந்தமய றந்தவனீ யறிதியெனப்
பொய்வந்த துண்ணிடையாள் புகன்றுபிடித் திழுத்தனளால். (௩௧)

கரம்பிடித்துத் தழுவுதலுங் கரம்பிடித்தார்க் கேறுதல்போல்
வரம்பிடித்து மயல்பெருக மதியுமதி மருண்டனனு
லரம்பிடித்த விழிமடவா ரடுத்தநித்தாப பறநின்மலர்ச்
சரம்பிடித்தான சமர்வலியைத் தடுப்பவருமுளர்கொல்லோ. (௩௨)

மதிமயங்கிப் பலபுகன்று வலிந்தடுத்த மாதைமதி
விதிவழியான் மலரமளி மேலணைந்தான் வாய்க்குமுதப்
புதுமதுவை யூட்டியுடல் புளகமுற்று ளாம்பன்மலர்
விதுவருமு னலர்வெப்தி வேரிதரல வியப்பேயோ. (௩௩)

குற்றமறப் பன்னூலுங் கூறுமருட் குரவன்மனைப்
பொற்றொடிதன் றுயென்னப் புகன்றமுறை யினைமறந்து
மற்றவளை வேள்கணையான் மருண்டணைந்த தாலன்றோ
கற்றறிந்தோ ரெந்துறைத்தார் கலாமதிய னெனுநாமம். (௩௪)

வீட்டுநெறிக் காமநூல் வியாழனிடம் படித்தலிற்சீர்
வீட்டுநெறிக் காமநூன் மேவுமவன் மனைநீயே
காட்டுவகை யாகவெனக் கடுகியநூல் விதிகட்குக்
காட்டுவகை யாகவவட் கலந்திருந்து களித்தனனே. (௩௫)

ஒத்தவர்க டழீஇத்தழீஇ யுவந்தாங்கு முத்தமிட்டு
முத்தவட மணியுமிரு முலைகவனச மலர்நவகை
கைத்தலத்தா லியற்றுவது கடுப்பவடுத் துப்பிடித்துப்
புத்தமுத முகுப்பவன்போற் பொருந்திநனி மகிழ்பூத்தான். (௩௬)

மாநிதிய நனிபடைத்து மற்றொருவர் நிதியைநர
கீனுமறம் புரிந்தேனு மெய்துமறி விலர்போலத்
தானவனு மிருபத்தேழ் தாரையரின் படைந்திருந்துந்
தேனெனவிவ் வொருதாரை சிற்றின்பந் துய்த்தனனே. (௩௭)

சம்புமுடி விற்றிருக்குந் தகவுமறந் தருவமதன்
வெம்புகணை யால்வெதுமபி மெய்க்குருவின் மனையாட்டி
கும்பநிகர் தனம்பிடித்துக் கோவைநிக ரிதழ்பருகி
யம்புலிசேர்ந் தனனுபி னுரைவிடுங் கொடுங்காமம். (௩௮)

அன்னைசுதை யுடன்பிறந்தா ளாயினுஞ்சான் றோர்தமியே
துன்னறகா தைம்புலனுந் துய்க்குமின்பந் தடுப்பரிதென்
றுன்னிமுதி யோருரைத்தா ரொழுக்கநீதி யவ்விதிக்குப்
பொன்னின்மரு வியநிலைவே புகல்சான்று யினனன்றே (௩௯)

சேர்ந்தாரைச் சுடுவதுவே செந்தழலாந் தணந்திருக்க
நேர்ந்தாரைச் சுடுமின்ப நெருப்பெனலாற் பிரிவின்மனஞ்
சோர்ந்தாரு மறியாத துயருழந்தான் மதியறிவு
கூர்ந்தாருஞ் சகிப்பரிதிக் கொடுங்காமத் தழலன்றோ. (௪௰)

கரவாவிவ் வகைசிலநாட் கலந்தாசை யுடங்காம
விரவாளி தாரையைக்கொண் டேகினனே னந்திழையாள்
கருமேவிப் புதனென்னுங் கான்முளையை யீன்றிருந்தாள்
குருநாத னறிந்துசினங் கொண்டுரைத்தான் மகபதிக்கே. (௪௧)

குருவையொரு கலிழ்ந்து கொடுந்துயர முழந்தவரி
பெருமைமதி யானமைச்சன் பெருமைமதி யானுகிப்
புரிபழியை நீப்பமனம் பொருந்தியெழிற் பூவையுடன்
றிருமகனை விடுத்தியெனச் செப்பிவிடுத் தனன்றாது. (௪௨)

ஒற்றுவர்போந் தஃதுரைப்ப வுணர்ந்தமதி யவட்பிரியச்
சற்றுமனஞ் சகியாது சம்மதியே னெனவிருந்தான்
மற்றவனோ டமர்மலைய வந்தனன்வ லாரியிது
முற்றுணர்ந்து மசுரேந்த்ரன் முன்னுற்றுச் சரண்புகுந்தான். (௪௩)

அடைக்கலமாப் புக்கவனுக் கபயமளித் தவனிருந்தான்
படைக்கலங்கொள் ளுடற்பார்வைப் பண்ணவனு மதுதெரிந்தான்
குடைக்கலங்கற் கெய்தியசெங் கோலுக்குக் கோவுக்கு
விடைக்கலங்கற் கரக்கரிக்கு விளைத்திலந்தீ வினையொன்றும். (௪௪)

எதிலர்போ லிதுகாறு மிருவேமு மிருந்தேமாற்
றீதுபுரி விதுவையவண் சேர்த்தலடா தவனோடு
மாதுசுத னிவரீண்டு வரவிடுத்தி யின்றின்றேன்
போதுகவென் றொற்றுவரான் மொழிவித்தான் றிதிமகற்கே. (௪௫)

மிக்கதிற லசுரேந்த்ரன் விண்ணவர்கோன் மொழிகேட்டு
தக்கிதுவோ நீதிமொழி நன்றுநன் றுதுயர்க்கஞ்சி

நெக்குருகிக் காத்தியென நேர்வந்து சரணாகப்
புக்கவரைப் புரவாரை புரவலராப் புகல்வாரோ. *(சசு)

வாவியையே விடுத்தாலும் வளநாட்டை விடுத்தாலுங்
காவியையே கடுத்தமலர்க் கண்களிப்பக் கரம்பிடித்த
தேவியையே விடுத்தாலுஞ் செருக்களத்தி லமராற்றி
யாவியையே விடுத்தாலு மடைக்கலந்தை விடேனென்றான். (சஎ)

என்றவுரை செவிக்கொண்ட விமையவர்கோன் சினமுடுகத்
துன்றுபடை யுடனமர்க்குத் தோன்றினா னவனுமுற்றான்
மன்றவிவர் பொரப்பல்லோர் மாண்டனர்பன் னெடுங்காலஞ்
சென்றதிந்தை யறிந்திரங்கிச் செம்மலரோ னவணுற்றான். (சஅ)

உற்றிருவி ரரும்பொருவ தொழிமினுறு வதுபுகல்வேன்
மற்றிதனை மறுப்பவர்க்கு வகுத்திடுவன் சாபமென்றான்
சொற்றனர்மேல் விளைவெல்லாஞ் சுரிகுழலைச் சுதனோடு
கற்றவன்பா லுய்த்திகொலாங் கலைமதியோ யெனக்கேட்டான். (சகூ)

தேங்குழலை யரசன்பாற் செலுத்துகவென் புத்திரனை
நீங்குகிலே னெனப்பகர்ந்தா னிதிப்பெயரோ னிஃதென்னே
பாங்குபெற வென்மனையாள் பயந்தமக னெனக்கல்லா
லீங்குபிறர்க் குரியனல னெனப்புகன்றா னிவ்வேலை. (ருo)

அன்னமுயர்த் தவனணங்கை யழைப்பித்துக் கனங்குழையா
யின்னவழக் குன்மொழியா லினிதுமுடி வுறல்வேண்டு
மென்னவரு மதிசயிப்ப வின்புதனை யுனக்களித்தோன்
பொன்னவனோ பின்னவனோ புந்திவைத்துப் புகல்கென்றான். (ருக)

அவையேறி யிருந்தாரை யருந்தாரை யகநோக்கி
நவையேறிற் றெனக்கலங்கி நாணெய்தி யச்சமுற்றுச்
சுவையேறும் வாய்மூடித் தொன்னிலமா மங்கைசெவிக்
கிவையேறும்படிபுக லுற் றிடுபவள்போற் றலைகவிழ்ந்தாள். (ருஉ)

குறிப்பறிந்து நாமகளைக் கொண்டவரன் றையானீ
வெறிப்பதெவன் விண்ணகத்து மெல்லியலார்க் கிழுக்கில்லை
யொறுப்பவரு மிலையுன்னை யுன்னுரையா லிவ்வழக்கை
கிறுப்பதுகொண் டேனென்பா னிகழ்த்துகவென் றினிதுரைத்தான்.

இனத்தவரே யலர்தூற்று மியல்பினரே யனையரன்பு
மனத்தினரென் றறிந்தாங்கு மாதுவே தனைநோக்கிப்
பணிக்கதிரோற் கேபுநதி பயந்தேனென் றுரைப்பவவ
டனைக்கதுமென் றந்தணற்குத் தந்துபுதன் றனையழைத்து. (௫௪)

வானவனு கியுமாது மயக்காற்று னவற்புகுந்து
தானவனு மதிக்குரிமை சார்கென்று மதியைக்கூய்
வேனெடுங்கண் ணியைக்குரவன் மேவினனுன சுதனினக்கே
தானுரிய னெனவெவருந் தந்தமிட முற்றனரால். (௫௫)

முயற்கூடு தேசிகற்கே முன்னுரிமை யாய்நின்ற
கயற்கூடு விழிபவளைக காமவேன் மலர்க்கணையான்
மயற்கூடும் புன்மையினால் வெரும்பழிபைங் கூழ்வளர்க்குஞ்
செயற்கூடும படிவளையத தேசிழந்து களைத்தனனே. (௫௬)

பழிமாறும் படிகருதிப பங்கயனைப பணிந்திதற்கோர்
கழுவாய்தந் திடுகென்னக் கௌரியநாட் டுதீசியின்யாந்
தொழுவாய்மைச சுந்தரனைத தோத்திரஞ்செய் தடியில்விழுந்
தெழுவாயே லிப்பழிபோ மெபபழியு மிரியுமென்றான். (௫௭)

வேறு.

கதுமென மதியோர் கலைவடி வாகிக் காசினி யடைந்துவெள் ளாற்றின், விதிவழி மூழ்கி விலவமு மழக விமலனு முறையிட மடுப்ப, வதுபொழு தேதன் பழிபிரிந் தோட வாதியிற் றழைத்தொளி கூடத், துதிபல புகன்று னிறையவற் காட்டத் தூயநீர்த் தடமொன்று கண்டான். (௫௮)

அடியவர் பலரு மாடுவா னுருபே ராவியுஞ் சமைத்தனன் மூழ்கிக், கடிகமழ் வாவிக் கரையடைந் திறையைக் கருத்தில்வைத் தைந்தெழுத் தோதி, நெடிதவ னிருந்தான சோடச கலையு நிரம்பிய முழுமதி யானன், படியெழு தரிய படிவமுற் றேமுப் படிதொழும் படிநலம் படைத்தான். (௫௯)

இன்னண மதியா னெவற்றையு மதியா னிருந்தவத் தடங்களின் பாங்கர், துன்னிய சங்கஞ் சொரிதரு தரளத் தொகைநிரை திவள்வன வனையான், பன்னியர் பதியைப பிரிந்துற லஞ்சிப் பற்றினர்

பின்னரே யெய்தி, மன்னிய புனிதந் தாமுகன் செய்து மாட்சியார் காட்சியிற் பொலியும். (௬௰)

அல்லதா மனையாற் காத்திடச் சுலவி யடுத்தலு மாகும தான்று நல்லவன் கிரணஞ் சிதறியே கிடந்து நண்ணலும் போலும்வெள் ளொளியா, லெல்லுறு பகலுங் கபிரவங் குவளை யினமலர்ந் துறுவன நோக்கிச், செல்லுமேழ் பரியோ னடுத்தறிந் திறைஞ்சிச செல்லு வன் வெதுப்பிடா தஞ்சி. (௬௧)

மன்னிய விதுவின் வெண்கதிர்ப் பிழம்பு வயங்கலா லாண்டரு கெய்தும், பொன்னுறு வாவி பயோததி போலப் பொலிதரு தோற் றமீன் றெடுத்த, வன்னையாந திருப்பாற் கடலிவன் பேற்றி னருமை யை நோக்குமா றடைந்து, துன்னிய காட்சி போலுமல் லாது சொரி தரு, மமுதமே போலும். (௬௨)

வேறு.

பாடமை மதியது பாவ நீககமோ
நீடுறை தருமறு நீக்கத் தன்மையோ
நாடுமவ் விருதட நாம றிநதிலங்
கோடெலாங் கருமணற் கொழிக்கும் பண்பின. (௬௩)

பூம்பதி யடைந்தவிப் புனலின் புண்ணிய
நாம்பெறு வாமென நண்ணிற் றுலெனத்
தேம்பொதி யவிழ்ந்தெழில் சேருஞ் செய்யவா
யாம்பலுங் குவளையு மமையக் கொண்டன. (௬௪)

ஓங்குறு புண்ணிய முறுந ரேவம்மின்
றேங்குறு பவத்தினர் சென்மி னென்பபோல்
வீங்கியே போந்துபின் மீண்டு சென்றிடும்
வாங்கிய திரைபல வயங்குஞ் சீரின. (௬௫)

மன்னிய சோதரன் வயங்க வாற்றிய
வின்னவற் றுறுதுமென் றெண்ணும் பூமக
டன்னிலத் துடனுறை தன்மைத் தாலெனப்
பொன்னவிர் தாமரை பூத்த பொற்பின. (௬௬)

உண்மூழு கினர்பவ வுததி நீங்குவ
ரண்மைமுத் திக்கரை யடிப்ப ரென்பபோல்
வண்மையி னிலவுபல் வளையு யிர்த்திடும்
வெண்மணி கரையிடை வீசு மாண்பின. (௬௭)

இத்தகு தடக்கரை யிருந்து பொன்சடை
யுத்தம னடிமல ருள்ளங் கொண்டெழா
மொய்த்துள பழிவினை முற்றும் போயது
மெய்த்ததன் மூழுக்கலை மெய்யுங் கண்டனன். (௬௮)

விற்குடைத் தன்னூரு விளங்கி மாமதன்
பொற்குடை யாமெனப் புரிந்த தன்மையான்
மற்குடை யவ்விரு வாவிக் கும்பெயர்
பொற்குடை யானெனப் புகன்று சென்றனன். (௬௯)

முழுதுல கினுக்குமோர் மூல மூர்த்தியைத்
தொழுதன னனந்த தோயத் தாடின
னழுதனன் றனைமறந் தழலின் முன்னுற
மிழுதென வுருகின னினைய பன்னுவான். (௭0)

மெய்த்தவ முனிவரர் வேத னேமுத
லுத்தமர்க் குரியதா முனது பேரரு
ளுய்த்துணர் வின்றியோ ருறுதி பூண்டிடாப்
பொய்த்தவ னெனக்குமே பொருந்திற் றம்மவோ. (௭௧)

வாழிநின் றிருவடி வாழி மாமுகம்
வாழிநின் புரிசடை வாழி கங்கையும்
வாழிநின் கருணைநின மாட்டு மெய்யன்பர்
வாழியென் றினையன வழுத்திப் போற்றினன். (௭௨)

வேறு.

வெண்மதிப்புங் கவனுளத்தி னிடைக்கிடந்த பேரன்பு மேற்போந் தாங்கே, யுண்மதிப்புற் றுரைத்ததுதி யத்தனையுஞ் செவியேற்ற வுமையோர் பாகன், கண்மதிக்குந் தோற்றமுறு கலைவாணு நின்றுதியாற் களித்தோ மேலே, விண்மதிக்கும் வடிவமுற்றாய் வேண்டு வகே வீதுமென்றான் விமல மூர்த்தி. (௭௩)

அண்ணலுன் றிருவருளால் வானவர்க்கெல் லாமமுத மளிக்கப் பெற்றேன், றண்ணாரம் புனைநினது சடைமீது வாழ்பதவி தானும் பெற்றேன், கண்ணுறும் பதம்பெற்றே னுண்டளப்பான் களத்திரத் தைக் காம வேளா, லெண்ணுமற் கலந்தபவ மறப்பெற்றே னியான் பெறும்பே றெவர்பெற் றாரே. (௭௪)

இனியடியேன் பெறுமபேறு நின்னடியை மறவாம லிருப்பா னிந்தத், தனிநகரை யடையுங்கான் மழவுருவங் கொண்டடியேன் சார்ந்த பண்பா, னனிமகிழ்வி னெவருமிதை யரிமழவூ ரெனும்பெ யரா னவிலும் வண்ணங், கனிவினருள் புரிகென்றான் சுந்தரே சரு மகிழ்ந்து கருணை செய்தார். (௭௫)

அக்கால முதலாக வரிமழவூ ரென்றுபெய ரமைந்த தாகி
யிக்காலத் தினும்விளங்கு மிதற்குநிக ரெத்தலமு மில்லை யெங்கு
முக்காலங் களுமுணரு முனிவரரே யிரவியன்பு முடுகி யீர்ப்பப்
புக்காலந் தரித்தகளப் புண்ணியனைப் பணிந்ததுவும் புகல்வா மன்றே.

சந்திரன் பூசித்தபடலம் முற்றிற்று.

ஆகசெய்யுள் ௭௫.

---

# சூரியன்பூசித்தபடலம்.

பொன்னனைய புரிசடையீர் புந்திவழி வழியாகப் புடவி காத்த மன்னவர்தங் குலத்தில்வரு பாண்டுமனைக் குந்திமணி வயிறு வாய்ப்பக் கன்னியெனும் பருவததே பரிதிதனைச் சேர்ந்துபெற்ற கானை யான கன்னனெனு மன்னவனை யறியாதா ரிலரன்றோ கருதுங் காலே. (௧)

கட்டழகாற் புயவலியாற் கல்வியினா னிதியினாற் கலினம் பூண்டு வட்டமிடும் பரிகரிதேர் நடத்தியமர் பொருதுபெறும் வயத்தி னான் மேம், பட்டவன்வா ளரவுயர்த்த பதாகையினாற் கினிமைமிகப் பய ப்ப நன்கு, நட்டவன்சீர் வளருமங்க நாட்டவன்பல் வகையறமு நாளுஞ் செய்வோன். (௨)

நெருப்பினிலு மறக்கொடிய நிரப்பெழுந்து கனற்றுதலா னீறித் தேறி, யுருப்பொலிவு முளப்பொலிவு மிகக்குறுகத் தனைக்குறுகி யுவப்பக் கூறி, யிரப்பவருக் கெப்பொருளுங் கேட்குமுனம் வேண் டியவா றியைய நாளும், விருப்பமுடன் கொடுத்துவந்தான் வள்ளலி டை வைத்தெண்ண விளங்கு மேலோன். (ங)

முன்னையிலோ ரசுரரிறை நற்றவத்தா லிறைவனருள் மொய்ப் பக் கொண்டு, மின்னுமொரா யிரகவச குண்டலம்பெற் றனனிவனை வெல்வா ரில்லை, முன்னுபல துயர்புரிந்தா னரனோடு நாரணனு முனி வர் போர்க்குத், துன்னியொரா யிரவருடத் தொருகவச குண்டலத் தைத் தொலைத்தா ரன்றே. (ச)

இருவருமா யிரவருட மொருவர்பொர வொருவர்தவ மியற்றி நின்றார், மருவுமொரு கவசமுடன் குண்டலமு நீங்கமற்ற வற்றை மாய்த்தார், பொருவலிமைத் திதிபுதல்வன் வெல்லலரி தென்றுன்னிப் புலர்ந்தோர் மாயங், கருதியொளிப் பான்விண்ணிற் புகுங்காலை யிரவி யிடங் கலந்தா னன்றே. (ரு)

அன்னவனே குந்திவயிற் றவதரித்தான் றவவிரதத் தவரே வந்து துன்னியநட் புரிமைகொடு பார்த்தனுங்கண் ணனுமென்னத் தோ ன்று நின்று, ரின்னதனுற் பார்த்தகன்ன ரொருவரைமற் றொருவர் கொல்லற் கெண்ணி யுற்றார், கன்னனுதித் திடும்பொழுதே கவசகு ண்ட லமுமுடலிற் கலந்த வன்றே. (சா)

இக்கவச குண்டலத்தோ டிவனிருக்கும் வரைவெல்லற் கியை யா போரிற், புக்குவெலற் காயிரவற் சரந்தபசு செயவேண்டும் புரிவ தென்னென், றுக்கமது வனமாய னுன்னிவலா ரியைநோக்கி யுனது மைந்தன், மிக்கசமர்க் களத்தாவி வீயாமற் புரக்கும்வகை விளம்பக் கேளாய். (எ)

கன்னனணி குண்டலமுங் கவசமுமீ சென்றிரந்தாற் களிப்புற் றீவான், பின்னவனைப் பின்னவனே செறலமையு மெனத்தனக்குப் பிறந்த மைந்த, னின்னுயிரைப் புரப்பதனுக் கெண்ணிமறை யவனாகி யெய்தி நின்று, னன்னவன்றன் முதுவடிவுஞ் செந்தண்மைப் பொலி வையுங்கண் டங்கர் கோமான். (அ)

எழுந்திறைஞ்சி யடிவணங்கி யடியேன்செய் தவப்பயனு லெழு
ந்த தெய்வச், செழுந்தருவின் கொழுந்தனைய தேவரீர் திருவுள்ளஞ்
சேர்ந்த வெல்லா, முழுந்துருள்போழ் தினிலளிப்பே னுரைபினென
மறைத்தவனு முரைத்தாற் றன்பத், தழுந்துதியோ வெனக்கலக்க
மடைகின்றே னென்றுரைப்ப வன்பன் கூறும். (௯)

உடலெடுத்த பயனெனைதையு முவந்தளிப்ப தெனமனத்தி னுறுதி
பூண்டேன், கடலடுத்த கருணையுளாய் வேண்டுவனீ பெறுதியெனக்
கழற லோடு, மடலடுத்த தார்மார்பா கவசமொடு குண்டலத்தை
வழங்கு கென்னச, சுடலடுத்த் விடங்ளிர்போன் முகமலர்ந்து நயந்து
ளும்பச சொன்னு னம்மா. (௰)

அந்தணர்சி காமணியே நீவேட்ட பொருளினிலை யறிவு றுது,
சிந்தைமிகத் துயருழநதேன் கவ்லொழிததாய் வாழ்தியெனச் செப்
பிக் கையாற், றநதிடுங்கா லெழுபுரவித் தடநதோரோன் மகற்கிரங்
கித் தனையா வந்தோ, னிந்திரனே பார்த்தனைக்காத் தினைக்கொல்லக்
கருதினனீ யீயே லென்றுன். (௰௧)

குந்திமக னதுகேட்டுக் கூறுவான் கொடுநரகங் கொடுக்கு மே
னும், வந்திரப்போர்க் கெப்பொருளு மீவதே வாழ்வாகும் வானுற்
றுலு, மந்திலிலை யெனமறுத்த றுழ்வாகு மெனப்பலநூ லறைதலோ
ர்ந்து, மெந்தைதடுத் திடலறமோ விதுதகுமோ விதுமுறையோ வெ
ன்னே யென்னே. (௰௨)

கொடுப்பவரைத் தடுப்பவர்கள் கொடுநரகங் குடியிருப்பாக்
கொள்வா ரீண்டு, முடிப்பதுவு முண்பதுவுங் கிடையாமற் பிச்சைபு
குந் துழல்வார் முன்னிப், படிப்புகர்வந் துரைத்துவிழி குருடானு
னன்றுமா பலிமாற் கீவா, னெடுத்ததனை யுவந்தளியா திருந்தனனேல்
வள்ளன்மை யென்னு மெந்தாய். (௰௩)

கிடைப்பவெலாந் தமக்குரிய வெனக்கருதிப் புகழ்விரும்பாக்
கீழோ ரென்று, நடைப்பிணமா குவருயிரும் பிறர்க்களித்துப் புகழ்
வளர்க்கு நல்லோர் வாரி, யுடைப்புவியி லுடலொழிந்தும் பேரொழி
யா தெந்நாளு முறுவா ரன்றோ, தடைப்படநீ நினைத்தபழி விடுப்பவ
ழி கிடைத்திடுமோ சாற்றுங் காலே. (௰௪)

மண்ணினுக்கும் புழுவினுக்கும் வளரெரிக்கு நரிக்குமுண வாகு
மியாக்கை, கண்ணுவதென் னெத்தனையோ காலமிருப் பினுமழியுங்
கற்ப காதி, விண்ணினுக்கோர் பதிதானே யிருகைவிரித் தேற்பினிதி
ன் மிக்க தாக, வெண்ணுதற்கோர் பொருளுளதோ வெனக்கவச கு
ண்டலத்தை யீந்தான் மன்னோ. (மரு)

இத்தனையு முளத்தறிந்த வெங்கதிரோ னகம்புழுங்கி யிரங்கி
யேங்கிப், புத்திரனைப் புரப்பதற்குப் போய்க்கொடையைத் தடுத்த
பழி பூண்டே னந்தோ, மெத்துபழி நினைக்குந்தோ றுளத்தைநனி
வெதுப்புமிந்த விதனந் தீர்ப்பா, னத்தனடி மலர்பரவி யேத்துவது
வேண்டுமென வாய்ந்து நின்றான். (மசு)

அங்கிலேயி னினைத்தபடி திரிபுவனத் தினும்புகுது மருந்தவத்து, முன்
னவன்யாழ் முனியெய்தி யுளங்கவலேன் முழுமுதல்வன் முடிகொண்
டாண்ட, தென்னவனூர் திருநாட்டி னுத்தரபாற் றவளநதி தீரத்
தெய்தி, மன்னுவில்வா ரணியத்தின் முளைத்தசிவக் கொழுந்தையுற்
று வழுத்தி நின்றால். (மஎ)

உனக்குமுன முறும்பனிபோ லுனைப்பிடித்த பழிபோமென்
றுரைத்துச் சென்றான், மனக்கவலை யொழித் தனனுய்த் தக்கிணவா
கினியாக வருவெள் ளாறு, தனைப்பரிதி யடைந்துகுடைந் தெழுந்து
திரு நீறுமணி தயங்கப் பூண்டு, கனத்தையுடல் கிழித்தெழுமூ விலை
வில்வ வனத்தினையுங் கண்டு தாழ்ந்து. (மஅ)

விண்டமல ரவற்கரிய விண்ணவனைக் கண்ணுதலை மேவிக் கண்
ணுற், கண்டவுட னடியொடிந்த நெடுமரம்போற் படிவீழ்ந்து கண்க
ளாற்றிற், கொண்டலெனப் புனலோட நாக்குழற மனமுருகக் குவி
த்தகையோ, டண்டியென தருந்தவத்தின் பயனான சுந்தரனே யருள்
வா யென்று. (மகூ)

பூசிக்க மனங்கருதி யெத்தகைய கொடும்பழியும் போக்குங்கொ
ன்றை, வாசித்த திருமுடியி லாட்டுதற்குக் கங்கையினை மாட்சித்தா
கி, மூசுற்ற பலமலரு நிறைபுனற்ற டாகமொன்று முக்கண் மூர்த்தி,
தேசுற்ற சினகரத்தி னெதிர்தோன்றக் கண்டுவகை சிறந்தா னன்றே.

## வேறு.

கஞ்ச மேவியோ
ரஞ்ச மன்னுதல்
செஞ்சொன் மங்கைபோ
னெஞ்சி லுன்னினன். (உக)

சங்கு தாமரை
பொங்க லிந்திரன்
றங்க வைத்தலபோற்
புங்க முற்றன. (உ௨)

முத்தெ டுத்தலே
தத்தி வீசுதல்
சித்த முற்றனன்
பைத்த மாவினன். (உ௩)

கங்கை மங்கையே
யிங்கு தங்கல்போற்
பொங்கு வாவியின்
றங்க நோக்கினன். (உ௪)

இரவி யன்புடன்
விரவு செங்கையாற்
கரவி லாமலே
பரவி யேத்தினன். (உ௫)

பார்த்து ளத்தினை
யீர்த்த வித்தடஞ்
சேர்த்த பேர்சிவ
தீர்த்த மென்றனன். (உ௬)

ஈச னார்பெயர்
பேச லாவிது
காசி யாதியிற்
றேசு கொண்டது. (உ௭)

என்று கூறியே
யென்று பூசனை
நன்று செய்தன
னென்று மன்பினால். (உ௮)

கொடைத டுத்தலா
லடைமி டற்பழி
கெடம கிழ்ச்சியிற்
குடைத லுற்றனன். (உ௯)

அன்ன நாண்முத
லின்னு நாடொறு
மன்னு பூசனை
நன்னர் செய்வனால். (௩௰)

ஆண்டு தோறுமெல்
லீண்டு வெங்கரந்
தீண்டு மீசனைக்
காண்டி ரியாவரும். (௩௧)

பொங்கு செஞ்சுடர்
தங்கு மன்புடைச்
சிங்க மாசமே
யிங்கிம் மாண்பது. (௩௨)

இரவி யண்ணலைப்
பரவு தன்மையைக்
கரவி லாமலே
யுரைசெய் தாமினி. (௩௩)

முத்த வெண்ணதி
மெய்த்த மாண்பினைப்
பத்தி யிற்சொல்கேஞ்
சித்தி முற்றுமே. (௩௪)

சூரியன் பூசித்தபடலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௪௱௪௰௫.

# வெள்ளாற்றுப் படலம்.

துன்னுபடை யாற்செல்வத் தொகையினாற் றொல்கலையாற்
சின்னமதி முடியிறைவர் திருவருளாற் செங்கோலா
லென்னவர்க்குந் தருமருளா லீகையா லயனாட்டு
மன்னவருந் தம்முளத்து மதிமரபா மதிமரபின். (க)

உதித்தவனீ ருடைப்புவித னொருகுடைக்கீ ழறப்புரிந்தான்
விதித்தவழி யேயொழுகி விலக்கியன விடுத்தெவருந்
துதித்திடவா ழொருவேந்தன் சொன்மாறாத் தூய்மையினா
னதித்தலையா ரிடத்தன்பு நாடோறும் வளர்த்தகோன். (உ)

ஆயவனிவ் வுலகத்தோர்க் காயவனே யெனமேவித்
தூயபுகழ் பெறுதலினாற் சுவேதகே துப்பெயரான்
காயமெடுத் ததன்பயனைக் கைக்கொள்வான் கருதுபுதன்
றேயமுறு சிவதலங்கள் சென்றுசென்று பணிபுரிவான். (ங)

உத்தரதிக் கிணைநண்ணி யோங்குபெருங் கொடுங்குன்று
மெய்த்தமணி வாசகர்சீர் விளக்குதிருப் பெருந்துறையு
மத்தனுறை யரிமழமு மாதியவாம் பலதலமு
நித்தலுமொவ் வொன்றாக நேர்ந்துவழி படுநாளில். (ச)

தென்பாலிற் பொருநைநதி திருவால வாயின்வையை
முன்பாலித் திடுங்கருணை முதல்வனார் வடபாலி
லன்பாலித் திடமேவு மடியர்குடைந் தாடநதி
யென்பாலித் திலர்வேண்டு மிதுவென்ன மனங்கொண்டு. (ரு)

அடியவருக் கெளியவனா மருட்கடலே கங்கையணி
முடியவனே யெப்பொருட்கு முன்னவனே நீயாண்ட
படிவடபா லெல்லவரும் படிந்துய்யப் புண்ணியமா
நெடியநதி தருகெனநேர் நின்றுதுதி புகன்றனனால். (சா)

குருந்தமரத் தடிஞான குருவாகியடியருட
னிருந்தருளி வாதவூ ரிறைவனையாட் கொண்டபிரான்
றெரிந்தரசே சையகிரி சென்றுதவ மாற்றினதி
வருந்தலறப் பெறுதியென வழுத்தினனா காயமிசை. (எ)

அந்தமொழி செவியடைந்தா னனந்தக் கடல்குடைந்தான்
பந்தவினை யகல்சையப் பருப்பதத்தை விருப்பமிசை
முந்தவடுத் தருந்தவத்தின் முயன்றிருந்தான் பொன்வரையிற்
சந்தமுறக் கயனாட்டித் தனிபுரக்குந் தமிழ்வேந்தன். (அ)

ஒருமைமனத் தன்பரெதை யுன்னிவேண் டினுமுடனே
தருகருணைப் பரஞ்சோதி தவவேந்தாம் புலிவேந்த
னிருவிழிமுன் னெழுந்தருளி யிங்கு நின்றோர் நதியின்னே
பெருகியிரு கூறாகப் பெயர்தருமா லவற்றினொன்று. (கூ)

தில்லைவட பாலாகச் சென்றுகட லுறுமொன்று
மல்லலரி மழவீதருந்த மரந்திருந்து பெருந்துறையாந்
தொல்லைபரந் தலங்கள்பல சூழ்ந்துவரி யுறுநன்று
புல்லுமரங் களுமுத்தி பொருந்துமிதன் புண்ணியத்தால். (ய)

இந்நதி நின்றேனென்பா னெய்துதலி னின்பெயரா
னெந்தவுல கரும்புகழ விலங்குமிதன் வழியெய்தி
நந்தமைமீ பலதலத்து நாடியடி பணிந்துபின்னர்ப்
பந்தவினை யொழிந்திடநம் பதம்பெறுகென் றகன்றனனால். (யக)

இறந்தமூ தாதையர்க்கா விருந்தவத்தாற் கங்கைபெற்றுச்
சிறந்தரவி குலனாகத் திகழ்பகீ ரதனனை
வறந்தழைய வங்கனூறு மாற்றுநீ ரங்கனூற
மறந்தவிர்வேன் மதிகுலத்து மன்னன்மன மகிழ்வெய்தி. (யஉ)

அந்நதியின் வழிவழியே யானந்த வருவிவிழ
முன்னவனைத் தங்குலத்து முதல்வனைவே தாகமங்கள்
சொன்னவனைப் பலவாறு தோத்திரித்துப் பேரன்பு
துன்னவழிக் கொண்டனனாற் சோதியடி தொழுவதற்கே. (யங)

காவிரியின் மேலாகக் கடுகியெழுஞ் சுவேதநதி
பூவிரியுந் தருக்களெலாம் புடையிரியப் புள்ளிரிய
மாவிரியக் கரையிரிய வந்துபடி குநர்வினையாந்
தாவிரியப் பெருக்கெய்தித் தமிழ்நாடு சார்ந்ததால். (யச)

குங்குமத்தின் றடஞ்சினையுங் குளிர்சந்த நறுங்குறடும்
பொங்கமுறித் தலைவிசையிற் போக்கியிரு கோட்டகத்தும்

தங்கவிடுத் தங்கங்குத் தழைத்தவளம் பலபெருக்கித்
திங்களமு தொழுக்கென்னத் திகழ்ந்தெய்தும் வெள்ளாறு. (௰௫)

அக்கமிசைக் கொண்டுழையே யண்ணியுடைத் தோல்காட்டி
மிக்கபுன்னு கமுமாக மேற்கொண்டு பல்லுயிர்க்குந்
தொக்கபதந் தந்தருளித் துலங்குவதா லடியருளம்
புக்கமரும் பரம்பரனைப் பொருவவருந் தவளநதி. (௰௬)

பொன்னாரம் புயமெய்திப் பொலிந்தாழி தனைமருவி
மின்னார்சங் கங்கொண்டு மிளிருமணி யையும்பூண்டே
யெந்நாளும் புவிகாப்ப தியல்பாகக் கொள்ளுவதாற்
றன்னுரைத் தெறுமரிபோற் றுலங்குவதிவ் வெள்ளாறு. (௰௭)

பல்லுயிரும் படைப்பெய்திப் பங்கயமுங் கலைமானும்
புல்லிமிக வாரணங்கள் பொலிவாய்ற் றெண்கணுறீஇ
நல்லவன மேற்கொண்டு நயத்தலினு லெமையாளுஞ்
சொல்லவனை மணந்தவனோர் சொல்லவருஞ் சுவேதநதி. (௰௮)

வில்வயவூர் பரிகரிதேர் மிகுசூரன் றனைச்சமரில்
வெல்வயவ னுங்குமர வேளினிது வீற்றிருக்க
நெல்வயலு மலர்த்தடமு நிமிர்காவும் பலமேவும்
புல்வயலு மெழிற்குமரப் பொருபபுமுறப் போந்ததுவால். (௰௯)

ஒருவிடையார் தமிழ்வேட்கை யுளங்கொண்டு திருவாரூர்த்
தெருவிடையா ரடிசிவப்பச் சென்றவர்தந் திருவருளாற்
கருவிடையா வருமெய்தாக் கதிகொடுக்கும் பெரும்புனிதத்
திருவிடையா றுதிதலஞ் சென்றுசிறப் பியற்றியதால். (௨௰)

எத்தலமு மிதற்கிணையா விலையென்ன வேழுலகு
நித்தலுங்கொண் டாடுவது நேயமுறக் குழீஇத்தேவர்
புத்தமிழ்தாங் கவிப்புலவர் புகழ்வதுபொன் னிதழிபுனை
யத்தனுறை திருப்பதியா மரிமழத்தை யடுத்ததுவே. (௨௧)

அங்கரத் துறைபரமற் கபிடேகஞ் செயவலரும்
பன்மலர்த்தா மமுமொளியைப் பரப்புமணி நிரைபலவுந்
தன்மகிழ்வி னலைக்கரத்தாற் றந்துதுதி யொலிகாட்டிச்
சன்மவினை யகற்றுநதி சார்ந்ததால் வடகுணபால். (௨௨)

முருந்துறையுங் குறுந்தவள மூரலுமை யவட்பிரிந்து
குருந்துறையு மெய்ஞ்ஞானக் கொழுந்துறையுஞ் செழுந்துறையாம்
பெருந்துறையுங் கடந்தேகிப் பெட்டெழிற் கினர்க்கின்பந்
தருந்துறையாஞ் சலதிமடைத் தவளநதி சார்ந்ததுவே. (உ௩)

தன்னிகரி லிந்நதியின் றன்மைதெரிந் தளவுரைத்தாந்
துன்னுபுகழ் மிகமேவுஞ் சுவேதகே துபெயர்கொண்
மன்னனரி மழநாதன் மலரடியை வழுத்துகதைத்
தன்னையுஞ்சொல் லுதுமிறைவன் றன்னருளா லெனப்புகல்வான் ()

வெள்ளாற்றுப்படலம் முற்றிற்று

ஆகச்செய்யுள் ௭௱௫௰.

---

# சுவேதகேது பூஜித்தபடலம்.

பையரா வணிவேணிப் பரனருளாற் சுவேதநதி
வையமேல் வரக்கண்டு மகிழ்கொண்ட வழுதியர்கோன்
சையமால் வரைநீங்கித் தன்னாடு தனைநோக்கி
யொய்யெனு வெய்தி மகிழ்ந் துற்றனனு லரிமழவூர். (க)

அன்னதிரு நகரெய்தி யன்புவயத் தினனாகிப்
பொன்னியினு மிகமேலாப் பொலிதவள நதியருகு
துன்னியிரு கரங்கூப்பித் தொழுதுசங்கற் பம்புரிந்து
முன்னவனு ராகமத்தின் மொழிந்தமுறை வழுவாமல் (உ)

நதியெதிரி னரையளவு நளிர்புனலி னிடைநின்று
துதிசெய்து மனுவோதித் தோய்ந்தாச மனஞ்செய்து
விதிமுறையி னுலர்துகிலான் மெய்யினீர் துடைத்திட்டு
மதியினொளிர் கலையென்ன வயங்குமிரு கலைதரித்து. (௩)

மேதகுசெல் வங்கொடுக்கும் விபூதிமுறைப் படிபூசி
யாதியக்க மணிதாங்கி யாலயத்துட் புகூஉநின்று
மாதவளக் கோடொடித்து வரையிடைப்பா ரதந்தீட்டும்
போதகத்தின் பதவனசப் போதகத்திற் புனைந்தேத்தி. (௪)

பாலடுத்த மொழிக்குறமின் பாலடுத்துப் பேரழகான்
மாலடுத்த மனத்தோடு வனமடுத்து மடவாய்நின்

சேலடுத்த விழிக்கடைதான் சிறிதருளொன் றிரந்தவடி
வேலடுத்த திருக்கரத்து விமலன்மல ரடிபோற்றி. (ரு)

புள்ளேறு மிருவருமவின் பேர்ந்துபுவி போழ்ந்தறியாக்
கள்ளேறு மார்முடியுங் கான்மலருங் கசிபுமன்ப
ருள்ளேறும்படியுதவு முபர்வொப்பில் பரமபொருளை
வெள்ளேறு கொடியாக்கும் வேதியனைக் கும்பிட்டு. (சா)

கனலடுத்த மெழுகென்வுட் கசிந்திருகண் கருமின்பப்
புனலுகுப்ப நாக்குழறப் பொறிகளுநாம் புலனொழியத்
தனதுதா னெனுநினைவு தடுமாற நின்றுதுபி
வினைவிடுத்தா லெனவறிவுற் றெம்மானைத் துதிக்கின்றான். (எ)

தீதுலரா தெழுந்திய சிந்தைஞா தியுர்வலிபா
லாதுலராய்த் தஞ்சமிலா தழுதிரங்கு சிறுவனுடன்
போதுலராக் குழல்வணிகப் பூவையுளம் புளகமுற
மாதுலராம் படிபோந்த வள்ளாலுன் பதமபோற்றி. (அ)

வேறு.

பாண்டியர் பொருட்டுப் பரைபையோர் மகளாம் படியருள் புரிந்தவள் பாதந், தீண்டியம் பிபின்னைத் திருமண மகளுசை சேர்ந்துமாமணிமுடி புனைந்து, நீண்டியல் செங்கோல் கைகொடு புரந்த நிலனே யடிவர்க் கென்றும், வேண்டிய வளிகருங் கருணையங் கடலே மேவுநின் பதமலர் போற்றி. (கூ)

என்றுபற் பலவாத் துதித்துவந் துலக மெவற்றையுங் கருவுறுதீன்று, நன்றுற வாக்குய கயற்கணு யங்கையை நாடியுச சிபிற்கரங் கூப்பி, நின்றுசொன் மாலை வகைவகை யாக நேர்படச் சாத்தியே வலமாச், சென்றுநற் றண்டி சேவடி வணங்கித் திருத்தூசத் தம்ப முன்போந்து. (ய)

நிலமுறப் பணிந்து தங்கியைத் தொழுத்தை நினைந்தரு ளடைந்துமீண் டெழுந்து, வலமுறக் கயல்கொள் வழகியர் பெருமான் மாதிரி யுடல்பொரு ளாவி, நலமுறக் கவர்ந்த நளிரருட் கடலா நாதனார் குரவுபூண் டிருக்கும், தலமுறக் கருதிச் சென்றனன் பிறவிச சாகரந் தாண்டிய தக்கோன். (யக)

சுவேதகேது பூஜித்த படலம் முற்றிற்று.

ஆகசசெய்யுள் சாஅக.

# தடாதகைப்பிராட்டியார் தவம்புரி படலம்.

—:0:—

தூயபுக ழுறுமலயத் துவசனெனும் வழுதியர்கோ
னேயமுறுந் திருமகளாய் நிலமுதலெவ் வுலகுக்குந்
தாயருளா லவதரித்துத் தடாதகையாம் பெயர்மேவிப்
பாயகரி பரிவேல்விற் பயில்கலைகள் பலதெளிந்து. (௧)

பூருவத்து மதிபோலப் பொற்பொடுநா டொறும்வளர்ந்து
சீருறுத்து முழுமதிபோற் றிகழ்நாளி லிவ்வுலகில்
யாரெனக்கு நிகரென்ன விறும்பூது மகிழ்பூத்த
மேருவொத்த தடந்தோளான் விண்ணாடு மருவினான். (௨)

மருவியமன் னவன்கடனை மறைமுறையே மதித்தியற்றித்
திருவியல்சா ரரியணைமேற் சென்றிருந்து செங்கோல்கொண்
டரசியலைச் செலுத்திநின்றா ளகிலவுயி ரியாவுநின்று
பரசுபெருந் தாயாகிப் பாலிக்கும் பராபரையே. (௩)

நீதிநெறி வழுவாம னின்றரசு செலுத்துகையி
லோதிமறை யானுமறி வுறற்கரிய பரம்பொருளா
மாதியிறை வனைப்போற்றி யருந்தவத்தா லருளெய்தித்
தீதிறிசை தொறுஞ்சென்று செயத்தம்ப நாட்டவெண்ணி. (௪)

தவமான நிலையின்றித் தரணியிலொப் பில்லாத
சிவமான திசைவெற்றி சேர்தலரி தெனத்தேர்ந்தே
னவமான நாட்கழித்த லடாதென்று தவம்புரிவா
னுவமான மிலதாய வொருவனமெங் குளதென்னா. (௫)

மனத்தெண்ணித் தன்னாட்டு வடபால்வெண் ணதியடுத்த
வனத்தண்ணித் தவம்புரிதன் மரபென்ன மதித்தினிய
கனத்தெண்ணு மறையாதி கலைகளறி யாதுறமுத்
தனைத்தன்னை யொருநிலையாந் தவக்கோலந் தரித்தனளே. (௬)

தென்னாட்டு மதிமரபிற் றிருமகளா யவதரித்து
முன்னாட்டு மரசுரிமை முடிசூட்டு மலர்க்குழலை
யென்னாட்டுத் தவத்தினரு மெடுப்பரிதிவ் வேடமெனப்
பொன்னாட்டு மலைக்குமரி புரிசடையாப் புனைந்தினனும். (எ)

விண்மணிலுள் ளாரெவரும் வியந்துநவ மணியாக
வெண்மணிமா லையினுமிக விதுமகிமை யுடையதெனுங்
கண்மணிமா லையையுச்சி களமார்பு கரமணிந்தாள்
பெண்மணியா யரசுரிமை பெறப்பிறந்த பெருமாட்டி. (அ)

தோற்றுபவப் பிணிவனத்தைத் தொட்க்குறுமும் மலக்கிழங்கை
நீற்றுவதற் குரியவன னீறென்று நிலையுறுத்தக்
கோற்றொடியெங் கோமாட்டி கோமளமாந் திருமேனி
நீற்றொளியு நுதற்றிலத நிகழொளியு நிலவவுற்றாள். (௯)

சிவக்கோல வடிகாணத் திருக்கோலப் புயமாலோ
னவக்கோல வடிவினனு யலங்கோல மடையானு
னவக்கோல மார்கூட னகர்க்கோல நாயகிகொ
டவக்கோலங் கொண்டுவனந் தனிற்கோலத் தவம்புரியின். (௰)

எனப்பலரு மெடுத்தியம்ப வியங்கள்பலப் பலமுழங்க
வனப்புமிகு கயற்றுவசம் வானுலகு வரையாட
மனப்பரிவாய்க் கரிபரிதேர் வலியபடைக் கடல்சுலவத்
திணைப்பொழுது மகலாத சேடியர்கள் புடைசூழ. (௰௧)

கவரிசா மரைவிசிறி கருதொலிய லாலவட்ட
நவமிகுதோ ரணமபிச்சு நவில்குடைகண் மிடைந்துலவத்
தவவமைச்சர் தளத்தலைவர் தத்தமுயர் வாகனமீ
துவமைசொலற் கரியவகை யுள்ளுவகை யொடுபோத. (௰௨)

கனமேறித் தவழ்பொழில்சூழ் கவினேறிக் கண்டவர்கண்
மனமேறிச் சைவமெனு மணமேறி வையைநதி
வனமேறி விளங்குபுகழ் மதுரையிலே மணிச்சிம்மா
தனமேறி னுள்சிவிகை தனிலேறி யினிதிருந்தாள். (௰௩)

நகர்கடந்து நதிகடந்து நந்தவன மலைகடந்து
சுகமறைகண் மிகப்பாடுஞ் சோலைகளிற் சிறிதமர்ந்து
புகலரிய வெள்ளாற்றுப் புனிதநதித் தென்பாங்கர்த்
தகுதியுறு வளம்பலவுந் தங்குவனந் தனையடைந்தாள். (௰௪)

சாந்தமுறத் தவம்புரியத் தகுமந்தத் தனிவனத்தி
னேர்ந்தபல வளங்களையு நிகழ்த்துவது பன்னாளு
மோர்ந்தபணி வேந்தனுக்கு மொல்லாது பெருமகிழ்ச்சி
சேர்ந்தெழுப்ப லாற்றுணிந்து சிறிதுநுமக் கியம்புதுமால். (௰௫)

வானோடு கலந்திருக்கு மரமெல்லாம் வானொளிவிண்
மீனோடு மோடரங்கள் விளையாடு மலருற்றுந்
தேனோடுஞ் சுனையெல்லாந் தெய்வமின்னா கண்ணனைய
மானோடும் வழியெல்லாம் வளத்தோடும் பொலிவனத்தில். (௰௬)

புயலடுக்கு மரண்மீது பொங்கரெலாம் வேரிமழை
பெயலடுக்குஞ் சித்தர்முதற் பெருமுனிவ ருள்ளத்து
மயலடுக்கும் படிமயிலு மாங்குயிலு மஞ்சுகமு
மயலடுக்கு முயலடுக்கு மரியடுக்கு நரியடுக்கும். (௰௭)

மாதங்க முடையபிரான் மணக்குமகட் கருகெல்லா
மாதங்க மணிகொழிக்கும் வளவருவிப் புனலோடு
மாதங்கம் புயனளித்த வான்கரியு முளம்வெள்கு
மாதங்கப் பறழ்பலவு மருவுவன முழைதோறும். (௧௮)

வல்லியங்க நிகருமிடை வணங்கியொசி தரப்புடைத்த
வல்லியங்க வயங்குதன மாதர்வன சரர்குழுமி
வல்லியங்கள் புடைக்குமொலி மாறுபடத் தூறுதொறும்
வல்லியங்க ளொலிக்குமொலி மாதிரத்தின் முகடுடைக்கும். (௧௯)

வேறு

கான வாரண மோதுங் கனத்தினும்
கான வாரண மோதுங் கனத்தினும்
வான ரம்பையி னந்தன மாங்கனி
வான ரம்பையி னந்தன மாங்கனி. (௨௰)

இ-ள். கானவாரணம் கான ஆரணம் ஓதும் கனத்திலும் கனத்து இனும் மோதும் - காட்டிலுள்ள யானைகளானவை கானத்தோடு வேதத்தைப்பாடும் கனத்தொனியைப்பார்க்கிலும் மிகுத்து இன்னும் முழங்கும். கனி வான் அரம்பையின் நந்தன மாங்கனி வான ரம்பையின் அம் தனம் ஆம் - அழியாததும் ஆகாயத்தை யளாவியதுமான வாழைமரங்களையுடைய நந்தனவனங்களிலுள்ள மாம்பழங்கள் தேவலோக அரம்பைப்பெண்களின் கொங்கைகளைப்போல்வன ஆகும்.

கோட்டு வான்மதிக் குஞ்சரக் கன்றெனக்
கோட்டு வான்மதிக் குஞ்சரக் கன்றென
நாட்ட மேவிடுஞ் சம்புக்க ணம்பல
நாட்ட மேவிடுஞ் சம்புக்க ணம்பல. (உக)

இ-ள். சம்புக்கண அம்பலம் நாட்டம் மேவிடும் பல சம்புக்கணம் நாவல் மரத்திலுள்ள பழங்களைக் கண்ணில்கண்ட பல நரிக்கூட்டங்கள், கோட்டு வான் மதி குஞ்சரக்கன்று என - கொம்பாகிய ஆகாயத்திலுள்ள (பிறைச) சந்திரனையுடைய யானைக்கன்றுகளைப்போல; கோட்டுவான் மதிக்கும் - (மரக்கிளையை) வளைக்கும்படி நினைக்கும், சரக்கு அன்று என நாட்டமே விடும் (வளைக்கமுடியாமையாமல் இது) பொருளன்று என்று விருப்பத்தையே நீக்கும்.

## மாலைமாற்று

மேக மாடுறு மேகசா
நாக மாவல மாகவே
வேக மாலவ மாகநா
சாக மேறுடு மாகமே. (உஉ)

ஏகு அசா - தளர்ச்சிநீங்கிய, நாகம் மா - நாகமரத்தையும் மாமரத்தையும், வலம் ஆகவே மேகம் ஆடுறும் - வலப்புறஞ்சுற்றி மேகம் அசைந்து செல்லும், வேகம் மால் அவம் - அம்மேகத்தின் வேகம் வீணாகும், ஆ கநா - அப்படி மேகம் அசைதல்) ஆச்சரியப்படும்படி கனாப்போலாகும், சாகம் ஏறு உடு மாகமே - அம்மரக்கிளையில் ஏறும் நக்ஷத்திரங்கள் சிறந்தமேகமண்டலத்தையடைந்து நிற்பன.

## மாத்திரைச்சுருக்கம்.

யானை யின்னொரு மாத்திரை யிற்றதிற்
போன வொன்று புணரி முழக்குட

னீன மொன்றுறு பெய்புமி யஞ்செய
வூன மொனறுறு கூரமு ணங்குறும.

1. நாகம்—நகம்—மலையில்
2. வாரி—வரி—புலி
3. காயம—கயம—யானை
4. பாகல்—பகல்—ரவி

## மாத்திரை வருத்தனை.

ஒன்று கூடிய மேகத் துயர்வினல்
ஒன்று கூடிய வேந்தனு ரிஞ்சுறும்
ஒன்று கூடிய வண்ண மொழிகியே
ஒன்று கூடிய தேவருந் ஞவுறும. (உச)

1. கனம்—கானம்—சோலை
2. தராபதி—தாராபதி—சநதிரன்
3. தென்—தேன்—மது
4. அவி—ஆவி—சுனை

## திரிபங்கி.

பங்கய மார்சுனை நீரினி லேபனி வந்தமருஞ்
செங்கயன் மீன்வன மேவுற வேநனி சென்றுறையுந்
துங்கமு லாம்புனை மாமணி யார்வன சுந்தரமாஞ்
சங்கநி லாங்கன மேபெறு மால்கனி சந்ததமே. (உரு)

| | | |
|---|---|---|
| பங்கயமார் | சுனைநீரினிலே | பனிவந்தமரும் |
| செங்கயல்மீன் | வனமேவுறவே | நனிசெனறுறையும் |
| துங்கமுலாம் | புனைமாமணியார் | வனசுந்தரமாம் |
| சங்கநிலாம் | கனமேபெறுமால் | கனிசந்ததமே |

## பிறிதுபடாட்டு.

பண்கதுவ வண்டு பலபாடும் பூஞ்சோலைக்
கண்கன் கதுவவந்தக் கார்கண்ட மஞ்ஞை
யெண்கதுவ வாசைபெற வேன்றதழை யைவிரித்து
விண்கதுவு மாசையுடன் மேவும் விளையாட்டு. (உசு)

இக்கவியே வெண்பாவாவது.

பண்கதுவ வண்டுபல பாடும்பூஞ் சோலைக்கண்
கண்கதுவ வந்தக்கார் கண்டமஞ்ஞை—யெண்கதுவ
வாசைபெற வேன்றதழை யைவிரித்து விண்கதுவும்
ஆசையுடன் மேவும்விளை யாட்டு.

விஞ்சுபுகழ் வழுதியர்தம் வியன்றமிழின் சுவைகலந்து
மஞ்சுதவழ் துணர்ச்சந்த மலர்ச்சோலை யகம்புகுந்து
பஞ்சுநிகர் மெல்லடிப்பொன் பாவையொடு பாரதிவாழ்
கஞ்சமலர் மணமளைந்து காற்றிசையின் காற்றிசையுட. (உள)

பலவங்கங் கடந்தோங்கும் பாடலமா வழைகுருந்தங்
குலவங்கண் மலருருக்குங் கொடியபவக் கடல்கடக்கு
நலவங்க மெனுந்தவத்தோர் நாடியுறை யிடந்தோறும்
பிலவங்கங் களுமறியாப் பெருந்தருக்க ணிமிர்ந்திலகும். (உஅ)

விண்புகுதா நிமிர்வெய்தி மிடையடவி யிடையடுப்போர்
கண்புகுதா தெழுமூழிக் கால்புகுதா திரவியொளி
மண்புகுதா பறவையினம் வான்புகுதா நுழைந்தறிய
வெண்புகுதா தெனிலெவ்வா றிவ்வனத்தி னிலையுரைப்பாம். (உகூ)

விடப்பணிபி னொடுநகுலம் விளையாடும் வெள்ளானு
மடற்புலியு முறவுகொளு மாம்பலரு கவிருமொரு
தடத்துறையி னறுகாம்ப றழுவியுறு மிவ்வனத்தி
னிடைப்புகுவார் மனப்பண்பை யென்னென்று சொலிவியப்பாம்.()

எத்தனையோ விண்வேந்த ரெத்தனையோ பங்கயத்த
ரெத்தனையோ முகுந்தர்தொழி லெட்டியிறு வதுநோக்கி
யெத்தனையோ யுகங்கடப்ப விருந்துபெருந் தவம்புரியு
மெத்தனையோ முனிவருளா ரிடந்தோறு மெம்மருங்கும். (௩௧)

கானமெலாந் திமிரமுறக் கவிந்துசூழ்ந் துறையுமிது
வானமருங் கருமுகிலோ மனுவோதி மறைநெறியிற்
போனமுனி புங்கவர்கள் புரியுமகப் புகைதானோ
வீனமுறு தெடுத்தியம்பற் கெமக்குவலி யிலதம்மா. (௩௨)

தவந்திகழு மடமாது தனிமுதல்வ ரருள்பெற்று
நவந்திகழ வலங்கரிக்க நாடுங்காற் றிருநுதற்குச்
சிவந்தசெழுங் குங்குமந்தான் செழிப்புறவந் தடுத்தென்ன
நிவந்துபல பாங்கரினு நிறைந்துறையு நிச்சயமே. (௯௯)

தேங்காவி விழியுடைய தேவிதவக் கோலமுற்றா
ளாங்காவி நாயகன்போ லாடைகொளக் கருதினளோ
ணுங்காவி யாதுமென நண்ணினபோற் காவிபூற்று
நீங்காவிற் றரத்துறமி நிலமெலாங் கொளப பொருந்தும். (௯௪)

நாகநதி யொடுதவள நதியிரண்டு மிருபாலும்
வேகமொடு பெருகிவர மேவியபூங் காவனத்திற்
பாகனைய குதலை மொழிப் பாவைதவத் தலைநின்று
ளேகனருள் வேட்டவருக் கெதிதொழிலு மெளிதாமே. (௯௫)

வேறு

வெண்ணிலாத் தண்ணமுத மொழுக்கியாங்கு மிளிர்பூதி யொளி நிலவு விமலநாதன், கண்ணிலா மணிமாலை நிரைகுலாவக் கரியகுழற் சடைபுறத்தே கதுவாநிற்ப, வுண்ணிலா வுயிர்க்குயிரா மொருவன்றா ளே யுளங்கருதித் தவம்புரிந்தா ளுமையொருபாகப், பெண்ணிலார் தவம்புரிந்தா ராணிலாரே பிறங்குபெருந் தவம்புரிந்தார் பேசுங் காலே. (௯௬)

பொறியெலா மொருவழியிற் பொருந்தி யைம்பாற் பொங்கு சுடரிடைநின்று புனல்காலாதி, யுறுமுணவுங் கொள்ளாமே யிறை வன் பாத முள்ளூற்றுந் தெள்ளமுத மொன்றே யுண்டு, சிறியகொடி யிடைதுவள விசுமபை நோக்கிச் செங்கண்மா லயனாதி தேவ ரானு மறிவரிய திருமேனி யலச நோற்றா ளருளுருவா மங்கயற்கண் ணம் மை யம்மா. (௯௭)

வேறு.

மந்திரியா தியரடுத்து மாதவஞ்செய் மடவரலை
நந்துதல்செய் விலங்கினங்க ணண்ணுமே யரணமைத்தார்
சந்தவனப் பேர்தடா தகைவனமா யதுகாவ
றந்தவரண் பேர்தடா தகைக்கோட்டை யாயதுவே. (௯௮)

இப்படிநற் றவம்புரியு மேந்திழைக்கு மாகமிசைத்
துப்பணியுஞ் சடைமுடியார் சொல்லுவார் மடவரலே
யொப்பரிய நின்றவத்தா லுவப்புற்றே மமராற்றி
லெப்படியு நின்னடிக்கீ ழெய்துநீ மதுரையுற்று. (௩௯)

திக்குவிச யம்புரியச் சென்றுபல ரையும்வென்று
மிக்குநலந் தருமணமு மேவுதியென் றிசைத்திடலு
மக்கணமே வில்வவன மடுத்திறையை யடிபணிந்து
தொக்கதமி ழாலவாய்த் தொன்னகரை நண்ணினளே. (௪௰)

ஈசனரு ளருளியவா றெண்ணியவெல் லாமடைந்தா
ளாசையாங் குறும்படக்கு மருந்தவத்தி னினியுமக்கு
நேசமொடு சுந்தரனார் நிகழ்ச்சியையு முரைத்துமெனப்
பேசுவான் கலைநிரம்பப் பெறுசூத முனிவரனே. (௪௧)

தடாதகைப்பிராட்டியார் தவம்புரி படலம் முற்றிற்று.

ஆகசசெய்யுள் ௩௱௨௨.

---

## சுந்தரேசப்படலம்.

இருந்தவள நதிக்குடபா லெந்நாளு மெவ்வறமும்
பொருந்தவள மத்தனையும் பொங்கமுறப் புலமைமிகத்
திருந்தவள ரரிமழமாந் திருநகரின் குணதிசையின்
முருந்தவள வாநகையார் மூழ்குபுனற் றடப்பாங்கர். (௧)

இணையகலி லாங்கலியு மிதனைநிகர் கமுகுமது
துணையவெழு கருப்புமதாத் துன்னுபல செந்நெல்களும்
விணையளவு மரம்மைகளு மிகமிடைந்து கண்கவரும்
பணைமருத வைப்பொன்று பகரரிய வளத்தினதால். (௨)

சங்கங்கா யிளவெயிற்காத் தடங்கரையி னுறவதன்மீத்
தெங்கங்காய் வீழ்ந்துடைப்பத் திரடரள நிரைபரவு
மங்கங்காய் கன்னன்மணி யடுக்குமிவற் றொளிமிகையாற்
பொங்கங்காண் குவளையமெப் போதுமதுப் புகவிரியும். (௩)

மான்பாயும் விழிக்கடைசி மாதரார் மொழிநிகர்செந்
தேன்பாயுஞ் செறுநின்று செயிர்த்தெழுந்து சேணுடுவை
மீன்பாயும் விபுதரொடு மெல்லியலார் முகாமலர்க்
கான்பாயுங் கற்பகத்திற் கவிபாயுங் காவனமே. (௪)

இத்தகைய மருதவைப்பி லெமமிறைவர் முடிசசாத்து
மத்தமறு காரிதழி மாலையெவற் றினுமிகவு
முத்தமமா விளைகயாகி யோங்கிமு விலைவடிவம்
வைத்தளவில் புண்ணியம்போல் வளருமொரு வில்வவனம். (௫)

நந்தவன மெனவக்குநடு நாயகமா கத்திகழு
மந்தவனப் பெருமையையா மறைவதரி தெனவென்னே
முந்தவனம் புனைபவனு முந்தவனி முடுகுவனும்
பந்தவனங் கடந்தவரும் பணிவர்பகர் வரிதென்பார். (௬)

அன்னதருத் தழையொவ்வொன் றவனியெலாம் பெறுமெனினு
மென்னவியப் பாமுசுவொன் றெண்ணுமே யுகுத்ததழை
முன்னவனூர் முடிவீழ மூவுலகுந் தொழுமரசு
தன்னையளித் ததுவென்னச சாற்றுவதை யெவரறியார். (௭)

துணியாரு மதிச்சடிலத் தூயபிரா னன்பரெடுத்
தணியாகக் கூவிளந்தா ரணிந்தாலு மதன்வேட்கை
தணியாமே யத்தருவைச் சார்ந்தெவ்வே ளையும்புனைவா
னெணியார்வத் தொடுபோந்தா னென்னவெழுந் தருளினனால். (௮)

கொன்றைமலர் வெள்ளிமலை கொள்ளாமே நிம்பமலர்
மன்றவணிந் தெழிலால வாயமர்ந்த பரமேட்டி
இன்றவற்றின் மிகுவேட்கை யெய்திமா லூரவடி
நன்றுறைகின் றனன்முன்ன நாம்புரிந்த நற்றவத்தால். (௯)

இக்காலத் திவர்பொருட்டா லிவணெழுந்தா னெனப்பகர்வா
ரெக்காலு மிலராக விருட்காலுங் களப்பெருமான்
புக்கார்வத் துடனுறையும் பொற்பினா லிந்நகரி
லக்காவ னணுகாம லகலுவனா லச்சமுடன். (௰)

### வேறு.

அங்ககரில் வேதவித்தா மந்தண ளரிற்சிறந்தா னறிவான் மிக்கான், மன்னுபல கலையுணர்ந்தான் மீனாட்சி யெனும்புனித மனையா ளோடு, துன்னிமனை யறம்புரிவான் கமலவிலைப் புனல்போலத் தோயா னுள்ளந், தன்னையுந்தன் றலைவனையு முள்ளபடி யறிந்தவன்சுந் தரப்பே ராளன். (௰க)

புலரியரு முனமெழுந்து நித்தியகன் மம்பலவும் புரிந்து மோக்க, நலமுதவு சிவபூசை யாற்றுபுநந் தனவனத்து நண்ணி யெண்ணிப், பலமலரு மெடுத்துவந்து தொடுத்துவந்து சாத்தியடி பரவி யேத்தி, யிலகுகினி யுடனுண்டு வாழ்சீலன் விபூதியொளி யிலங்கு பாலன்.

பன்னாரு மிவனிந்தப் படிபுரிவா னித்தலத்தெம் பரனும் பாக, மின்னாருங் கயமுகனும் வேளுமே னையருநன்கு மேவுங் கோயி,லெந் நாளுண் டாகுமெம திறைவனரு ளெவர்வழித்தா யெய்து மென்னா, மன்னார்வ மதிகொண்டான் கோயிலில்லூர் வாழ்க்கையரு வருப்புக் கொண்டான். (௰ங)

இக்கவலை யலதுபிறி தெண்ணமிலா வகைமுறுகி யெழுந்த தோர்ந்தான், மிக்கபணி புரிபவர்க்கு வேண்டியபே றுதவுமருள் வெள்ள நாதன், புக்குமல ரெடுக்கின்ற வேதியன்கண் ணெளியெதிரே பொருந்து மாறு, தொக்கதன தருட்குறியைத் தோற்றுவித்தான் விளங்குபரஞ் சோதி யாதி. (௰ச)

விண்ணாரு நதிபுனைந்த வித்தகனைக் கூவிளந்தா ரிலேந்தநிலைவைக், கண்ணாரக் கண்டுகொண்ட மறைவலான் றலைமிசைச்செங் கரங்கள் கூப்பிப், பண்ணாரத் தோத்திரித்தான் புளகமுற்று ணர்ந்தம் படிந்தான் யாது, மெண்ணுமற் றிருவருளே யெண்ணமுற்று னிருநிலத்தி னிடையே வீழ்ந்தான். (௰ரு)

எழுந்திருகண் ணானந்த மழைபொழியப் புளகமுற வெளியே னின்பத், தழுந்தவரும் பரம்பொருளே யாரண கமமுதலே யமர ரெல்லாந், தொழுந்தலைமைப் பெருமானே சுடர்நயனப் பெம்மானே துணையி லானே, செழுந்தவள மதியானே நதியானே நீற்றனே திக ழேற் றனே. (௰சா)

அடியர்விருப் பெதுவெனத்தேர்ந் தளிப்பதுநின் னருட்கியல் பே யாகும் வஞ்சக், கொடியனுளக் குறிப்பறிந்து கூவிளப்பான் முளைத்தவருட் கொழுந்தே யிந்தப், படியுநின தருட்பெருக்கம் பயி லுவதுவோ வெனதுதவப் பான்மை யென்னோ, கடிகமழு மலர்ப்பா தா பொன்போலுந் திருமேனி காட்டுந் தேவே. (௰எ)

திருக்கயிலைப் பருப்பதமுந் தம்மைமறந் துனைநினைப்பார் சிந்தை வாழ்வு, மிருக்குமுதற் கலையுமுனக் கிருக்குமிட மவற்றினிலுமிந்த வில்வத், தருக்குலந்தான் சிறந்ததெனவீற்றிருக்கு முழுமுதலெந் தாயே மேலா, மருட்கடலே நின்பெருமை யளந்துதுதி புகல்வேனோ வறிவில் லேனே. (௰அ)

வேறு.

என்னப் பன்னி யெழுந்துதன் னிற்புகூஉ
முன்னப் பன்னிலை முற்று மொழிந்துடன்
வன்னிப் பன்னி மகாருற வாதியோர்
துன்னப் பன்னிரு தோட்குகன் றுதைபால். (௰௯)

வந்து பாறதி மாமது நேயமார்
சந்து வெண்ணதித் தண்ணமு தாதியா
னைந்து மாரபி டேகமு மாற்றிநற்
கந்த வில்வங் கடுக்கை புனைந்துபின். (௨௰)

ஓத னாதி யுடன்பல வர்க்கநி
வேத னஞ்செய்து தீப நிரையினோ
ராத னம்புரிந் தன்பிற் றுதித்தனன்
போதம் விஞ்சிய புண்ணியப் பார்ப்பனன். (௨௧)

எந்தை யார்தமி யெய்துவ ரேயெனக்
கந்த மார்குழற் கன்னி கயமுகன்
சிந்தை யாகுலந் தீர்த்தருள் செய்யவே
ணந்தி யாதியர் நன்றுறக் கண்டனன். (௨௨)

சேவில் வெள்ளிச் சிலம்பி லடியவர்
பாவில் வைகும் பழம்பொரு ளின்புடன்
மேவு கோயிறன் வேட்கை யளவினுற்
பூவி னுற்றினன் போற்றுவ னித்தமும். (௨௩)

அன்ப ரன்பி னளிக்கு நிதிக்குவை
யின்பி னேற்றதற் கேற்ற விதத்தினா
லென்பு நெக்குரு கத்தொழு தேத்தினான்
முன்பு நல்வினை முற்றிய பெற்றியான். (௨௪)

சுந்தரேசன் றுணைப்பத மல்லது
சிந்தி யாத செழுமறைச் சீரியன்
பந்த பாசம் பவர்தப மேவினான்
முந்து மாபத முத்தியி னென்பவே. (௨௫)

துணிம திச்சடைச் சுந்தர னார்திற
மெணியு ரைத்திடற் கெம்மனா வாவதே
மணமி குத்த வணிகர் செயுந்திருப்
பணியி யற்கையும் பண்பொடு கூறுவாம். (௨௬)

சுந்தரேசப்படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௫௱௪௰௮.

---

# திருப்பணிப்படலம்.

பொருப்பணிகொண் மணிமாடம் பொலியுமரி மழநகரி
லிருப்பணியாக் கொண்டுநல மெய்திவளர் நகரத்தார்
தருப்பணியுங் கவிகையினார் தம்மன்பா லிறையவர்க்குத்
திருப்பணிசெய் சிறப்பினையும் விருப்பணிநாஞ் செப்புதுமால்.

மருக்காலு மலர்பொதுளும் வாவியொடு வானுறையுந்
தருக்காலுந் தேனூற்றூற் சாலிவள ரரிமழத்தி
னொருக்காலு முடியிறைவ ரின்னருளா லுயர்கல்விப்
பெருக்காலு நிதியாலும் பேர்பெற்றார் குலவணிகர். (௨)

பொன்னாரும் விபூதிநலம் பெற்பவுளா ரெனுமுறையான்
மின்னாரும் விபூதியைக்கை விடாதிருக்கு மேன்மையினா
ரெந்நாளும் பசுபதியே யிறையெனலான் மங்கலமா
வன்னான்கண் மணிமாலை யணிந்திருக்குஞ் சிறப்புடையார். (௩)

பூசுவது பூதியையே பூண்பதுகண் மணியினையே
பேசுவது சிவகதையே பெறுவதுநன் மக்களையே
கூசுவது பழியினையே குறைப்பதுபா வத்தினையே
யீசனருட் பெருஞ்செல்வ மிவர்க்கெய்தல் வியப்பேயோ. (௪)

நிதிக்கிழவன் றாழ்மையி னோர்ந்துமரற் கிரப்பகற்று
மதிக்குறைவு தெறப்புவியில் வணிகரென வந்துதித்துத்
துதிக்குரிய கோயில்பணி தூயவிழா முதற்பலவும்
விதிக்குரிய வழியாற்றி மேவுதல்போன் மிளிர்தக்கார். (௫)

இடையறாப் பேரன்பு மின்சொல்லுஞ் சிவபணியு
முடையவிவர் குபேரனென வுரைப்பதுண்மை முகமனிலை
குடமுனியுஞ் செந்தமிழுங் குடியிருக்குந் தென்னாட்டின்
வடதிசையி லிருந்தெழுந்து வந்ததே சான்றாமால். (௬)

நிலவுபொழி தனிக்கவிகை நெடுநிலமன் னவரிவராக்
குலவுவத னாட்டுக் கோட்டைநக ரத்தாரென்
றிலகுபெரும் பேருடையா ரிவராவ ரேனையருக்
குலகினிடை நாடரணா ருரித்தாத லியல்பன்றே. (௭)

ஆக்கையுறும் பசிப்பிணியே யாதியநீத் தணியுறவா
னாக்கமழுஞ் சுவையடிசி னல்குபல சத்திரமு
மீக்கொளுயிர்ப் பிணிகளைவான் வேதகலா சாலைகளு
மாக்கிவரு பவர்வணிக ரல்லாதா ருளரேயோ. (௮)

தடங்கடொறும் படித்துறைகள் சமைத்திடுவார் சிவசரிதம்
படங்கடொறு மெழுதுவிப்பார் பசுமடநந் தனமமைப்பார்
மடங்கடொறு மமுதிடுவார் மருத்துவசா லையும்வகுப்பா
ரிடங்கடொறு மிவர்தரும மெடுத்தியம்ப லெளிதன்றே. (௯)

எண்ணரிய மணித்திரளு மேற்றபல நிதிக்குவையு
நண்ணுமிவர் சிறப்பெல்லா நன்கறிந்த கின்னரர்கோ
னுண்ணெகிழ்வுற் றிவர்க்கமைச்சா யுறுதுமெனக் கருதுதலான்
மண்ணுலகோ ரவற்கிசைத்தார் மந்திரியென் றொருநாமம். (௰)

பொற்பிருக்கு மிடமாகிப் பொலியுமிவர் மணிமறுகிற்
பற்பல்வகைப் பொருள்வளமும் பல்கிவான் வரையுயர்ந்து

வெற்பனைய வெனுமாட மீத்தலத்து மகத்தலத்துங்
கற்பகப்பூங் கொம்பருளக் களிப்பினுலாங் கனமெய்தும். (௧௧)

பங்கயத்தை வெறுத்தெழுந்து பாவைபலக் குழிமகிழ்ந்து
தங்கிவிளை யாடுதற்குத் தக்கமணி மாளிகைகள்
புங்கமிகுந் தனவணிகர் புண்ணியம்போ னிமிர்ந்தோங்கி
யங்கணுறு மாடங்க ளாகுமிதை யறியாரார். (௧௨)

புண்ணியமுங் கண்ணியமும் பொருந்தியிறை யவனருளா
லெண்ணியவெல் லாமெய்து மிவ்வணிகர் மாளிகைமே
னண்ணியமா மணிக்குடங்க ணடைதட்கு மென்றன்றோ
விண்ணியலு மெழுபுரவி விலகிநா டொறும்போகும். (௧௩)

பல்வகைய கூலங்கள் பன்மணிகள் பன்னிதிக
ணல்வகைய பொற்பணிக ணவில்பீதாம் பரவகைந
ளொல்வகைய மனைக்கலங்க ளெவ்வகையா னுஞ்சிறப்பச்
சொல்வகையி னிவ்வணிகர் தூயமனை பலகுலவும். (௧௪)

இத்தகையோர் பொன்மனைக ளெங்குமுறுங் கற்றவின்
புத்தமுது ததிநேயம் பொருந்துபெருக் கறிந்தானே
லத்தனையே பாற்கடலை யருவருத்து விரைந்தெய்திச்
சித்தமகிழ்ந் தினிதுறைவான் றிருநெடுமா னிச்சயமே. (௧௫)

அருந்ததிநெய் பாலடிசி லருந்ததிநே ரங்கனையார்
பொருந்துபல மக்களுடன் புந்திகளித் துபசரித்து
விருந்தினொடு புசிப்பிக்க மிசைந்துள்ளம் பூரித்துத்
திருந்துசிவ நேயமொடு திகழுவார் புகழ்வணிகர். (௧௬)

ஈட்டுமுறை யீட்டுவது மீயுமுறை யீவதுவு
நாட்டியறங் கொள்ளைகொண்டு நண்ணுமிந்த நல்வணிகர்
தேட்டமுடன் சுந்தரற்குத் திருக்கோயி லினிதமைப்பான்
வேட்டிறைவ னருளுன்னி விரைந்தியற்றத் தொடங்கினரால்.

இல்லார்க்கொன் றீவதே யீகையென லாலிறைவர்க்
கில்லாத தொன்றைமுன மியற்றுவது கருதினர்போ
லல்லாருங் களப்பெருமாற் கமைந்தகருப் பக்கிருகஞ்
சொல்லாத்தின் மணிக்கற்க டுறுத்திலங்க முடிப்பித்து. (௧௮)

எண்டகுசொல் வடிவனைத்து மிறைவிவடி வாமருத்தங்
கொண்டுறைவா னிறைவனெனக் கூறுவது தேறினராய்
விண்டகுவா னவருமுளம் வியப்பெய்த மிளிரருத்த
மண்டபமு மோங்குமகா மண்டபமுங் கடிகாற்றி. (௧௯)

கோடரமோர் வில்வனிலை கொடுப்பவர சளித்தபிராற்
காடரங்கு மவ்வரங்கி லாடுமிளைப் பாற்றுதற்கு
நீடுபொதி யாசலத்தி னின்றுதமிழ் கலந்துதென்றல்
வாடலற வருவசந்த மண்டபமும் வளம்பெருக்கி. (௨௰)

பொன்னிமயப் பொருப்பிறைவன் புதல்வியெனப் பொலிந்திருந்த
வன்னையிறை பயிக்கத்தா லகந்தளரா வகைவானந்
துன்னுமிரு சுடரொளியிற் றுலங்குமணி கொண்டிழைப்ப
மின்னுசின கரமெவரும் வியக்கும்வகை யாற்புரிந்து. (௨௧)

முன்னாட்டன் சிலதனெனு மொய்ம்புறுபுட் பகவேந்தன்
றென்னாட்டில் வணிகரெனச் செனித்தியற்றுஞ் சிறப்பெல்லாந்
தன்னாட்டங் கொண்டுவகை தழைத்தாட்டம் புரிவதுபோ
லிந்நாட்டைப் பார்த்தாடு மிறைவர்தளி யுஞ்சமைத்து. (௨௨)

உருவையறிந் தெள்ளாமை யுணர்வென்னத் தெளித்தாங்குப்
பெருவயிறு தூங்கன்முகம் பெற்றெவர்க்கு முன்னவனா
மருவிவிநா யகநாம மன்னியுன்னு மன்பருக்குக்
கருணைமதம் பொழிவேழக் கன்றுகோட் டமுந்துலக்கி. (௨௩)

வளையல்விற்று மணிபெடுத்து வழக்குரைத்துச் சான்றாகி
யுளவசியன் குமரனென லொல்லும்வகை செட்டியென
வளமலிபேர் கொண்டெமக்கு வாழ்வுதர வந்தருளு
மிளையவர்க்குந் தேவியர்க்கு மேற்றநிய மமுஞ்செய்து. (௨௪)

தந்தைபதந் தடிந்தவர்க்குந் தந்தைபதஞ் சார்ந்தவற்கு
முந்துநவக் கோள்களுக்கு முதற்குரவ னுமெமது
நந்திபெரு மான்றனக்கு நவிலறுபான் மூவருக்கும்
பந்தமில்வா னவர்பலர்க்கும் பள்ளிபல பலவமைத்து. (௨௫)

பொடியேறும் புகழறியாப் புறச்சமயத் தவருளத்தி
லிடியேற வடியரெலா மீடேற விருகரமு
முடியேற நகரத்தார் முதலேற வெள்ளேற்றுக்
கொடியேறுந் திருத்தம்பங் கொண்டுவந்து நிலைநிறுத்தி. (உசு)

வரியங்க முரித்துடுத்து வாதவூர் வள்ளலுக்கா
நரியங்கம் பரியாக்கி நன்றருளிப் பலவாக
விரியங்க மறையறியா விமலருமை யொடுமேவப்
பரியங்க முதலநிறை பள்ளியறை யலங்கரித்து. (உஎ)

கருவிழா வகையெம்மைக் காத்தலுடன் பிணிக்கடலி
லுருவிழா வகைபுரப்பார்க் குச்சியினு மிரவியொளி
தெருவிழா வகைநிமிர்ந்து செறிநவொளிருந் திருமதிலுந்
திருவிழா மண்டபமுஞ் சிறப்பெய்த நனிவிளக்கி. (உஅ)

அன்னமறி யாதவருக் கன்னமுத லியசமைக்க
மன்னுதிரு மடைப்பள்ளி மலர்மாலை வினைசாலை
துன்னுகரு வூலநிரை தொகுமிடங்கண் மகச்சாலை
யென்னுமிவை முதற்பலவு மிலக்கணத்துக் கிலக்காக்கி. (உகூ)

கோபமகன் றுள்ளத்துக் குளிர்கருணை மிகப்படைத்த
தாபதர்கள் புரிகின்ற தவம்போல வளர்ந்தோங்கித்
தீபநிரை யாலெட்டுத் திசைவிளக்க விண்ணவர்தங்
கோபுரத்தைக் கடந்துசெலுங் கோபுரமுங் குயில்வித்து. (௩0)

பாத்திரங்கள் பலவமைத்துப் பயில்தீபா ராதனைக்குக்
கோத்தபல கருவிகளுங் குழுமுவித்துக் குடைசுருட்டி
யார்த்தமணி முழவாதி யாயபல வாச்சியமுஞ்
சேர்த்துநவ மணியணிக டிகழநனி செய்வித்து. (௩க)

வாகனங்கள் பற்பலவு மாநிதியால் வெள்ளியினு
லோகைதழைப் புறவுஞற்றி யோங்கன்மக ளானவுமை
பாகனுரை யாகமத்தின் படிநித்ய பூசைமுறை
யாகநடத் திப்போற்றி யருள்வளர்க்கின் றார்மன்னே. (௩உ)

திருப்பணிப்படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௩௰௨.

# செல்லய்யனார் திருவிளையாட்டுப்படலம்

போற்றுபவர்க் கருள்புரிந்து புத்திரரும் செம்பொன்னும் புந்தி நன்கு, தேற்றமுயர் கல்வியுந்தீர்க் காயுவும்பல் வகைச்சிறப்புஞ் செழிக்க மேன்மே, லேற்றமுறும் படியுதவி யரிமழத்திற் குணதிசையி லினிது மேவுஞ், சேற்றுமேற் செல்லய்யன் றிருவிளையாட் டிசைக்க மகிழ் சிறக்கு மன்றே.
(௧)

சயந்தனைமே வப்பொருது சயந்தனைமுன் சிறைப்படுத்தித் தளையும் பூட்டி, யுயர்ந்தவிபு 'தரைமதுவோ டேனெடுத்து வரவலியா லுஞற்றுஞ் சூரன், பயந்தனுகா வகைசசிக்குஞ் சயந்தனுக்கு மபயத்தம் பரிவாற் றந்து, நயந்தருளும் பரம்பரனே சேற்றுமேற் செல்லய்ய நாமம் பூண்டோன்.
(௨)

கடலுருவாற் றாயைநிகர்த் தறங்காப்பாற் றந்தைநிகர் காட்டிக் கோழிக், கொடிமருவி யெமக்கருளுங் குமரவே ணிகராதல் குறிப்பித் துன்னு, மடியவர்க்கு நலம்புரிய வரிமழத்திற் பூர்வமுத லருள்கூர் தேவன், றடிநிறையும் புனற்சேற்றுக் குளத்தருகில் வீற்றிருக்குந் தயாள மூர்த்தி.
(௩)

உலகமிசை யறங்காக்கு மொருதலைமை யருளியநா ளுள்ளத் துன்னி, யிலகுபல பூதகண நாதரையு மேவல்செய விறைபாற் பெற்றுக், குலவுமொரு கணத்துக்குத் தலைமையுடன் கறுப்பனெனக் குறியுந் தந்து, நிலவியபே ரருளாளன் சேற்றுமேற் செல்லய்ய நிமல நாதன்.
(௪)

அன்னையெனும் வலவனிரு தையலர்கொண் டான்றந்தை யரனு மவ்வா, றின்னலங்கொ ளிருமனைவி யரையடைந்தான் யோகியென்பா ரிவரை யாமும், பொன்னலங்கொள் பூரணையைப் புட்கலையை மனைவியராப் பொருந்தி யோகு, மன்னுவது தகுமென்ன மருவிவளர் பெருங்கருணை வரதமேலோன்.
(௫)

பாலைமரத் தடிமேவும் பரமபதி தனைவணிகர் பலருந் தங்கள் கோலமுறுங் குலதெய்வ மெனக்கொண்டு கும்பிட்டுக் குலவிப்போ

ற்றச், சிலமுறு மவர்க்கெல்லாத் திருவுநனி யுதவியவர் சிறப்ப வீ
னும், பாலகர்க்குத் தமதுபெயர் கொடுத்தருள்வோன் செல்லய்ய
பரமயோகி. (சு)

பெருந்தவளத் தும்பிதிசைப் பிறங்கிவரு செல்லய்யன் பிறப்
புந் தேவர்க், கருந்துயரந் தவிர்த்ததுவு மரிமழத்திற் பாலைமரத்
தடியின் மேவி, யிருந்ததுவு மன்பருக்கு வேண்டும்வரங் கொடுத்த
ருளு மியல்பு மெல்லாம், பொருந்தவெடுத் துரைத்திடுவாங் குவிந்த
கரத் துடனவனைப் போற்றி மன்னோ. (எ)

வேறு.

தொல்லை யோர்பக விறைவனார் மலரடி தொழாமன்
முல்லை காவலன் வானவர் தானவர் முதலா
வெல்லை யில்லவர் வாசுகி மந்தரத் தியாத்து
வல்லை வார்கடன் மதித்தன ரமுதுண மதித்தார். (அ)

அரனி டத்தன்பி னார்க்கிடு விடமுநல் லமுதா
மரனை வந்தியார்க் கமுதமுங் கடுவிட மாக
வருமெ னப்பல ரறிவுற வமுதெழு வதன்முன்
கரிய வல்விட மெழுந்தது வடவையிற் கனன்று. (கூ)

ஆல மெய்தலு மமரருங் கலுழன்மே லவனு
மோல மிட்டெழுந் தோடினர் கயிலையை யுற்றுக்
கால் காலனைச் சரண்புகுந் தேத்தலுங் கருணை
மூலகாரண னபயமீந் திருந்தனன் முன்னம். (ய)

வந்த காரியைக் கரத்தெடுத் தயின்றருள் வழங்க
முந்தை போற்கடல் கடைந்தனர் தும்பிமா முகனைச்
சிந்தை செய்தில ராதலான் மந்தரத் திகிரி
யுந்தி யாழ்ந்தது நாகருற் றதுமன முலைந்தார். (யக)

மேக வண்ணனுங் கற்பக நாடரும் வெள்கி
யேக தந்தனைப் பன்முறை யடிதொழு திறைஞ்ச
நாகர் நின்றுமுன் போலமந் தரகிரி நண்ணி
வோர்கை கொண்டுகை சலித்திடக் கடைந்தன் ருதகி. (யஉ)

இடுக்க ணெத்தனை யெத்தனை யெய்தினு மிரியா
தடுத்த டுத்துமேன் முயன்றவ ரெவர்பல னடையார்
கடற்க டைந்தவர் கண்ணெதி ராடகக் கடத்தி
ணிடத்தோர் வெண்மதி யெழுந்தென வமுதமெய் தியதே. (௰௩)

எய்து மாரமு தெமக்குரித் தெமக்குரித் தென்று
வெய்ய தானவர் வானவ ரிருவரும் வெஃகிக்
கையி னூர்வங்கி காண்பது கருதிய காலை
மையன் மோகினி வடிவுடன் வந்தனன் மாயன். (௰௪)

மாய மாதுதன் வனப்பெனு மதுவிழி வாயுட்
போய காற்சுரா சுரரறி விழந்துகண் பூப்ப
நோயு ழந்தனர் வனத்திடை நெடிதுநா ளேற்றுக்
காய ருந்திவாழ் முனிவருங் கடப்பரோ காமம். (௰௫)

முன்னரெய்திய விடத்தினை விழியினுன் முறுக்கிப்
பின்ன ரெய்திய வமுதினைச் சொல்லினுற் பிணித்துத்
துன்னு மாடவ ரைம்பொறி விருந்துணத் தோன்றி
மன்னு மோகினி யடைந்தனண் மற்றிது வகுப்பாள். (௰௬)

பெருமை பெற்றகா சிபன்றவப் புதல்வீர் பேதுற்
றுரிமை யுற்றிட விகலன்மின் வாய்க்கொளு முணவா
மொருக டத்தமு துளதுவாய் முதலிய வுவக்கு
மிருக டத்தமு துளேனெவர்க் கெதுவிருப் பென்றாள். (௰௭)

என்ற வெல்லையிற் றயித்திய ருனைவிடுத் தெவர்வே
றென்று வேட்பவ ரெனவுரைத் தவளுட னொருசார்
சென்று தங்கின ரமுதெடுத் தந்தரச் செல்வர்
நன்று சேர்ந்தன ரோருழி மோகினி நங்கை. (௰௮)

ஒருத்தி யானுளன் பற்பல வீரரீண் டுள்ளீர்
கருத்தி லன்புடன் மலரணை மிசையெனைக் கணிவி
னிருத்தி யின்புறப் புல்குறத் தக்கவன் யாவன்
தெரித்தல் வேண்டுமா லென்றன ளமுதவாய் திறந்து. (௰௯)

இசைத்த சொற்குமுன் யான் வலேன் யான்வலே னென்று
நசைத்த நெஞ்சினோ டோரொரு வருமுனை நணுகி
விசைத்த வெஞ்சம ருடற்றிவீ வுற்றனர் வேய்போற்
குசைத்த சிந்தைய ரன்றியார் பெண்மயல் கொளாதார். (௨௰)

விளக்கை யோர்சுவைக் கனியென வீழ்ந்துவாய் மேவிக்
கொளற்கி யைந்துபல் விட்டில்வீழ்ந் தழிந்தெனக் கூடிக்
கிளைக்கு ழாத்துடன் கெட்டன ரவுணராங் கீழோ
ரளக்க வல்லவர் யாவரே மதன்விளை யாடல். (௨௧)

இனைய வாறிறு மவுணரி லிருவரே மாயன்
வினையை யோர்ந்துதங் கிளைபழிந் ததற்குள மெலிந்து
முனைய தம்முரு மாற்றிவா னவரென முடுகி
யனைய கற்பக நாட்டினர் கூட்டமே யமர்ந்தார். (௨௨)

வேறு.

இற்றா ரவுண ரெனநோக்கி யெவரும் வெஃக
முற்றாமுலை மாதுருக் கொண்ட முகுந்தன் மீள
ஊற்றான் விபுத ருழையாரமு தோர்கை பற்றி
நற்றா யெனவே பகிர்ந்தான்சுரர் நாப்ப ணின்றே. (௨௩)

பரிமாறிய காலையின் விண்ணவர் பந்தி யூடே
யுருமாறிய கள்வர்கண் மந்திரத் துட்கொளாமே
பெருமாலின் விரைந்துணல் சூரகு பேர ரானோர்
கருமாலுளங் காணக் குறிப்பினிற் காட்டி னாரால். (௨௪)

பையுற்ற வராவணை மாதவன் பார்த்து ருத்துக்
கையுற்றதொர் சட்டுவங் கொண்டவர் கந்துணிப்பப்
பொய்யுற்றவர் வாய்ச் சுதை மேவலிற் போக்கி லாமே
யுய்யுற்ற தலைக்கொடு கோள்களி னொன்றி நின்றார். (௨௫)

மற்றத் தருவக் கொடியோர்கள் மறைந்து செய்த
குற்றச்செயல் காட்டிய பாநு குரங்கி தம்மேற்
செற்றத்துடன் விண்ணுடை மற்றவர் செய்யசோதி
யிற்றைக்கு மறைப்பர்க ளாகத்தி னென்ப மன்னோ. (௨௬)

### வேறு.

ஆரமு தருந்திய வமரர் கைதொழ
நாரவெண் டிரைபுர ணரவணை ஞாங்கரோர்
சாரரி யரிவைதான் றங்க மாறமக்
கீரிரு சத்தியு ளியைந்த பண்பினை. (௨௭)

தெரிக்குமோ ராடலைச் சிந்தையுட் கொளீஇ
வரிக்கழை குனிக்குமம் மதனு முட்குறப்
பரிக்குநல் லுருக்கொடு பரம யோகியா
யிருக்குமெம மிறையவ னெய்தி நின்றனன். (௨௮)

அண்ணலின் றிருவுரு வகங்கொ ளாடவ
ருண்ணெகிழ்ந் தரிவைய ருருவை வேட்பரேற்
கண்ணுற நோக்கிய காலை மாலுறும்
பெண்ணுரு வென்படும பேசல் வேண்டுமோ. (௨௯)

வேட்டமென் மோகினி வேட்கை கண்ணுறக்
காட்டலு மமலனுங் கடைக்க ணோக்கிமாஅல்
கேட்டிமுன் னோர்பகற் கெழுமி நின்னையாங்
கூட்டர வான்மறைக் குரிசிற் றந்தனை. (௩௰)

அன்றியு நமக்கொரு சத்தி யாதிநீ
யின்றுநிற் கலப்பதே யெண்ணிப் போந்தன
மென்றசொற் செவிப்புக வெழுந்து வேற்றுழிச்
சென்றிரு வருநலஞ் சிறப்பச் சேர்ந்தனர். (௩௧)

இவ்வகை முராரியு மிறையுங் கூடிய
செவ்வியி னவ்வுழிச் சிறிய ரேம்பவப்
பவ்வநின் றெழுவருள் பாலிக் கும்படி
தெவ்வடு சாத்தனுந் தேவன் றோன்றினான். (௩௨)

செய்யபொன் வேணியுந் திரைக் கருங்கடன்
மெய்யுமாற் றவருயிர் வெதுப்புஞ் செண்டுகொள்
கையுமுற் றப்பனுய் காவல் காட்டிய
மெய்யனை நோக்கியே விமலன் கூறுவான். (௩௩)

### வேறு.

அத்தி வண்ணத் தழகக வரிகர
புத்தி ரப்பெயர் பூண்டு புவியெலா
மொத்த காவலுற் றோங்கி யுருத்திரர்
மெய்த்த குங்குழு மேவுதி யென்னவே. (ரு௪)

நல்வ ரம்பல நல்கி யிறையவ
னெல்வ ழுங்கு கயிலையை யெய்தினான்
கல்வ யங்கு கரக்குடை மாயனு
மல்வ ரம்பகல் வைகுண்ட மேகினான். (ரு௫)

எந்தை நல்லரு ளெய்திய வையனும்
வந்த சாரதர் தம்மொடு வைகியே
யுந்தி சூழு முலகர் சுரரெலாஞ்
சிந்தை செய்து தினந்தொழ வாழ்வனால். (ரு௬)

பொருவில் பூரணை புட்கலை யென்னுமீ
ரரிவைமார்களை யன்பொடு வேட்டுடன்
மருவி னனெமை வாழ்விக்க வந்தருள்
புரியு மையனம் புண்ணியப் பான்மையால். (ரு௭)

அறப்பெ ருங்கட லாகுநம் மண்ணலார்
குறட்ப டைக்குட் குலவுமொர் வீரன்மெய்த்
திறத்தின் மேவு செறுநரை வெல்சமர்
மறத்தின் விஞ்சு மகாகாள னென்பவன். (ரு௮)

பெரிது ளன்பொடு பேணினர்க் காக்குநற்
கருணை யாளன் கறுப்பனென் றோர்பெயர்
மருவு வீரனை மன்னுந் துணைக் கொளீஇ
யிருநி லம்புரப் பெய்தின னையனே. (ரு௯)

எய்து கின்றுழி யெண்ணில் வரம்பெறும்
வெய்ய சூர்புரி வெந்துய ராற்றுணா
தைய கேசவென் றரற்றிப் புரந்தர
னெய்யெ னுப்புவி யுற்று வருந்துவான். (௬௰)

எந்தை யைய னெழுந்தரு ளும்வனத்
தந்தின் மேவி யமர்ந்து புலோமசை
சொந்த வாண்முக நோக்கி மடவரா
லிந்த நல்லிடத் தின்புற் றிருத்தியால். (௪௧)

தனிமை யஞ்ச றயாகர காரிதா
னினையு முன்னமுன் னின்று புரப்பனா
லினைய லென்ன வியம்ப வணங்கினாள்
கனக நாடு கடந்த கனங்குழை. (௪௨)

நன்றி தென்ன நயனமொ ராயிரந்
துன்று காரியுந் துண்ணெனக் காரியை
யன்று கண்டஞ்சி னேனஞ்சி லாதவ
னொன்றி நல்குப காரியை யுன்னினன். (௪௩)

உன்னு முன்ன முணர்ந்து செழுங்கரந்
துன்னு செண்டொடு சூழ்தரப் பாரிடர்
மன்னு பூரணை புட்கலை மாதரோ
டென்னை னென்னவந் தெய்தின னெம்பிரான். (௪௪)

வேறு.

செண்டடுத்த செழுங்கரமுங் கருணைநிறை திருமுகமுஞ் செய்யவாயும், வண்டடுத்த கருங்கடனேர் வண்ணமுங்கோ ழிக்கொடியும் வரமுஞ் சிறுங், கொண்டடுத்த வெள்ளானைக் கோமானை வெள்ளானைக் கோமான் கண்ணுற், கண்டடுத்த பெருமகிழ்விற் கரங்குவித் தென் மனையவளைக் காத்தி யென்றான். (௪௫)

இந்திரனீ கயிலையடைந் திறையருள்பெற் றிவணுறுங்கா றிவண்முன் யானே; வந்துபுரந் திடுவேனீ யஞ்சேலென் றுரைத்தருள மாக நாட்டுக், கந்தரமூர் பவன்வணங்கிக் காதலியைத் தனித்திருத் திக் கடுகச் சென்றான், சுந்தரியும் காரிபதந் தொழுதிருந்தாண் மனக் கலக்கந் தோன்றா தங்ஙன். (௪௬)

கசியுமனத் தன்புடைய காவலவன் பிரிவின்மனங் கலங்கி நொந்து, சசிபிரிந்த வான்போலுஞ் சலசமிலாத் தடம்போலுந் தளர்ந்து வாடி, யொசியுமிடைச் சசிமடவா ளூறுபழங்கண் டூர்வதையே யுன்னிக் கண்ணீர், பொசியமலர்ப் பொதும்பரிடைத் துச்சிலுற்றுப் பெரிதுதவந் தொடங்கி நின்றாள். (௪௭)

அவ்வேலை யசுரகுலத் தரசாகி யமரர்புலா லாதி தாங்கும், வெவ்வேலை செயப்பணிக்கும் வெஞ்சூரற் கநுசையென விடம்போல் வந்த, செவ்வேலை நிகர்விழியா ளசமுகியாம் பழிகாரி திசைகளெட்டு, மெவ்வேலை யெம்மலையா யினுநொடியிற் புகுந்தழிக்கு மியற்கை வாய்ந்தாள். (௪௮)

சேடியெனுந் துன்முகியோ டெழுந்துதிசை தொறுஞ்சென்று திரிந்து வண்டர், பாடிவரு மலர்ச்சோலை யகம்புகுந்து வளமபலவும் பார்க்குங்காலை, வாடியிருந் தருந்தவஞ்செ யயிராணி தனைநோக்கி மற்றிம்மின்னா, ணீடுசுர பதிமனையே யெம்முனவற் கஞ்சியின்ன நீரளானாள். (௪௯)

இந்தமட மானிருக்கு மிடமறியா தெத்தனையோ வேவலாள, ரந்தரமும் வேற்றுழியு மலைந்தலைந்து வறிதுவந்தா ரண்ணற்கேற்ற, சுந்தரியா குவளிவளே யிவட்கொடுபோய்த் தந்துதுயர் துடைப்பேனென்னா, முந்துதிசை தொறுநோக்கித் தனிநின்றா ளெனமகிழ்ந்து முன்னுற் றாளால். (௫௦)

விண்ணாடு வறிதுபட விடுத்துவந்த மணிவிளக்கே விளம்பக்கேளாய், புண்ணாடு மனமுடைய புரந்தரனோ நினக்கேற்ற பூமானிந்த, மண்ணாடும் பிறநாடும் வணங்குமெம திறையவன்முன் வருவா யேற்றன், கண்ணாடு மணிபோலக் கலந்துகொள்வா னலந்திகழக் களித்து வாழ்வாய். (௫௧)

எத்தனையோ மடமாத ரெம்முனவற் பெறத்தவஞ்செய் திருக்கின்றார், வித்தருண முனைக்காணி னம்மடவார் பலருமுன தேவல்கேட்ப, வைத்திடுவன் வாசவனும் வாய்திறவான் றேவரெலாம் வண்

ங்கா நிற்பர், சித்தமகிழ்ந் தினிதுறைவா யுன்னதிட்ட மற்றவர்பாற்
சேரற் பாற்றே. (ருஉ)

என்றுபலப் பலவாக வசமுகிநின் றிசைத்தமொழி யென்னுந்
தீவேல், சென்றுசெவிச் சுடக்கனன்று சிந்தைதளர்ந் தயிராணி செ
ப்பா நின்றாள், பன்றிமலர் தின்னவியல் பன்றிமத வேழமுண்மோ
பாவிநுங்கட், கொன்றுநெறி யெமக்காமோ விவணில்லே லேகுதி
யென் றுருத்த காலை. (ருங)

தலைபாலே வருந்திருவைக் காலாலே தள்ளுகின்ற தையா லுன்
னைக், கொலையாலே மகிழ்வலெம்முன் கூடுவது கருதியுயிர் கொடுத்
தேன் கண்டாய், மலையாலே வகுத்தபுயத் தெவர்வரினு மடித்துநின்
னை வலிந்துபற்றி, வலையாலே பிணிப்புறுமா றாக்கி யண்ணன் மடி
த்தலத்து வாழ்விப் பேனால். (ருச)

எனப்பகர்ந்து மேடமுகி பிடித்திழுப்பப் பொலங்கொடிபோ
லிரங்கி யேங்கி, நினைப்பகன்று நெடிதுயிர்த்துத் துடிதுடித்து நிலை
குலைந்து நெஞ்சம் புண்ணாய்க், கனற்படுமோர் கீடமெனக் கலக்கமு
ற்றுச் செண்டுகொண்ட கையா மெய்யா, வுனக்கபய முனக்கபய
மெனக்கதறி யோலமிட்டா ளுற்ற காலை. (ருரு)

ஐயனுருபடைத்தலைவ னானமகா காளனெதி ரடுத்து வாழி,
கையறவு கொளவேண்டா விடுவிடபே யெம்மனைநீ கலங்கே லென்று,
மையவனைச் செயிர்த்தெதிர்த்து மடக்கொடியா யுயிர்தாங்க வல்லை
யாயி, னையமிலாக் கற்பரசி தன்னைவிடுத் தகறியன்றே லடுவ லென்
றான். (ருசு)

என்றலுமே மேடமுகி யெயிறதுக்கி யனல்விழித்திட் டெம்
முன் னோன்பேர், சென்றதிசை நடுநடுங்குஞ் சிறியோய்நீ யறியா
யோ செருவி னின்னை, வென்றிவனைக் கொடுபோவல் விதியெனவ
மருடற்ற வீரன் பேதாய், நன்றுனது மறமென்ன நகைத்தெதிர்த்
தைம் பால்பற்றி நவிரம் வீசி. (ருஎ)

தேவிமலர்க் கரம்பிடித்த தீயகொடுங் கரந்துணித்துச் செயிர்த்
தோர் தாளாற், றவியுதைத் தடித்துநின்ற துன்முகியின் கரத்தினை

யுந் தடிந்து நீக்கிப், பாவிமக ளீருமது பெண்மையுயிர் கொடுத்தவெ னப் பகர்ந்து போகி, யாவியனை யவள்சிறையை விடுவித்துக் கவ லொழிவித் தருகுற் றுனல். (௫௮)

சிரமிழந்து படுதலிலே மெனமகிழா தசமுகந்தன் சேடியோடு, கரமிழந்த துயர்வாரி கரையிகந்து பெருகுதலுங் கரைந்து நுங்கள், வரமிழந்து மதியிழந்து மானமிழந் தலந்துநொந்து வாடி மேவு, முர மிழந்து கெடப்பொரழிவன் றொருதுணைவற் கிசைப்பலென வுரைத் துச் சென்றாள். (௫௯)

மற்றிவைவெல் லாமுணர்ந்த நாரதமா முனிவன் வெள்ளி வரை யிற் சென்றுங், கற்றமிலா திருந்தவலா ரிக்குரைப்பச் சயிலாதி யண் ணல் பாற்போய்ச், சொற்றுவிடை பெற்றவணி யுற்றுரிமை முற்று தவச் சூழன் மேவிக், கொற்றமலி தருவீர மாகாளற் கின்முகமன் குலவுக் கூறி. (௬௰)

வயம்பொருந்து பெருந்திறலோய் வாழியினி யையனடி மலர்க்கீ ழெய்தி, நயம்பொருந்த வாழ்தியென நவின்றுய்த்துக் கொடுஞ்சூரர் கலிவா ரென்னும், பயம்பொருந்தா வகைமேருப் பருப்பதத்தை யடுத்தனன்றன் பன்னியோடு, கயம்பொருந்திண் புயவயமா காளனு மாண் டலைத்துவசக் கையுற் சேர்ந்தான். (௬௧)

வேறு

இன்னவகை சிலகால மேகவிராக் கதிர்குலத்து
மன்னவராந் தென்னர்திரு மகளாக வவதரித்த
வன்னைதடா தகைதிசைக ளனைத்தையும்வென் றிடக்கருதி
நன்னரருந் தவமியற்ற நாடிவில்வா ரணியத்தின். (௬௨)

அருகெய்தி யுடுபதியி னமுதினிமை யமையவெழு
முருகெய்தி யுறவுகொள மொய்ம்மலர்க்கா வனமேவி
யுருகன்பு தலைசிறப்ப வோங்குதவத் துறல்செண்டு
வருகையு னறிதலுமா மகிழ்ச்சிபடைத் தனனன்னோன். (௬௩)

ஆறுமுகன் றோன்றுழியு மடுத்துநவ சத்திகளும்
வீரருப் பெற்றுழியும் மிகக்கறுத்து வெஞ்சாபங்

கூறுமை யவள்கானங் குறுகுதலா லிவள் கருணைப்
பேறுநமக் குறவமையம் பெற்றனமா லெனநினைந்தான். (௫௪)

தவமியற்றும் பெருமாட்டி தன்னருகு தானிருந்து
பவமியற்றும் விலங்காதி படரியற்று வகைகாத்தான்
நவமியற்றுந் தவமுனூற்றி நாதராரு ணனிமேவி
யுவமையற்ற பொலங்கொடிதன் னொருமகனைக் கண்ணுற்றாள். ()

அண்ணலுமண் ணனுங்கூடி யளித்தசுத னமக்கின்பு
பண்ணியருள் பெறநினைந்திப் பூடிவனத்தி னமைக்காத்து
நண்ணினனென் றுண்மெகிழ்ந்து நகைமுகங்கொண் டருடேக்கித்
திண்ணியசீர் மலியருமைச் செல்லைய வருகென்று. (௫௫)

பக்கமழைத் தென்னருமைப் பாலாநின் மதிவலியு
மிக்கசமர் வலியுமன்பு மெய்ம்மையுங்கண் டுளமகிழ்ந்தே
னிக்கணமே வேண்டுவகே ளீவேனென் றிசைத்திடலுஞ்
செக்கரடி மலர்பரவிச் செப்புவான் புட்கலைகோன். (௫௭)

### வேறு.

கருப்பமுறு தெவ்வுலகு மீன்றெடுத்துக் காத்துவருங் கன்னி யேநீ, விருப்பமுட னிறைவரொடு மெழுந்தருளு மரிமழத்து விரிந்த வில்வக், கருப்பயிலுங் கானகத்துத் தென்கிழக்கிலத்திசையின் றந்தி மேற்கொண், டிருப்பதுட னென்பெயரா லொருதீர்த்த நனிசிறப்ப வியற்றல் வேண்டும். (௫௮)

அத்தடத்தி னருகெனது படைத்தலைமை மகாகாளனமர வேண்டு
மெத்தலத்து மெய்தாத பெரும்பயனு மத்தடத்தி னெய்தி மூழ்கிப்
பத்தியுட னெனையுமகா காளனையும் பணிபவர்க்குப்பலிக்க வேண்டும்
நித்தமெமைத் தொழுமவர்க்குப் புத்திரர்பொன் பூமிபுகழ்நிலவ வேண்டும்.

எனவணங்கிப் புகலுதலு மவ்வாறே யாகவென விறைவி நல்கி.
மனமகிழ்ந்து திருவால வாயடைந்தா லவளமுத வாக்கி னாலே
நனிவிரும்பிச் செல்லைய வெனப்புகன்ற காரணத்தா னுக வேந்தன்
றுனிதவிர்த்த திறல்யோகி செல்லைய நாமமுற்றச் சூழல் சேர்ந்தான்.

தன்றுமத் தீர்த்தமொன்று கங்கையினுஞ் சலதியினுந் தழைப்பத்
தோன்றி,முன்னுக வதனருது வீரமகா காளனுந்தன் முறையினிற்ப,
வின்னாளு மரிகரபுத் திரககடவு ளெழுந்தருளி யிருந்ததன்னை, மன்
னூர்வத் துடன்பணிவார்க் கிம்மைமறு மைப்பேறு வழங்கு வானுல்.

நொந்தழுத சசிக்கிரங்கி யசமுகிதன் முகிகரங்க ளெய்து கொய்த
செந்தண்மைக் குணம்வியந்து வணிகமகக டமதுகுல தெய்வமாக
முந்துவிருப் புடன்வீர மகாகாளன் றிருப்பாத முளரிப் போது
சிந்தைகொண்டு முன்னுளு மிந்நாளுந் தொழுதியமந் திறமாப்பூண்டார்.

காசினியோ ரறிந்துமகா காளனுக்குப் பேர்செட்டிக் கறுப்ப
னென்றே, பேசுவரா யினரிவனை வணங்குபவர் பெருஞ்சிறப்புப
பேசற் பாற்றே, வாசமலி யத்தடநீர் குடைந்தாலுந் தெளித்தாலும்
வாய்க்கொண்டாலு, மீசர்சடா மகுடகங்கை மூழ்கினவர் பெரும்
பதவி யெய்த றிண்ணம். (௭௩)

அரிமழத்துப் பெருஞ்செல்வ மடுத்துவளர் குலவணிகரன்பு பொங்கித்
திருமருவு செல்லையன் றனக்கடிமை யாயிருந்து திருவிழாவும்
பெருகியனை மித்தியநித் தியசிறப்பு மாலயமும பிறவு நன்கு
புரிவதுதந தொழிலாகப் பூண்டுநடத் துவருலகம புகழு மாறே.(௭௪)

எக்காலு மவன்றிருப்பேர் சொலவிரும்பித் தம்புதல்வர்க் கினி
து வைப்பா, ரிக்காலு மவனருளாற் பூவுலக குபேரரென விருக்கின்
றாரா, லக்காலுந் தொடைப்பரம ரருண்மைந்தன றிருவிளையாட் டள
வை கூறப், புக்காலெத தனையுகமும போதாதோர் சிறிதிங்ஙன் புக
ன்றே மன்றே. (௭௫)

செல்லையன் றிருநாமஞ் சிந்தித்தோர் பிரமபதஞ் சேர்ந்து வாழ்வர்
செல்லையன் றிருநாமஞ் செப்பினோர் வைகுண்டத திருமா லாவர்
செல்லையன் றிருநாமம புகழ்ந்தவர்க ளுருத்திரராத் திகழா நிற்பர்
செல்லையன் பதத்தன்பு செலுத்தினோர் சிவசாயுச் சியமே சேர்வர்.

செல்லையன் றனக்குமவன் படைத்தலைமைக் கறுப்பனுக்குஞ்
சிந்தை யன்பு, புல்லிவழி வழியடிமை பூண்டவர்க ளிம்மையிறபல
புதல்வ ரீன்று, நல்லநிதி மிகமேவி நூறுவய திருந்தின்ப நாளுங் கொ
ண்டு, சொல்லரிய பரகதியிற் சுகித்திருப்ப ரமரர்குழாந்தொழுது
போற்ற. (௭௭)

செல்லையனார் திருவிளையாட்டுப்படலம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௧௯௮.

# திருவிழாப் படலம்.

திருமாலும் பரம்பரனுஞ் சேயிழையா டவராகிச் சேர்ந்து தந்த
பெருமானுஞ் செல்லையன் பிறப்பாதி யுணர்ந்துநலம் பெற்றீ ரின்பந்
தருமாறு நம்மிறைவர்க் கரிமழுத்துத் தனவணிகர் தாமன் பாக
வருமாதி யாகமத்தின் விதிப்படிசெய் திருவிழா மாண்புஞ் சொல்வாம்.

ஓராறு வகையிருதுக் களிற்சிறந்த விளவேனி லுதிக்குங் கால
மீராறு மதிகளினு முதன்மதியி லிருபக்கத் தினிலு மாதி
சேராறு திதிபின்முன்னு ளேழேறு மெனமுழுவாற் செப்ப லோர்ந்து
காராறு மணிமாட நெடுவீதி யலங்கரிப்பக் களிப்பிற் சூழ்வார். (௨)

உண்ணிலா வுயிர்க்குயிரா முழைமேயந்தி விழாக்கொள்ள லுள்ளத் துன்னித், தெண்ணிலா மதியமுத மொழுக்கியன வெண்சுதையைத் தீற்று வாரவ், விண்ணிலாஞ் சுடரெறிப்ப வானவர்தம் விழி சமழ்ப்ப மேனிலத்தி,லெண்ணிலா மணிக்குடங்க ளேற்றுவா ரோவியங்க ளெழுதா நிற்பார். (௩)

தொங்கலிடு மணிமாலைச் சுடர்மிகையா லிமையவர்கண் சுளியா வண்ணம், பொங்கியெழு காவணங்கள் பொற்பவமைப் பார்மணிகள் பொருந்து மாறு, தங்கவிழை யாலுறுவி தானமிடை யிடையாத்துத் தரைது ழாவச், செங்கனக மணிமாலை மலர்மாலை யிடங்கடொறுஞ் செறியக் கோப்பார். (௪)

அரம்பையினத் தொடுகன்ன லாடலினுற் பாடலினு லகநாண் மேவத், திருந்துமட வார்மகிழ வரம்பையொடு கன்னலினஞ் செறித்து நாணிற், பொருந்தவெழு கால்கடொறும் பூட்டுவார் கனிபலவும் பொலியச் சேர்ப்பா, ரிருந்தரணி நளிர்பூப்பப் பனிநீரைத் தெளித்திடுவா ரெங்கும் பல்லோர். (௫)

முத்திடித்துப் பொடியாக்கிப் பலவகைக்கோ லமுங்கோல முகிழ்ப்ப வாற்றிப், புத்தமுத நிறைகுடமு மணிவிளக்கும் வேதிகையிற் பொருந்த வைப்பா, ரத்தன்விழாக் கொடியேற்ற மடுத்ததென் பார் நாளைக்கே யாகு மென்பார், சித்தமகி ழுறவினரை வரவேற்று முகமலர்ந்து சிறப்புச் செய்வார். (௬)

பழையகல னுடைகளைவார் புதியகல னுடைவகை பரிவிற் சேர்ப்பார், விழைவின்மல ரணிபுனைவார் சாந்தணிவார் திலதநுதன் மிளிரக்கொள்வா, ரிழைபுனைபு நுண்ணிழையா ராடிகண்டு வேறுவேறிலங்கப் பூண்பார்,மழைமுகிலு ரரிவிழியும் பற்றுதா லெனவெழிலே வடிவங் கொள்வார். (எ)

ஆடவர்கண் மணியாவா ரரனூர்கண் மணிமணிகட் கரசா மேவ
நீடுபல வகையணியு நிரைநிரையே புனைந்தன்பி னிலைய மாவார்
பீடுபெறு மனைகயினும் விண்ணமரா வதியினுமேற் பிறங்கும் வண்ணம்
நாடுவளம் பலபெருக்கி நகரையணி செய்துவகை நண்ணி நிற்பார். (அ)

தேடுமடி யவர்வினைதீர் சினகரத்தைக் கயிலையெனச் சிங்காரித்து
மேட்மதி முதற்பக்க நாற்றிதியி லேக தந்த விமல னுதி
பாடுபெறு கடவுளரைப் பூசித்து விழாச்சிறப்பப் பரிந்து வேண்டி
நாடுமவர் சம்மதியைப் பெறலான வநுஞைபின நயந்துகொண்டு. (கூ)

உலகமெலாம் வியாபித்த வாஸ்துவெனு மசுரன்வலி யொடுங்கும் வண்ண,மிலகுகர்ண சூத்திரா திக்கயிற்றாற் பிணித்தவன்மே லிசைவண் டார்க்குஞ், சலசமலர்ப் பிரமன் முதற் றேவரிருந் தடக்குவது தன்னைச் செய்யக், குலவுமுறைப் படிவாஸ்து சாந்தியெனுங் கிரியை நன்கு குயிற்றிப் பின்னர். (ய)

பூதலமான் றனைத்தொழுது சுத்தநில மிருத்திகைகொள் புனிதச் செய்கை, யோதியவா றேமிருச்சங் கிரகணஞ்செய் தெங்கலமு மொன்றநேக, மாதல்குறித் திடவதனின் முளையிட்டு வளர்வித்த லாகக்கூறுஞ், சீதமலி யங்குரார்ப் பணஞ்செய்து பத்தரெலாஞ் செறிந்து போற்ற. (யக)

ஆலமுண்ட களப்பெருமான் றிருக்கரத்தில் வீற்றிருக்கு மணிமீக் கொண்ட, மூலரிஷ பக்கொடியைத் தொழுதுமறு வோதிவிதி முறையிற் றீட்டுங், கோலமலி தருபடத்தி லாவாக னம்புரிந்து கும்பிட் டேத்துஞ், சீலவிரு ஷாதிவா சனரிஷப யாகாலஞ் சிறப்பச் செய்து. (யஉ)

சங்கரனுர் கொடியேற்றி விழாநடத்து மாதிசைவ தவசிரேட்ட
னுங்கவா சாரியரை வரித்துநிதிக் காப்பாதி துலங்கப் பூட்டிப்
பொங்குவிசிட் டோபசா ரம்பலவு முள்ளன்பு பொருந்திச் செய்வா
னங்கமுறைத் தாங்குவப்பி னுசார்ய வருணமுஞ்செய் தருண்மீக் கொள்வார்.

அடுத்தநாட் காலைபஞ்ச மியிற்றுவசா ரோகணஞ்செய் வானு
னேறு, மடுத்ததுச படத்தையெடுத் தீரொன்பா னியங்கலிப்ப
மறைநின் றார்ப்பத், தொடுத்தமல ரணிகளுலாநிருநகரை வலஞ்செய்
வித்துத் தூயதம்பத், தடித்தலத்தி னெழுநதருள்வித் தாதிவே திய
ர்முதலோ ரமைந்துருழ. (கச)

மந்திரத்தின் படிரிஷப கும்பமங்கு தாபித்து வணங்கி வாழ்த்
திச, சுந்தரமார் தம்பத்தூக் கபிஷேகம புரிந்துமுந்நா லுலங்கு மார்
பர், தந்திடுநல் லனுஞைபெற்றுத தம்பமிசைக கொடியேற்றித்
தழைப்பாரின்பஞ், செந்திருவைக் குடியேற்றி யகத்திருத்தி மிகத்தி
ருத்தி திளைக்குஞ்செல்வர். (கரு)

மீதுறு பதாகைவழி விண்டுமுத லியரான விண்ணோ ரங்கு
போதுவது கருதியியல் தேவதாக் வாகனமும் பொருந்தச் செய்து
மேதகுமெத் தேவர்களும் விழாசசிறபப வந்தவணே மேவும் வண்ண
மாதிபிறை யாணைமுறை யறிவித்துப் பல்வகையா லாராதிப்பார். ()

அஃறந்தி வேலைகண பதிகுமர னீலகண்ட னமமை தண்டி
யென்றிந்தப் பஞ்சமூர்த் திகட்குமஸ்திர மூர்த்திக்கு மெழின்மீக் கொண்டு
நன்றுந்து முற்சவமூர்த்திக்குமா சாரியர்க்கு நானு நானு
மொன்றன்பிற் புரியும்விழா முற்றரக்ஷா பந்தனமு முவப்பிற்செய்து.

நித்தியோற் சவருடனு சாரியரீ ரைந்துதிக்கு நேர்ந்து வேத
வித்தகனே முதலவ்வத் திசைகாக்குந் தேவர்களை விளித்துப் பேரி
மெத்துதா டனத்தோடு பலியிட்டுப் பூசித்து மேவா நின்ற
வுத்தமமாஞ் சந்தியா வாகனமும் விதிவழுவா தோங்கச் செய்வர்.

நல்லவிழா நாளிலொங் காலையினு மாலையினும் யாகசாலை, புல்ல
வே சிவகும்பம் வைத்தங்கு ரார்ப்பணமும் பொருந்தச் செய்து
சொல்லியமந திரம்வழுவா வகையோதிச் சமித்தடுக்கிச் சருவை

பற்றி, வல்லபசு செய்வார்த்தோ மாக்கினியை வளர்வித்து வாழ்த்தி யேத்தி. (௧௯)

அடுத்தவோ மங்கார ரக்ஷையைப்புற் சவர்க்குமா சாரி யர்க்கு, மெடுத்ததிரு நீற்றிஞெளி யகலாத பாலத்தி லிட்டுத் தூபங், கொடுத்துநிறை தீபாரா தனைஞ்செய்யுந் தினரக்ஷை குலவ வாற்றித், தொடுத்ததொழின் முடித்திடுவ ரிவரன்பின் றன்மையெவர் சொல்லற் பாலார். (௨0)

அன்னமகச் சாலையினிடத் துன்னுபல தேவருமெம் மாதி தேவன், றன்னகரத் திருவீதி யுலாவருங்கா லுடனெய்தச் சாற்றி யாங்கு, மின்னுமந்தச் சாலைவாய் தனிற்றீபா ராதனையும் விளங்க வாற்றிப், பொன்னமர்புட் பாஞ்சலியுஞ் செய்திறைவ ரிறைவிமுன்பு போய்வந்திப்பார். (௨௧)

விதியேதும் வழுவாதிவ் வகைசெய்முத ஞளிரவில் விருப்புற்றுற்றும், பதினாறு வகையுபசா ரமுமேற்றுப் பெருங்கருணை பாலித்தந்தி, மதிமேவு சடையவரு முலகுயிர்த்த மாதாவு மகிழ்வா யன்பர், துதிகூறத் தோட்கனிமீ தெழுந்தருளுங் காட்சிநலஞ் சொல்லற்பாற்றோ. (௨௨)

அடுத்தநா ளிடைக்கிடைந்த கேசரிவா கனமாகி யமைய வின்ப, மடுத்தவுமா தேவியதன் மிசையேறி யிருந்தருகே வாத்தன் பொன்னேர், முடித்தவிசி லுறைந்தமதிப் பிரபையிலா ரோகணித்து முக்கண் மூர்த்தி, கொடுத்தருளுங் காட்சிகண்டு கும்பிடுவோர்க் கிருமையின்புங் கூடுந்தானே. (௨௩)

நன்னர்விழா வொருமூன்றி னடைக்கிரிந்து கற்கவர்ந்து நண்ணியாங்கே, மன்னுமன்ன மிசையிறைவி வரப்பூத நாதரெனு மாண்புதேற்றத், துன்னுமொரு பூதமிசை யெழுந்தருளி யிறைவர்வருந் தோற்றங் கண்டோர், பின்னொருவர் கருவடைந்து தோற்றமுறாப் பேரின்பம் பெறுவார் மன்னோ. (௨௪)

எல்லவருஞ் சுகமுறவீ ரெனமுதல்வி யஞ்சுகமே லெய்திப் போத, வல்லமருங் களப்பெருமா னடியரெலா நாகமிசை யடுபவீ

ரென்னச், சொல்லுவது புரையவொரு நாகமிசை யெழுந்தருளிச் சுரர்கொண் டாடப், புல்லும்விழா நான்கில்வருங் காட்சிகண்டோர் வெவ்வினையிற் பொருந்தா ரன்றே. (உரு)

அடியவர்க்கு வேண்டியவெல் லாந்தருவ லெனத்தெரிப்பா னமர ரூரிற், குடியிருக்குஞ் சுரபிமிசை வரையரசன் றவத்தில் வருங் குமரி மேவ, நெடியதரு வாகனத்தி லிறைவர்வர விழாவைந்தி னிக ழுங் காட்சி, படிபுகழ்சீ ரரிமழுமா நகரத்தார் செய்தபுண்ய பாக்யந் தானே. (உசு)

மடையேறி வராலுகணீ ரரிமழத்து விழாவாறில் வருத்த வா னன், னடையேற வமணரெலா நாட்டுகழுப் படையேற நால்வர் சொ ற்பாத், தொடையேறக் கவிஞருக்குக் கொடையேறத் தனித்தனி சீர் துலங்கி மேவும், விடையேறிச் சங்கரனு மம்பிகையும் வருதல் கண்டோர் மேதக் கோரே. (உஎ)

பல்லுயிரு மாண்பெண்ணும் பகுப்பிகந்தோர் பற்று மின் றிப் பயிலுமாறு, புல்லுதனி யோகிருந்து பூதமைந்து மவற்றினுறு பொருள்களாய, வெல்லவையுந் தானுத றெரிக்கபிரா னவையாவு மின்பஞ்சேர்வான், சொல்லும்விழா வோரேழிற் றிருமணங்கொள் சிறப்பினையுஞ் சொல்லி வாழ்வாம். (உஅ)

பனிமலையுந் திருமதுரைப் பதியுமிந்தப் படியணியப் பார்த்தி லோமென், றனியமர ருவக்கவலங் கரித்தமண மண்டபத்தி லும்பராதி, முனிவர்தன வணிகர்மணி முடியரசர் மலரிலளி மொய்த் தாங் கெய்த, வனிதையரி லுயர்சலச மாதர்சுர மாதர்பிற மாதர் மல்க. (உகூ)

தும்புருநா ரதர்பாடத் தொண்டர்குழா மேத்தெடுப்பச் சுருதி யார்ப்பக், கம்புமுத லியங்கலிப்பக் கன்னியர்பல் லாண்டிசைப்பக் கடைக்கண் சாத்தி, யெம்பெருமா னருள்விளையாட் டாகமணக் கோ லமடைந் தெய்தி யெண்கண், ணம்பிபுரோ கிதனுகி நண்ணவிநா யக ரனுளை நயந்து கொண்டு. (ஙல)

ஆதியாச் சிரயநிலை கடந்தியாத் திரைபோவ தாக முன்னே
ரோதுசமா வர்த்தனமு முடித்துமண வறைமேவி யுமையா ளோடு
மேதகவிற் றிருந்துகன்னி யூசலா டுதலாற்றி வியன்றேண் மேவும்
போதணிமா ழிப்புனைந்து முளையிட்டுக் கங்கணமும் புனைந்து வைகி.

பன்றியுரு வெடுத்துநிலந் துளைத்துவெகு பாடுபட்டும் பார்த்
தற் கெய்தா, மன்றல்கமழ் திருவடித்தா மரையிங்ங னெளிதுகைபி
ல் வந்த வென்னு, நூன்றுபெரு மகிழ்பூத்த நளினலோ சனவலவ
னல்லான் பால்விண், ணென்றுநதிப் புனல்கொண்டு பதங்கழுவிப்
பூசைசெய்ய வுவகையெய்தி. (கூஉ)

மேனைமடித் தலத்திருந்து விளையாடி யமுதமொழி மிழற்றுஞ்
செவ்வாய்ப், பானல்விழிப் பிறைநுதற்பொற் பைந்தொடியாம் பெ
ண்ணரசி பதுமச் செங்கை, மோனமுனி வரர்பரவு முழுமுதல்வன்
வரைகுனித்த முளரிக்கையால், வானவர்பூ மழைபொழியப் பற்றினு
னுலகமெலாம் வாழ்வான் மன்னோ. (கூகூ)

வேண்டியவர் வேண்டியவே றளித்தருளும் பெருங்கருணை வெ
ள்ளமான, வாண்டவன்முன் கடற்பிறந்த கோதையுடன் சீதரன்வந்
தடுத்துப் போற்றிக், காண்டகுமெங் குலவிளக்காங் கயல்விழியைக்
கொடுத்து மெனக் கரகத் தெண்ணீ,ரீண்டுமனு வொடுகரத்தில் வார்த்
திடப்பெற் றுனுலக மெவையும் பெற்றான். (கூச)

அயிராணி வாணிதிரு முதன்மடவார் மங்கலநா ணணிமீக் கொ
ள்ளச், செயிராவல் விரைந்துவரு விடத்துயர்தீர்த் தருள்புரிந்த
தேவ தேவன், மயிலாகு மியலுமையா டிருக்களத்து மங்கலநாண்
வனைந்தான் கேள்வி, பயிலாதி மறைமுழங்கப் பாவையர்கள் பல்லா
ண்டு பாட மன்னோ. (கூரு)

அன்னமுயர்த் தவனிருந்து மறவோதி யோமகுண்டத் தன
லைப் போற்ற, நன்னர்வலஞ் சுழித்தெழுந்த கனனடுவ ணுமைப்
புரக்கு நங்கை கையாற், றுன்னுபொரி யிடுவித்துச் சுருவையா னன்
னேயஞ் சொரியச் செய்தான், றென்னர்குலந் தழைத்தோங்க
முடிசூடித் தனியாழி செலுத்தும் பெம்மான். (கூசு)

ஓமவினை முடித் தெழுந்து கனலைவலம் புரிந்தங்க ளுமைய னிச்சப், பூமருவு பதமலரைக் கரத்தாலே பிடித்தம்மி பொருந்த வைத்து, நாமமலி சாலிபிரு கரங்கூப்பி வரக்காட்டி நல்லார் கற்பி, னாமகிமை யுலகறிய விளக்கினான் வீடருளு மமல நாதன். (௩௭)

ஈசன்மல ரடிவிளக்கும் பானீரை மாலாதி யிமையோர் யாரு,மா சையுடன் சிரந்தெளித்துட் கொண்டுபுற மகந்தூய ராகிநின்றார், வா சமலர்த் திருமுதலோர் வாழ்ந்திசைத்துப் பயசுகனி வழங்க வேற் றுக், காசணிபூண் முலைப்பரையோ டினிதிருந்தான் பசுபதியாங் கருணை வள்ளல். (௩௮)

எல்லவருந் தனைச்சூழ மலர்ச்சிவிகை மிசையெமையா ளிறைவி மேவக், கல்லுருவக் கரியுவந்து கரும்பருந்தக் கடைக் கணித்துக் காட்டுமெல்லாம், வல்லபெருந் தகையையமா மீதேறிப பவனிவந்தான் வான வாணர், தொல்லைநிலத் தவரெவருங் குழுமியுயர் விழிவின் றித் துதித்துய்ந் தாரே. (௩௯)

இருநான்கு திருவிழாப் பிற்பகலி லங்கமணிந் தெருக்கம் பூண்டு, புரிமேவுஞ் சடைதாழப் பிரமகபா லந்தாங்கிய புனிதத் தெய்வ, மரு வாருந் தாருவன மாமுனிவர் பன்னியர்முன் வந்தாங் கெம்மான், றிரு வீதி கொண்டருளுங் காட்சிகண்டார்க் கொருகுறையுஞ்சேரா தன் றே. (௪௰)

பூழியர்கோன் றிருமகளாய்ப் பரியாதி நடத்திமுடி புனைந்து வென்றோ, ராழிசெலுத் தியதேவி யாதலினா லிவுளிமிசை யமர்ந்து போத, வூழியினுஞ் சலியாத கயிலாய மிசையிறைவ ருலாவுங் காட் சி, வாழியரி மழத்திருநா ளிருநான்கிற் றரிசித்தோர் வாழ்வுற்றாரே.

பாரேறி விண்ணேறிப் பல்குபுக ழரிமழமாம் பதியின் மேலாம், பேரேறு நகரத்தார் சீரேறப் புரியும்விழாப் பிறங்கொண் பானி, னீ ரேறுஞ் சடையவருங் காரேறுங் குழலுமையு நிலத்திரண்டு, தேரே றி யெழுந்தருளுந் திருக்காட்சி யொருநாவாற் செப்பற் பாற்றோ. ()

மருத்தேறுங் குழற்கயற்கண் மாதரசி யுடனிறைவர் மகிழ்ச்சி கூர்ந்து, திருத்தேரி னின்றிழிந்து மெய்யன்பா லடியர்செயுஞ் சிறப்

பை யேற்றுத், தருத்தேயும் படிதோயுங் கொடியிடையுஞ் சிகைரத் தைச் சாருங் காட்சி, கருத்தேறப் பத்தியுடன் கைதொழுவார் யாம் வணங்குங் கடவுளாரே. (சங)

வேரடியிற் பழுத்தபலாக் கனிகான்ற செழுநறவு வெள்ளத்தா லே, காரடியிற் புகுந்துடைவைக் கடம்பவனத் தொருமாறன் கைச்சூ ரத்தா, லோரடிகொண் டெவ்வுயிர்க்கும் பேரடிதந் திடல்விளக்கு முறைக்கைப் பெம்மான், றேரடியைக் காண்பதற்கு வருங்காட்சி தெரிசித்தோர் தெரிசிததோரே. (சச)

பத்தாநாட் பகற்பொழுதிற் புலிமுனியும் பணிமுனியும் பணிய த் தேம்பூங், கொத்தாருங் குழலுமையாள் விழிகளிப்பச் செயுநட னக் கோலங்காட்டி, பெத்தாலு மளப்பரிய நடராசர் வீதியுலா வெ ய்துங் காட்சி, யித்தார ணியிற்கிடைத்தற் கரியபெரும் பாக்கியமெ ன் றியம்பலாமால். (சரு)

விமலமுனி வோர்பரவ விரைந்தா நாளிரவில் விண்டுதந்த, குமரி யொரு கோரதமேற் கொண்டடைய வண்டருணக கொடுக்குநதேஞ் செங், கமலமலர்க் கொம்பானை வாகனமாக் கொளுமிறைவர் காட்சி கண்டோர், முமலமறுத் திரண்டகற்றி யொருநிலையாம் பேரின்ப மூழ்கு வாரே. (சசு)

பதினொராந் திருநாளி லடியர்வினை தீர்த்தமெனப் பரவிச்சூழ, நதிதவழுஞ் செஞ்சடையார் தமைமணந்து முடிசூட்டு நங்கை யோடு, புதியமலர்த் தீர்த்தவா ரியின்முழுகுங் காட்சிதந்தார் போற்று வோரை, முதுமறையும் புகலரிய பேரின்ப வாரிதியின் முழுகு விப் பார். (சஎ)

அல்லமருங் களப்பெருமான் அமர்பெரிய பொற்குடையா னடு த்துத் தம்பாற், புல்லுமணி நகையோடு தெப்பநடாத் திக்கருணை பூத்தாரம்மா, பல்லுயிரும் பிறவியெனும் பெருங்கடலைக் கடந்து முத்திப் பாரஞ் சேர, வல்லபதப் புணைதருவா ரிவர்விளையாட் டெல் லைகண்டு வகுப்பார் யாரே. (சஅ)

தெப்பவிழா முடிந்ததற்பின் பல்வகைவாச் சியமுழங்கத் தேவ ர் போற்றத், தபபொழுகுஞ் சடைப்பெருமான் சினகரத்துக் கெழு ந்தருளிச் சுவர்க்கந்தாங்க, வைப்பணைய திருத்தம்பத் தேற்றியவெள் விடைக்கொடியை மலர்க்கைக் கொள்வா, னப்பொழுது துவஜாவ ரோகணஞ்செய் தினிதமர்ந்தா னகில முய்ய. (சகூ)

மின்னிரண்டு கூறுபட்டோன் றிருந்தணைய விடைதுவள மேரு ப்போல, முன்னிரண்டு தனந்துலங்கு சலசைவள ரிமழவூர் முருகு நன்னாட், பன்னிரண்டிற் பசுபதியா ரேகாந்தச் சேவைகண்டு பணி யப் பெற்று, லென்னிரண்டு விழிகளொடு தலைபடைத்த பேறடைந் தே னென்ன லாமால். (௫0)

எனப்பலரு மெடுத்தியம்ப வரிமழத்தி லறத்தாற்று லீட்டு கின்ற, தனப்பெரிய வணிகரெலாந் தம்முளன்பு தலைசிறந்து தழைப் பக் கூடி, மனத்தொடு சொற் காயமொரு வழிநிற்ப நடத்தும்விழா மாண்பு போலப், புனற்புவியி லெத்தலத்துங் கண்டறிலெ யெவரிவர் போற் புரிய வல்லார். (௫க)

வேறு.

என்று சூத ளியம்பலு, நன்று நன்றென நற்றவ
ரொன்று காதலொ டுட்கொளீஇ,நின்று மற்றிது நேர்சொல்வார். ()

வாடு பைம்பயிர் வாழ்வுற, நீடு மாமழை நேர்தல்போ
லூடு வெம்பவ மோய்வுறத், தேடி வந்தனை சீரியோய். (௫௩)

சிவபி ரானருள் சேர்கதை, யுவமை யில்வகை யோதினை
தவமு யன்ற தனிப்பல, னிவண டைந்தன மேழையேம். (௫௪)

சண்ட னாருயிர்தாக்கிய, வொண்டொ டிக்கர வுத்தமி
யண்டி வாழ்ந லருட் கதை, விண்டு கூறுதி மேன்மையோய். (௫௫)

என்னு மாமுனி வோருரை, யுன்னியின்ப முவட்டுற
மன்னு சூதன் வகுத்தவா, பன்னி வெவ்வினை பாற்றுவாம். (௫௬)

திருவிழாப்படலம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆகசசெய்யுள் எகச.

# விளங்கியம்மன் விளங்கிய படலம்.

அந்தரப்பண் ணவர்கலங்க வவனிமுழு வதுநடுங்க
வெந்தழலும் வெவ்விடமும் விரவியொரு வடிவெய்தி
வந்ததெனத் திதிபுதல்வர் வழியில்வரு சண்டனெனும்
விந்தமலைப் புயவீரன் விறற்றறுகட் புலிபோல்வான். (க)

வெள்ளியுரை மேற்கொண்டு வெள்ளிவரை யிடையெய்தி
நள்ளிருளங் களப்பெருமா னளினமலர்த் திருவடியை
யுள்ளியருந் தவந்தொடங்கி யும்பர்களு மதிசயிப்ப
வின்ளரிய வகையாற்றி மேவினு னெடுங்காலம். (உ)

அவன்றவத்துக் குளமிரங்கி யருட்சோதி யெதிர்தோன்றி
யுவந்தனமுன் றவவலியை யுரைத்துனைடி வேட்கையெனப்
பவந்தருவெவ் வினைக்கொடியோன் பரம்பரா தலம்புவிவான்
கவர்ந்தெனது கோல்செலுத்தக் கருணைபுரி வதுவேண்டும். (ங)

அல்லது மா ணுருவ மமைந்தவரி லெவருமெனை
வெல்லலுருப பெருவரமும் வேண்டுமினி தருள்கென்னச்
சொல்லுதலு மருள்புரிந்தான் றாயமதிச் சடைபெருமான்
வல்லதவத் தாலடையா வரமுண்டோ வருத்திடினே. (ச)

இத்தகுநல் வரமேற்று னிடையேற்றான் மகிழ்ந்துகவி
யத்தனடி சார்ந்துநவின் றசுரரினம் புடைசுலவி
மொய்த்துவரக் களித்தெழுந்து முகிலூர்தி யமருலகு
சத்தியநா டுவைகுந்தந் தாரணிபா தலமெல்லாம். (ரு)

சென்றுசென்று செருச்செய்து தேவர்முதல் யாவரையும்
வென்றுவென்று விசயநகர் மேவியுயிர் பற்பலவுங்
கொன்றுகொன்று தின்றுதின்று குன்றுகுன்றும் பவம்படைத்தா
னன்றுநன்று தீயவர்க்கு நண்ணுதவப் பலனம்மா. (சு)

வானவரிந் திரனயன்மான் மற்றிவன்செய் மறவினையா
லானதுயர் சகியாரா யாற்றுவதென் னெனமருண்டு
தேனமரு நறுங்கடுக்கைத் தெரியலார் சிலம்பெய்தி
ஞானமுதற் குரவனெனு நந்தியடி தொழுதிசைத்து. (எ)

மற்றவன்றன் ணருளிய வாயில்கடந் தகம்புகுந்து
கற்றவர்கொள் கரமுதல்வன் கமலமல ரடிபணிந்து
குற்றமுழு வதுங்குணமாக் கொண்டருளுங் குணக்கடலே
வெற்றிபெறு சண்டனுயிர் வீட்டியெமைக் காத்தியென்றார். (௮)

எனவிறைஞ்சு மாலாதி யிமையவரை யெழுமினென
வனகர்கடைக் கண்சாத்தி யாணுருவா லவனைவெல்ல
நினைதலுறீர் பெண்ணுருவா னீவிர்வயம் பெற்றுய்வீ
ரினையதைநம் முமையவள்பா லிசைமினென வருள்செய்தார். (௯)

அடியரே முய்ந்தேமென் றங்கைகுவித் தமரர்மணி
முடிவணங்கி விடைவாங்கி மொய்குழலெம் பெருமாட்டி
கடிகமழும் பதம்பரவிக் கழறினா ருற்றவெலாம்
படியெழுதற் கரியபரா பரைகருணை பாலித்து. (௰)

பொன்கலைபாள் சசிமுதலாம் பூவையர்மங் கலம்பொலியத்
தன்கலையா லொருதையற் றந்தனள்செந் தழற்குழலு
நன்கலைபா ரிருபிறைபோ னிலவாய் வளையெயிறு
மின்கலைபா வொளிப்பவொளி வீங்குமரைச் செம்பட்டும். (௰௧)

கூரியவொள் வாளாதி கொளுங் கரமுங் கனல்விழியுங்
காரின்மிசைச் செலுமுடியுங் கனவரைபோர்த் திடு புயமு
மாருமிடி யெனுங்குரலு மலைப்பிறவாக் காளமெனச்
சேருருவுங் கொடுநின்றாள் திருநாமங் காளியென்றாள். (௰௨)

அன்னவளெம் மொருமுதல்வி யடிபரவி யணங்கரசே
பொன்னிறும்பைப் பொடிசெய்கோ புணரிகளைத் தூர்த்திடுகோ
கொன்னசுரர் குடிகுலைக்கோ குதிரைமுகாக் கினிகுடிக்கோ
வென்னபணி செயவேண்டு மியம்புகவென் றிரந்தனளால். (௰௩)

வேறு.

சொல்லாய் விளங்கும் பெருமாட்டி சொல்லா யென்னத் தொழுது நிற்ப, வல்லாய் சண்ட னுயிர்குடித்து வானோர் துயரந் துடைத்தியெனப், பல்லா யிரமி டாகினிகள் படையாப் படையா வளித்துலக, மெல்லா நடுங்கோ ராளிபடைத் தேந்தா ளிதன்மீ திவர்தியென்றே. (௰௪)

மாய ஞாதி புலவர்தத்த மடவா ருருவுற் றிவளருகே
பாய படையாச் சென்மினெனப் பணித்தா ளுமையா ளுமையாளாந்
தூய தேவி யவ்வாறே சுரர்மங் கையராச் சுலவ வருட்
டாயை வணங்கி யவாசியுற்றுச் சார்ந்தாள் காளி விசய நகர். (௰௫)

வாணிமடவாட் டேய்த்து வாஞே ராதி யேஞேரைப்
பேணி யொழுகி யுயிர்வாழப் பெறுதி யலேயே லமராற்றி
வீணி லுயிரை யிழத்தியென விள்விக் திடலுங் கேட்டசண்ட
ஞணி யொதுங்கு மரிவையர்க்கோ நானச் சுறுவ னன்றுநன்றே. ()

திருமான் முதலோ ரெனதுபெயர் செப்பி னுள்ள நடுநடுங்கிப்
பெருமா லுறுவ ரென்னேயோர் பேதை மடமை யெனநகையா
வுருமா லென்னக் கைபுடையா வுறுதன் சேனைக் கடல்சூழக்
கருமா முகில்போ லடர்க்கெழுந்தான் கன்னி யறிநது கடுகினளால்.()

சண்டன் படையு மவன்றனக்கோர் சண்ட னெனுநந் தாய்படையு
மண்டி வடிவாள் வேல்கதைவில் வாளி வகையா லமராற்ற
விண்ட சிரத்தோ டசுரர்படை வியச் சோரி வெள்ளமுறக்
கண்டு கொதிப்புற் றெழுசண்டன் கன்னி யொடுபோர் புரிந்தனனால்.

தேவ ரஞ்சத் திக்கயங்க டிகைப்பா னடுங்க நரர்வெருள, மேவு
கொடும்போர் விளேத்தழிந்தான் விபுதர் புட்ப மழைபொழிந்தார்,
காவன் மாய னயன்முதலோர் காளி யூழி வாழி யென்றூர், பூவின்
மாந்தர் நாகரன்பிற் புகழ்ந்தா ரெவரும் போற்றி நின்றூர். (௰௯)

எல்லாங் கண்டு புன்னகைகொண் டிறைவி யெழுந்தி னியங்கலிப்பச்
செல்லா நின்றாள் கௌரியனூர் தேத்து வடபால் வெள்ளாற்றுப்
பல்லா யிரநந் தனவனமும் பரவு வில்வப் பணேவளனும்
புல்லா தரங்கூ ரரிமழமா புரியி னெல்லே பொருந்தினளால். (௨௰)

அங்க ணடுப்பப் பரவசங்கொண் டங்கம் புளக முறவியப்புற்
றெங்கள் பெருமா னங்கயற்க ணிமய முதல்வி யொடுமேவுந்
தங்க மணிக்கோ யிலுமதிதோய் 'தடமுங் கண்டு நீராடிப்
பொங்கு மன்பிற் சினகரத்துட்புகுந்து பணிந்து போற்றுதலும்(௨௧)

மானார் கரத்துப் பெருமானார் வாமத் தணங்கி னொடுதோன்றி
யானா வருளாற் றிருக்காட்சி யளித்துக்காளி யங்கனையே [ன்
கானா மடையுஞ் சண்டனெனுங் களையைக் களைந்திட் டுயிர்ப்பயிர்மே
மேனா டோறும் வளர்வெய்த வென்று முனது விறன்மகிழ்ந்தேம். ()

தேவர் தமக்குங் கிடைப்பரிதித் தெய்வத் தான மிவ் வயினீ
மேவு பொழுதி னன்புருவாய் விளங்கி நின்ற யாதலினா
லாவ லுறுநின் பேர்விளங்கி யம்ம னெனமேவ விளங்குகவூர்
காவல் புரிந்து மதிதீர்த்தக் கரையின் மேல்பாற் களித்துறுக. (௨௩)

நின்னைப் பணிவார்க் கிம்மையிலே நினைத்த வனைத்து மினிதருள்க
வென்னப் புகன்று பொன்மலைபோ லிலங்குந் தளியொன் றமைத்தரு
மினனைப பொருவு நுண்ணிடையாள் விளங்கி யம்மனெனவிளங்கி[ள
யன்னைக் குரியபூ ரடிபரவி யமர்ந்தா ளங்க ணருளுருவாய். (௨௪)

வேறு

வாணி யாதியோர், மாண டிக்கண்வீழ்ந்
தானை யாற்றினாற், சேணி லுற்றனர். (௨௫)

விளங்கி யம்மனைக், களங்க மின்றியே
யுளங்கொள் வார்மனந், துளங்க லில்லையே. (௨௬)

இன்று மன்பினாற், சென்று போற்றுவார்.
நன்று சீருடன், னென்றும் வாழ்வரே. (௨௭)

பொன்னை யாயுவைக், கொன்னை வெற்றியை
யென்னை வேண்டினு, மன்னை யீவளே. (௨௮)

வேறு

என்ன வோதிய சூதனை, மன்னு மாமுனி வோரெலா
நன்னர் வாழ்த்தி நயந்திது, பன்னு வார்வினை பாற்றுவார். (௨௯)

சாந்த நன்னிலை தங்குசித், தாந்த ஞானியர் தாங்கொள
வாய்ந்த முப்பொருண் மாண்பினை, யாய்ந்து கூறுதி யையனே. (௩௰)

என்றி யம்பி யிறைஞ்சினார், நன்று நன்றிது நன்றெனாத்
துன்று மன்பொடு சூதனு, மன்றி யம்பிய வாசொல்வாம். (௩௧)

விளங்கியம்மன் விளங்கியபடலம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் ௭௪௫.

# திரிபதார்த்த சிந்தனைப்படலம்.

ஐந்தடக்கி யாறுகட்டி யாறுகட்டுஞ் சடையவரைச்
சிந்தையிடைக் கொண்டுதவஞ் செய்துவக்கு முனிகணத்தீர்
முந்துபதி பசுபாச முறைமுதுநூன் மொழிந்தபடி
புந்திகொள நுமக்கினிது புகல்வனெனச் சொலுஞ்சூதன். (௧)

புலனென்னுங் கருவியினாற் புங்கவர்க ளளந்தறியி
னிலகுபதி பசுபாச மெனமூன்று பொருளாவா
னலபதிதா னேகமென நவில்கின்ற பரமபொருளாம்
பலபலவான் மாவனைத்தும பசுவாகப் பகருவரால். (௨)

பாசமொரு மூன்றுவகைப் படுமாண வங்கன்மம்
பேசுசுத்தா சுத்தமெனப் பெறுமாயை யென்றுரைப்ப
ரீசனுறு குணந்தானே யெலாமறித லான்மாக்கட்
காசகல வறிவித்த லாதியவா வறைதுவரால். (௩)

எண்ணிறந்த பசுக்குணங்க ளிறைபறிவித் தாலறித
லண்ணியதைப் பிறரெவர்க்கு மறிவிக்க மாட்டாமை
நண்ணுமிவை முதற்பலவா நவில்கின்ற பாசமுதற்
கண்ணுரிய வாணவத்திற் கதுவுகுண மெவையென்னில். (௪)

பசுவேண்டுங் காரியத்தைப் பற்றூது மறைத்தலது
விசுவசியாக் காரியத்தில் விருப்பளித்தன் முதற்பலவாம்
பசுவேட்கை யாணவமோ பதியோவன் னதிலழுத்திக்
கசிவேற்ற லாதிகுணங் கன்மமா யைகட்குரிய. (௫)

மேவுமிவை வியாபகம் வியாப்தி வியாப்பியமாக
மூவகையாம் வியாபகந்தான் முழுநிறைவு சமநிறைவே
யாவதுவி யாப்தியதி லடங்குவது வியாப்பியமா
மோவலிலாப் புணரிபுன லுப்பிவற்றுக் குதாரணமே. (௬)

சாகரமெங் கணுநிறைந்த தன்மையினால் வியாபகமாம்
சாகரத்திற் சமநிறைவாச் சலமுறுதல் வியாப்தியதா
மாகவதி னுப்படங்கி யமைவதுவி யாப்பியமா
மேகணிடைப் பசுவடங்கு மிப்பசுவிற் பாசமுறும். (௭)

இவ்வகையே யொன்றிலொன்று கலந்தடங்கி யிருப்பனவா
மவ்வவைய நாதிநித்ய மாகியெங்கும் வியாபகமாஞ்
செவ்விதிறு பதிபோலச் சேர்பிறவு மநாதிநித்ய
மொவ்வுமென லெங்ஙனமே யுரைக்குதுமோர் காட்டிவணே. (அ)

எல்லுளதா கும்பொழுதே யிருவிழியு மதைமறைக்கும்
வல்லிருளு முளவாமிவ் வகைபொருந்து மெவ்விடத்தும்
புல்லும்வியர் பகமென்னல் பொருந்துமோ வெனிலதுவுஞ்
சொல்லுதுமாற் சிவாகமத்திற் றாயனரு ளியவாறே. (கூ)

வேறு.

அளவிறந்த விழிகளுக்கோ ராதித்த னொளிதரல்போ லளவி லான்மாக், கொளவறிவோர் பதியுதவுங் கோரவிமண் டலமுதலாக் கூறும் பல்பசு, வுளவவண்போய் வரலின்றி யுணர்வதுபோ லான்மாவு முலக மெங்கும், வளமுறப்போய் வரலின்றிக் காரியமெல் லாமுணரு மாட்சி மேவும். (ய)

இருளொன்றெண் ணிறந்தகண்ணை மறைப்பதுபோ லாணவ மொன் றெண்ணி லாமன், மருவுமான் மாக்களையு மறைக்குமவ்வவ் வூரினுளோர் மகிழ்வா யுண்ணப், பெருகுபல தானியம்போற் பலபுவ னத் தான்மாக்கள் பெட்பா யங்கங், குரிமையுட னுண்ணுதற்குப் பலகன்மம் பொருந்துமின்னு முரைத்து மன்றே. (யக)

குயவன்பற் பலபாண்டங் களைப்பல்லோர் விரும்பியவா கொள் ளும்வண்ண, மியல்புபெறப் படைப்பதுபோ லிருவகையா மாயை பல வெனுந்தே காதி, நயமருவு கரணபுவ னம்போக மவரவர்க்கு நல்கா நிற்கு, மயலிலவா மிவ்வாறு வியாபகமா யிருப்பதனை யறிதல் வேண்டும். (யஉ)

இனையவற்றின் சேர்க்கையநா தியிலான்மா வாணவத்தி லிருந்த வஃது, வினைவிருப்பான் மாக்களுக்குத் தந்ததிதை யறிந்தபதி மிகவி ரங்கி, யனையபசுக் களின்வேட்கைக் கேற்றமா யாகருவி யளித்த வற் றால், வினைகளையுண் பிப்பரிதே யநாதியிலெல் லாந்தோன்றும் விதமா மன்றே. (யங)

ஆணவமான் மாக்களூறுஞ் சேர்க்கையநா தியிலெவ்வா றுயிற்றென்னிற், கேணிமலன் சர்வாநுக் கிரகனத ஞற்கூட்டான் கிளர்ந்து போந்தவ், வாணவமு முறுதுசட மாதலினு லான்மாக்க ளாகவேயவ்,வாணவத்தைப பற்றினவஃ தனைக்கியற்கை யோசெயற்கை யாமோ வென்னில். (௰௪)

இயற்கையேற் கரிபாலின் கருமைவெண்மை யெனநீங்கா திருக்கும் பின்னைச், செயற்கையேல் வெண்கலையி லழுக்குறல்போன் முத்தியினுஞ் சேரு மன்று, மயற்கருதி னெற்குமிசெம் பிற்களிம்பு கடனீர்க்குப் பாகவான்மா, மயக்குறுமா ணவச்சேர்க்கை யநாதியையோ கம்மெனவே வகுப்பர் நூலோர். (௰௫)

சுதந்திரனும் பதிக்குளது செய்திபசு வுக்குமுண்டோ செல்வாயென்னி, லிதந்தருவே தாகமங்கள் விதிவிலககுச் சொலலானு மிவற்றுக்கேற்பப், பதம்பெரிய சுவர்க்கசுக நரகவே தனைவகுத்த பான்மையானுஞ், சுதந்திரமில் லாப்பசுவுக் குஞ்செய்தி யுண்டெனவே சொல்வர் வல்லோர். (௰௬)

அற்றாக பசுக்களூறுங் கன்மவிச்சை பதிகொடுத்த தாமோ தாமே, பற்றாக வுடையனவோ வெனிற்பவத்துக் கேற்றதண்டம் பண்ண லாலே, முற்றும் பதிகொடுத்த தன்றுநலம் விடுத்துமற மூயலும் பண்பா, லெற்றாலும் பசுவதுமன் றணவமே கன்மவிச்சை யீந்த தாமால். (௰௭)

இதுதகுமோ வாணவந்தான் சடமாகை யாற்செய்தி யிலேயே யெந்த, விதமதுதந் திடுமென்னிற் புனல்காற்று நெருப்புமது விட மூன் ஞக, வதிதருபல் சடப்பொருட்குஞ் செயலுறல்போ லதற்கு முண்டிவ் வகையேவிச்சை,யதுகொடுத்த றருங்கன்ம மடுத்தவெவ்வா றுகுமெனி லறைது மாதோ. (௰௮)

இச்சைதரு மாணவமுங் கன்மத்தை யறிந்தெடுத்தே யீய மாட்டா, விச்சையுறும் பசுக்களுமக் கன்மத்தை யறிந்தடையா விக்கன் மந்தா, னிச்சைபெறு மான்மாவை வந்தடையா விவற்றையுணர்ந் திரங்கி யீச, னிச்சையினுக் கேற்றதனு வீந்துகன்ம மியைத்[illegible]திடுவா னன்றே. (௰௯)

என்போலு மெனின்மகவுக் கின்பானின் விருப்பமன்னை யீந்த தாமோ, முன்பேயம் மகவினுக்குப் பொருந்தியதோ வெனநோக்கின் முன்னி யன்னை, யன்பாகத் தரும்போதெல் லாமருந்தா மையினன் னை யளித்த தன்று, வன்பான பிணிமுதற்பல் போதருந்தா மையின் மகவு வயந்து மன்றால். (உ௰)

பசிகொடுத்த தெனன்முடிபப் பசியும்பா லினைக்கொணர்ந்து பருகச்செய்யா, கசியுமனக குழந்தையும்பால் கண்டருந்தா பாலும் வந்து கனிவாய் நண்ணு, பொசியுமன்பிற் றுயிலவற்றை யறிந்துமன மிகவிரக்கம் பூண்டு நாளுஞ், சுசிகிரணம் பொழிந்ததெனப் பாலடை யாற் பாலூட்டுந் தகவே போலும். (உக)

மகப்போலும் பசுக்கள்பசிப் பிணிபோலு மாணவமா மலம்பால் போலு, மிகப்பெரிய கன்மம்பா லடைபோலுந் தனுவிரக்க மிகுதாய் போலு, மகத்தோற் கருணைமலி பரமபதி யிதனையே யமையு மேனுஞ், சகத்தோரெல் லவருமெளி துணரும்வகை யெடுத்தின் னுஞ் சாற்று வாமால். (உஉ)

குருடனுக்குக் கோல்விருப்பீர்ப் பவன்கொடுத்த தோகுருடற் குளதோ வென்னிற், றருமிடத்தெல் லாங்குருடன் பிடித்தலின்மை யாலிழுப்போன் றந்ததன்று, மருவவெப்போ தும்பிடித்த லின்மை யினா லக்குருடன் வயத்த தன்று; மிருவகையு மின்றியெவ்வா றெய் தியதேற் குருடுகொடுத் திட்ட தாமால். (உ௩)

அக்குருடுங் கோலையெடுத் தளியாது குருடனுங்கண் டடை யான் கோலும், புக்கவன்கைத் தலமருவா தவற்குரிய னறிந்திரக்கம் பொருந்தியன்னோன், மிக்குவிருப் புறுமிடத்திற் கொடுவிடுப்பா னிவற் றுளொளிவிழியி லானே, தொக்கசுகுரு டேகோலே யிழுப்பானே செலுமிடமே சொல்லு மைந்தாம். (உ௪)

அந்தகனே பசுக்குருடா ணவங்கோலே தனுவிழுப்போ னரு ள்சே ராதி, யந்தமிலாப் பரன்செல்லு மிடம்புவன மெனத்தெரிந்தா மறைவா யின்னு, நந்தலுறும் பிணியனுக்கு மருந்திலிச்சை மருத்து வனே நல்கி னானே, முந்தவந்த பிணிபாலிக் குளதாமோ வெனி லெடுத்து மொழியக் கேண்மின். (உ௫)

கொடுத்தபொழு தெலாமருந்துட் கொளாமையினான் மருத்துவன்றான் கொடுத்த தன்றா, மடுத்திடைவி டாதுகுடி யாமையினாற் பிணியனது மன்று தானே, மடுத்தபிணி யேமருந்து வேட்கையளித் ததுவதுவு மருந்தை யீயா, வெடுத்தருந்தான் பிணியனுமம் மருந் தும்வரா மருத்துவன்கண் டிரக்கம் பூண்டு. (உ௬)

மருந்தொருபாத் திரத்திலிட்டுக் கொடுத்திடுவன் பிணியாளி மானா மான்மா. பொருந்துபிணி யாணவமா மருந்துகன்ம மாமவயித் தியம் புரிவான் றானே, பரம்பரனும் பாத்திரமே தனுவாகு மிப்பாகு பாடு நோக்கிற், றெறிந்திடுவ ரெவ்வெவருஞ் சிந்தைமிசை யைய மொரு சிறிதுஞ் சேரார். (உ௭)

பதிநினைப்பின் படியேயோ பசுவிருப்பின் படியேயோ படைப் பான் றேக, மதுவிரித்துப் புகலவரிற் பதிநினைப்பே லொரேவடிவ மாதல் வேண்டு, மெதுவுமொரே வடிவினறிப பலவடிவா யிருத்தலி னா லிறையான் மாக்க, ளதிவிருப்ப மெவ்வாறோ அவ்வாறே படைப் பனிஃ தறியவேண்டின். (உ௮)

ஒருகுயவன் றன்னினைப்பின் படியன்றிக் கொள்வர் நினைப் புறுமாறாக, மருவுபல பாண்டங்கள் வனைகின்றா னவன்போலும் வரதன் மண்ணைப், பொருவுவது மாயைபல பாண்டங்கள் புரையு மிந்தப் பொய்யா மெய்க, ளுரிமையுறக் கொண்டுவப்பா ரோப்பு ரைக்கிற் பசுக்களென வுணர லாமால். (உ௯)

எங்கும்வியா பகமுற்ற பசுக்கடனுப் பற்றலெவ்வா றென்ன நோக்கின், மங்கலுறாப் படிகமலை யெப்புறத்துக் கொடுப்பினுமே வன்னம் பற்று, மிங்கிதுபோ லெங்கும்வியா பகப்பசுக்க ளெப்பு வனத் திறைதந் தானு, மங்குதமக் குரியதனுப் பற்றுவதை யல் லாம லயலொன் றுண்டோ. (௩௰)

படிகமலை யேபசுக்க ளொளியான்ம போதமொளி பற்றும் பண்பே, நெடியவப்போ தத்தினறி குணம்படிக மொளிபற்றி நிற்ற லான்மாக், கடிதலுறும் போதமறி வதுவன்ன மேமாயா கருவி வன் னம், படிவுறச்செய் விப்பவனே பரமபதி யெனமுதனூல் பகரு மன்றே. (௩௧)

## வேறு.

அத்தனே யான்மாக்கட் கறியுந் தன்மை யமைவதனா லவற்றை மல மடுதலெவ் வாறு, பொத்திமறைத் திடுமென்னின் மதியா தித்தப் புங்கவரைக் கோளிரண்டும் பொத்தல் போலுஞ், சித்திரபாநுவையுதக மறைத்தல் போலுஞ் சேண்வெளியை மலைமறைக்குஞ் செயலும போலு, மித்தகைய மறைப்புவர லதனாலென்னி லிப்பசுவின கன்மத்தா லெனன லாமால். (௩௨)

இந்தவான் மாக்களவை யவமில் லாம லிருப்பவுங்கன் மம்போந்த தெவ்வா றெனனின்;' முந்துபசு வவயவினா மெனக்க ருத்தின் முன்னுவதாற் கன்மம் வநது மூண்ட தாகும், வந்தகன்மத் தான்மாயை விளைந்த தநத மாயையினாற் றனுகரண புவன போகம, பிந்தவந்து விளைந்தனவா மிவற்றின் றன்மை பேசுவவா கமமுதலா ப பிறங்கு நூலே. (௩௩)

இச்சாஞா னக்கிரியா ரூப னாகி யிறையவனே பசுக்கன்மம் புசிக்கச் செய்வன், பொச்சாவா துயிர்களெலா மோக்கந் தன்னைப் பொருந்துகவென் றுறுவதுவே யிசசை யான்மா, நச்சாநின் றிடுகன்ம மறிதன் ஞான நவிலுமக்கன் மங்களையான் மாக்கட் கூட்டி, வைச்சார்வத் துடனுறக்கித் தவிர்த்த ருளே மகிழ்கிரியை யெனப்பெரியர் வகுப்ப ரன்றே. (௩௪)

என்றபசுக் களுங்கன்மம் புசிக்குங் காலை யிச்சாஞா னக்கிரியாரூப மெய்தித், தோன்றுவவெப் பொருள்களினும் பற்ற லிச்சை துன்னியவை பகுத்தாய்தன் ஞான மெல்லா, மான்றதன வென்றழுந்தல் கிரியை யாகு மக்கன்ம மூவகையாந் தூல கன்மம், வான்றருசூக் கும கன்ம மிறுதி யாக வந்தவதி சூக்குமமிவ் வகையா மென்பர். (௩௫)

வினையெலாந் தூலகன்ம மிதனால் வந்து மேவுமற மறஞ்சூக்கும கன்ம மாகு, மனையவற்றின் பலனான வின்ப துன்ப மதிசூக்கும கன்ம மென்ப ரிவைகண் மூன்றும், பினையாகா மியமேசஞ் சிதமே மேலைப் பிராரத்த மேயெனமுப் பெற்றித் தென்ப, ரினையவற்றின் விரிவை யெலா மின்னா நூலோ ரிசைத்தபடி யெடுத்தாவிரித் திசைப்பா மன்னோ. (௩௬)

இருவினையா காமியமாம் புண்ணிய பாவ மென்பவைசஞ் சிதமாகு மிவற்றால் வந்து, மருவுசுக துக்கம்பிரா ரத்வ மாகு மகிதலத்திற் பயிரிடலே வினைகள் போலுந், தருபலனைக் கூட்டிவைத்தல் புண்ணிய பாவத் தகைபோலு மதிற்சிறிது சிறிதா வுண்டல், பொருவுமின்ப துன்பமெனப் புகல்வர் மெய்ந்நூற் புணரியிடைக் குளித்தெழுந்த புலமை யோரே. (௩௭)

இக்கன்ம பலனிகழ்ச்சி முறைபி ஞன்வந் தெய்தலினை யிலாங்க லினைத் தரம்பை நட்டுத், தொகைகசிறு கிளையிடிற் பின்முன் ஞைகத் தோன்றுபலன் வருவதெனத் தூநீர் ஸவபபி, னக்கணத்தே சிலகன்ம பலன்வந் தெய்து மடுத்தபிறப் பினிற்சிலவந் தடையு மன்றி, மிக்கபல சனனத்தின் பின்னும் போந்து மேவுமத னதன்றகுதி விரிவான் மன்னே. (௩௮)

ஏன்றஜன்ம வின்பதுன்பந் தெய்வம் பூத மியமானன் வழித்தாய்வந் தெய்த லாலே, மூன்றுவகைப் படுமாகி தெய்வீ கந்தான் முதலாதி பௌதிகமத தியமா மீறு, தோன்றுவதே யாதியாத்மிகமா மென்னச் சொல்லுவர்நூல் வலவர் கன்மத் தொகைகணிங்க, லான்றருரு வருமோக்காற் சஞ்சி தம்போ மாக்கையனு பவித்தலினாற் பிராரத்வம் போம். (௩௯)

மெய்யறிவான் மேலைக்கு வராம லாகா மியமும்போஞ் சேமித்தவினைநெற் றீயா, லொய்யெனவெந் திடவுண்ணாற் கெடுத்த வெல்லா முண்டொழியப் பின்புபல னுறுதல் வேண்டிச், செய்யிலிடு விதைமழையி லாது காய்ந்து தீயவொன்று மிலாவுழவன் றிறமே போலக் கையவினை நீக்கமுறு மிதையே மேலோர் கருதுவரெக் காலுமருள் கழல மன்னே. (௪௰)

பந்தவிலங் கொடித்திருக்கு முத்தான்மாக்கள் பாலிறைவன் கலந்திருக்கும் பான்மை போலச், சந்ததமும் பெத்ததிசை தனிலு மொன்றித் தயங்குவனோ நீங்குவனோ சாற்றுகென்னின், முந்துமுத்தான் மாக்களிடந் ததியி னெய்போன் முற்படுவன் பெத்ததிசை யுழக்கினோர்பால், வந்துறைவன் பாலிடத்து நெய்யேபோல மாதவத்தூற் பூதவுடல் வாட்டும் வல்லீர். (௪௧)

ஓரிடத்தி லேயிருளு மொளியு மொன்றி யுறுதலிலா மையின் மலத்தோ டிறைவ னொன்றிச், சேரியற்கை யுளதாவ தெங்ஙனென் னிற் செப்புகின்ற மொருமரத்தி னுனிமுன் னாக, வேரிருக்கு மிடத் துவரை யிரதத்தோடு வெங்கனலுந் தம்மிலொன்றி மேவுபாபோ, லாருமறி தரவிறைவ னிருப்பா னென்றே யறிவுடையா ரெந்நாளு மறைவ ரன்றே. (சஉ)

என்றுமக லாணிறைவ னென்னிற் சீவ ரெய்துகொடுந் துயரி றைக்கு மெய்த லுண்டோ, என்று வினவுதிராயிற் படிகக் காந்தி யெய்ந்தகதி ரொளிபலவா வியலும் வன்னம், என்றுசிறி தேனுமந்த வன்னம் பற்ரு திருப்பது போற் பகவனிலே யிருப்ப தாகும், என் றுணிபு தானிதுவோ வேத மாதி யெக்கலையு மிவ்விதமே யியம்பா நிற்கும். (சங)

இத்தகுமான் மாக்கள்பிர பஞ்சச் சோக்கை யெய்தலிற்கே வலசகல சுத்த மாக, வைத்திடுமூன் றவத்தைபெறு மவையொவ் வொன்று மன்னியகா ரணகார்ய வயத்தி னாறும், மெத்திருளி லொ ளியிழவா விழிகண் போல மேவுமநா தியிலறிவு விளியா தான்மா, வொத்துறையு மாணவத்தி லழுந்தருனே யுரைத்தமுதற் காரணகே வலமா மென்பர். (சச)

அரியகுளங் களமிதைய நாபி மூல மைந்திடத்துஞ் சாக்கிரஞ் சொப்பனஞ்சு ழுத்தி, துரியதுரி யாதீத மெனவெடுத்துச் சொலுங் கீழா லவத்தை யைந்துந் தோய்த ருனே, யுரியதொரு காரியகே வலமதாக வுற்றிடும நாதிகே வலத்த ழுந்தி,மருவுமுயி ரினமாயா கரு விகொண்டு மற்றந்தக் கேவலத்தின் மன்ன னீங்கி. (சரு)

சுகமீது துக்கமிதென் றறித ருனே சொற்றகா ரணசகல மெவ் வா றென்னின், மிகவிருளி லழுந்தும்விழி விளக்கி னாலே மேவுபல பொருள்வகையு மறிதல் போலா, மகவிலா டத்தலத்திற் றுரியா தீத மாதியாச் சாக்கிரமீ றுகக் கொண்டு, பகர்தருமத் தியாலவத்தை யைந்து மெய்தல் பார்த்திடிற்கா ரியசகலப் பான்மை யாம்மால். (சகூ)

அஞுதிகே வலசகலத் தாழந்து மான்மா வருஞேக்காலவை விடுத்துப் பரமா நந்தந், தனுமெனக்கொண் டுறுவதுகா ரணசுத் தத்தின் றன்மையெற்றே யிரவிலிருள் விளக்கி வற்றின், மனுவுறு கண்ணிரவியெழ வவற்றை விட்டு வந்தபா நுவைநோக்கி வாழ்தல் போலாங், கனுவினிலே யெனவுலகப் பற்றை நீக்கிக் கருத் தொருமித் தருந்தவத்தைக் கைக் கொண் டுள்ளீர். (சஎ)

பக்குவததான் மூதிர்ந்தேணிப் படியேற் றம்போற் படிப்படியே சென்றுயர்ந்த பதத்தின் மேவித், தொக்கவுயிர் நின்மலசாக் கிர முன் னுகச் சொற் றிடுநின் மலதுரியா தீத மீறுப், புக்கமே லாலவத்தை யைந்து மெய்தப் பொருந்துதல் காரியசுத்த மென்பர் வல்லோர், கைக்குளுறு மாமலகக் கனியே போலக் கடவுணிலே கண்டு மனங் களிக்கு மாண்பீர். (சஅ)

நன்றிதுவான் மாக்கண்முத்தி மேவுங் காலே நசித்துறுமோ நசியாது நண்ணுங் கொல்லோ, வென்றிடிற்கெட் டாற் சேர்தற் கெது வு மில்லை யிற்றிலவேற் கூடாவா மினைய வாற்று, லொன்றியவான் மாக்களொளா மொழித வின்றி யுறுவிடயங் களிற்செலுந்தம் போத மேலா, நின்றுநிகழ் வதுநீங்கிக் கலக்கு மென்றே நிகழ்த்திடுவ ரந்நிலையை நேரு மேலோர். (சகூ)

இத்தகுமான் மாக்கள்பல வாத லாலே யேதேனும் பேதமுண் டோ வென்னிற் கேண்மின, வைத்திடுமும் மலங்களினு மாண வத்தை மட்டுமுற்றுர் விஞ்ஞான கலரே யாவ, ரத்துடனே கன்மமலஞ் சேரப் பெற்று லன்னவரே பிரளயா கலரி வற்றோ, டொத்துறயா யாமலமு முடையர் தாமே யுலகமலி சகலரென வுணர வேண்டும். ()

விஞ்ஞான கலர்க்கொளியாய் நடுவ ஞேர்க்கு மிளிர்தேவ வுருவாகிச் சகலர்க் கெல்லா, மெய்ஞ்ஞான மணிதவுரு வாகி யீசன் மேவியாட் கொள்வனெந்த விதத்தா லென்னி, விஞ்ஞாலத் தழுக்கையுவர் கொண்டு நீக்க லெனமாயா கருவிகளை யிணைத்து வைத்துப், பொய்ஞ்ஞான மலநீங்கப் புரிந்தாட் கொள்ளும் புண்ணியமோ ருருவெடுத்தாற் போலுஞ் சால்பீர். (நிக)

எக்காலத் தென்னிலிரு வினையொப் புற்று லென்பரம் தென்னையெனிற் புண்ய பாவ, மிக்கார்தல் விடுதலின்றிச் சமமாங் காட்சி மேவுவதா மெவ்வாறேல் விளம்பக் கேண்மின், புக்கார்வத் துடனொருவன் மனையாள் பாலும் போகமட வாள்பாலும் பொருந்து நாளிற், றக்கார்பா லறநூலைக் கேட்டுப் போகத் தையலைநீத் தில்லவளைத் தணவா னாகி. (நுஉ)

இருந்திடுங்கா னானசாத் திரங்க ளோதி யில்லறமும் பொன்விலங்கே யென்றுட் கொண்டு, திருந்துதுற வறமெய்தி முன்னைப் போகச் சேயிழைவல் லவியிருவர் திறத்து மொன்றுப், பொருந்துமனத் தால்விருப்பு வெறுப்பில் லாது போவதுபோற் பாவமென்றும் புண்ய மென்றுந, தெரிந்துவர்த்தல் களித்தலிலா நிலையி னின்று திருவருட்பே றடைதல்பவஞ் சீத்து வாழ்வீர். (நுங)

இன்னவகை யாமுதுநா லியம்புஞ் சீவ ரிருவினையொப் புமலபரிபாகமுற்றுன், முன்னிறைவன் குருவேங் தருளி மேலா முந்தியுறப் புரிவனென மொழிந்தான் சூதன், நன்னருளங் களிசிறப்ப முனிவரெல்லா நன்றுநன்றென் றடிதொழுது நளினச் செங்கை, சென்னிமிசைக் கூப்பியரி மழத்துநாதன் சேவடியுட் கொண்டின்பந் திளைத்தார் மன்னோ. (நுச)

வேறு

மாமழை பொழிக முன்னூல் வகுத்தவா மகங்க ளோங்க
பூமிசை வளங்கள் பல்க புரவலன் செங்கோல் வாழ்க
நாமலி தமிழ் சிறக்க நவிலரி மழஞ் செழிக்க
தோமிலாச் சைவம் வெல்க துலங்குக வடியா ரெல்லாம். (நுரு)

இக்கதை படித்தார் கேட்டா ரியம்பினு ரியம்புவித்தா
ரக்கணி சுந்த ரேச ரருண்மிக மேவி நல்ல
மக்கள்பொன் வாழ்வு வெற்றி மனமகிழ் வெல்லா மேவிச்
செக்கர்வான் சடில மூர்த்தி திருவடி யடைவார் வாழி. (நுசு)

திரிபதார்த்த சிந்தனைப்படலம் முற்றிற்று.

அரிமழத்தலபுராணம்முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - அ௱௯க.

# அரிமழத்தலபுராணம்.

## குறிப்புரை.

### பாயிரம்.

காப்பு. பொருப்பு --- மலை. அரசு - சிவபிரான். நிம்பம் - வேம்பு கொம்பு - தடாதகைப் பிராட்டியார். பூத்து - தோன்றி. காயாது - வெறுக்காது. கனியும் - விரும்பும். அத்தி - விநாயகர். இகந்து - நீங்கி. இக்கவியில் கயிலை மலையிலுள்ள அரசமரமானது வேப்பமலர்க்கொம்பை விவாகஞ்செய்து பெற்றெடுப்ப வளர்ந்து பூத்துக்காய்த்தலின்றியே கனியும் அத்தி மரத்தினீழலிற் புகுந்தவர் பிறவி வெயிலைக்கடந்துஇன்புறுவர் எனப் பொருள்தொனித்தல் காண்க. இதில் அத்திமரம் பூவாது காய்த்தல் இயல்பாகவும் இங்கே பூத்துக்காயாது கனியும் அத்தியென்றது கவனித்தற்பாலது.

க. வாரி - கடல். குறுகி - சேர்ந்து. நிமலன் - மலரகிதன். பதத்துணை - இரண்டு பாதங்கள்.

உ. பங்கயம் - தாமரை. குவலயம் - குவளை. கொங்கு - மணம். தளவு - முல்லை. அரும்பி - தோன்றி. தங்கவரை - இமயமலை. துங்கம்- பெருமை. இக்கவி ஒரு பூங்கொடியானது தனக்குரித்தாகிய பூவொன்றையே யன்றித் தாமரை குவளை ஆம்பல் காந்தள்என்னும்பன் மலர் பூத்து, முல்லை கோங்குஅரும்பக் கொண்டு தங்கமலையிற்பிறந்து வெள்ளிமலையில் இருப்பு விருட்சத்தின் மீது படர்ந்திருக்கும் எனத்தோன்றும் நயம் கவனிக்க. இமயமலையைப் பொன்மலை யென்பது நூல்வழக்கு. "பனிமாலிமயப் பொருப் பகஞ் சேர்ந்த பொல்லாக்கருங்காக்கையும், பொன்னிறமா, யிருக்கும்" எனவருதலால்அறிக.

ங. இதழி - கொன்றை. வயங்கும் - விளங்கும். இருமுனிவர் - பதஞ்சலி வியாக்கிரபாதர். குஞ்சிதபாதம் - எடுத்த திருவடி.

ச. அயில் - வேல். கொளீஇ- கொண்டு. அம்பலம் - சபை. சுகம் - கிளி. பிடி - பெண்யானை.

ரு. பனி - குளிர். தவளம் - வெண்மை. கவளம் - யானையுணவு. மதகயம் - மதயானை. உரி - தோல்.

சு. உமிழும் - கொட்டும். குறுநகை -- புன்னகை. திகழ் -- விளங்கும். மரு -- மணம். சீறடி -- சிறிய பாதம். வயங்க - விளங்க. தெருள்- தெளிவு.

எ. இறந்த - கடந்த. மோனம் - மௌனம். உறீஇ - உற்று. நால்வர் - சனகாதியர். விமலன் - மலரகிதன். கஞ்சம் - தாமரை.

௮. பொரு -- யுத்தஞ்செய்த. கோடு - கொம்பு. குழாம் - கூட்டம்.

௯. வரி -- வண்டு. கடுக்கை - கொன்றை. விபுலை - பூமி. பரிவு- அன்பு.

௰. திகந்தம் — திசைமுடிவு வாணியன் - சரசுவதிநாதன். வேதியன் - வேதன். வடுகன் - வயிரவன் முன் - மூத்தோன். விடையன் - ரிஷபாரூடனான சிவபிரான். விழிவலைச்சி - கண்வலையையுடைய உமாதேவி. தயா - கருணை. பாரிகள் - மனைவியர். செட்டி - முருகக் கடவுள். இக்கவியில் உலகறிந்த வாணியனொருவன் வேதியனென வெளிப்பட அவனைச சிறை செய்தவன் எனவும், இடையனுக்குரிமையாகி வலைசசி புதல்வனாக வடுகனுக்கு முன்பிறந்த செட்டியெனவும், செட்டுத்தொழிற்கேற்பத்தகுந்த வியாபாரிகளோடிணங்கி யுறைபவனெனவும் வெளிப்படத் தொனித்தல் காண்க. யாபாரி—முதற்குறை.

௧௧. ஞாலம் - உலகம். ஆயு - வாழ்நாள். சீலம் - ஒழுக்கம். சிறப்பு- மோக்கம். பங்கேருகம் - தாமரை.

௧௨. மறம் - வலி. மாற்றலர்- பகைவர். செரு - யுத்தம். வயம் - வெற்றி.

௧௩. செய்யவள் -- இலக்குமி. நெடுமாலானதையல் -- மோகினி. ஐயன் - சிவபிரான். ஆண்டலை-கோழி. துவசம் - கொடி. நரை - வெண்மை.

௧௪. நெய்த்தோர் - இரத்தம்- தீர்த்தன் - தேவன். ஞாளி - நாய்.

௧௫. களம் - கண்டம். பரை- உமை. துளங்கல் - சலித்தல், அரி- சிங்கம். குளம் - நெற்றி. அலகை - பேய்.

௧௬. போலாது - போலன்றி. தேம் - வாசனை. நெறி - மார்க்கம். காமுறும் - விரும்பும்.

௧௭. தளி - கோயில். வேத்திரம் - பிரம்பு.

௧௮. அங்கம் — சாத்திரம் மறை - வேதம். சங்கரன் - சிவபிரான். பலி - பிக்ஷை. அங்கம் இரண்டு - ((௧) அம் + கம்) அழகிய கபாலம், (௨ அங்கம்) எலும்பு. சங்கை - சந்தேகம். மயிலை - மயிலாப்பூர். சுதை- மகள். அங்கனை - பெண். சங்கையாவது - ஒரு பெண்ணின் எலும்புக்கு அப்பெண்ணின் முழுவுருவம் கொடுத்தலால் நம்மிடமுள்ள கபாலத்துக்கும் எலும்புமாலைக்கும் அவற்றின் முழுவுருவங் கொடுத்து நம்மை நீங்கச செய்வன் கொல்லோ என்பதாம்.

௧௯. தழீஇ - தழுவி. ஒருங்கு- உடன். தாலத்தேவு - நாவுக்கரசு.

௨௰. சங்கிலி - சங்கிலிநாச்சியார். பரவை - பரவைநாச்சியார் சத்தி -- பராசத்தி. பாகன் பாகத்தையுடையவன். உணவு - கட்டுச்சோறு. இக்கவியில் திருநாவலூரரை யானையெனற்கேற்பச சங்கிலியாற் கட்டுற்றுப் பரவை (கடல்போன்றதடாகம்) யிடைவிளையாடி மதமழைபொழிந்து தருவை யெறிந்து பாகன்கொடுக்கு முணவுண்ட எனக்கூறியதுகாண்க.

௨௧. அந்நூல்-திருக்கோவையார். கோன்-பாண்டியன். சம்புவுக்கேயாக்கல்-சிவார்ப்பணஞ்செய்தல். முன்னூக்குபரி-முன்னே நடத்துங்குதிரை. உகைப்போன்-நடத்துவோன்.

சம்பு-நரி, சிவபிரான். மொய்ம்பு வலி.

உஉ. ஊறு-இடையூறு. குழு-கூட்டம்.

உங. இக்கவி தடாகத்துக்கும் குருவுக்கும் சிலேடையாகும்.

(க) தடாகத்துக்கு நிலம் இசை இன்பத்திவலைகொண்டு அடைவார் உளம் களிப்ப ரோமையாக இலகிய சில் முத்து இமைக்கைகாட்டலுடன் - புவியிற்பொருந்திய இன்பகரமான நீர்த்துளியைக்கொண்டுவருபவர் மனமகிழ ஒழுங்காக விளங்கிய சில முத்துக்களையும், ஒலித்தலையும் தோற்றுவதுடன். பூதிமணி இயைந்து-ஐசுவரியமாகிய ரத்தினங்களைப்பொருந்தி. காவிநிலவு உடையதாக்கொண்டு - விளங்குகின்றநீலமலரையுடையதாகப்பொருந்தி. மீதுஉறைசைவலம்பெறவேநெடிது வாழ்ந்து-மேலேதங்கியபாசிக்கொத்துகள் பெறும்படி பன்னாள்வாழ்ந்து எனவும்(உ)குருவுக்கு) நிலமிசை-பூவுலகத்தில். இன்பத்திவலைகொண்டுஅடைவார்உளம்களிப்ப-இனிய பத்தியாகிய வலையை (வீசிக்) கொண்டுவருவார் (மெய்யடியார்) மனமகிழ - சின்முத்திரைக் கைகாட்டலுடன் - ஞானமுத்திரையாகியசின்முத்திரைத்திருக்கரத்தைக் காட்டுதலுடன். பூதி மணி இயைந்து-விபூதியும் உருத்திராக்கமாலையும் பொருந்தி. காவி நிலவு உடையதாக்கொண்டு -விளங்கிய காவி வஸ்திரமே உடுக்கும் உடையாகமேவி. மீ துறைசைவலம்பெறவே நெடிது வாழ்ந்து-மேவாகிய திருவாவடுதுறையானது (மற்றைய் தலங்களையெல்லாம்) வெற்றி பெறும்படிபெருவாழ்வெய்தி. நலநல்ல. கருணைத்தடமாம்-இருணைபக்கடலாகிய.

உச. வியன்-பெரிய. நித்தியம்-அழிவின்மை. பல்கும்-பெருகும்.

உரு. அல்-இருள். குழல்-கூந்தல். கன்னல்-கரும்பு. பொடித்து-பொடியாக்கி. ஓத-சொல்ல.

உசா. நாவாய்-தெப்பம். கா-சோலை. தாவாத-கெடாத. மீ-மேல் மிளிரும்-விளங்கும்.

உஎ. பணி ஆரம்-பாம்புமாலை. பவம்-பிறவி. எதத்னையர்-எவ்வளவினர்.

உஅ. விருப்புஅணி-ஆசைபொருந்தி.

உகூ. வாய்மை-சத்தியம். நன்னர்-நன்று.

௩0. முத்தலம்-சுவர்க்கமத்தியபாதலம். அலம்-கலப்பை. திவள்-விளங்கும். செய்-வயல். மூதூர்-பழையநகர். இசை-கீர்த்தி. ஆமலகம்-நெல்லிக்கனி.

௩க. முற்றுவிப்பது-முடிப்பிப்பது. தேனுலும்-தேனொழுகும். ஒன்றுதல்-உடன்படல். புகன்றேம்-சொன்னோம். இறை-கடவுள்.

---

## நாட்டுப்படலம்.

உ. பருப்பதம்-மலை. கானம்-முல்லைநிலம். அம்புராசி-கடல். கும்பசம்பவன்-அகத்தியமுனி. வீசு-வீசி. புரிவது-செய்வது. பூழியன்-பாண்டியன்.

௩. வில்லவன்-சேரன். சோழியன்

சோழன். புல்லி-சேர்ந்து. இருந்தமிழ்--பெருமைபெற்ற தமிழ். பொற்பு-அழகு. மல்லல்-செழிப்பு.

௬. தாலம்-பனை. தோகை-கொடி. விளக்கு கை-விளக்குங்கை. முசலி-பலராமன். (தாலத்து ஓகையை விளக்குகை-உலகத்து மகிழ்ச்சியை விளக்குதல் எனமேகத்துக்குப்பொருள்கொள்க) வனம் மால் - துளசிபுனைந்த விட்டுணு. (அழகிய மேகம் என மேகத்துக்குக் கொள்க) சிந்து-கடல். புவனம்- துவாரகாபுரி,நீர். மேன்மை - பெருமை, மேலேகருமை. நாகம்-பாம்பு, ஆகாயம். மிசைத்தாய்-மேலேதாவி விளையாடி, மேலுள்ளதாகி.

௭. கொண்டல்-மேகம். விலங்கல்-மலை. அம்பு-நீர்.

௮. தாணு சிவபிரான், மலை. மாணுறும்-சிறந்த. வழுத்தல்-தோத்திரித்தல். சேண்-ஆகாயம்.

௯. பொருக-போர்செய்க. போகி-இந்திரன். நவில-சொல்ல. தனிதம்-முழக்கம்.

௰. பூதி - ஐசுவரியம், விபூதி. ஆநந்தவெள்ளம் - ஆனந்த பாஷ்பம். மாநந்தவெள்ளம்-பெரிய சங்குகளை வீசும் வெள்ளம். வேணி-சடை, ஆகாயம். தண்டம்-திரிதண்டம். தோல்--மான்றோல், யானை. வெற்பு-மலை.

௧௧. சிறார்-மக்கள். வரை-மலை. நறவு--தேன். கும்பம்-குடம், கும்பராசி. துலாம்-நிறைகோல், துலாராசி.

௧௨. தரக்கு-புலி. இடபம்-ரிஷபம், இடபராசி. சடி-மோதி. பொருக்கென-விரைந்து. வெரு-அச்சம்.

கைவிலங்கு-யானை. அரி-சிங்கம், சிங்கராசி.

௧௩. வன்னி - ஒருமரம், அக்கினி. மேடம்-ஆடு,மேடராசி. கன்னி-கன்னிராசி. காரம்-சினம். கன்னிகாரம்-கோங்கு. பத்திரம்-தளிர், அம்பு. தனுசு-தனுராசி, வில். பாணி-நீர். கை. கடகம்- ஞண்டு (கடகராசி), கையணி. மிளிரும்-விளங்கும்.

௧௪. ஈட்டம்-கூட்டம்.

௧௫. இணையும் - ஒப்பாகும். பம்பும் - நெருங்கும். கும்பு - கூட்டம்.

௧௬. வழுத்தும் - சொல்லும். வல்லியம்-புலி. அருந்துறமை -உண்ணுமை.

௨௧. ஓதி - மலை. குடம்பை. - கூடு. தென்னன் - பாண்டியன். பூதரம் - மலை.

௨௨. விருக்கம் - மரம். கவர்ந்து - பற்றி. கால் - காற்று. கரந்தவர் - கவர்ந்தவர்.

௨௩. பணிகள்- ஆபரணங்கள். வங்கம் - நாவாய். வாரி - கடல். பொருநை - தாமிரபர்ணி. அன்பன்இல் - நாயகன்வீடு. தகையும் - ஒக்கும்.

௨௪. நிரை - வரிசை. செருக்கு - கருவம். மான -ஒப்ப. கடுக்கும் - சினக்கும்.

௨௫. ஆலம்--நீர், விஷம். அமுதம் - நீர், அமிர்து. தேற்றும் - தெரிவிக்கும்.

௨௭. விதிர்ப்பு - நடுக்கம். அணுக்கம் - அச்சம்.

௨௮. நிச்சலும் - நாள்தோறும். பெட்பு - பெருமை.

௨௯. கழல் - பாதம். கானவர் - வேடர். சந்தம் - சந்தனம். வினை - தொழில். ஆகரம் - இருப்பிடம்.

௩௰. குவடு - மலை. படகம் - பரண். தட்டை - கவண். கொங்கு - மணம்.

௩௧. உணவேட்டு - உணவை விரும்பி. கொடியர் - கொடிபோன்ற பெண்கள்.

௩௨. இடைச்சியர் - இடையை யுடையவர்.

௩௩. தந்து - நூல். பணை - பெரிய. தளவம் - முல்லை. தந்தம் - பல். தந்தவேலி - யானைத்தந்தங்களாலாகிய வேலி. தயங்கல் - விளங்கல்.

௩௪. மெய்யினர் - உடலினர். மருள் - மயங்கும். கோள் - கொள்கை. அமர் - போர். சுரும்பு - வண்டு. தோகையர் - மயில்போன்றவர்.

௩௫. படுப்ப - வசப்படுத்த. ஏனம் - பன்றி.

௩௭. ஓர் பூங்கொம்பு - தெய்வயானை. குகன் - முருகபிரான். ஒரு மலர்க்கொம்பு - வள்ளிநாயகி. முன் வந்தவன் - விநாயகமூர்த்தி. துர்க்கை நிலம் - பாலை. மற்றொருகொம்பு மருவி வரலாவது - இரண்டு கொம்பையுடைய யானை வடிவத்துடன் வள்ளி நாயகியை வெருட்ட வருதலைக்குறிக்கும்.

௩௮. உருப்பும் - வெப்பம். உடன்போக்குக்குரியது பாலைநிலமாதலின் நாயக நாயகிகட்குட் பெருகும் அன்பு வெள்ளத்தை மட்டும் தன்னை (பாலையை) க்கடந்து செல்லவிடுமேயன்றி வேறு எத்தகைய நீர்ப்பெருக்கெய்தினும் தன்னைக்கடக்கவிடாது அடக்கும் கொடுமையுடையது என்பது பொருளாம்.

௩௯. பாடி - ஆயர்பாடி.

௪௰. கடலையெள் - கடலையும் எள்ளும், சமுத்திரத்தை யிகழும். கமபினங்கதிர் - கம்பங்கதிர், சங்கின் அழகிய ஒளி. துவரை - துவரைச்செடி, துவராபுரி. பணி - பாம்பு. மால் - விட்டுணு. கானகம் - முல்லை நிலம்.

௪௧. பன்னல் - பருத்தி. இன்னல் - துன்பம். அணிபுரிதலாவது ஆடையாயிருந்து அழகு செய்தல்.

௪௨. தகவு - மேன்மை. மாந்தர் - மனிதர். போந்துழி - வந்தவிடத்து. (கம்பங்கதிர் வளைவின்றி நிமிர்ந்து நிற்பதைக்குறித்தபடி)

௪௩. கரந்து - திருடி. ஆம்பி - காளான்.

௪௪. கண்ணன் - கண்ணனே. நீர - தன்மைய.

௪௫. ஆடகம் - பொன், துவரை. மாடம் - உழுந்து.

௪௬. கூவனீர் - கிணற்றுநீர்.

௪௭. விண்டால் - பிளவுபட்டால். விரை - விதை. திண் - வலி. தாரணி - பூமி. செறியும் - நெருங்கும்.

௪௮. வாதமுதலிய - வாதபித்தசிலேத்மம். புரைய - ஒப்ப. மாரி - மழை. சீதம் - குளிர். சிரகம் - வினைபொருள், சிறந்தமனம்.

௪௯. சேயர் - புத்திரர். எனதுபேர் - கல்விமுயல், கேள்விமுயல் என முயலுக என்னும் பொருள்தரக் கூறுதலைக்குறிப்பது

௫௰. என் பெயர் - கானவாரணம், (காட்டுயானை). குமரவேள் கரமுறப்பெறுதல் கோழிக்கொடியையும், இரவிவரக்கூவுதல் கோழி கூவிப் பொழுதுவிடிந்ததென்பதையுங் காட்டும். கனலும் - நெருங்கும்.

௫௰௧. தளவு - முல்லை வேளை சமையம். இம்மென - விரைவில் முல்லை நிலப்பெண்கள் தாம்வளர்த்த முல்லைசெடிகள்நாளரும்பெடுத்தபோது திருவிழாக்கொண்டாடுதல் வழக்காமென்க.

௫௰௨. சொன்னலங்கொடு-சோளத்தை நீருடன்கொண்டு,சொல்நலங்கொண்டு. அண்டர்பேர்-அண்டர்என்றபெயர், தேவர்பேராகிய புலவர்என்றபெயர். பாடியினலமுறும் - (பாடியின் அலமுறும்) ஆயர்பாடியின் அமைதியுறும், (பாடி இன்நலமுறும்) (கவிகளைப்) பாடி இனிய நன்மையுறும். கோக்கள் - பசுக்கள், அரசர்கள் தொறுவர் - இடையர்.

௫௰௩. பலகடலை - அநேககடலைப்பயறுகளை. எட்டுவரை - எள்துவரை. மாடம் - உழுந்து. தொறுவியர்- இடைச்சியர்.

௫௰௪. கற்பு - முல்லைசெடி. பொற்பு - அழகு. கடையடல் - கீழ்ப்படல், கடையப்படுதல். வற்பு - வலி. தவிசு - ஆசனம். அருந்ததி - அருமையாய தயிர். அற்ப இடைச்சியர் - சிறிய இடையையுடையவர். அமலை - ஒலி.

௫௰௫. கவின் - அழகு. வாசம் - மணம், வசித்தல். மாயாதவர் - பெரிய இடையர். வலாரி - இந்திரன்.

௫௰௬. திகழ்ந்த - விளங்கின.

௫௰௭. நூறி - அழித்து. குரவர் - குருமார். களமர் - மருதமாக்கள். நிரை - வரிசை. குறுகி - சேர்ந்து.

௫௰௮. அலவன் - சந்திரன், நண்டு. கட்டளை - விதி, கட்டியஅளை.

௫௰௯. புங்கவன் - சிவபிரான். மால் - விட்டுணு. கூர்மம் - ஆமை.

௬௰. நயனம் - கண். இன்புறல் - பார்வையால் இனபநுகர்தல், இதனை- "மீன்போற்செவ்வியுற நோக்கி"யென்பதனுற்காண்க. செவ்வி - அழகு. ஒவவும்—ஒக்கும். உகளும் - திரியும்.

௬௰௧. உலம் - திரண்டகல். முகில் - மேகம். புலம் - வயல். பொனனேர் - பருவ காலத்து முதலிற் பூட்டும் ஏர். பகடு - மேதி. வலம்-வெற்றி.

௬௰௨. சகம்-பூமி. சொல்-நெல்-சொல். புலவர்-தேவர், கவிஞர். துறுமி-நெருங்கி.

௬௰௩. திங்கள்-சந்திரன். அங்குரம்-(அங்குஉரம்) அவ்விடத்து நிலசசெழிப்பு. அங்குரம்-முளை.

௬௰௫. அள்ளல்-சேறு. குரவை, நாவசைத்துச செய்யுமொலி.

௬௰௬. இருமுதுகுரவர்-தாய்தந்தையர். துவளாமல்-வாடாமல். யாத்து-கட்டி (நிறைத்து)

௬௰௮. தனம்-கொங்கை. வதனம்-முகம். தையல்-பெண்.

௬௰௯. ஐங்கணை-ஐந்தாவது பாணம். துஞ்ச-இறக்க. தேசு-அழகு- விஞ்சு-விளங்கிய.

௭௰. அல்லி-குமுதம். மா-வண்டு.

௭௨. சிட்டர்-சிறந்தவர். நன்குவந்தார்-நன்றுமகிழ்ந்தார். கம்பளார்-மள்ளர்.

௭௩. கற்றை-தொகுதி. அநங்கன்-மதன். மருதத்தேவன்-மருதநிலத்துக்குத் தெய்வமாகியஇந்திரன்.

௭௫. சமக்களம்-போர்க்களம் சமக்களம்-ஒரு நிலைத்தான இடம். போர்-நெற்போர்,

௭௬. நிதிவரை-மேருமலை. இயும்-பொருந்திய. துணைவன்-சோதரன் (வாயுதேவனுக்கு இந்திரன் சோதரமுறையினனாதல் குந்திதேவி நாயகராக இருத்தலாலென்க) அவனிலம்-இந்திரன் நிலமாகிய மருதம். இருப்பித்தல்-இருக்கச்செய்தல். ஆங்கு-போல. பொன்னரி-பொன்னொளி. சாலி-நெல்.

௭௭. பணைத்த-பெருத்த. துணைத்த-இரண்டான. பிணைத்த-கட்டப்பட்ட.

௭௮. மகம்-யாகம்.

௭௯. ஐயமில் - சந்தேகமில்லாத. ஆணை-முறை.

௮௰. அம்பாரம்- நெறகுவியல், அழகியசுமை.

௮௧. காரா-மேதி.

௮௨. நகரத்தேவர்-கிராம தேவதைகள். வினைஞர்-தச்சர் கொல்லர் முதலியோர். பகுமுறை-பங்கிடும் வழக்கம். இல்-வீடு.

௮௪. பலம்-பழம். கதுப்பு-கன்னம். கமைவிலராய்-பொருதயராகி.

௮௬. தனு-வில். கமுகா-கமுகாக. மணி-முத்து. இறும்பூது-ஆச்சரியம்.

௮௭. மூன்றைநாள் - உழுகின்றமுற்காலம். முன்னி-நினைத்து. பகடு-எருமைக்கடா. செயவி-சமையம்.

௮௮. மடவார்-பெண்கள். மாற்றம்-சொல். இக்கு-கரும்பு.

௮௯. அகுழி-வெல்லக்கட்டி அசுக்குழி. இன்னல்-துன்பம். வெல்லம் - சர்க்கரை, வெற்றியடையமாட்டோம். பரிவு-அன்பு.

௯௰. பணை-மருதநிலம். கனைகுரல்-பேரொலி. சலபதி- வருணன். நனை-தேன். கழிநிலம்-நெய்தல். நவிலுவாம்-சொல்வாம்.

௯௧. வீ-மலர். பங்கயன்-பிரமன். பொறுக்குமா- பொறுக்குமாறு. (சங்கக்குழையன் சிவபிரானாதல் கவனிக்க.)

௯௨. அளவர்-நெய்தல் நிலமாக்கள். அம்பகம்-கண். குரை-ஒலிக்கின்ற. அகன்கரை-விசாலித்த கரையில். உணக்கி-காய்வித்து.

௯௩. கடுத்திடும்-ஒக்கும். தடம்-பரப்பு. முப்பொருள்-பதி பசு பாசம்.

௯௪. அலமரும்-சுழலும். ஏய்ப்ப.-ஒக்க. சலதி-கடல். மீகாமன்-கப்பல்செலுத்துவோன். பஃறுறை - பலதுறை. ஊடகு-உவவிடம்.

௯௫. அவனி - பூமி. இவணி - பொருந்தி. இவணம்-இங்கு. கருவுரி-கருப்பொருளுரிப்பொருள். நவம்-புதுமை.

௯௬. காஞ்சி - ஓர்மரம். கணி-வேங்கை. பானல்-குவளை.

கஎ. உரப்புதல் - கனைத்தல். செறு - வயல். ஒருகைமா - யானை. குரு - நிறம்.

கஅ. போதி - அரசமரம். சாதி - ஓர் மலர். சரகம் - வண்டு.

க௯. கறி - மிளகு.

௨௰. உணங்கல் - காய்தல். நானம் - கஸ்தூரி. வேட்டம் - வேட்டை. வேழம் - கரும்பு. சாலி - நெல். சந்தம் - சந்தனம். தந்தம் - யானைக்கொம்பு. மறவர் - குறிஞ்சிநிலமாக்கள்.

௨௰க. கேசரி - சிங்கம். மருள - மயங்க. கறங்கு - ஒலிக்கின்ற. கதுவும் - பற்றும்.

௨௰௨. வனைய - அலங்கரித்துரைக்க. உள்ளவா - உள்ளவாறு, உள் அவா.

---

## திருநகரப்படலம்.

க. கோமுறை - இராசநீதி.

௨. நகரம் - இடம்பெயரோம்.

௩. புராரி - சிவபிரான். பொதுளி - நெருங்கி. ஆராமம் - சோலை.

௪. வேழம், நாகம், அத்தி என்பன யானையின் பெயர் ஆதலன்றி முறையே கரும்பு, புன்னைமரம், அத்திமரம் இவற்றை புணர்த்தல் காண்க. கரி நிரை - யானைக்கூட்டம்.

௫. மாதிரம் - திக்கு. கனன்று - கோபித்து. ஆளானம் - யானை கட்டுந்தறி, இப்பதம் ஆள் ஆனம் எனப் பிரிவுபெற்று அடிமையாயினோன் பொருள்தரும். முனி - யானைக்கன்று.

௮. மருத்து - காற்று. கால்விசை - வாயுவேகம். வாசி - குதிரை.

௯. கிள்ளை, கொக்கு, மா (வண்டு), சேவல் என்னும் பதங்கள் யாவும் பறவை வர்க்கத்தை யுணர்த்துவன - பறத்தல் போன்ற விசைகொண்டமையால் குதிரையையுமுணர்த்துவன என்று நயம் காண்க. துரகம் - குதிரை.

௰. ஏமதரு - கற்கி அவதாரம். மால்மனைவி - பூமிதேவி.

௰க. கலினம் - கடிவாளம். துமுத்தல் - நெருக்குதல்.

௰௨. விலாளி - குதிரை வாய் நுரை - இருமா - யானை, குதிரை.

௰௩. வையம் - பூமி. வையம் - வைக்கமாட்டோம். ஆழி - தேருருள்

௰௪. கு - பூமி. ஆறுகுடிஞேனி ரதம் - பூமி. குவிரம் - தேர்.

௰௫. எற்ற - சமர்செய்ய.

௰௬. கார் - மேகம். கலிப்பு - ஒலி.

௰௭. வயவர் - வீரர்.

௰௮. யாக்கை - சரீரம். பொதும்பர் - சோலை, வயின் - இடம்.

௰௯. தொய்யில் - சந்தனக்குழம்பெழுத்து. ககனம் - ஆகாயம்.

௨௰. நந்து - சங்கு. நந்து - வருந்து. களம் - கழுத்து. நகிலம் - கொங்கை - பந்து - பந்துக்கள்.

௨௰க. உடல் - பொன்.

௨௰௨. உழை - மான். கருமை - கரியமேகம்.

உ௩. வரைவிலான் - மலைவில்லையுடைய சிவபிரான். கா.று - கண்டு. திரிபதகை - கஙகை. செவிசோர நணபன் - காதில்லாத ஆதிசேடன். கிடங்கு - அகழி.

உ௪. கமடம் - ஆமை. இடங்கர் - முதலை. கிடங்கர் - அகழி.

உ௫. இதழி - கொன்றை. இரசிதப்பொருப்பு - வெள்ளிமலை, கயிலை. எய்க்கும் - ஒக்கும். தட்ப - தடுக்க. ஞாசி - மதில்.

உ௬. செவவி - அழகு.

உ௭. இருசுவர்க்கம் - இருகெிளைகை.

உ௮. "அருளில்லார்க் கவவுலகமில்லைப் பொருளில்லார்க் கிவ்வுலகமில்லாகி யாஙகு" என்னுங குறளைக் குறித்தது.

உ௯. வெறுங்கையைத் தமதகங கொள்வார் - பொன்னைத் தம்வீட்டிற் கொள்வார். அகத்திடை வெறுக்கையே கொள்வார் - மனத்தில் வெறுப்பையே கொள்வார்.

௩௰. சலதி - கடல். குரைப்பு - ஒலி. பண்டாரம் - பொககிஷம். வரைப்பில - அளவில்லாதன. நியமம் - கடைவீதி.

௩௧. ஆம்பல் இதழ்க்கோவை ஆரவிலை - குமுதமலரிதழ் கோத்தமாலையின் விலை, எனவும், ஆம்பல் போன்ற அதரமாகிய கோவைக்கனியை அருந்த விலை எனவும் சிலேடைப்பொருள்கொள்க. பணசெருக்கு - பொருட்செருக்கெனவும், படம்போன்ற நிதம்பக்கருவம் எனவும் கொள்க.

௩௨. இலாங்கலி - தெங்கு.

௩௩. காருகவினை - நெய்தற்றொழில்.

௩௭. குயிலுவம் - வாத்தியத்தொழில்.

௪௧. உடையார்கள் - ஆடையையுடையவர்கள். கதவம் - கதவு. அடையார்கள் - கூடாதவர்கள். உ விரோதிகள். ௩ சேராதவர்கள்.

௪௨. மறை - வேதம். மகம் - யாகம். செந்நாப்போதார் - திருவள்ளுவர்.

௪௪. வசியர் - வசியப்படுத்துவோர்.

௪௯. மட்டிலா - அளவில்லா. ஊதியம் - இலாபம்.

௫௨. சிவணிய - ஒத்த. ஆறு அஙகம் - " படைகுடிகூழமைசசுநட்பரண்" என்பன.

௫௩. அரசியல் ௯. அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம் என்பன. ஆறுதானை - யானை, தேர், பரி, வாள், வில், வேல் என்பன. தொழிலாறு - ஓதல், ஈதல், காத்தல், படைபயிறல், பொருதல், வேட்டல், என்பன. ஐவகைச் சுற்றம் - மந்திரக்கிழவர் புரோகிதர் சேனைபதியர் தூதர் சாரணர் என்பார்.

௫௪. ஐவகைப்பயம் - " தன்னாற் றன் பரிசனத்தால் - ஊனமிருபகைத் திறத்தாற்கள்வராலுயிர்தம்மா-லான் பயமைந்து" என்பன. இன்னல் - துன்பம். கோறற்கு - கொல்லுதற்கு அக்கம் - கண்.

௫௫. முத்தழல் - காருகபத்தியம், தெக்கணாக்கினியம், ஆகவனீயம். நான்மறை -- இருக்கு, யசுர், சாமம்,

அதர்வணம். ஐவேள்வி — தெய்வயாகம், பிரமயாகம், சதயாகம், பிதுர்யாகம், மானுடயாகம். அறுதொழில்- ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். பன்னொருமுக்கோடியர் - முப்பத்துமுக்கோடிதேவர்.

௫௬. அமரர்-தேவர். மறு-குற்றம். அவி - தேவருணவு. மிருதி - ஸ்மிருதிநூல்கள், தருமசாத்திரம்.

௫௭. வைஸ்வதேவம் - விசுவதேவர் பொருட்டுச் செய்யு மந்திரக் கிரியை.

௫௮. பிராமம் - எண்வகைமணத்துளொன்று. தெய்வம் - எண்வகை மணத்துளொன்று. தராதலம் - பூவுலகம்.

௫௯. தும்பி - வண்டு. முண்டகம் - தாமரை. தொடையல் - மாலை.

௬௰. உபநயனம் - பூணூற்சடங்கு. முஞ்சி - நாணற்புல். உபவீதம் - பூணூல்.

௬௨. குணம் - கிழக்கு. உதீசி - வடக்கு. ஆசை - திசை. வன்னி - பிரமசரி.

௬௩. மனு - மந்திரம். புரை - குற்றம்.

௬௪. பன்னிரண்டு குணங்களாவன - "சிறுகாலையட்டில் புகலருத்தியுறசசமைத்தல் சுவைதிருத்தியூட்டல், மறுகாலையெண்ணுது விருந்தழைத்தல் மகப்பெறுதல் மடநாணச்சம், பெறுகாலையின்புறுதல் முன்னுறங்கப் பின்னுறங்கல் பின்னெழாது துறுகாலை தொழுதெழுதல் பன்னிரண்டு மங்கலக்கற்புடையோர் செய்கை" என்பதனாலறிக.

௬௬. தோயம் - நீர். சந்ததமும் - எப்பொழுதும்.

௬௰. கூவி - அழைத்து. கூறை - ஆடை.

௬௭. சோபானம் - படி. தளி - கோயில்.

௬௮. தீட்டுதல்-எழுதுதல். தோடு- இதழ். பரவை - கடல்.

௭௧. தூரியம் - முரசு. கறங்கும்- ஒலிக்கும். ஈகைமுரசம் - கொடைமுரசு. வதுவை - கல்யாணம்.

௮௰. பார்த்தன் — அர்ச்சுனன். கான்மகன் - வீமன்.

௮௧. வெற்பு - மலை. மிளிர் - விளங்கிய. ககனம் - ஆகாயம். அற்பு - அன்பு. அங்கனையார் - பெண்கள், அங்கு அனையார். அவண்தாய் போல்வர்.

௮௨. விண்மலை - மேருமலை.

௮௩. அரிவையர் — பெண்கள். நடவியல் - பரத இலக்கணம்.

## நைமிசாரணியப் படலம்.

௧. குசையுருள் - தருப்பைச்சக்கரம். மன்நந்தா - நிலைபெற்றதும் கெடாததுமாகிய.

௩. நீப்பது - விலக்குவது. சீப்பது - தள்ளுவது. சூழல் - இடம்.

௪. ஈத்துவத்தல் — கொடுத்து மகிழ்தல். பாத்திறத்தினர் — கவிவல்லவர். அம்மாத்தலத்தினர் - அத்தேவலோகவாசிகள். காத்திரம் - கனம்.

௭. மாயன்மைந்தன் - மதன். சூதம் - மாமரம்.

௮. எம்பெயர் முனிவரன் - சூத முனிவர். தன்னம் - அற்பம்.

௯. புலே - கீழ்மை. தாழை - தென்னை.

௰. கம்பு - சங்கு. பூவை - காயா

௧௧. இறைவன் --- சிவபிரான். குழாம் - கூட்டம்.

௧௨. சம்பு - நாவல்.

௧௭. பொருவிலோன் - இணையிலி (சிவபிரான்). பொருவ - ஒப்பு. தவிசு - ஆசனம்.

௧௯. ஓரில் - நினைத்தால். நிலே - இடம். நார் - அன்பு.

௨௰. அனந்தன் - பிரமன்.

௨௨. செவிவழியறிவர் - அழகிய வழியையுணர்வர். நமன்கதை - யம தண்டம்.

## தலவிசேடப்படலம்.

௧. மதலே-கொன்றை. பகர்தும்- - சொல்வோம்.

௩. அரி - சந்திரன். மழவாகி - இளங்குழவியாகி. இதனுள் வருங்கதையைப் பின்வரும் சந்திரன்பூசித்த படலத்தாலறிக.

௪. கமலே - திருவாரூர். கனகவம்பலம் - சிதம்பரம். அதனை - முத்தியை. விழைதலம் - விரும்புந்தலம்.

௭. பேறு - மோக்கம். ஆன்றவர்- பெரியோர்.

௯. அரி - சூரியன்.

௰௧. ஐந்துவெங்கனல் நாப்பண் - பஞ்சாக்கினி மத்தியில். நந்து - வருந்து.

௰௩. பெருமால் - பெரிய ஆசை. பசுபதி - சிவபிரான். மால் - பெருமை. மால் - மயக்கம்.

௰௪. செறிக்கும் - நிறைக்கும். காண்முளை - புதல்வன்.

௰௫. சாகரம் - கடல்.

## தீர்த்த விசேடப்படலம்.

---:O:---

௧. சுவேதமாநதி - வெள்ளாறு. படிந்தவர் - மூழ்கினவர். துகள் - குற்றம்.

௨. பங்கம் - குற்றம். பரவை - கடல்.

௩. முருகு - மணம். பாற்றீர்த்தம் - வெள்ளியநீர்.

௪. ஆற்றுப்படுத்தல் - வழியுரைத்துச செலவிடுத்தல். எள்ளாற்றி - எள்ளிட்டு. கள்ளாற்றுக்கடுக்கை — தேனொழுகுங்கொன்றை.

௫. பரிமகம் - அசுவமேதம். எண்மை - எளிது.

௬. தீர்த்தம்- தீர்த்துவிட்டோம்.

௭. ஆண்டாதி - வருடப்பிறப்பு. ஈரயனம் - உத்தராயந தக்ஷிணாயநம். திங்கள்முதற்றோற்றம் - மாசப்பிறப்பு. கலேயின் மாண்டநாள் - அமாவாசை. மருவிய நாள் --- பௌர்ணை. வனம் - நீர்.

௮. களம்-கண்டம். கறை - விடம். குளம் - நெற்றி. பவத்தல் - பிறவியிருள்.

௯. பொரும் - கரையைமோதும்- பவமரிக்கும் - பாவத்தைக்கெடுக்கும். பாண்டியனுற்றழை தீர்த்தம் - இக்க

தையைப்பின்வரும் சுவேதகேதுபூஜித்த படலத்தாலும் வெள்ளாற்றுப்படலத்தாலும் அறிக. அடர்ந்து - நெருங்கி - ஆன்வரும் தீர்த்தன் - இடபத்தில் வருகிற சிவபிரான்.

ய. பிறப்புரிவார் - பிறவிகழலச செய்பவர்.

யக. அம் - அழகிய. போங்கர் - பக்கம். சோபானம் - படி. சந்தவளம் - சிறந்தவளப்பம். சமைத்தார் - செய்தவர். பரை - உமாதேவி. நந்த - பெருக.

யஉ. ஒருவகிலா - நீங்காத.

யச. புவனம் - நீர்.

யரு. அப்பு - நீர். ஒப்பிகந்த - உவமை நீங்கிய.

## மூர்த்திவிசேடப்படலம்.

:o:

க. அலகில் - அளவற்ற.

ங. ஒவ்வலார் - பொருந்தார்.

ச. குறியை - இலிங்கவடிவை.

ரு. கந்தரம் - கண்டம்.

சு. சேண் - ஆகாயம். பொழில் - சோலை. மாண் - மாட்சி.

எ. அல் - இருள்.

ய. மாசுபட - குற்றம்பொருந்த. கார் - மேகம். குழல் - கூந்தல்.

யக. குவலயம் - பூமி.

யங. ஐந்தமிர்து - பஞ்சாமிர்தம். பலைசசாறு - பழசசாறு. ஆனைந்து - பஞ்சகௌவியம்.

யரு. நடுயாமம் - அர்த்தசாமம். பாலைவைத்து - அன்பைவைத்து. [illegible] - கடல். [illegible] - தொழில்.

யசு. நால்வகையாம்போது - கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ.

யஅ. ஓங்கல் - மலை.

யகூ. சலம் - துன்பம். புலம் - ஒலி முதலைம்புலன்.

## இந்திரன்பூசித்தபடலம்

க. புணரி - கடல். அண்மி - அடுத்து. முதுக்குறைவு - பேரறிவு.

உ. அவை - சவை. தோகை - மயில். கந்தரவாகனன் - இந்திரன்.

ங. பிருகற்பதி-வியாழன். இருக்கை - ஆசனம். தருக்கு- கருவம்.

ச. காத்தலையான் - கற்பகத்தினிடமுள்ள இந்திரன். ஆரியன் - குரு.

ரு. செவவி-வளம். வேரி-தேன். காரி - விஷம்.

சு. பொன் -வியாழன். செய்தி- செய்வாய். எனு - என்று.

எ. சுதன் - மகன். துகள் - குற்றம். தருவன் - அசுரன். திரிசிரன் - மூன்றுதலையுடையவன். எள்ளாமே - இகழாமல். குரவு- ஆசிரியத்தன்மை. அந்தணன் - பிரமன்.

அ. மேதம் - யாகம். விபுதர் - தேவர். போத - மிக.

கூ. மகவினை - யாகக்கிரியையை. இனைய - வருந்த. மகவினை - மகனை. இன்னணம் - இவ்வாறு. இனைய-இத்தகைய.

ய. வலாரி - இந்திரன். கடிதாற்றி - விரைவிற்செய்து. விளித்து - அழைத்து. அரியை - இந்திரனை. புரந்தரன் - இந்திரன்.

௰௧. அச்சுதன் - விட்டுணு. உது - இது. குலிசம் - வசசிரம். தொன்மையது - பழையது.

௰௩. இரப்பின் - யாசித்தால். தெம்முனை - பகைவர்போர். வீட்டலாம் - அழிக்கலாம். மகபதி - இந்திரன்.

௰௪. பொறை - சுமை. அறை - ஒலிக்கின்ற. ஆகண்டலன் - இந்திரன்.

௰௫. குடமுனிவன் - அகத்தியமுனி. பருகூதன் - இந்திரன். வியன் - பெரிய. அடர - மோத.

௰௬. நற்கோன் - வியாழன். தடம் - தடாகம்.

௰௭. மாசு இகந்த-குற்றம் நீங்கிய. தேசின் - அழகுடன். ஆசு - விரைவில்.

௰௮. வேள் - முருகபிரான். பாண் - இசை. பண்ணவர் - தேவர். சேணுடு - தேவருலகு. செழியர் - பாண்டியர்.

௰௯. வளவன் - சோழன். பஞ்சவன் - பாண்டியன். ததைந்து - நெருங்கி. பகீரதி - கங்கை.

௨௰. பூழியன் - பாண்டியன். அறிவன் - ஆசான். முனைவன் - முதல்வன்.

௨௧. இகந்து - கடந்து. துருவி - தேடி. இலிங்கத்திடல் - ஆதியில் இந்திரன் சுந்தரேசப்பெருமானைத் தரிசித்தவயற்பக்கம்.

௨௨. ஆய்தந்து - ஆராய்ந்து. விழிமாலை - கண்களின் வரிசை. விலகல் - நீங்கல். வயங்கினன் - விளங்கினன். மருத்துவன் - இந்திரன்.

௨௩. ஆசுஅகல - குற்றம் நீங்க. வாசவன் - இந்திரன்.

௨௪. புலவர் - தேவர். தருக்களைந்தாவன - சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம்.

௨௫. சுதையை - புத்திரியை (தேவநாயகியை). நேயம் - நெய்.

௨௭. துணிபடா - துண்டிக்கப்படாத (பூரணமான). நாளும் - நக்ஷத்திரங்களும். அங்கி - அக்கினி. துன்ன - நெருங்க.

௨௮. ஆவிநாயகன் - உயிர்போன்ற கணவன். மன்றல் - விவாகம்.

௨௯. வேட்டு - விருப்பத்துடன். கிளர் - எழுகின்ற.

௩௰. ஆரணம் - வேதம். தேம் - மணம்.

௩௧. கால் - காற்று. துய்த்திடல் - உண்ணுவது. இறும்பூது - ஆச்சரியம்.

௩௨. பருகிட - உட்கொள்ள. கரியவன் - இந்திரன்.

௩௩. காலும் - கக்கும்.

௩௪. அத்தனை - சிவபிரானை. அணிந்து - அலங்கரித்து.

௩௫. பிஞ்சுமதி-பிறைசந்திரன். பிஞ்ஞகன் - சிவபிரான்.

௩௬. எண்வடிவானவன - பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா.

௩௭. கருவிழந்த - பிறப்பற்ற. சசி - இந்திராணி.

௩௮. முயக்கம் - அனுபவம்.

௩௯. அயிராணி - இந்திராணி. ஆனும் - காமதேனுவும்.

௪௧. எவ்வம் - துன்பம்.

சஉ. அவசம் - பரவசம். மருவாக்கும் - மணங்கொட்டும். கருவாக்கும் - பிறப்புண்டாக்கும்.

---

## சந்திரன் பூசித்தபடலம்.

———:0:———

க. வேல்கோடும் - வேல்நாணும். நாற்கோடு - நான்குகொம்பு. அருளியவா - அருளியவிதம். கோடும் - கொள்வோம்.

உ. நந்தனன்-மகன். முகுந்தன்-விட்டுணு.

ங. புதல்வர் - தேவாசுரர். துன்றினர் - நெருங்கி. வேட்டனர் -விரும்பினர். தறி - தம்பம். கன்றுதல் - வருந்தல். பயோததி - பாற்கடல். ஆவியுடன் - உயிருடன்.

ச. சுவேதம்-வெண்மை. மீன்-நக்ஷத்திரம். சுலவு-சூழ. தானவனாகி-தானவனென்னும் பெயருடையனாகி.

ரு. பாடு - பெருமை. வேறுபாடு-வேறுபடுதல். தகவால் - தகுதியால். வீறுபாடு - பெருமைப்படுதல். கண்ணேறுபாடு -கண்திட்டிபடுதல். முயற்கறை - முயல்வடிவக்களங்கம்.

சா. சரணம் - திருவடி. நக்கவன்-விளங்கியவன். கரன் - கிரணத்தையுடையவன். மித்திரன் - சூரியன்.

எ. கவிஞனுக்கு:—எண் இருநற்கலை - மதிக்கத்தக்க பெரியநல்ல சாத்திரங்களை. மேற்போகி - மேன்மையுற்று. உலகு - உயர்ந்தோர். பா - பாட்டு. ஆர்கலி -நிறைந்த தரித்திரம். இசைத்தவளம் - யாவரும் புகழ்வதாகிய வளத்தை. பண்ண - இசையமைந்த. கல்விப்பிரசங்கப்பரிவு-கல்விப்பிரசங்க இன்பத்தை. எந்நாளும் - எப்போதும். சந்திரனுக்கு:—எண்ணிருநற்கலை- சோடசகலை. மேற்போகி - மேற்கே சென்று. உலகு ஏற்ப - உலகங்கொள்ள. பா - பரவிய. ஆர்கலி- கடல். இசை தவளம் - புகழாகிய வெண்மையை. பண் அகல் - சீர்பரந்த. விப்பிரசங்கம் - வேதியர் கூட்டம். பரிவு-அன்பு. எந்நாளும் - எந்த நக்ஷத்திரமும். மதிப்புலவன் - சந்திரனாகியதேவன். மதிப்புலவன் - புத்தியுள்ள கவிஞன். மதிப்பு உலவு-மதித்தல் விளங்க.

அ. இராக்கதிர் - சந்திரன். ஆசான் - குரு.

கூ. தனு-வில். மதர்ப்பு - அழகு.

ய. முறுவல் - பல். நந்து- சங்கு.

யக. கலைமகள் - சரசுவதி, (மனம்) கலையும் மகள். சுதை- பால். அலைமகள் - கடலிற்பிறந்த இலக்குமி, அலையுமகள். மலைமகள் - பார்வதி, மலைக்கின்றமகள்.

யஉ. அரிவையர் - பெண்கள். காமர் இலக்கணநூல் - அழகிலக்கணநூல், (சாமுத்திரிகாநூல்). வரம்பு - எல்லை.

யங. ஆரை - ஆத்திமாலையை. மேல்வீடு - மோக்ஷவீடு. அணித்தாக வரும் தாரை - சமீபமாக வருகின்ற வழி. மான் - மகான். கவரும் - பிடிக்கும். தாரைவலை - கண்வலை.

யச. விது - சந்திரன். காம எரி- விரகாக்கினி. அநங்கன் - மதன். கன்னல் - கரும்பு. அளி - வண்டு. கடிதுய்த்தான் - விரைந்துசெலுத்தினான்.

யரு. அங்கசன் - மதன்.

௰௭. பன்னி - சொல்லி. கொழுநன் - நாயகன். வனப்பன்னி - அழகியமனைவி. ஆய் - தாய். வனப்பு - அழகு. அல் நிகரும் - இருளையொத்த வன்னி - அக்கினி.

௰௮. நுதல் - புருவம். மடவரல் - பெண். தொன்மரம் - ஆலமரம்.

௰௯. நலம் — இன்பம். குரவன்மனை - குருபத்தினி. மறம் மாயாது - பாவம் நீங்காது. புங்கவன் - தேவன்.

௨௰. புழுங்கி — வருந்தி. கண்ணிய - நினைத்த.

௨௧. ஆவல் மிக - ஆசைபெருக. பண்ணவர் - தேவர்.

௨௨. ஒன்று - சசி யென்னும்பெயர், (இந்திராணியைக் குறிப்பது).

௨௩. அனத்தினை - அன்னப்பக்ஷியை. களங்கன் - சந்திரன்.

௨௪. புல்கவேன் —— சேரமாட்டேன்.

௨௬. கழை - கரும்பு.

௨௭. சித்தசன் - மதன்.

௨௮. தோடு - மலரிதழ்.

௨௯. கவிகை - குடை. மத்தன் - சிவபிரான். பிழை - குற்றம்.

௩௰. ஈர்த்திடலும் — இழுத்தலும். வெய்துயிர்த்து - பெருமூச்சுவிட்டு. பார்த்தன் - அருச்சுனன்.

௩௧. அமுதகரம் - அமுதகிரணம். தைவந்து - தடவி.

௩௨. சரம் —— விஷம். வரம்பு இடித்து - கரையையுடைத்து. சரம் - அம்பு.

௩௩. அமளி - மஞ்சம். குமுதம் - ஆம்பல் மலர். விது - சந்திரன்.

௩௪. வேள் - மதன். மருண்டு - மயங்கி. கலாமதியன் - கலைகள் நிரம்பியவன் என்பதன்றியும்கலாமதியன் எனப்பொருள்படல் காண்க.

௩௫. வீட்டு நெறிக்கு ஆம் அந்நூல் - மோக்ஷ மார்க்கத்துக் கேற்ற ஞானநூல்களை. சீர்-சிறப்பை. வீட்டுநெறி — அழிக்கும் மார்க்கமாகிய. காம நூல் — காம சாத்திரத்தை. காட்டு உவகையாக — மகிழ்வாகக் காட்டுவாயாக. காட்டுவகை - உதாரணவகை. அவட்கலந்து - அவளைச் சேர்ந்து.

௩௬. தழீஇத்தழீஇ — தழுவித் தழுவி. முகைவனசம் - தாமரையரும்பு. கடுப்ப - ஒப்பாக. நனி - மிக.

௩௭. நரகு ஈனும் மறம் - நரகத்தைத் தரும் கொடும்பாவம். தாரையர் - நக்ஷத்திரப் பெண்கள்.

௩௮. சம்பு-சிவபிரான். கோவை-கொவ்வைக்கனி. அம்புலி-சந்திரன்.

௩௯. சுதை - மகள். தமியே - தனிமையாக. ஒழுக்கவிதி - ஆசாரக் கட்டளை. பொன்னில் — வியாழன் மனைவியை. சான்று-சாட்சி.

௪௰. தணந்திருக்க- பிரிந்திருக்க. இன்பநெருப்பு - காமாக்கினி.

௪௧. கரவால் — மறைவில். இரவாளி - சந்திரன். கரு.- கர்ப்பம். கான்முளை - புத்திரன்.

௪௨. மதியான் —— சந்திரன். அமைச்சன் - வியாழன்.

௪௩. ஒற்றுவர் - தூதர். அசுரேந்திரன்-அசுரர்தலைவன். சரண்-அடைக்கலம்.

௪௪. உடற்பார்வை - சரீர விழி, (ஆயிரங்கண்கள்). அலங்கற்கு - மாலைக்கு. கோவுக்கு — பசுக்களுக்கு. அலங்கல் - அசைதலையுடைய.

௪௫. ஏதிலர் - நட்பும் பகையுமில்லாதார். இருவேமும் - நாமிருவரும். இன்று - இத்தினத்தில். மோதுக - யுத்தஞ்செய்க. திதிமகன் - அசுரன்.

௪௬. நக்கு - சிரித்து. துயர்க்கு அஞ்சி - துன்பத்திற்குப்பயந்து. காத்தி - காப்பாய். புக்கவரை - புகுந்தவரை. புரவாரை - காப்பாற்றாதாரை. புரவலரா - காவலரென்று.

௪௭. வாவி - தடாகம். காவி - குவளைமலர்.

௪௮. சினமுடுக - கோபம்வளர. மன்ற - மிக. மலரோன் - பிரமன்.

௪௯. ஒழிமின் - நீக்குங்கள். உறுவது - செயற்பாலது. சொற்றனர் - சொன்னார். கற்றவன் - வியாழன். உய்த்திகொலாம் - விடுப்பாயோ.

௫௰. தேங்குழல் - மணக்குங்கூந்தலையுடையதாரை. அரசன் - வியாழன். நிதிப்பெயர் - பொன். பயந்த - பெற்ற.

௫௧. புந்திவைத்துப்புகல்க - மனதாரசசொல்லுக, புதனைக்கையில் வைத்துச சொல்லுக.

௫௨. அவை - சவை. அகநோக்கி - மனக்கண்ணாற்பார்த்து. நவை - குற்றம். புகலுற்றிடுபவள் - சொல்லுகின்றவள், சரண்புகுபவள்.

௫௩. நாமகள் - சரசுவதி. வரன் - பிரமன். தையால் — பெண்ணே. இழுக்கு - பழி. ஒறுப்பவர் - தண்டிப்பவர்.

௫௪. அலர்தூற்றல்-பழிகூறுதல். ஏனையர் - பிறர். வேதனை -பிரமனை. பனிக்கதிரோன் - சந்திரன். புந்தி - புதனை. பயந்தேன் -- பெற்றேன். கதுமென்று - விரைவில். அந்தணற்கு - வியாழனுக்கு.

௫௫. கூய் - கூவி. தந்தம் - தங்கள் தங்கள்.

௫௬. முயற்கூடு - சந்திரன். உரிமை -- மனைவி. கயற்கு -- மீனுக்கு. ஊறு - பகைசெய்யும். மயல்கூடும் - மயலால் சேர்ந்த. பைங்கூழ் - பயிர். செயற்கு - செயலுக்கு. தேசிழந்து - அழகுகுன்றி.

௫௭. பங்கயன் - பிரமன். கழுவாய் - பிராயசசித்தம். கௌரியநாடு - பாண்டிநாடு. உதீசி - வடக்கு. இரியும் - கெடும்.

௫௮. காசினி - பூமி. ஆதியில் - முன்போல். கண்டான் - செய்தான்.

௫௯. ஆவி --- தடாகம். கடி - மணம். படி - உவமை. படிவம் - வடிவம்.

௬௰. நிரை - வரிசை. திவள்வன - விளங்குவன.

௬௧. அல்லதூஉம் --- அன்றியும். அதான்று - அதுவன்றி. கயிரவம் — ஆம்பல்.

௬௨. ஆண்டு - அவ்விடத்தில்.

௬௩. கோடு - கரை.

௬௪. வம்மின் —— வாருங்கள். சென்மின் -- போய்விடுங்கள். வாங்கிய - வளைந்த.

௬௫. இலம் - வீடு.

௬௬. உததி - கடல். வளை-சங்கு. உயிர்த்திடும் - பெற்றிடும்.

௬௭. எழா - எழுந்து. மெய்யும் - உடலும்.

௬௮. விற்கு -- ஒளிக்கு. பொற்குடை - அழகிய குடை.

௬௯. தோயம் - நீர். இழுது - நெய்.

எக. உய்த்துணர்வு - ஆய்ந்தறிதல்.

எச. அண்ணல் - அண்ணலே. தண்ணாரம் - குளிர்ந்தகங்கை. ஆண்டளப்பான் - வியாழன். களத்திரம் — மனைவி.

எரு. மழவுருவம் - இளவடிவம்.

எசு. இரவி — சூரியன். முடுகியீர்ப்ப — விசைததிழுப்ப. ஆலம் — விஷம்.

## சூரியன் பூஜித்த படலம்.

க. புடவி - பூமி. பரிதி - சூரியன்.

உ. கலினம் - கடிவாளம். பதாகை - கொடி. நட்டவன் - சிநேகன்

ந. அற - மிக. நிரப்பு - வறுமை கனற்றுதல் - சுடுதல். நீறி - சாம்பலாகி. தமைக்குறுகி - தம்மையடைந்து.

ச. நரநாரணர் - இருமுனிவர்.

எ. வற்சரம் - வருஷம். வனம் - துளபம். வீயாமல் - சாவாமல்.

அ. பின்னவனே — நீம்பியாகிய பார்த்தனே. செறல் - அழித்தல்.

கூ. மறைத்தவன் — வேதியத்தவசி, இயற்கைவடிவைமறைத்தவன்.

யங. புகர் - வெள்ளி. மால் — விட்டுணு.

யரு. யாக்கை - உடல். கண்ணுவது - கருதுவது, மதிப்பது. கற்பகாதி - கற்பகமுதலிய.

யசு. மெத்து - நிறைந்த. விதனம் - துன்பம்.

யஎ. திரிபுவனம் - மூன்றுலகம். யாழ்முனி - நாரதர்.

உய. மூசுற்ற - மொய்த்த. சினகரம் - கோயில்.

உக. அஞ்சம் - அன்னம்.

உங. பைத்தாமா — பசைக்குதிரை

உகூ. மிடல் - வலி. குடைதல் மூழ்குதல்.

## வெள்ளாற்றுப்படலம்.

க. தொல் - பழைய. மதிமரபு - சந்திரகுலம்.

ங. ஆயவனே — தாயனையவனே.

ரு. உத்தரம் - வடக்கு. கொடுங்குன்று - பிரான்மலை. மணிவாசகர். மாணிக்கவாசகசுவாமிகள். நித்தலும் - தினமும். வழிபடும் - வணங்கும்.

சு. பொருநை — தாமிரபர்ணியாறு. பாலித்திடும் — தந்தருளும். ஆலித்திட - களிக்க.

எ. வாதவூரிறைவன் - மாணிக்கவாசகசுவாமிகள். சையகிரி - சையமலை.

அ. பருப்பதம் - மலை. மிசை - மேலே. பொன்வரை - மேருமலை. கயல்நாட்டி - மீனக்கொடியை நிறுத்தி.

ய. தில்லை - சிதம்பரம். உவரி — கடல்.

யஉ. மூதாதையர் - சகரர்.

யங. நதியின் - நதியைப்போல.

யரு. சந்தம் - சந்தனம். கோட்டகம் - கரையிடம்.

௰சு. அக்கம் - சங்கமணி, உருத்திராக்கமணி. தோல்-யானை, புலித்தோல். புன்னாகம் — புன்னாகமரம், பொருந்தியபாம்பு. பதம் — உணவு; திருவடி. பொருவ - ஒப்ப.

௰எ. பொன்னாம்புயமெய்தி — அழகிய தாமரை மலர்களையுற்று, இலக்குமிதங்கிய சிறந்த மார்பு பொருந்தி. ஆழி - கடல், சக்கரம். மின்னார் சங்கம் — பெண்கள் கூட்டம், ஒளிபொருந்திய சங்கு. மணியை — முத்துக்களை, கௌத்துவமணியை. துன்னார் - பகைவர்.

௰அ. மிகவாரணங்கள் - அதிகமாகச்சங்குகள், மிகவும் வேதங்கள். எண்கணுற்றீஇ — கரடிகளையடுப்பக்கொண்டு, எட்டுக்கண்களுற்று. நல்லவனம் - நயமானநீர், நல்ல அன்னப்புள். சொல்லவள் - சரசுவதி.

உ௨. தாமம் - மாலை. வடகுணபால் - வடகிழக்கில்.

## சுவேதகேதுபூஜித்த படலம்.

க. பையரா - படமுள்ளபாம்பு. வையம் - பூமி.

உ. பொன்னி - காவிரியாறு.

ங. மநு-மந்திரம். தோய்ந்து - மூழ்கி. கலை - உடை.

ச. புகூஉ - புகுந்து. மா - அழகிய. போதகம் - யானைக்கன்று.

ரு. புள் - கருடன், அன்னம்.

அ. உலராது - வாடாது. ஞாதியர் - தாயாதிகள். ஆதுலராய் - தரித்திரராகி. மாதுலர் - மாமனார்.

க. பரை - உமை.

## தடாதகைப்பிராட்டியார் தவம்புரிபடலம்.

க. தாய்-உமையம்மை. பாய-பரவிய.

உ. பூருவம்-முற்பக்கம்.

ங. கடனை - அபரக்கிரியையை. அரியணை-சிம்மாசனம். அகிலம்-உலகம்.

ரு. சிவமான-மங்கலமான. திசைவெற்றி - திக்குவிசையம்.

சு. முத்தனம்-மும்முலை.

அ. கண்மணி-உருத்திராக்கமணி.

க. பவப்பிணி-பிறவிநோய். தொடக்கு-கட்டு.

௰க. கயற்றுவசம் - மீனக்கொடி. சேடி-தோழி.

௰உ. ஒலியல்-சீலை. ஆலவட்டம்-கால்செய்வட்டம். பிசசு - பீலிக்குஞ்சம். தளத்தலைவர் - சேனாதிபதிகள். போத-வர.

௰ங. கனம்-மேகம். வனம்-நீர்.

௰ச. சுகம்-கிளி. புகலரிய-சொலற்கரிதான.

௰ரு. பணிவேந்தன்- ஆதிசேடன்.

௰சு. கோடரம்-குரங்கு.

௰எ. புயல் - மேகம். பொங்கர்-சோலை. அயல்-பக்கம். அரி-சிங்கம்.

௰அ. மாது அங்கமுடைய-உமையை சரீரத்துடைய. மாதங்கம்-அழகிய பொன் மாதங்குஅம்புயன்- இலக்குமி வசிக்கும் அழகிய மார்பையுடையவன். மாதங்கம்-யானை. பறழ்-குட்டி. முழை-குகை.

௰க. வல்லிஅங்கம் - கொடியின் உருவம். ஒசிதர - துவள். வல்இய

ங்க -- சூதாடுகருவி இனைக்க. வனசரர்-வேடர். வல் இயங்கள் - வலிய வாத்தியங்கள். தாறு-புதை.

வல்லியம்-புலி. மாதிரம் - அண்டம்.

உஎ. துணர் - பூங்கொத்து. பாரதி-சரசுவதி. அளைந்து-கலந்து. கூற்றிசை-யமன்திக்கு, (தெற்கு).

உஅ. பலவு-பலா. பாடலம் - பாதிரி. வழை - சுரபுன்னை. குலவு அம் கள் மலர் - விளங்கிய அழகிய தேனொழுகும் மலர் - நலங்கம் - நல்லபுன்னை. பிலவங்கப்-குரங்கு.

ஙய. நகுலம்-கீரி. அடல் - வலி. ஆமபல்-யானை. அறகு-சிங்கம்.

ஙக. இறுவது - அழிவது

ஙஉ. திமிரம் - இருள். புங்கவர்-உயர்ந்தோர்.

ஙஎ. அலச-வாட. நோற்றாள்-தவஞ்செய்தாள்.

ஙஅ. நந்துதல் - வருந்தல். அரண் - மதில்.

ஙகூ. மாகம்-ஆகாயம். துப்பு-பவளம். படி-பூமி.

சய. மணமும்-விவாகமும்.

## சுந்தரேசபடலம்.

க. இருந்தவளநதிக்குடபால்-பெரிய வெள்ளாற்றின் மேல்புறம். பொங்குமுற - மிகுத்துற. குணதிசை-கீழ்த்திக்கு. முருந்து-மயிலிறகடிமுள்.

உ. இலாங்கலி-தென்னை. துணைய-ஒப்பாக. கருப்பு-கரும்பு. விணை-விண்ணை. அரம்பை - வாழை. மிடைந்து-நெருங்கி. பணை-வயல்.

ங. காய்-சுடுகின்ற. தாளநிறை-முத்துவரிசை. ஆய்-யாவரும் கவனிக்கத்தக்க. கன்னன்மணி-கரும்பின். முதது-பொங்கம்-மிகுதி. குவலயம்-குவளை. மது-வண்டு.

ச. செறு-வயல். சேணுடு-ஆகாய நக்ஷத்திரம். விபுதர்-தேவர். கான்-மணம்.

ரு. வனம்புனைபவன்-துளசிமாலையணியும் திருமால். அனம்முடுகுவன்-அன்னத்தை நடத்தும் பிரமன்.

அ. துணி - துண்டம். சடிலம்-சடை. கூவிளந்தார் - வில்வமாலை.

கூ. நிம்பமலர் - வேப்பமாலை. மாலூரவடி-வில்வமரத்தடி.

ய. களம்-கண்டம்.

யக. கமலவிலை - தாமரையிலை. தோயான்-பற்றுன்.

யஉ. புலரி-விடியற்காலம். ஆற்றுபு-செய்ய. பாலன்-நெற்றியையுடையான்.

யச. அருட்குறி-சிவலிங்கவடிவம்.

யரு. கூவிளம்-வில்வம். மிலைந்த-சூடிய. மறைவலான்-வேதியன்.

யஎ. கூவிளம்-வில்வம்.கடி-மணம்.

யஅ. பருப்பதம் - மலை. இருக்கு-வேதம்.

யகூ. புகூஉ-புகுந்து. பன்னி-மனைவி. மகார்-புத்திரர். துன்ன-நெருங்க.

உய. பாறதி-பால் தயிர். நேயம்-தைலம். சந்து - சந்தனம். அமுது - நீர். ஆனைந்து - பஞ்சகௌவியம்.

உக. ஓதனம் - அன்னம். பலவர்க்கம்-பழவகை. நிவேதனம்-நைவேத்யம். ஆராதனம்-பூசனை. போதம்-ஞானம்.

உஉ. தமி - தனி.

உங. சே-இடம். சிலம்பு-மலை. ஆற்றினன்-செய்து.

உரு. துணை-இரண்டு. தப-கெட

## திருப்பணிப்படலம்.

க. பொருப்பு - மலை. கவிகை - கொடை. விருப்பணி-விருப்பமுற்று.

உ. மருக்காலும்-மணத்தைக்கக்கும். பொதுளும்-நிறையும். சாலி-நெல்.

௩. விபூதி-ஐசுவரியம். பசுபதி-சிவபிரான்.

௪. நிதிக்கிழவன்-குபேரன். மிளிர்-விளங்கிய.

௫. முகமன்-உபசாரம். குடமுனி-அகத்தியமுனி. (வடதிசைக்கதிபன் குபேரனென்பது கவனிக்க)

எ. இக்கவிப்பொருள் மிகப்பரந்த நாடும், அதற்குள்ளோரிடத்திற் கோட்டையும், அதற்குள் நகரும் அரசர்க்குரியவை, இவ்வுரிமை பெற்றமையானே நாட்டுக்கோட்டை நகரத்தார் என்ற பெயர் வந்ததென்றபடி.

௯. மருத்துவசாலை - வயித்தியசாலை.

௰க. கற்பகப்பூங்கொம்பர் - கற்பகத்தின் பூங்கொம்பு, கற்பை மனத்திற்கொண்ட பூங்கொம்பையொத்த பெண்கள்.

௰௩. நடைதட்கும்-நடையைத்தடுக்கும்.

௰௪. கூலம்-பொக்கிஷம். எல்-ஒளி. கலம்-பாத்திரம்.

௰௫. கற்று-ஈற்றுப்பசு. அத்தனை-அவ்வளவில்.

௰அ. கருப்பக்கிருகம் இல்லாதவர் சிவபிரான் என்றது பிறப்பிலி யென்றபடி. தூர்த்து-நிறைத்து.

௰௯. அருத்தம்-பொருள். வியப்பு-ஆச்சரியம்.

உ௰. கோடரம்-குரங்கு. ஆடரங்கு-நடனசபை. பொதியாசலம்-பொதியமலை.

உக. இமயப்பொருப்பு - இமயமலை. புதல்வி-மகள். பயிக்கம்-பிச்சை. இருசுடர்-சூரியசந்திரர். நினகரம்-கோயில்.

உஉ. சிலதன்-தோழன். புட்பகவேந்தன்-குபேரன். நாட்டம்-கண். தளி-கோயில்.

உ௩. தூங்கல்-யானை. வேழக்கன்று-விநாயகர். கோட்டம்-கோயில்

உ௪. நியமம்-கோயில்.

உ௫. பள்ளி-கோயில்.

உ௬. பொடி-விபூதி. ஏற்றுக்கொடி-இடபக்கொடி.

உஎ. வரி-புலி. அங்கம்-சாத்திரம், பரியங்கம்-கட்டில்.

உ௯. அன்னமறியாதவர் - பிரமனாகிய அன்னத்தாலறியப்படாதவர். மாலைவனைசாலை-மாலைகட்டுமிடம். கருவூலம்-பொக்கிஷம்.

௩௦. கோபுரம்-இந்திரனூர். குயில்வித்து-செய்வித்து.

௩க. குழுமுவித்து -தொகுப்பித்து. வாசியம்-வாத்தியம்.

௩உ. ஓங்கல்-மலை.

## செல்லையனார் திருவிளையாட்டுப்படலம்.

க. தேற்றும் - தெளிக்கும்.

உ. சயம் - வெற்றி. தளை - விலங்கு. விபுதர் - தேவர். சசி - இந்திராணி.

ரு. தாயை - விட்டுணுவை. தந்தை - சிவபிரான். பூர்வமுதல் - ஆதிமுதல், கீழ்த்திசையில். தடி - வயல்.

ச. குறி - பேர்.

ரு. வலவன் - விட்டுணு.

எ. தவளத்தும்பி - வெள்ளையானை.

அ. தொல்லை - பண்டு. இறைவனார் - சிவபிரான். முல்லைகாவலன் - விட்டுணு. யாத்து - கட்டி. மதித்தனர் - கடைந்தனர்.

கூ. வந்தியார் - வணங்காதவர். வடவையின் - வடவாமுகாக்கினியைப்போல்.

ய. கலுழன் - கருடன்.

யக. காரி - விஷம். முந்தைபோல் - முன்போல். தும்பி - யானை. உந்தி - கடல். நாகர் - நாகருலகம்.

யஉ. ஏகதந்தன் - விநாயமூர்த்தி. ஓகை - மகிழ்ச்சி. உததி - கடல்.

யங. இடுக்கண் - துன்பம். இரியாது - தளராது. ஆடகக்கடம் - பொற்குடம்.

யச. வெஃகி - விரும்பி. மாயன் - திருமால்.

யரு. மாயமாது - மோகினி. வனப்பெனுமது - அழகாகியதேன். விழிவாய் - கண்ணாகியவாய்.

யஎ. பேதுற்று - மயங்கி. இகலன்மின் - பகையாதீர். வாய்முதலிய - மெய்கண் மூக்குசசெவி. இருகடத்தமுது - இரண்டு குடம்போன்ற தனமும் அமுதுபோன்றசொல்லுமுள்ளயான்.

யஅ. எல்லை - சமையம். தயித்தியர் - அசுரர். உழி - இடம்.

உய. நசைத்த - விருப்பமுற்ற. வீவுற்றனர் - மடிந்தார். குசைத்த - தருப்பைப்புல்நுனிபோன்ற.

உங. இற்றார் - அழிந்தார். நாப்பண் - நடு.

உச. பெருமாலின் - பேராசையால். சூரகுபேரன் - சூரியசந்திரர். மால் - விட்டுணு.

உரு. உருத்து - கோபித்து. கம் - தலை. சுதை - அமுது.

உசு. தகுவக்கொடியோர் - அசுரக்கொடியவர். பானு - சூரியன். குரங்கி - சந்திரன். இற்றைக்கும் - இன்றும். நாகத்தின் - பாம்புருவால, ஆகாயத்தில்.

உஎ. நரலை - கடல். அரியரிவை - விட்டுணுப்பெண் (மோகினி)

உஅ. வரி - வண்டு. கழை - கரும்பு. குனிக்கும் - வளைக்கும். உட்குற - வெட்கமுற.

உகூ. அரிவையர் - பெண்கள். வேட்பர் - விரும்புவர். மாலுறும் - விட்டுணுவுற்ற, ஆசையுற்ற.

நய. வேட்ட - விரும்பிய. மாஅல் - மாலே. கூட்டரவு - கூடுதல். மறைக்குரிசில் - பிரமன்.

நக. ஆதி - ஆவாய். வேற்றுழி - தனியிடத்தில்.

நஉ. முராரி - விட்டுணு. செவ்வி - காலம். பவ்வம் - கடல். தெவ - பகை.

நந. வேணி - சடை. அப்பனாய்காவல் - தந்தைதாய்காத்தல். பொன்வேணியாற் றந்தைசிவபிரானென்பதையும், கருங்கடல் மேனியால் தாய் திருமாலென்பதையும், செண்டாயுதத்தால் பகைவரைச் சம்மரித்

து அடுத்தாரைக் காப்பவனென்ப தையும் குறிப்பித்தபடி. மெய்யன் - புத்திரன்.

௩௪. அத்தி - கடல். மேவுதி - சேர்க.

௩௫. எல் - ஒளி. கல் - மலை. வயங்கு - விளங்கிய. கரக்குடை - கைக்குடை. மல் - வளம்.

௩௬. உந்தி - கடல்.

௩௭. வேட்டு - விவாகஞ்செய்து. ஐயன் - சாத்தா.

௩௮. குறள் - பூதம். செறுநர் - பகைவர்.

௩௯. கொளீஇ - கொண்டு.

௪௰. எண்ணில் - அளவற்ற. சூர்-சூரன். அரற்றி - அழுது. புரந்தரன் - இந்திரன். ஒய்யென - விரைந்து.

௪௧. புலோமசை - இந்திராணி. மடவரால் - பெண்ணே. இருத்தி - இருப்பாயாக.

௪௨. அஞ்சல் - பயப்படாதே. தயாகரகாரி - கருணைக்கு இருப்பிடமாகிய சாத்தா. புரப்பன் - காப்பான். இனையல் - வருந்தாதே.

௪௩. நயனம் - கண். காரி - இந்திரன். காரி - விஷம்.

௪௫. வண்டு - சங்கு. காத்தி - காப்பாய்.

௪௬. மாகநாடு - தேவருலகம். கந்தரம் - மேகம். காதலி - மனைவி. கடுக - விரைவாக. சுந்தரி - இந்திராணி.

௪௭. காவலவன் - இந்திரன். சசி - சந்திரன். சலசம் - தாமரை. ஒசியும் - துவளும். சசி - இந்திராணி. பழங்கண் - துன்பம். பொதும்பர் - சோலை. துச்சில் - ஒதுக்கிடம்.

௪௮. பணிக்கும் - கட்டளையிடும். அநுசை - தங்கை. அசமுகி - ஆட்டுமுகத்தையுடையாள். வேலை - கடல்.

௪௯. சேடி - தோழி. சுரபதி - இந்திரன். முனவன் - தலைமையன்.

௫௩. உண்மோ - உண்ணுமோ. உருத்த - கோபித்த.

௫௫. மேடமுகி - அசமுகி. கிடம் - புழு.

௫௬. கையறவு - துன்பம். அம்மனை - தாயே. மையவள் - அசமுகி. அகறி - நீங்குதி. அடுவல் - கொல்வேன்.

௫௭. எயிறு அதுக்கி - பல்லைக்கடித்து. வீதி - சாவாய. ஐம்பால் - கூந்தல். நவிரம் - வாள்.

௬௰. அற்றம் - சமையம். சயிலாதி-நந்திதேவர். உரிமை - பத்தினி.

௬௧. கயம்பொரும் - யானையையொத்த. ஆண்டலை - கோழி.

௬௫. படர் - துன்பம்.

௬௭. செக்கர் - சிவந்த. புட்கலைகோன் - சாத்தா.

௭௩. குடைந்தாலும் - முழுகினலும்.

## திருவிழாப்படலம்.

௩. உழை - மான். சுதை - சுண்ணம். ஓவியம - சித்திரம்.

௪. விதானம் - மேற்கட்டி. யாத்து - கட்டி.

௭. கலன் - ஆபரணம். விழைவு - விருப்பம். புரையும் - ஒக்கும். ஆடி - கண்ணாடி. அரி - இந்திரன்.

௮. பீடு - பெருமை. ஆரகை - சூ பேரபட்டினம்.

௯. மேடமதி - சித்திரைமாசம். முதற்பக்கம் - பூர்வபக்கம். நாற்றிதி- சதுர்த்தி. பாடு - பெருமை.

௰௨. மநு - மந்திரம். தீட்டும் - எழுதும்.

௰௩. வரித்து - அழைத்து. விசிட்டம்-விசேடம் அங்கம்-சாஸ்திரம்.

௰௬. பதாகை - கொடி. போதுவது - வருவது.

௨௰. பாலம் - நெற்றி.

௨௧. வாய்தல் - வாசல். வந்திப்பார் - வணங்குவார்.

௨௩. இடைந்த - முறிந்த. கேசரி - சிங்கம். இருமை - இம்மை மறுமை.

௨௪. இரிந்து - தோற்று. தோற்றமுறு - பிறப்படையாத.

௨௫. அஞ்சுகம் - அழகியகிளி. நாகமிசை - தேவலோகத்தில்.

௩௰. கம்பு - சங்கு. எண்கணம்பி - பிரமன்.

௩௩. வரைகுனித்த - மலையைவளைத்த. முளரி - தாமரை.

௩௫. செயிரா - கோபித்து. வல்விரைந்து - மிகவிரைந்து.

௩௭. நாமம் - பெருமை. சாலி - அருந்துதி. நல்லார் - பெண்கள்.

௩௮. பயசுகனி - பால்பழம். பரை - உமாதேவி.

௩௯. கல்லுருவக்கரி- கல்லானை. வயமா - யானை. குழுமி - கூடி.

௪௰. அங்கம் - எலும்பு.

௪௧. பூழியர் - பாண்டியர். இவுளி குதிரை.

௪௪. துடவை - நந்தனவனம். குரம் - பிரம்பு. தெரிசித்தோரே - தெரிந்த சித்து புருஷரேயாவர்.

௪௬. கமலமலர்க்கொம்பு - இலக்குமி. ஆனை - இடபத்தை.

௪௮. பாரம் - கரை. பதப்புணை - திருவடித்தெப்பம்.

௪௯. துப்பு - பவளம். சுவர்க்கம்- தேவருலகம். அகிலம் - உலகம்.

௫௰. சலசை - இலக்குமி. முருகு - திருவிழா.

## விளங்கியம்மன் விளங்கிய படலம்.

௧. பண்ணவர்-தேவர். விரவி- கலந்து. விறல்-வலிமை. தறுகண்-அஞ்சாமை.

௨. களம்-கண்டம். உள்ளி-நினைத்து. விள்ளரிய-சொல்லுதற்கரிய.

௫. ஏற்றூன்-இடபவாகனமுடைய சிவபிரான்-கவி-சுக்கிரன்.

௭. தெரியல்-மாலை. சிலம்பு-மலை.

௮. கற்றவர்-மலைவில்.

௰. கடி-மணம். படி-உவமை.

௰௧. பொன்-இலக்குமி. கலையாள்-சரசுவதி. சசி-இந்திராணி.

௰௨. குரல்-தொனி. அலை-கடல்.

௰௩. இறும்பு-மலை. செய்கோ-செய்வேனோ. கொன்-வலிமை. குதிரை முகாக்கினி-வடவா முகாக்கினி.

௰௪. படையா-படைத்து. ஆளி-சிங்கம்.

௰௫. பாய-பரவிய. அவாசி-தெற்கு.

௰௬. அலையேல்-பெறுயாயின். விள்வித்தல்-சொல்வித்தல். அச்சுறுவன்-பயப்படுவேன்.

௰௭. உருமு-இடி.

௰அ. சண்டன்-யமன்.

உ௰. தேத்து-தேசத்து.

உஉ. வாமம்-இடப்பாகம். கால்-யமன். நாம்-அச்சம்.

## திரிபதார்த்தசிந்தனைப் படலம்.

க. ஐந்து - ஐம்புலன். ஆறு - காமக்குரோதலோபமோகமதமாற்சரிய மென்பன.

ச. கதுவு - பற்றுகின்ற.

எ. சாகரம் - கடல். ஏகன்-சிவபிரான்.

அ. ஒவ்வும் - பொருந்தும். காட்டு - உதாரணம்.

௰. ஆதித்தன் - சூரியன். கோ - கண்.

உக. பருக - குடிக்க. பாலடை - பால்புகட்டுஞ் சங்கு.

உஉ. தனு - உடல்.

உ௩. ஈர்ப்பவன் - இழுப்பவன்.

உ௫. மருத்துவன் - வயித்தியன்.

உஎ. மானும் - ஒக்கும்.

௩உ. கோளிரண்டு - இராகுகேது. சித்திரபானு - சூரியன். உதகம் - நீர்.

௩ச. பொச்சாவாது - மறவாது. மோக்கம் - மோக்ஷம் நச்சாநின்றிடு - விரும்புகின்ற.

௩அ. இலாங்கலி - தென்னை. அரம்பை - வாழை.

௩௯. இயமானன் - ஆன்மா.

௫௩. சீத்து - தள்ளி.

அரிமழத்தலபுராணக் குறிப்புரை முற்றிற்று.